இந்திய அரசியல் திட்டம்

★

"போர்வாள்" ஆசிரியர்
மா. இளஞ்செழியன் B.A. (HONS)
இயற்றியது

★

மக்கள் மன்றம்
பவழக்காரத் தெரு, :: சென்னை—1.

முதல் பதிப்பு. 1951

விலை ரூபா இரண்டு

சென்ட்ரல் ப்ரீ பிரிண்டர்ஸ்
அச்சகத்தில் அச்சிடப்பட்டது.

இந்தப் புத்தகம்!

"அரசியல் திட்டம் என்றால் இது அல்லவா அரசியல் திட்டம்? இப்படிப்பட்டதோர் அருமையான திட்டத்தை எங்களைத் தவிர வேறு யார் தீட்டிக் காட்டியிருக்க முடியும்?"—காங்கிரஸ் கட்சியிலே உள்ள பலர் இது போல எக்காளமிடுகின்றனர்.

"காந்தியடிகளின் இலட்சிய கீதம் இந்தத் திட்டத்தில் சிறிதளவும் ஒலிக்கக் காணோமே! இதுவா சிறந்த அரசியல் திட்டம்? சே! காந்தியடிகளுக்கு நாம் இழைத்துள்ள மகத்தான துரோகமல்லவா இது?"—காங்கிரஸ் கட்சியிலே உள்ள வேறு சிலர் இதுபோல இரத்தக் கண்ணீர் வடிக்கின்றனர்.

"ஒரு ஜனநாயக நாட்டிலே நிறைவேற்றப்படவேண்டிய ஜனநாயகத் திட்டமா இது? அல்ல அல்ல! இஃது ஓர் சர்வாதிகார சாசனம்! முதலாளித்துவத் திட்டம்! ஏகாதிபத்ய அந்தாதி! வெறுத்து ஒதுக்கப்படவேண்டிய விபரீத வெண்பா!"—திராவிட இயக்கம் தென்னாட்டில் இதுபோல வீரமுழக்கம் இடுகிறது.

"எங்களிடத்திலே மட்டும் ஆட்சி வரட்டும்! இந்தத் திட்டத்தைத் தூள் தூளாக்கிவிட்டுத்தான் வேறு வேலை பார்ப்போம்! ஆமாம்! நிச்சயம்!"—ஜெயப் பிரகாஷ் கட்சியின் திட்டவட்டமான அறிக்கை இது!

"டாடா — பிர்லா — டால்மியாக்களுக்குத்தான் இந்தத் திட்டத்தால் நன்மை! ஏழைகளுக்கு இதனுல் கிடைப்பது வெறுந் நிலைமை! ஒழித்தே தீரவேண்டும் இந்த உதவாக்கரைத் திட்டத்தை!"—கம்யூனிஸ்ட் கட்சித் தோழர்களின் காரசாரமான வார்த்தைகள் இவை!

இன்னனம் இந்தியத் துணைக் கண்டத்தில் உள்ள பல்வேறு கட்சியினர், 1950 ஜனவரி 26 முதல் நடை-

முறைக்கு வந்துள்ள இந்திய அரசியல் திட்டத்தைப் பற்றிப் பலவகையான கருத்துரைகளை வழங்கிவருகின்றனர். வெவ்வேறு வகையான இக் கருத்துரைகளிலே எந்தக் கருத்து உண்மையானது? இந்தக் கேள்விக்கான ஒரு விடையே, **இந்திய அரசியல் திட்டம்** என்னும் பெயர் படைத்த இப் புத்தகம்.

அரசியல் திட்டம் என்றால் என்ன? ஒரு ஜனநாயக நாட்டில் அரசியல் திட்டத்திற்கு அளிக்கப்படவேண்டிய சிறப்பிடம் யாது? தற்கால அரசியல் உலகில் அதற்கு ஏன் இவ்வளவு முக்கியத்துவம் தரப்படுகிறது? என்னென்ன பண்புகள் அமைந்ததாயிருந்தால் ஓர் அரசியல் திட்டம் சிறந்த திட்டம் என்று கொள்ளப்படும்? இப்போது நிறைவேற்றப்பட்டுள்ள இந்திய அரசியல் திட்டத்தில் அந்தப் பண்புகள் யாவும் அமைந்துள்ளனவா? அமையவில்லை என்றால் அப்படி அமையாததனால் ஏற்படக்கூடிய விளைவுகள் யாவை?

இந்தப் பிரச்சினைகள் அத்தனையும் இந்தப் புத்தகத்தில் தெளிவான முறையில் அலசி ஆராயப்பட்டிருக்கின்றன.

புதிய இந்திய அரசியல் திட்டம் நிறைவேற்றப்பட்ட நாள் முதலாக, இந்தியத் துணைக்கண்டத்தின் அரசியல் சமுதாய இயல் பொருளியல் ஆகிய துறைகளிலே எந்தப் பிரச்சினை தோன்றினும், உடனடியாக, அந்தப் பிரச்சினையைப்பற்றி அரசியல் திட்டம் என்ன கூறுகிறது என்பதைக் கண்டறியவேண்டியது மிகமிக இன்றியமையாததாகிவிட்டது. ஏனெனில் அந்த அளவுக்கு இந்தியாவின் பொதுவாழ்வைக் கட்டுப்படுத்தும் அதிகாரம் அரசியல் திட்டத்திற்குத் தரப்பட்டுவிட்டிருக்கிறது. எனவேதான், இன்றைய அரசியல் திட்டத்தின் பண்புகளை ஆராய்ந்து அறிவிக்கும் இந்தப் புத்தகம் தமிழுலகத்திற்கு மிகவும் பயன்படும் என்று நான் நம்புகிறேன்.

இந்தப் புத்தகத்தின் அச்சுவேலை முழுவதும் ஏறத்தாழ முடிந்துவிட்ட வேளையில், இந்தியாவின் முதலமைச்சர் பண்டித ஜவகர்லால் நேரு அவர்களால் இந்திய அரசியல் திட்டத்திற்கு மூன்று முக்கிய திருத்தங்கள் கொண்டுவந்து நிறைவேற்றப்பட்டிருக்கின்றன.

இந்திய அரசியல் திட்டம் அமுலுக்கு வருவதற்கு முன்னும் பின்னுமாக இந்தியாவில் பல மாகாணங்களில் ஜமீன் ஒழிப்பு மசோதாக்கள் நிறைவேற்றப்பட்டன அல்லவா? அந்த மசோதாக்கள் இந்த அரசியல் திட்டத்தின் சில விதிகளுக்கு முரணானவையாக அமைந்துள்ளன—ஆகவே அவை செல்லுபடியாகமாட்டா என்று சில உயர்நீதி மன்றங்கள் தீர்ப்பளித்திருந்தன. இந்தத் தீர்ப்புகளின் விளைவாக, ஒன்று ஜமீன் ஒழிப்பு மசோதாக்களைக் கைவிடவேண்டும்—இல்லையேல்—அந்த மசோதாக்களை ஒப்புக்கொள்ளும் விதத்திலே அரசியல் திட்ட விதிகளைத் திருத்தியாக வேண்டும் என்கிற இக்கட்டான நிலை இந்திய ஆட்சியாளர்களுக்கு ஏற்பட்டது. அவர்கள் ஜமீன் ஒழிப்பு மசோதாக்களைக் கைவிடத் தயாராயில்லை. ஏனெனில் அவற்றைக் கைசோர விட்டுவிட்டால் விவசாய வர்க்கம் தங்கள்மீது சிறிப் பாய்ந்து சினத்தைக் கக்கும் என்பதை அவர்கள் நன்குணர்ந்திருந்தனர். எனவேதான் அவர்கள் ஜமீன் ஒழிப்பு மசோதாக்கள் சட்டப்படி செல்லுபடியாகும் என்று சொல்லத் தக்க விதத்திலே இந்திய அரசியல் திட்ட விதிகளைத் திருத்த முன்வந்தனர். பண்டித நேரு அவர்கள் கொண்டுவந்து நிறைவேற்றியிருக்கிற மூன்று திருத்தங்களில் ஒன்று, இது! ஜமீன் ஒழிப்பு மசோதாக்கள் நிச்சயம் நிறைவேற்றப்பட வேண்டியவை—எனவே இந்தத் திருத்தமும் கட்டாயம் செய்யப்படவேண்டியதுதான் என்பதை யாரும் மறுக்கமுடியாது.

வர்ணாஸ்ரம தர்மம், விசித்திரமானதோர் ஏகாதிபத்ய ஏற்பாடு! இந்த ஏற்பாடு, இந்தியாவில், பன்னெடுங்காலமாக நடைமுறையில் இருந்து வருகிறது. இந்த விபரீதமான ஏற்பாட்டின் காரணமாகப் பிராமணர்கள் என்னும் ஒரு சிறு கூட்டத்தாரே சமுதாய வாழ்க்கையின் சகல சுகங்களையும் அனுபவித்துக் கொண்டு, அரசியல்—பொருளியல்—மதஇயல் ஆகிய எல்லாத் துறைகளிலும் முன்னேறிய வகுப்பினராகக் காட்சி தந்து வருகின்றனர். இதே ஏற்பாட்டின் காரணமாகத்தான் ஏனைய எல்லா வகுப்பினரும் எல்லாத் துறைகளிலும் முன்னுக்குவர முடியாமல் பின்னால் நின்று தவித்துக்கொண்டிருக்கின்றனர். சழக்குகள் நிறைந்த ஒரு சமுதாய ஏற்பாட்டின் காரணமாக இங்ஙனம்

தாழ்த்தப்பட்டுக் கிடக்கும் பிற்பட்ட வகுப்பு மக்களை முன்னேற்றமடையச் செய்வதற்காக முன்னாளில் நீதிக் கட்சியினரால் வகுக்கப்பட்ட சிறந்தோர் ஏற்பாடுதான் கம்யூனல் ஜி. ஓ.! இந்த ஏற்பாடு மிகவும் நியாயமானது—நிச்சயம் நாட்டில் நிலைத்து நிற்க வேண்டியது. என்றாலும் இந்த ஜி. ஓ. புதிய அரசியல் திட்டத்தின் சில விதிகளுக்கு மாறுபட்டதாக இருக்கும் காரணத்தால் இது செல்லுபடியாகாது என்று சென்னை உயர்நீதி மன்றமும் டில்லி தலைமை நீதிமன்றமும் தீர்ப்பளித்துவிட்டன. பிற்பட்ட வகுப்புகளுக்கு சில தனிச் சலுகைகள் அளித்து அவற்றை முன்னுக்குக் கொண்டுவர வேண்டியது ஆட்சியாளர்களின் நீங்காக் கடமை. ஆனால் அந்தக் கடமையை ஆற்றுவதோ ஆகாது—கூடாது என்று அழுத்தந் திருத்தமாகத் தெரிவிக்கிறது இந்திய அரசியல் திட்டம். இந் நிலையில் அரசியல் திட்ட விதிகளைத் தேவையானபடி திருத்தினாலொழிய பிற்பட்ட வகுப்புகளின் முன்னேற்றத்திற்கு ஆட்சியாளர்கள் ஆவன செய்ய முடியாதென்பது தெளிவு. எனவேதான், "மலைசாதி மக்கள்—தாழ்த்தப்பட்ட சாதி மக்கள்—சமுதாயத்திலும் கல்வியிலும் பின்தங்கியுள்ள மக்கள் ஆகியோரின் முன்னேற்றத்திற்காகத் தனிச் சலுகைகள் காட்டுவது இந்த அரசியல் திட்டத்திற்கு முரணானது அல்ல" என்பதாக அரசியல் திட்டத்தின் 15-வது விதிக்கு ஒரு திருத்தம் கொண்டு வந்து நிறைவேற்றப்பட்டிருக்கிறது பண்டித நேரு அவர்களால். இந்தத் திருத்தம் நியாயமானது—எனவே, யாரும் எதிர்க்கக்கூடாதது.

"பேச்சுரிமை எழுத்துரிமை ஆகிய உரிமைகள் இர்தியக் குடிமக்கள் அனைவருக்கும் உண்டு" என்பது அரசியல் திட்டத்தின் 19-வது விதியின் முதற் பிரிவு ஆகும். ஆனால் அதே விதியின் இரண்டாவது பிரிவு, "ஒழுக்கக்கேட்டினை உண்டாக்கக் கூடிய காரியம், அரசாங்கத்தின் பாதுகாப்பைக் குலைக்கும் காரியம், அரசாங்கத்தைக் கவிழ்க்க முயலும் காரியம் ஆகிய இச் செயல்களைத் தடுப்பதற்காக ஆட்சியாளர்கள் செய்யக்கூடிய சட்டங்கள், பேச்சுரிமை—எழுத்துரிமைகளை மறுக்கும் தன்மையனவாக இருந்தாலும் கூட அவை செல்லுபடியாகும்" என்று தெரிவிக்கிறது. ஜனநாயகம் என்கிற ஆலமரத்தின் ஆணிவேர் போலவும் அடிமரம் போலவும் அமைந்திருப்பவை பேச்சுரிமை எழுத்துரிமை ஆகியவை. ஆகவேதான் இந்த இரண்டு உரிமைகளையும் மறுக்கும் தன்மை படைத்த மேற்கண்ட விதிமுறையை நல்லறிவாளர்கள் மிகத் தீவிரமாகக் கண்டித்திருக்கின்றனர். ஆனால் பண்டித நேரு அவர்கள் கொண்டு வந்து நிறைவேற்றியுள்ள திருத்தங்களில் மூன்றாவது திருத்தமோ, பேச்சுரிமை

எழுத்துரிமைகளை மேலும் பல மடங்கு பறிக்க முயன்றிருக்கிறது. "பொதுஜன அமைதியைக் குலைப்பது, குற்றம் புரியத் தூண்டுவது, வெளிநாடுகளுடன் உள்ள நல்லுறவைக் கெடுப்பது ஆகிய இச் செயல்களைத் தடுப்பதற்காகவும் ஆட்சியாளர்கள், பேச்சுரிமை எழுத்துரிமைக்கு மாறான சட்டங்களை இயற்றலாம்" என்பதே அந்த மூன்றாவது திருத்தம். பேச்சுரிமை எழுத்துரிமைகளை முற்றிலும் புறக்கணித்துவிட்டு சர்வாதிகார தர்பார் நடத்துவதற்குத் தேவையான சகல அதிகாரங்களையும் ஆட்சியாளருக்கு அளித்துள்ளது இந்த அரசியல் திட்டத் திருத்தம்.

"பொதுஜன அமைதியைக் குலைப்பது"—"குற்றம் புரியத் தூண்டுவது"—இந்த இரண்டு சொற்றொடர்களும் ஆட்சியாளர்களின் விருப்பத்திற்கேற்றபடியெல்லாம் வளைந்துகொடுக்கக் கூடிய தன்மை படைத்தவை ஆகும். எதிர்க் கட்சிக்காரர்கள் நடத்தக் கூடிய பொதுக்கூட்டமா—ஊர்வலமா—பத்திரிகையா—பத்திரிகையில் வெளிவரும் கட்டுரையா—சமுதாயத்தில் உள்ள ஏற்றத் தாழ்வுகளை அகற்ற வேண்டும் என்பதற்கான ஆலோசனையா—ஏழைக்கு ஏது இன்பம் என்கிற கவிதையா—எதை வேண்டுமானாலும் மேற்கண்ட இரண்டு சொற்றொடர்களைக் காரணமாகக் காட்டித் தடுத்து விட முடியும் ஆட்சியாளர்கள்! "முதலாளித்வத்தின் முதுகெலும்பு முறிக்கப்பட்டால்தான் சமதர்ம சகாப்தம் சமுதாய வாழ்க்கையில் மலர்ந்து மணம் வீசமுடியும்" என்பதாக ஒரு கட்டுரை தீட்டப்பட்டால் கூட, அந்தக் கட்டுரையை, ஆட்சியாளர்கள், பொதுஜன அமைதியைக் குலைத்து மக்களைக் குற்றம் புரியத் தூண்டிடும் துர்ச்செயல் என்பதாக விளம்பரப்படுத்தித் தடைசெய்ய முடியும். எதிர்க் கட்சிகள் எவ்வளவுதான் நேர்மையாகவும் அமைதியாகவும் தங்கள் பிரசாரத்தை நடத்தி வந்தாலும் அந்தப் பிரசாரத்தை அடியோடு நிறுத்திவிடமுடியும் ஆட்சியாளர்கள். அந்த அளவுக்கு எழுத்துரிமை பேச்சுரிமைகளைப் பறித்துக் குழிதோண்டிப் புதைக்கும் ஆற்றல்படைத்தவை இந்த இரண்டு சொற்றொடர்கள்.

"வெளிநாடுகளுடன் உள்ள நல்லுறவைக் கெடுப்பது" என்பதும் இதுபோலவேதான் பேச்சுரிமைகளை வீழ்த்துவதற்கான வேறோர் கருவியாகும். ஆட்சியாளர்கள் பிரிட்டிஷ் அல்லது அமெரிக்க ஏகாதிபத்யத்தின் தாசர்களாக மாறிவிடுவார்களானால், அந் நிலையில் அந்த ஏகாதிபத்யங்களைக் கண்டித்து எழுதுபவர்கள் மீது "வெளிநாடுகளுடன் உள்ள நல்லுறவைக் கெடுக்கிறார்கள்" என்ற குற்றம் சாட்டப்படும்—கடுமையான தண்டனையும் அவர்கள் மீது சுமத்தப்படும்.

பேச்சுரிமை எழுத்துரிமைகளைக் கட்டுப்படுத்தும் இந்தத் திருத்தம் அநீதியானது; அக்கிரமமானது; மக்களாட்சிக் கோட்பாட்டிற்கு இழைக்கப்பட்ட மகத்தான துரோகம் போன்றது.

ஜவகர்லால் நேருவின் இம் மூன்று திருத்தங்களால் ஜனநாயகக் கொள்கைக்கு ஏற்பட்டுள்ள ஆபத்தை விளக்கி விரிவாக ஓர் அத்தியாயமே எழுதியிருக்க வேண்டும் இந்தப் புத்தகத்தில்—ஆனால் திருத்தங்கள் வெளிவருவதற்குள் புத்தகம் அச்சாகி முடிந்துவிட்டது—எனவேதான் இந்தத் திருத்தங்கள் பற்றிய என்னுடைய கருத்தை இங்கே சுருக்கமாகத் தந்திருக்கிறேன்.

இந்தப் புத்தகத்தை விரைவாக எழுதி முடிக்கும்படி என்னை அடிக்கடி தூண்டிவந்த "ஆரம்பக் கல்வி" இதழாசிரியர் திரு. பி. வீரராகவன், சென்னை தோழமைக் கழகத் தலைவர் திரு. ஏ. ஆர். சேஷாசலம், "தமிழர் பதிப்பக" உரிமையாளர் திரு. மா. சு. சம்பந்தம் ஆகியோருக்கும், இந்தப் புத்தகம் எழுதுவதற்குத் தேவையான சில கருத்துரைகளை எனக்குத் தந்துதவிய என் நண்பர்கள் "போர்வாள்" துணையாசிரியர் காஞ்சி கல்யாணசுந்தரம்—"பிரசண்ட விகடன்" துணையாசிரியர் அ. இளங்கோவன் ஆகியோருக்கும் என் மனமார்ந்த நன்றி உரியது ஆகுக.

மா. இளஞ்செழியன்.

இந்திய அரசியல் திட்டம்

1. பழமுதிர் சோலையும் பாலை வனமும்

குயில் கூவிக்கொண்டிருக்கும்! கோலம் மிகுந்த
மயில் ஆடிக்கொண்டிருக்கும்! வாசம் உடைய நல்
காற்று குளிர்ந்தடிக்கும்! கண்ணாடிபோன்ற நீர்
ஊற்றுக்கள் உண்டு! கனிமரங்கள் மிக்க உண்டு;
பூக்கள் மணம் கமழும்! பூக்கள்தோறும் சென்று, தேன்
ஈக்கள் இருந்தபடி இன்னிசை பாடிக் களிக்கும்!
வேட்டுவப் பெண்கள் விளையாடப் போவதுண்டு!
காட்டுமறவர்களும் காதல்மணம் செய்வதுண்டு.........

"ஆம்! அதுதான் நமது இலட்சிய பூமி! அங்கேதான் நாம் சென்றாகவேண்டும். அங்கே சென்றால்தான் நமக்குப் புதுவாழ்வு கிடைக்கும். அந்தப் பூந்தோட்டம் நம்முடைய பரம்பரைச் சொத்து. நம்முடைய முன்னோர்கள் நமக்கென்று தேடிவைத்திருக்கிற அழியாச் செல்வம். இன்பம் துள்ளிவிளையாடும் எழில் நிலையம். அங்கே, தென்றல் வீசும்—தேனாறு பாயும்! காவியமும் ஓவியமும் உயிர்பெற்று நடமாடும்! கனி குலுங்கும் மரங்கள் இன்பக் கவிதை பாடியபடி நமை அழைக்கும்! பின்னி வளர்ந்திருக்கும் கொடிகள் நாம் வாழ அழகிய பூப்பந்தல் வேய்ந்திருக்கும்! பச்சைப் பசேலெனத் தரையில் இயற்கைக் கம்பளம் விரிக்கப்பட்டிருக்கும்! குயில் கவிதை பாடும்! அந்தக் கவிதை கேட்டு, மயில் ஆனந்த நடனம் ஆடும். அது கண்டு அருமை அருமை என்று கூவிய வண்ணம் மந்தி மரக்கிளையிலிருந்து மரக்கிளைக்குத் தாவிக் குதித்து ஓடும். இந்தக் காட்சியின் மாட்சியைக் காண அணில் ஓடோடி

வந்து தலையை மெள்ள உயர்த்தும். முல்லை ஓர் புறம்! மல்லி மற்றோர் புறம்! மகிழம்பூ ஒரு பக்கம்! மனோரஞ்சிதம் மற்றோர் பக்கம்! சூரியகாந்தி ஓர் இடத்தில்! செங்காந்தள் மற்றோர் இடத்தில்! எங்கும் மலர் மணம்! எங்கும் எழில் ஒளி! அந்தப் பூந்தோட்டம் நமக்கென்று அமைந்திருக்கிற அழகுமாளிகை. நாம் ஏமாந்திருந்த நேரத்தில் எத்தர் கூட்டம் அந்த உயிரோவியத்தைத் தட்டிப் பறித்துக்கொண்டது நம்மிடமிருந்து! மீண்டும் பெறவேண்டும் நாம் பெறற்கரிய அப் பழமுதிர் சோலையை! நம் நந்தவனத்தைத் தன் கேளிக்கைக் கூடமாக்கிக்கொண்டிருக்கும் கயவர் கூட்டத்தை விரட்டவேண்டும். அதற்கோர் அறப்போர் தொடுக்கவேண்டும். வெற்றிப் பாதையில் நாம் விரைந்து நடக்கவேண்டும். பூந்தோட்டத்தை அடைந்து, புத்தமுது உண்டு, புதுமுறுவல் கொண்டு, புனித வாழ்வு பெறவேண்டும். பூமான்களென, செல்வச் சீமான்களென, இயற்கை அன்னையின் அந்த இன்பத் தோட்டத்தில் நாம் உலவவேண்டும். அங்கே குவித்து வைக்கப்பட்டிருக்கும் இன்ப வாழ்வு நம் இதய வீணையை மீட்டும் எழிலரசியாக மாறவேண்டும். புறப்படுங்கள், தீரர்களே, புறப்படுங்கள்! போர்வீரர் பாரம்பரையினரே புறப்படுங்கள்! எட்டுத் திக்கும் அதிரும் வண்ணம் வீரமுரசைக் கொட்டிய வண்ணம் புறப்படுங்கள்.''

இந்திய தேசிய காங்கிரஸ், ஏறத்தாழ அறுபது ஆண்டுகளுக்கு முன்னால், இந்தப் பரந்த இந்தியத் துணைக்கண்டத்து மக்களைக் கூவி அழைத்து அவர்கள் உள்ளத்திலே இந்த வீர விதையைத் தூவிற்று. நெடுங்கால உறக்கத்தில் ஆழ்ந்து கிடந்த மக்களைத் தட்டி எழுப்பித் தூக்கி நிறுத்தி, ''வெட்கமில்லையா உங்களுக்கு? வாள் ஏந்திய வீரர் பரம்பரையிலே வந்த நீங்கள் வெள்ளையன் தாளேந்திக் கிடக்கின்றீர்களே—தகுமா?'' என்று இடித்துக் கேட்டது. ''அக்பரும் அசோகரும் சிவாஜியும் சந்திர குப்தனும் செங்கோல் ஓச்சிய இப்புனித பூமியில் வெள்ளைச் சிறு முயல்கள் வீர உலா வருகின்ற வேதனை நிகழ்ச்சி நடைபெறு

கிறதே—பார்த்துக்கொண்டும் சும்மா இருக்கிறீர்களே—உங்கள் வீரமும் தீரமும் எங்குப்போய் மறைந்தன?'' என்று கேலிக் குரல் எழுப்பிற்று. "சேரன் செங்குட்டுவனும் தீரன் ராஜேந்திரனும் திக்கெட்டும் சென்று, திடநெஞ்சம் கொண்டு, போர் பல நடத்தி, பெரு வெற்றி பெற்றனரே! மறந்தீரோ?'' என்று பழங்காலச் சிறப்புகளைச் சாட்சிக் கூண்டிலேற்றிக் காட்டிற்று. "ராணி யங்கம்மாவும் ஜான்சி அரசியாரும் தோன்றிய தோகையர் குலத்தில் திகழும் தாய்மாரே, தோழியரே, மங்கையரே, மாதர் திலகங்களே, நீங்களுமா அச்சம் எனும் மாளிகைக்குள் அடைக்கலம் புகுந்துவிட்டீர்கள்?'' என்று கிண்டல் பாணம் தொடுத்தது. "தென்னாட்டு வீரர்களே, தீரமுள்ள சீக்கியரே, பாஞ்சால சிங்கங்களே, வங்காள வேங்கைகளே, இஸ்லாமிய ஏறுகளே, பவுத்தகுல புனிதர்களே, உங்கள் ஒவ்வொருவரையும்தான் கேட்கிறோம், உங்கள் தோள்கள் என் செய்கின்றன? வீரத்தை விளைக்கும் விருதுபடைத்த உங்கள் கைகள் என் செய்கின்றன? விடுதலை ஆர்வமும் அஞ்சாமைப் பண்பாடும் படைத்த உங்கள் உள்ளம் என் செய்கின்றது? விடுதலை—விடுதலை—விடுதலை என்று வீர முழக்கம் செய்யவேண்டிய நேரத்தில் வாளா கிடக்கிறீர்களே—உங்கள் முன்னோருக்குத் துரோகம் இழைக்கிறீர்களே—பெற்ற பொன்னாட்டைப் பரங்கியர் கூட்டத்திடம் விட்டுவிட்டு வீணரென வாடி வதைகிறீர்களே—மானம் என்னும் மாபெரும் பண்பு மறந்துவிட்டதா உங்களை? அல்லது நீங்கள் அதைத் துச்சம் என வெறுத்து ஒதுக்கிவிட்டீர்களா? என்ன காரணம் உங்கள் அலட்சியப் போக்குக்கும் அடிமை மனப் பான்மைக்கும்?'' என்று வெடிகுண்டுகளை வீசும் பாணியில் வார்த்தைகளை அள்ளி வீசிற்று.

பூட்டிய இருப்புக் கூட்டின் கதவு
திறக்கப்பட்டது! சிறுத்தையே வெளியில் வா!
எலியென உன்னை இகழ்ந்தவர் நடுங்கப்
புலியெனச் செயல் செயப் புறப்படு வெளியில்!

நம்பினை பகலினை நள்ளிருள் என்றே!
சிம்புட் பறவையே, சிறகை விரி, எழு!
சிங்க இளைஞனே, திருப்பு முகம், திற விழி!
இங்கு உன் நாட்டுக்கு இழிகழுதை ஆட்சியா!
குறிக்கும் உன் இளைஞர் கூட்டம் எங்கே?
மறிக்கொணுக் கடல்போல் மாப்பகை மேல்விடு!
மக்களை ஒன்றுசேர்! வாழ்வை உயர்த்துக!
கைக்குள திறமை காட்ட எழுந்திரு!

இளைஞர் கூட்டத்தைப் பார்த்து இதுபோலத் தீப் பொறி பறக்கும் நடையில் காங்கிரஸ் புரட்சிக் கீதம் பாடிற்று. ஆளப் பிறந்தவர்கள் நாம்! அடிமைகளாய்க் கிடந்து மாளப் பிறந்தவர்களல்ல! என்று நாடெங்கும் சென்று நானுவித மொழிகளிலே பேசி விடுதலை முரசை முழக்கிற்று. இன்னமுமா உறக்கம்? இன்னமுமா அயர்வு? இன்னமுமா சோகம்? இன்னமுமா அடிமை வாழ்வில் மோகம்? எழுந்து வாருங்கள்! சுதந்தரப் பூந் தோட்டத்திற்குச் செல்லும் பாதை இதோ தெரிகிறது பாருங்கள்...இதிலே கூட்டம் கூட்டமாக நடக்க வாருங் கள் என்று மீண்டும் மீண்டும் மக்களிடத்திலே சென்று பள்ளி எழுச்சி பாடலாயிற்று.

மக்கள் மருண்டனர் முதலில்; திகைத்தனர். திக் பிரமை அடைந்தனர். இந்த வார்த்தைகளுக்கு என்ன பொருள் என்பதே அவர்களுக்குப் புரியவில்லை. எப்படி உருவாயிற்று இந்தக் காங்கிரஸ்? எதற்காக இப்படி வேட்டுப்போடும் தோரணையில் பேசுகிறது?—அதைத் தெரிந்துகொள்ள முடியவில்லை அவர்களால். அடிமை மனப்பான்மை அந்த அளவுக்கு அவர்கள் உள்ளத்திலே வேரூன்றிப்போயிருந்தது.

காங்கிரஸ் சளைக்கவில்லை — அலுக்கவில்லை. என் செய்வோம் இனி என்று ஏங்கவில்லை. இவர்களாவது விழிப்புறுவதாவது என்று சலிப்புச் சிந்து பாடவில்லை. அடிமேல் அடிவைத்தால் அம்மியும் நகரும் என்னும்

மொழியிலே ஆழ்ந்த நம்பிக்கை கொண்டு பணியை விடாது நடத்திற்று—மேலும் கொஞ்சம் வேகமாக! இன்னமும் சற்று தைரியமாக!

பணி பலன்கொடுக்கத் தொடங்கிற்று. மக்களின் உள்ளத்தில் சிந்தனை தவழ்ந்து விளையாட ஆரம்பித்தது. ஆம் இந்தக் காங்கிரஸ் கூறுவது நியாயம்தானே என்ற எண்ணம் மெதுவாகப் பிறந்தது. உண்மை! அடிமை வாழ்வு ஆகாது நமக்கு! என்ற உறுதி மெள்ள மெள்ள உருவாயிற்று. சில ஆண்டுகள் சென்றன. மக்கள் எத்தகைய கடும் போராட்டத்திற்கும் நாங்கள் தயார்—தயார்—தாமதம் வேண்டாம்—பாசறை உருவாகட்டும்—களம் அமையட்டும்—போர் தொடக்கமாகட்டும் என்று போர்ப் பரணி பாடத் தொடங்கினர். நடமாடும் விடுதலை விருத்தங்களாக மாறினர் மக்கள். ஆண்மகன் ஒவ்வொருவனும் ஒரு செங்குட்டுவனானன். பெண்மகள் ஒவ்வொருத்தியும் ஒரு ஜான்சி ராணியானள். இந்தியா ஒரு புதிய புறநானூறு ஆகிவிட்டது. மக்கள் அனைவரும் போர்க் கோலம் பூண்டுவிட்டனர். வாரன் ஹேஸ்டிங்ஸ் வர்க்கம் வேதனையால் துடிக்கவும், விடுதலை விரும்பிகள் உள்ளத்தில் இன்பம் துள்ளிக் குதிக்கவுமான நிலை பிறந்தது. சர்ச்சில்கள் நடுங்கினர். இர்வின் துரைகள் பதைத்தனர். வெள்ளை அதிகார வர்க்கம் ஆயிரம் தேளால் கொட்டப் பட்டதுபோன்ற நிலைக்கு உள்ளாயிற்று. விடுதலை விடுதலை என்றனர் மக்கள். வேதனை வேதனை என்றது வெள்ளையர் கூட்டம். பிரிட்டிஷ் சிங்கம் கோவெனக் கதறி அழத் தொடங்கிற்று.

கோகலே—திலகர்—தாஸ்—காந்தி என்று வடநாட்டிலே தலைவர்கள் புதிது புதிதாகத் தோன்றி மக்கள் மன்றத்தில் எழுச்சியையும் கிளர்ச்சியையும் உண்டாக்கி வந்தனர். தென்னாட்டிலே, வ. உ. சி.—திரு. வி. க.—**டாக்டர் நாயுடு—ஈ. வெ. ரா** முதலானோர் சீறிப் போரிடும் சிங்க ஏறுகளாக இருந்து திராவிட மக்களிடத்திலே தீரத்தை

யும் வீரத்தையும் உருவாக்கிவந்தனர். ஏகாதிபத்தியக் கோட்டையை இடித்து நொறுக்கும் வீர வெட்டியான்களாக—விடுதலை வேங்கைகளாக—அஞ்சாமையின் அருமைச் சின்னங்களாக—ஆற்றல்படைத்த அடலேறுகளாக ஆனார்கள் மக்கள்.

நாளாக ஆக விடுதலைப்போர் அளவிலும் தரத்திலும் வளர்ந்து வளர்ந்து அகில உலகத்தின் கவனத்தையும் தன்பால் ஈர்க்கும் அளவுக்குச் செல்வாக்குள்ள பிரச்சினையாக மாறிவிட்டது. எனவே அதிகார வர்க்கத்தின் அடக்கு முறையும் அகோர தாண்டவம் ஆடத் தொடங்கிவிட்டது. 'ஆண்டால் நாங்கள் ஆளுவோம்! இல்லையேல் எங்கள் துப்பாக்கிமுனை ஆளும்!' என்று ஆணவமொழி பேசலானான் வெள்ளையன். கருப்பருக்கும் ஆட்சியோ கனவிலின் காட்சியோ என்று கேலிமொழி வீசலானான். முடியாது! நடவாது! சுதந்தரம் கொடுப்பதா, அது கிடையாது! என்று ஏகாதிபத்திய கீதம் வாசிக்கலானான். பெரிய பெரிய சிறைச்சாலைகளை, கோர உருவம் படைத்த பீரங்கிகளை, ஆயிரமாயிரம் துப்பாக்கிகளை, வரிசை வரிசையாக இருக்கும் பட்டாளங்களைக் காட்டி, அவற்றின் அழிக்கும் சக்தியை நினைப்பூட்டி, உங்கள் கொக்கரிப்பு அதிகமானால் இந்தப் பரிசுகள்தான் கிடைக்கும் ஜாக்கிரதை என்று மிரட்டவும் தொடங்கினான்.

அஞ்சினார்களா மக்கள்? ஓடி ஒளிந்து கொண்டார்களா? போர்க்களத்தை விட்டு அகன்றார்களா? பொல்லாப்பு நமக்கெதற்கு-போய்விடுவோம் நாம் தனியே என்று வெட்டிவேதாந்தம் பேசினார்களா? இல்லை! சுதந்தரம் எமது பிறப்புரிமை என்று அண்டம் அதிர முழக்கமிட்டார்கள். உயிர் எமக்கு வெல்லமல்ல—சாவு நாங்கள் அறியாததல்ல—வருவது வரட்டும், கவலையில்லை—வெள்ளையனை விரட்டாமல் நாங்கள் உறங்குவதில்லை என்று போர்ப்பரணி பாடினார்கள்; 'அமைத்தே தீருவோம் சுதந்தர நாட்டை—

அழித்தே தீருவோம் ஆணவக் காட்டை' என்று வீர கர்ஜனை புரியலானார்கள்.

சிறைச்சாலை அழைக்கிறதா—இதோ வந்தோம் வந்தோம் என்றனர். தடியடி தலையைத் துளக்குமா—துளக்கட்டுமே—அதனாலென்ன என்றார்கள். உயிர்போகுமா—போகட்டுமே—அடிமை வாழ்வும் அத்துடன் போகும் அல்லவா—அதுபோதும் என்றனர். வாழ்க்கை, வேதனை ஓவியம் ஆகுமே, வீடு துன்பக் காடாக மாறுமே என்றால், தெரியும் அது எங்கட்கு! விடுதலைப் பாதை வெறும் வார்த்தை அலங்காரத்தால் மட்டும் கிடைத்துவிடாது'' என்றனர்.

அறப்போர்த் தளபதி காந்தியார் மோகனப் புன்னகையுடன் எழுந்தார் இந்திய அரசியல் வானத்தில்! மக்கள் உள்ளத்தை மிக விரைவில் அன்பு வலை வீசி தன்பால் இழுத்துக் கொண்டார்! அமைதி தவழும் அந்தத் தோற்றத்தின் பின்னால் எஃகுபோன்ற உள்ளம் இருக்கக்கண்ட மக்கள் வாழ்க எம் தந்தை என்று களிப்பினால் கூவினர். அவர் கட்டளை பிறந்தால் அனலையும் விழுங்கத் தயாராயினர். தூய்மையே உருவாய் வந்த இடசித்தர் அல்லரோ இவர் என்று இன்மொழி பேசினர். நாடு முழுதும் உருண்டு திரண்டு அவர் பின்னால் நின்றது. காந்தியே இந்தியா—இந்தியாவே காந்தி எனும் நிலை பிறந்தது.

போர் போர் போர் என்று முரசு கொட்டிற்று அந்த மெல்லிய உருவம். ஆம் ஆம் ஆம் அது தவிர வேறு மார்க்கமில்லை விடுதலை வாழ்வு பெற என்றனர் மக்கள்.

போர் தொடங்கிற்று—கடுமையான போர்! உலக வரலாறே கண்டறியாத போர்! பீரங்கியின் சத்தத்திற்கும் மக்களின் உறுதிக்குமிடையே போர்! போலீஸ் குண்டாந்தடிக்கும் இளைஞர்களின் இளந்தளிர் மேனிக்குமிடையே போர்! இரட்டைக் குழல் துப்பாக்கிக்கும் இன்சொல் தோகையருக்கு மிடையே போர்!

மாணவர்கள் படித்துக்கொண்டிருந்த புத்தகங்களை வீசிவிட்டுவந்தார்கள். வழக்கறிஞர்கள் சட்ட நுணுக்கப் பிரச்சினைகளை மறந்துவிட்டு வந்தார்கள். அலுவல் அதிகாரிகள் உயரிய உத்தியோகங்களை உதறி எறிந்துவிட்டு வந்தார்கள். ஆலைத் தொழிலாளிகள் குடும்பத்தைக் காலதேவனின் கருணைக்கு விட்டுவிட்டு வந்தார்கள். உழவர்கள் கலப்பையையும் களத்துமேட்டையும்பற்றிக் கவலையற்று வந்தார்கள். காதலர்கள் தங்கள் இதயராணிகளின் இன்ப மொழிகளைத் துறந்துவிட்டும், காதலிகள் தங்கள் கண்ணாளரின் கட்டுடல் மேனியை மறந்துவிட்டும் வந்தார்கள். தந்தை தாயரை விட்டுத் தனயர்களும், தனயர்களை மறந்து தந்தை தாயர்களும், டாக்டர்களை மறந்து நோயாளிகளும், நோயாளிகளை விட்டுவிட்டு டாக்டர்களும், பாலம் அமைப்பதை மறந்து பொறிநூல் வல்லுநரும், பாதை போடுவதை மறந்து பாட்டாளித் தோழர்களும் கூட்டங் கூட்டமாக வந்து குவிந்தார்கள் போர்க்களத்தில்.

போர் தொடுக்கிறார்களா போர், ஆணவம் அவ்வளவு வளர்ந்துவிட்டதா, சீறும் இச் சிங்கத்தின் கோபத்தைக் கிண்டிவிடுகிறார்களா, சுடு—சுடு—துப்பாக்கியிலே மருந்து இருக்கும்மட்டும் சுடு—பீரங்கியிலே குண்டுகள் இருக்கும் வரை சுடு—அவர்கள் ஆயிரம் ஆயிரம் பேர் மரணப் பள்ளத்தில் விழுந்து ஒழியும்வரை சுடு! விடுதலை என்னும் விபரீதச் சொல்லை ஒலிக்கத் துணியும் கடைசிக் கயவன் குருதி வெள்ளத்தில் மிதக்கும் வரையில் சுடு என்று தன் அதிகார வர்க்கத்தைப் பார்த்துக் கட்டளையிட்டது ஈவு இரக்கமற்ற வெள்ளை ஏகாதிபத்தியம்.

டயர்கள் புறப்பட்டார்கள். ஜலியன்வாலாபாக்குகள் நடைபெற்றன. கொடுமை கோர உருவம் கொண்டு நடனமாடிற்று. எலும்புமலைகள் குவிந்தன. இரத்த ஆறு ஓடிற்று. மரணம் பேய்ச் சிரிப்புச் சிரித்தது. தீரத்தின் உருவான திருப்பூர் குமரன்களைத் தடியாலடித்துக் கொன்றது பிரிட்டானியம். லாலா லஜபதிகளை, அந்தோ,

அடித்து நொறுக்கி வீழ்த்திற்று. பகத்சிங்குகளை தூக்கு மேடையில் தொங்கவைத்தது. அருமைத் தலைவர்களை வெஞ்சிறையில் தள்ளி வாட்டி வதைத்தது. மான்விழி மாதரையும் தடிகொண்டு தாக்கி, தன்னுடைய மானத்தை மனிதப் பண்பை முற்றிலும் பறிகொடுத்தது சீமைச் சிங்கார உலகு. இந்தியர் குருதியைக் குடித்துக் குடித்து இரத்த வெறி கொண்டு அலைந்தது இலண்டன் ஏகாதிபத்தியம்.

ஆனால் போர் நிற்கவில்லை! இரத்த வெள்ளத்திலே மிதந்துகொண்டிருந்த போதும், மரணத்தின் பிடியிலே தவித்துக் கொண்டிருந்த போதும், தடியால் அடிபட்டுத் தத்தளித்துக் கொண்டிருந்தபோதும், துப்பாக்கியால் சுடப்பட்டு உடல் கீழே சாய நேர்ந்தபோதும் சுதந்தரம் எமது பிறப் புரிமை என்னும் இலட்சிய கீதத்தை முழக்கியபடிதான் இருந்தது மாவீரர் கூட்டம். இந்திய தேசீய காங்கிரஸ் சுட்டிக்காட்டிய இலட்சிய பூமியை, புன்னகைப் பூந்தோட்டத்தை, பழமுதிர் சோலையை, தென்றல் உலவும் திரு இடத்தை அடைந்தே தீரவேண்டும் என்பதிலே இந்தியத் துணைக் கண்டத்தவர்க்கு இருந்த ஆவல், ஆர்வத் துடிதுடிப்பு, ஆவேசம் கலந்த ஆசை எத்தகைய ஆபத்துகளையும் துச்சம் என மதிக்கும் துணிவைத் தந்தது அவர்களுக்கு. எலும்புக் குவியல் களைக் கற்களாகப் போட்டு, குருதி வெள்ளத்தை 'தார்' ஆக ஊற்றி, வியர்வைத் துளிகளை மணலாகக் கொட்டி, எப்படியேனும் ஒரு விடுதலைப் பாதை அமைத்து, இடிக்காத இடி எல்லாம் இடித்தாலும் மின்னாத மின்னெல்லாம் மின்னினாலும் அஞ்சாமல் அதில் நடந்து, கனி குலுங்கும் அச் சோலையை எட்டிப் பிடித்தாக வேண்டும் என்னும் உறுதி அவர்கள் உள்ளத்தில் இன்ப வெள்ளத்தைப் பாய்ச்சிற்று. எனவே எத்தகைய தியாகத் தீயிலும் குதித்தெழத் தயாராயினர் அத் தாள்ளுகாளைகள்.

வெள்ளை ஏகாதிபத்தியத்தின் ஆணவமும் அதிகார வெறியும் மேலோங்க மேலோங்க, வீர இந்தியாவின்

விடுதலை ஆர்வமும் ஆவேசமும் ஒன்று பத்து நூறாக வளரத் தொடங்கின. தடியால் அடிபட்டு ஒரு 'குமரன்' சாய்ந்தால் ஆயிரம் புதுக் குமரர்கள் தோன்றலாயினர். தூக்குக் கயிற்றை முத்தமிட்டு ஒரு பகத்சிங் மறைந்தால் நூறு நூறு பகத்சிங்குகள் புதிதாக முளைக்கலாயினர். வெட்ட வெட்ட வளரும் கொடியாயிற்று அடக்க அடக்க ஓங்கி எழுந்த இந்தியா.

தன் கை சலிக்கும் வரை தானே சுட்டுப் பார்த்தான் வெள்ளையன். பிறகு தன் கூலிகளைவிட்டுச் சுடச்சொன்னான். அவர்களும் சலித்தபின்னர் பீரங்கிகளைத் திருப்பிச் சுட வைத்தான். அதுவும் முடிந்த பிறகு பல இடங்களில் குண்டுகளை வீசி இந்திய மண்ணில் தோய்ந்து கிடக்கும் வீர உணர்ச்சிக்கு மரண தண்டனை விதிக்கப் பார்த்தான். சிறைகள் நிரம்பி வழிந்தன—துப்பாக்கி துவண்டு போயிற்று—பீரங்கி காலியாயிற்று—பட்டாளம், படமுடியாது இனித் துயரம், பட்டதெல்லாம் போதும் எனக் கூறலாயிற்று—போலீஸ் சுட மறுத்தது—அதே நேரத்தில் உலகம் கைகொட்டிச் சிரிக்கலாயிற்று வெள்ளையனைப் பார்த்து. சோவியத் ரஷ்யா, பாருங்களேயா பிரிட்டிஷ் ஜனநாயகத்தின் இலட்சணத்தை என்று கேலிக்குரல் எழுப்பலாயிற்று. அமெரிக்கா முணு முணுக்கத் தொடங்கிற்று. திக்கெட்டுமிருந்து கண்டனமாரி பொழியலாயிற்று அந்தச் சின்னஞ் சிறு பிரிட்டிஷ் தீவுகளின் மீது! இந்தியாவிலோ புயல், வெளி உலகிலோ கேலி! நேதாஜி சுபாஷ்சந்திர போஸோ ஒரு இந்திய சர்க்காரையே புதிதாக உருவாக்கி நடத்திக் காட்டியிருக்கிறார். இந்தியருக்குத் தம் நாட்டைத் தாம் ஆளும் திறமை இன்னமும் உருவாகவில்லை என்ற சொத்தை வாதம் இனி எடுபடாது—யாரும் நம்ப மாட்டார்கள்—வங்கச் சிங்கம் அந்த வறட்டு வாதத்தைப் பங்கப் படுத்திவிட்டது—இனி வேறு வழி இல்லை—விடுதலையை அளித்தே தீரவேண்டும் என்னும் முடிவுக்கு வந்தது பிரிட்டன். சுதந்திரம் பிறந்தது—வெள்ளை ஏகாதிபத்தியம் வேகமாக வெளியேறிற்று—விடு

தலைப் பயணம் முடிந்தது. வடா கறுப்பா ஏன் உனக்கு ஆட்சி என்று ஆணவத்துடன் பேசிய காலம் மறைந்து, பிரிட்டன், பெருமை பொருந்திய இந்தியாவே—என்னுடன் சேர்ந்திருக்க மாட்டாயா என்று கெஞ்சிக் கேட்கும் சகாப்தமும் உருவாகி விட்டது. 1947 ஆகஸ்டு 15-ம் நாளன்று இந்தியா விடுதலை பெற்றுவிட்டது.

ஆனால் அறப்போரிலே ஈடுபட்டு, அஞ்சாநெஞ்சுடன் சமர் விளைத்து, தியாகத் தழும்புகளைத் தாங்கி, வடு நிறைந்த உடலுடன் காட்சி அளிக்கிறார்களே மக்கள், சிறைச்சாலைகளை நிரப்பிய மக்கள், தடியடிகளை இன்பப் பரிசென ஏற்ற மக்கள், அந்தமான் வாசத்தையும் ஆர்வத்துடன் தாங்கிக் கொண்ட மக்கள், போர் புரிந்து புரிந்து உடல் தேய்ந்து மேனி கருகி எலும்புந் தோலுமாக இருக்கும் மக்கள், அந்த மக்கள் அடைந்திருக்கும் இடம் எத்தன்மையது? அன்றோர் நாள் **இந்திய தேசிய காங்கிரஸ்** அழகு மொழிகளாலே ஓவியம் தீட்டிக் காட்டிற்றே, குயில் பாட, மயிலாட, தென்றல் வீச, இன்பம் துள்ளி விளையாடும் சோலை—அது கிடைத்திருக்கிறதா? கண்ணாடி போன்ற நீர் ஊற்றுக்கள் உண்டு, கனி மரங்கள் மிக்க உண்டு, பூக்கள் மணங் கமழும், பூக்கள் தோறும் சென்று தேனீக்கள் இருந்தபடி இன்னிசை பாடிக் களிக்கும் என்றெல்லாம் ஆசை வார்த்தைகள் பேசினார்களே—அந்தப் பூந்தோட்டத்தில் உலவும் நிலை மக்களுக்கு ஏற்பட்டிருக்கிறதா? சொற்களை அடுக்கிக்காட்டி செப்படி வித்தை செய்தார்களே, இன்பத்தின் பெட்டகம் என்றும் எழில் தவழும் ஓவியம் என்றும் புதுவாழ்வுப் பூஞ்சோலை என்றும் பேசினார்களே—அது, அந்தச் சோலை, உருவாகியிருக்கிறதா? இல்லை!

வானும் கனல் சொரியும்—தரை
மண்ணும் கனல் எழுப்பும்!
கானலில் நான் நடந்தேன்—நிழல்
காணும் விருப்பத்தினால்!

ஊனுடல் அன்றி மற்றோர்—நிழல்
உயிருக்கு இல்லை அங்கே!
ஆன திசை முழுதும்—தணல்
அள்ளும் பெருவெளியாம்!

ஒட்டும் பொடிதாங்கா—தெடுத்து
ஊன்றும் அடியும் சுடும்!
விட்டுப் புறம் குதித்தால்—அங்கும்
வேகும்! உளம் துடிக்கும்!
சொட்டுப் புனல் அறியேன்!—ஒன்று
சொல்லவும் யாருமில்லை!
கட்டுடல் செந்தணலில்—கட்டிக்
கந்தகமாய் எரியும்!

முளைத்த கள்ளியினைக்—கனல்
மொய்த்துக் கரியாக்கி
விளைத்த சாம்பலைப்போய்—இனி
மேலும் உருக்கிடவே
கொளுத்திடும் கானல்—உயிர்
கொன்று தின்னும் கானல்!
களைத்த மேனி கண்டும்—புறங்
கழுத்தறுக்கும் வெளி!

இப்போது இப்படித்தான் பாடுகின்றனர் இந்தியத் துணைக் கண்டத்து மக்கள் ஒவ்வொருவரும்! கிடைத்திருப்பது சீதளப் பூஞ்சோலை அல்ல! உயிர் கொன்று தின்னும் கானல்! பாலைவனம்!!

மந்தமாருதம் வீசும் சுந்தரப் பூஞ்சோலையில் உலவுவோம்—இன்பத்தின் எல்லையை அடைந்து மகிழுவோம்—புதுவாழ்வு புன்முறுவல் பூத்தபடி நமை அழைக்கும், அந்த அன்பழைப்பை ஏற்று, எழில் மாளிகையில் நடமாடி, ஆநந்த கீதம் பாடி, வானிடை மிதந்திடும் தென்றலிலே மனம் எனும் தேர் ஏறி மகிழ்ச்சிப்பவனி வருவோம் என்றெல்லாம் ஆசைக் கனவுகள் கண்டனர் மக்கள். அந்தக் கனவு நினைவாக துப்பாக்கி வேட்டு,

தூக்குமேடை, பீரங்கியின் முழக்கம் அத்தனையையும் ஒரு கை பார்த்தனர். ஓடோடி வந்தனர். ஆனால் என்ன ஏமாற்றம்! இந்திய தேசிய காங்கிரஸ்—ஆம், அதுதான், தேன் எனக் கரும்பெனத் தெள்ளுசுவைக் கற்கண்டென அவர்களுக்கு இன்பமூட்டிற்றே அன்றொருநாள்—அந்தக் காங்கிரஸ் அவர்களுக்கு இன்று அளித்திருக்கும் பரிசு சிரித்து விளையாடும் சிற்றாறுகளைக் கொண்டிருக்கும் சிங்காரச் சோலை அல்ல—ஆன திசை முழுதும் தணல் அள்ளும் பெருவெளி! சொட்டுப் புனலும் அறியாத, ஒன்று சொல்லவும் யாருமில்லாத பாழும் பூமி!

* * *

காங்கிரஸ் ஆளவந்தார்களால் நிறைவேற்றப்பட்டு இப்போது நாட்டுக்கு அளிக்கப்பட்டிருக்கும் **இந்திய அரசியல் திட்டம்** இருக்கிறதே, அது வகுத்துள்ள வழி, அமைத்துள்ள சட்டம், உருவாக்கியுள்ள அமைப்பு, ஏற்படுத்தியுள்ள விதிமுறை இவைதான் இந்தியாவை இனி ஆளும். மக்கள் வாழ்க்கையில் உண்மையிலேயே இன்பத்தை எக்களிக்கச் செய்ய வேண்டும் என்பதிலே அடங்காத ஆர்வம் படைத்த வேறோர் கட்சி அதிகார பீடத்தில் அமர்ந்து, நாட்டின் ஆட்சியை நல்ல வழியில் திருப்ப வேண்டும் என்னும் ஆவல் கொண்டு, இந்த அரசியல் திட்டத்தைக் கிழித்தெறிந்து விட்டு, வேறோர் திட்டத்தை உருவாக்கும் இன்பநாள் வரும்வரை இந்தத் திட்டத்துக்குக் கட்டுப்பட்டுத்தான் இந்தியாவில் உள்ள அனைவரும் உலவ வேண்டும். மாகாண ஆட்சி முறையும் மத்திய ஆட்சிமுறையும் இந்தத் திட்டம் தீட்டியுள்ள முறைப்படிதான் நடக்கும். நீதிமன்றங்கள் இத் திட்டத்தில் தரப்பட்டுள்ள அற வழியைத்தான் பின்பற்றும். அமைச்சர்களும் கவர்னர்களும் இந்தியத் தலைவரும் ஏனைய அதிகாரிகளும் இத் திட்டம் அமைத்துள்ள கட்டுக்கோப்புக்கு உட்பட்டுதான் பணியாற்ற வேண்டும். தேர்தல் இதன்படிதான் நடக்கும். சட்டமன்றங்களும் இதன்படிதான் நிறுவப்படும். அமைச்

சர் குழு இதன்படிதான் அமையும். ஆளும் மொழியும் இதன் வழிதான் தேர்ந்தெடுக்கப்படும். சமஸ்தானங்களின் ஆட்சிமுறை எப்படி இருக்கவேண்டும் என்ற கேள்விக்கும் சரி, மக்களின் உரிமைகள் என்னென்ன உண்டு இன்றைய ஆட்சியில் என்ற கேள்விக்கும் சரி, விடை வேண்டுமானால் நாம் இந்தத் திட்டத்தைத் தான் புரட்டியாக வேண்டும். மாகாணங்கள் என்னென்ன வரி விதிக்கலாம்? மத்திய ஆட்சி என்னென்ன வரி விதிக்கலாம்?— இதை வரையறுத்துக் கூறும் அதிகாரம் இந்தத் திட்டத்திற்குத்தான் உண்டு. மொழிவழி மாகாணங்களை அமைப்பது எப்படி? நீதிபதிகளை நியமிப்பது யாருடைய வேலை? எங்கெந்த மசோதா எங்கெங்கு நிறைவேற வேண்டும்? எத்தகைய சூழ்நிலை இருந்தால் இந்தியத் தலைவரை வேலையைவிட்டு விலக்கலாம்? அப்படி விலக்குவதற்கு எந்த முறையைக் கையாள வேண்டும்? இந்திய யூனியனில் இருக்க விருப்பமில்லாத பகுதிகள் தனியாகப் பிரிந்துபோக முடியுமா? ஆம் எனில் அதற்கு என்ன வழி? இதைப் போன்ற எண்ணற்ற பிரச்சினைகளைக் குறித்து சட்டம் என்ன கூறுகிறது என்பது தெரிய வேண்டுமானால் இந்தத் திட்டத்திடம்தான் வந்தாக வேண்டும். இதற்கு இருக்கும் செல்வாக்கு, அதிகாரம், ஆற்றல், அசைக்கமுடியாத தன்மை இந்தியாவைப் பொறுத்த வரை, வேறு யாருக்கும், எதற்கும் கிடையாது.

சட்டக்கலை அறிஞர் சால்மண்ட் குறிப்பிடுவதைப்போல ஒரு குறிப்பிட்ட எல்லைக்குள் அமைதியையும் நியாயத்தையும் நிலை நிறுத்துவதற்காக மக்கள் பலர் ஒன்றுகூடி தமக்குள்ளாக ஏற்படுத்திக்கொள்ளும் சமுதாய அமைப்புக்குத் தான் அரசு என்று பெயர். அந்த அரசு குடி அரசாகவும் இருப்பதுண்டு. முடியரசாகவும் இருப்பதுண்டு. பழங்காலத்திய அரசுகள் யாவும் பெரிதும் முடியரசுகளாகவே இருந்தன. ஆனால் இக் காலமோ கவிஞர் இக்பால் கவிஞறப் பாடியிருப்பதைப் போல பாமர மனிதன் பாராளும் காலம். எனவே மணி மகுடங்கள் சாய்ந்து முடியர

சுகள் வீழ்ந்து எங்கும் குடியரசுகள் ஏற்படும் ஜனநாயகக் காட்சியை இந் நாளில் நாம் காண்கிறோம். அமைதியையும் நியாயத்தையும் நிலைநாட்டுவதற்காக நிறுவப்படும் அரசு அந்தப் பணியைத் திறமையாகவும் ஒழுங்காகவும் செய்யவேண்டுமானால் அந்தப் பணியைச் செய்வதற்கென்றே தனியாக ஓர் அமைப்பு நிலையாக இருக்கவேண்டும். அந்த அமைப்புக்குத்தான் **அரசாங்கம்** என்று பெயர். அரசு (State) வேறு அரசாங்கம் (Government) வேறு. அரசு என்பது சமுதாயம் முழுவதையும் குறிக்க வழங்கும் சொல். அரசாங்கம் என்பது அந்தச் சமுதாயத்தை ஆளும் ஆட்சி அமைப்பை மட்டும் குறிப்பிடும் சொல். எடுத்துக் காட்டாக, இந்தியக் குடியரசு என்று சொல்லும்போது இந்தியாவில் உள்ள எல்லா மக்களும் சேர்ந்த ஒரு சமுதாயத்தைக் குறிப்பிடுகிறோம். ஆனால் இந்திய அரசாங்கம் என்று சொல்லும்போது அந்த சமுதாயத்தில் ஆளவந்தார்களாக இருக்கிறார்களே அவர்களுடைய அதிகார பீடத்தை மட்டும்தான் குறிப்பிடுகிறோம். அரசாங்கம், அதன் பெயரே சுட்டிக்காட்டுவது போல அரசிலே ஓர் அங்கம். அரசு என்பது ஒரு சமுதாயம். அரசாங்கம் என்பது அந்தச் சமுதாயத்தை ஆளும் ஆட்சிப் பீடம்.

இந்த அரசும், அரசாங்கமும் எப்படி நடந்து கொள்ளவேண்டும் என்பதை வரையறுத்துக் கூறும் திட்டத்திற்குத்தான் **அரசியல் திட்டம்** என்று பெயர். அன்றன்றாட விவகாரங்களில், சில்லறை பிரச்சினைகளில் எப்படி நடந்துகொள்வது என்பதை அமைச்சர் குழு தீர்மானித்துக்கொள்ளும். அவற்றைப் பற்றி அரசியல் திட்டம் எதுவும் கூறாது. விரிவான நிலையில், பொதுவான அளவில், அடிப்படைப் பிரச்சினைகளில், அரசும் அரசாங்கமும் எப்படி இருக்க வேண்டும் என்பதை மட்டும் எடுத்துக் காட்டுவதுதான் அரசியல் திட்டத்தின் வேலை.

ஒரு நாட்டிலே இருக்கும் அரசு முடியரசாக இருக்குமானால், அப்போது அரசியல் அமைப்புத் திட்டத்திற்கே

தேவை பிறக்காது. ஏனெனில் அந்த நிலையில் நாட்டை எப்படி ஆளுவது என்பது மன்னனின் சொந்த விவகாரம். நாட்டு ஆட்சி அவனுடைய தனிப்பட்ட சொத்து. அதிலே தலையிட, தலையிட்டு மாறுதல் செய்ய யாருக்கும் அதிகாரம் கிடையாது. அவன் பார்த்து வைத்தவர்கள் அமைச்சர்கள். அவன் வேண்டாம் என்றால் அவர்கள் வெறும் மனிதர்கள். மன்னனைத் தவிர மற்றவர்களுக்கு, அவன் தரும் அதிகாரத்தைத் தவிர வேறு சொந்த அதிகாரம் கிடையாது. யார் ஆள்வது என்ற கேள்விக்கும் முடியாட்சியில் இடமே கிடையாது. யார் ஆளவேண்டும்? மன்னன் தான் ஆள்வான்! வேறு யார்? அவனுக்குப் பின்னர் அவன் மகன் ஆள்வான். நாடு மன்னனின் பரம்பரை சொத்து முடியாட்சியில்! யார் ஆளவேண்டும், எப்படி ஆளவேண்டும் என்ற இரு கேள்விகளுக்கும் மிக மிகஎளிதான விடை தருகிறது முடியாட்சி. மன்னன் ஆள வேண்டும், மன்னனின் விருப்பம்போல் ஆளவேண்டும் என்பது தான் அந்த விடை. எனவே அரசியல் திட்டம் என்ற பேச்சே எழ முடியாது முடியாட்சியில்!

ஆனல் குடியரசிலே யார் ஆள்வது எப்படி ஆளுவது என்பன மிக மிக முக்கியமான பிரச்சினைகள் இந்த இரு கேள்விகளுக்கும் தரப்படுகின்ற பல விடைகளின் கூட்டுத்தொகை இருக்கிறதே அதற்குத்தான் அரசியல் திட்டம் என்னும் பெயரைச் சூட்டியிருக்கிறார்கள் சட்டக்கலை வல்லுநர்கள். "சமுதாயத்தின் தலைமை அதிகாரத்தைக் கையாள்வதைப் பற்றிய அல்லது பலரிடம் அதைப் பிரித்து வழங்குவதைப்பற்றிய எல்லா விதிகளின் தொகுப்புதான் அரசியல் திட்டம்" என்று கூறியிருக்கிறார் பேராசிரியர் டைசீ—சிறந்த அரசியல் கலை அறிஞன்.

ஒரு குடியரசில் யார் ஆள்வது என்ற கேள்வியை எழுப்பியவுடனே, இது என்ன கேள்வி—மக்கள்தான் ஆள வேண்டும்—வேறுயார் ஆள்வது—வேறு யார் ஆளமுடியும்

ஒரு குடியரசில் என்று கேட்கத் தோன்றும் எவருக்கும். உண்மை! குடியரசிலே, ஆட்சி, மக்களிடந்தான் இருக்க வேண்டும்; மக்கள் தான் ஆளவேண்டும். ஆனால் இந்தியக் குடியரசிலே, நமக்குத்தான் தெரியுமே, 33 கோடி மக்கள் வாழ்கிறார்கள். இந்த 33 கோடிப்பேரும் ஒரே காலத்தில் எப்படி ஆட்சியாளர்களாக மாறிவிட முடியும்? எனவே மக்கள் ஆட்சி என்றால் மக்களுக்காக மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் பிரதிநிதிகள் சிலர் ஆள்வது என்றுதான் பொருள். அப்படியானால் மக்களின் உண்மைப் பிரதிநிதிகளை ஆட்சிப் பீடத்தில் அமர வைக்க என்ன முறையைக் கையாளலாம், அவர்கள் எவ்வளவு காலத்திற்குப் பிரதிநிதிகளாக இருக்கலாம், அவர்களுக்கு எவ்வளவு அதிகாரத்தைக் கொடுக்கலாம், அதிலும் அவர்களிலே யார் யாரிடம் எந்தெந்த அளவு அதிகாரத்தை எப்படி எப்படி வழங்குவது என்றெல்லாம் பல கேள்விக்குறிகள் ஒன்றன்பின் ஒன்றாக வந்து நம் மனக் கதவைத் தட்டும். அந்தக் கேள்விக்குறிகளை அழைத்து, அவற்றிற்கு நல்ல விடை கூறி, பக்கத்திலே ஒரு முற்றுப் புள்ளியை வைப்பதுதான் அரசியல் திட்டத்தின் கடமை.

முடியரசு சமுதாயத்திலே எப்படி, மன்னன், எல்லா அதிகாரங்களின் பிறப்பிடமாக அமைகிறானோ, அப்படித்தான் குடியரசு சமுதாயத்திலே அரசியல் திட்டம் சகல உரிமைகளுடையவும் தலைமை ஊற்றாகத் திகழ்கிறது. மன்னன் வைத்தது சட்டம் முடியரசில் அரசியல் திட்டம் வகுத்ததே தீர்ப்பு குடியரசில். முடியாட்சி சமுதாயத்தின் ஜீவநாடி — மன்னன்! அதுபோலக் குடியாட்சி சமுதாயத்தின் இருதயபீடம்— அரசியல் திட்டம்! முடியரசிலே தனிமனிதனாகக் கோல் ஓச்சிய மன்னன், குடியரசிலே அரசியல் திட்டமாக உரு மாறியிருக்கிறான்! அங்கே, ஒரு தனி மனிதனிடம் குவித்து வைக்கப் பட்டிருக்கும் அளவற்ற அதிகாரம், இங்கே, ஆயிரமாயிரம் கூறுகளாகத் துண்டுபோடப்பட்டு ஒவ்வொரு மனிதனிடமும் ஒரு துண்டு தரப்பட்டிருக்

கிறது. குடியாட்சி முறையிலே எல்லோரும் மன்னராகி ருர்கள் என்று கூறுகிறேமே பெருமையாக, அந்த வாசகத்தின் பொருள் இதுதான்!

'மக்களுக்காக மக்களால் ஆளப்படும் மக்கள் ஆட்சியே குடியரசு' என்ருர் அமெரிக்கத் தலைவர் ஆபிரகாம் லிங்கன்! லிங்கன் வகுத்துக் காட்டிய இந்த இலக்கணப்படி ஒரு சமுதாய ஆட்சி முறையை உருக்கிவார்க்கும் உலைக்களம்தான் அரசியல் திட்டம். ஒரு குடியரசை உண்மையிலேயே குடிமக்கள் அரசாக ஆக்கும் பணியை ஆற்ற வேண்டிய உரிமையும் கடமையும் படைத்தது அது. எனவேதான் அரசியல் திட்டம் என்ருல் அதற்கு ஏராளமான முக்யத்துவம் தரப்படுகிறது. தரப்படுவது முறையும் கூட!

ஒரு நாட்டை இன்பம் தவழும் பழமுதிர் சோலையாக ஆக்க முடியும் அரசியல் திட்டத்தால்! அது போலவே அந்த நாட்டை உயிர்கொன்று தின்னும் கானலாகவும் அமைக்க முடியும். அரசியல் திட்டத்தை யார் வகுக்கிருர்கள்—எப்படி வகுக்கிருர்கள் என்பதைப் பொறுத்தது அந்தத் திட்டத்தால் உருவாகும் பலன் பாலைவனமா பூந்தோட்டமா என்ற பிரச்சினை.

இந்தியாவின் அரசியல் திட்டத்தை இதுபோது வகுத்திருப்பவர்கள் காங்கிரஸ் என்னும் ஒரு கட்சிப் பிரதிநிதிகள். அரசியல் அமைப்பு மன்றத்தில் அவர்களைத் தவிர வேறு இயக்கத்தவர் யாரும் பங்கெடுத்துக் கொள்ளவில்லை. சமதர்மக் கட்சியின் சார்பிலே மட்டும் ஒரே ஒரு தோழர் அங்கே வீற்றிருந்தார். ஏனைய உறுப்பினர் அனைவரும் ஒன்ரு காங்கிரஸ் கூடாரத்தவர்கள். இல்லையேல் அவர்களால் தேர்ந்தெடுக்கப் பட்டவர்கள்—அவர்கள் சொற்படி கேட்டுத் தீரவேண்டிய நிலையில் இருந்தவர்கள். அந்த காங்கிரஸ் உறுப்பினர்கள் விரும்பியிருந்தால், இந்திய அரசியல் திட்டத்தை புது வாழ்வுப் பூந்தோட்டமாக அமைத்திருக்கலாம்—தென்றல் மகிழ்ந்

தலவும் திருவிடமாக உருவாக்கியிருக்கலாம்—"எல்லார்க்கும் தேசம்; எல்லார்க்கும் உடைமை எல்லாம்; எல்லார்க்கும் எல்லா உரிமைகளும் ஆகுகவே, எல்லார்க்கும் கல்வி சுகாதாரம் வாய்ந்திடுக! வல்லார்க்கும் மற்றுள்ள செல்வர்க்கும் நாட்டுடைமை வாய்க்கரிசி என்னும் மனப்பான்மை போய் ஒழிக!" என்று **புரட்சிக் கவிஞர் பாரதிதாசன்** கூறினாரே அத்தகு சமதர்ம பூமியாக மாற்றியிருக்கலாம்—மக்களின் நெடுங்கால ஆசையை, ஆர்வத்தை இன்ப வாழ்க்கை எண்ணத்தை நிறைவேற்றும் முறையில் திட்டத்தைத் தீட்டியிருக்கலாம். ஆனால்!..........அவர்கள்.........அதைச் செய்யவில்லை! ஒரு பாலைவனத்தைத் தான் உருவாக்கி யிருக்கிறார்கள்!

* * *

"இந்த அரசியல் திட்டம் கவைக்குதவாதது. மாகாணங்கள் வெறும் நகரசபைகளின் நிலைமைக்குத் தாழ்த்தப் பட்டுவிட்டன. இந்தப் புதுத் திட்டம் நிறைவேறிய பின்னர் ஒரு மாகாணம்கூட தனக்கும் சுதந்தரம் இருக்கிறது என்று சொல்லிக்கொள்ள முடியாது! இந்தத் திட்டத்தில் மக்களின் குடியாட்சி உரிமைகள் பறிக்கப்பட்டிருக்கிற அளவு வெள்ளை ஏகாதிபத்திய ஆட்சிக்காலத்தில் கூட பறிக்கப்படவில்லை."

—லட்சுமி நாராயண சாகு.

"ஹிந்துக்களுக்குத் தேவையான தெய்வீக அருள் முழுவதும் காசியிலேதான் குவிந்து கிடக்கிறது என்று கருதப்படுவதுபோல, இந்த அரசியல் திட்டத்தில் ஜனநாயகம் என்பதே டில்லிப் பட்டணத்துக்கு மட்டும்தான் சொந்தம் என்ற கருத்து பரவியிருக்கிறது. மாகாணங்களையும் சமஸ்தானங்களையும் குற்றவாளிகளைப்போலவே பார்க்கிறது இந்தத் திட்டம்."

—கே. ஹனுமந்தய்யா.

"நடைமுறை ஜனநாயகம் வளர வழி வகுக்கவில்லை இந்தத் திட்டம். மாறாக, பாசிசம் தழைத்தோங்குவதற்குத் தேவையான வசதிகள் இதில் இருக்கின்றன."

—பேராசிரியர் கே. டி. ஷா.

"இந்தத் திட்டம் முழுவதையும் நான் அலசி அலசிப் பார்த்தேன். அப்படிப் பார்த்ததில் இதில் ஒரே ஒரு நல்ல பகுதியைத்தான் நான் காண முடிந்தது. இந்தத் திட்டத்தைத் திருத்துவதற்கு வழி வகுத்திருக்கிற பகுதி இருக்கிறதே அதைத்தான் குறிப்பிடுகிறேன்.!"

—எச். வி. படாஸ்கார்.

"காந்திஜியின் பஞ்சாயத் ராஜ்ய கனவு கைவிடப்பட்டிருக்கிறது. நீதிபதிகளுக்கு மிகவும் செல்லம் கொடுக்கப்பட்டிருக்கிறது. அவர்கள் முன்னே உணவு ஏராளமாகக் குவிக்கப்பட்டிருக்கிறது. ஆனால் அந்தத் தயாளகுணம் பாமர மக்களுக்கு மட்டும் காட்டப்படவில்லை. அரசியல் திட்டத்தின் பாயிரம், எல்லாரும் சமம் என்று பேசுகிறது. ஆனால் உள்ளே இருக்கிற விதிகளைப் படித்துப் பார்த்தாலோ, அந்த சம உரிமை ஒரு பூனைக்கும் ஒரு எலிக்குமிடையே இருக்கும் சம உரிமைதான் என்பது நன்கு புலனாகிறது."

—எச். வி. காமத்.

"காந்திஜியின் இலட்சியங்களைத் தன்னகத்தே கொண்டதாக அமையும் அரசியல் திட்டம் என்று நான் எதிர்பார்த்தேன். ஆனால் கிடைத்திருப்பதோ நான் எதிர்பார்த்ததற்கு நேர்மாறானதாக இருக்கிறது."

—டி. பிரகாசம்.

"விசாரணையில்லாமல் மக்களைக் காவலில் வைப்பதற்கான அதிகாரத்தை ஆட்சியாளர்களுக்கு அளிக்கும் பகுதி இருக்கிறதே அதை இந்த அரசியல் திட்டத்தின் அவமானச் சின்னம் என்று நான் கருதுகிறேன்."

—சிவன்லால் சாக்சேனா.

"இந்தத் திட்டத்திற்குத் தங்களின் முழுமனதான ஆதரவைத் தரமுடியாது என்று சீக்கியர்கள் கருதுகிறார்கள். மத்திய சர்க்காரிடம் அளவுக்கு மீறிய அதிகாரங்கள் குவிக்கப்பட்டிருக்கின்றன. மாகாணங்களோ பெரிய பெயர் படைத்த சிறிய நகர சபைகளாக ஆக்கப்பட்டிருக்கின்றன."

—சர்தார் போபிந்திர சிங்.

"மாகாணங்களுக்கு எல்லா அதிகாரங்களையும் கொடுத்துவிட்டு, அவற்றிலிருந்து தனக்குத் தேவையானவற்றை மட்டும் வாங்கிக்கொள்வதுதான் மத்திய சர்க்காரின் கடமை. ஆனால் இந்தத் திட்டமோ முதலில் மத்திய சர்க்காருக்கு எல்லா உரிமைகளையும் அளித்துவிட்டு பிறகு மாகாணங்களுக்கு உரிமைகளை ஒதுக்கப் பார்க்கிறது."

—அருண் சந்திர குகா.

"இந்தத் திட்டத்தில் காந்திஜியின் கனவுகள் இடம் பெறவில்லை. நாம் வேண்டுமென்றே காந்திஜியை ஏமாற்றி விட்டோம் என்றோ, அவருக்குத் துரோகம் செய்துவிட்டோம் என்றோ நான் கூறவில்லை. ஆனால் அவருடைய எண்ணங்கள் இதில் இடம் பெறாமல் போனது நம்முடைய கோழைத்தனத்தால் என்பதை நாம் ஒப்புக்கொண்டுதான் ஆகவேண்டும்."

—சங்கர் ராவ் தேவ்.

"சீக்கியர்கள் இந்தத் திட்டத்திற்கு உடன்பட்டு விட்டதாக யாரும் தப்புக் கணக்குப் போட்டுவிடவேண்டாம். என்னுடைய சமுதாயம் இந்தத் திட்டத்தை ஒரு போதும் ஒப்புக்கொள்ளாது. சீக்கியர்கள் இத் திட்டத்தால் மனம் முறிந்துபோய் விட்டார்கள். மிகவும் வேதனைப்பட ஆரம்பித்துவிட்டார்கள்."

—சர்தார் ஹுகும் சிங்.

இவர்கள் அத்தனைபேரும் அரசியல் அமைப்பு மன்ற உறுப்பினர்கள். அனைவரும் காங்கிரஸ்காரர்கள் அல்லது

காங்கிரஸ்காரர்களின் நம்பிக்கைக்குப் பாத்திரமானவர்கள். பலர் செல்வாக்குள்ள காங்கிரஸ் தலைவர்கள். ஒருவர்—சங்கர் ராவ் தேவ்—அனைத்திந்திய காங்கிரஸ் செயலாளர். மற்றொருவர்—டி. பிரகாசம்—முன்னாள் காங்கிரஸ் முதலமைச்சர் காங்கிரஸ் கட்சி வகுத்துள்ள அரசியல் திட்டத்திற்கு காங்கிரஸ் வாதிகளே மனமுவந்து வாசித்தளித்துள்ள பாராட்டுத் தாள்கள் இவை. இந்தத் திட்டம் ஒரு பாலைவனத் திட்டம்தான், மக்கள் நன்மையை முற்றிலும் மறந்துவிட்ட திட்டம்தான் என்பதற்கு இன்னமும் என்ன ஆதாரம் தேவை?

* * *

"அதோ, நெடுந்தொலைவில் அந்த மலைச்சாரலுக்கு அப்பால் அழகியதோர் பூந்தோட்டம் இருக்கிறது, செல்வோம் வாரீர் அங்கு" என்று அழைத்தது காங்கிரஸ். ஒப்பினர் மக்கள். இந்திய தேசிய காங்கிரஸ் சென்ற வழியெல்லாம் சென்றனர்; இட்ட கட்டளைகளை யெல்லாம் நிறைவேற்றினர்; வகுத்த திட்டங்களை முற்றும் முடித்துக் காட்டினர்; நிறுவிய அமைப்புகளில் எல்லாம் அரும்பணி புரிந்தனர். பூந்தோட்டத்திற்குச் செல்வோம் —மகிழ்வோம் என்ற ஆசையில் இவ்வளவும் செய்தனர். ஆனால் இன்றோ, பூந்தோட்டமல்ல அவர்களுக்குக் காங்கிரசார் அளித்திருப்பது—பாலைவனம்! கதைகளில் எல்லாம் கோரமான கதை அந்த மக்களுடையது! நம்பி ஏமாந்த கதை! பூந்தோட்டம் கிடைக்கும் என்றெண்ணினர்—மகத்தான தியாகங்கள் செய்தனர். ஆனால் கிடைத்ததோ, பாலைவனம்! ஒரு கணம் எண்ணிப் பாருங்கள், அவர்கள் மனம் எவ்வளவு வேதனைப்பட்டிருக்கும்!

2. இடப்படாத கட்டளை! தரப்படாத அதிகாரம்!

1950 ஜனவரி 26! ஆம்! அன்று முதல்தான் காங்கிரஸ் ஆளவந்தார்களால் தீட்டப்பட்டிருக்கும் இந்தப் புதிய அரசியல் திட்டம் இந்தியத் துணைக் கண்டம் எங்கணும் நடைமுறைக்கு வரத் தொடங்கிற்று.

அன்று, ஆட்சியாளர்களால் விழா நாடெங்கும் விமரிசையாகக் கொண்டாடப்பட்டது.

சர்க்கார் மாளிகைகளிலெல்லாம் தோரணங்கள் விதவிதமான முறையில் பறக்கவிடப் பட்டிருந்தன.

நகராட்சி மன்றங்கள் தோறும் கொடிகள் வானளாவிப் பறக்குமாறு உயர்த்தப் பட்டிருந்தன.

அமைச்சர்கள் ஒவ்வொருவரும் ஒவ்வொரு திசையில் பவனி வந்தபடி இருந்தனர்.

வானொலியில் காங்கிரஸ் தலைவர்கள் வீரமுழக்கம் புரிந்தபடி இருந்தனர்.

பண்டித நேருவும் சர்தார் படேலும் பிரசாத் ராஜேந்திரரும் பட்டாபி சீதாராமரும் ஒருவர் மாற்றி ஒருவர் மக்களுக்கு அறிவுரை வழங்கியபடி இருந்தனர்.

காங்கிரஸ் ஏடுகள் எல்லாம் கண்டறியாதன கண்டோம் இந்நாள் நாங்கள் கொண்டறியாத இன்பம் கொண்டோம் என்று களிப்புச் சிந்துகள் பாடியபடி இருந்தன.

காமராஜர்கள் திக்கெட்டும் சென்று, தீந்தமிழில் பேசி, பாரீர் பாரீர் எமது ஆட்சியின் நல்விளைவான அரசியல் திட்டத்தைப் பாரீர், இதுபோல வேறொன்று எவர் தீட்ட முடியும் கூறீர் என்று மக்களைப் பார்த்து "மணிமொழி"களை வீசியபடி இருந்தனர்.

இரவு நேரத்திலோ ஆட்சியாளர்தம் அலுவலகங்கள் தோறும் வரிசை வரிசையாக அமைக்கப்பட்ட மின்சார விளக்குகள் வகை வகையான நிறத்தில் விதவிதமான ஒளி வீசிக் கொண்டிருந்தன.

அரசியல் திட்டத்தின் அருமை, அரசியல் திட்டத்தின் பெருமை, அரசியல் திட்டத்தின் சிறப்பு, அரசியல் திட்டத்தின் உயர்வு என்று இந்த விதமான 'பாணி'யிலே பல புத்தகங்களை வெளியிடலாயினர் சர்க்கார்.

ஜனவரி 26-க்கு முன்னும் பின்னுமாக ஏறத்தாழ இரண்டு மாத காலம் மக்களுடைய பார்வை வேறு எந்தப் பக்கமும் திரும்பமுடியாத அளவுக்கு இந்த அரசியல் திட்டத்தின் மீது விளம்பர வெளிச்சத்தை விழவைத்தனர் ஆட்சியாளர்கள்.

அவர்களுடைய பிரசார இயந்திரம் வெகு வேகமாகச் சுழலலாயிற்று.

அவர்களுடைய அதிகாரிகள் அனைவரும் அரசியல் திட்டத்திற்கு 'லாலி' பாடுவதையே தங்களுடைய முதற் பெருங் கடமையாகக் கொள்ளலாயினர்.

கேளிக்கையும் கொண்டாட்டமும் விழாக்களும் வேடிக்கைகளும் ஊர்தோறும் நடத்திக் காட்டப்பட்டன.

மக்கள் உள்ளம் இந்த அரசியல் திட்டத்தைத் தவிர வேறு எந்தப் பிரச்சினையைப் பற்றியும் நினைக்கமுடியவில்லை. வேறு எந்தப் பொருள் பற்றியும் உரையாடமுடியவில்லை. வேறு எந்த நிகழ்ச்சியிலும் ஈடுபட முடியவில்லை. ஆட்சியாளரின் அரசியல் திட்ட விளம்பரம் அவ்வளவு கட்டுக்கோப்பானமுறையிலும் திட்டவட்டமான வகையிலும் நடத்தப் பட்டது.

அரசியல் திட்டம் அமுலுக்கு வரத்தொடங்கிய காலத்தில், அது, மக்களுடைய நேரத்தையும் நினைப்பையும், இதுபோல, ஏராளமான அளவுக்கு வீணாக்கியிருக்

கிறது என்பது மட்டுமல்ல உண்மை, அந்தத் திட்டத்தை உருவாக்குவதற்காகச் செலவிடப்பட்ட நேரமே கூட மிகவும் அதிகம்தான்.

உலக மன்றத்தில் உயரிய இடமும் செல்வாக்கும் பெற்றுத் திகழும் அமெரிக்கா—ஒரு பரந்த, பெரிய, நிலப் பரப்பு—அதனுடைய அரசியல் திட்டத்தை எழுதி முடிக்க எடுத்துக்கொண்ட காலம், நான்கு மாதங்கள்.

தென்னப்பிரிக்கா தன்னுடைய அரசியல் திட்டத்தை உருவாக்குவதற்காகச் செலவிட்ட நேரம் ஓர் ஆண்டு.

கனடா அதனுடைய அரசியல் திட்டத்தைத் தயாரிப்பதற்காக ஒதுக்கிவைத்த காலம் 2 ஆண்டுகளும் 5 மாதங்களும்.

ஆனல் இந்திய அரசியல் திட்டத்தைத் தீட்டிமுடிக்க நம் ஆட்சியாளர்களுக்குத் தேவைப்பட்டிருக்கும் கால அளவு—கொஞ்சம் கவனித்துப் படியுங்கள்—மூன்று ஆண்டுகள்!

அமெரிக்கா, தென்னப்பிரிக்கா, கனடா, அயர்லாந்து, பிரான்ஸ் ஆகிய இந்த நாடுகள் ஒவ்வொன்றும் தத்தம் அரசியல் திட்டத்தை உருவாக்க எடுத்துக் கொண்டிருக்கும் நேரத்தைவிட காங்கிரஸ் ஆளவந்தார்கள் இந்திய அரசியலை அமைத்து முடிக்க எடுத்துக் கொண்டிருக்கும் காலம் மிகவும் அதிகம்.

1946 டிசம்பர் 9-ம் நாளன்று இந்திய அரசியல் அமைப்பு மன்றம் முதன் முதலாகக் கூடிற்று. அது கடைசியாகக் கூடிக்கலேந்தநாள் 1949 நவம்பர் 26. இடையே இருக்கும் நாட்கள் 1083. ஆம்! 1083 நாட்கள் தேவைப்பட்டிருக்கின்றன நம் சர்க்காருக்கு இந்த அரசியல் திட்டத்தை எழுதி முடிக்க!

திட்டத்தைத் தயாரிக்கச் செலவிடப்பட்ட நேரம் மிகவும் அதிகம் என்பது மட்டுமல்ல கவனிக்கப் படவேண்

டியது, திட்டத்தின் நீளமும், உலகத்தில் உள்ள வேறு எந்த நாட்டின் அரசியல் திட்டத்தையும் விட மிகவும் அதிகம்.

அமெரிக்க அரசியல் திட்டம் மொத்தம் 10 பக்கங்களில் முடிந்து விடுகிறது. 1787-ல் அந்தத் திட்டம் முதன்முதலாக வகுக்கப்பட்டது. அந்த ஆண்டு முதல் நாம் வாழும் இந்தக் காலம் வரை அவ்வப்போது அந்தத் திட்டத்தில் பல்வேறு திருத்தங்கள் செய்யப்பட்டிருக்கின்றன. அத்திருத்தங்களையெல்லாம் சேர்த்துப் பார்த்தால்கூட திட்டத்தின் நீளம் 15 பக்கங்களுக்குமேற் போகவில்லை.

அயர்லாந்தின் அரசியல் திட்டம் ஏறத்தாழ 25 பக்கங்களில் அடங்கி விடுகின்றது.

ஆனால் இந்திய அரசியல் திட்டத்திற்குமட்டும் கொஞ்சமும் குறையாமல் 250 பக்கங்கள் தேவைப்பட்டிருக்கின்றன.

விதிகளின் எண்ணிக்கையைக் கொண்டு அளந்து பார்த்தாலும், இத் திட்டத்தின் நீளம் மிகவும் அதிகம் தான்.

அமெரிக்காவின் திட்டத்தில் இருக்கும் விதிகள் 7. அயர்லாந்தின் திட்டத்தில் இருப்பவை 83. ஆஸ்திரேலியாவின் திட்டத்தில் இருக்கும் விதிகள் 128. கனடாவின் திட்டத்தில் காணப்படும் விதிகள் 147. தென்னுப்பிரிக்காவின் திட்டத்தில் இருப்பவை 153. ஆனால் அன்னை பாரத தேவியின் அருமந்த புத்திரர்கள் தீட்டியிருக்கும் "திவ்வியமான" திட்டத்தில் நுழைந்து கிடக்கும் விதிகளோ, கொஞ்சமல்ல, 395.

ஆட்சியாளரின் அரசியல் திட்ட ஆய்வுரையாளர் முதன் முதலில் திட்டத்தைத் தீட்டிக் கொடுத்தபோது அதிலிருந்த விதிகள் 243. திட்டம் தீட்டும் குழு திட்டத்தைத் தீட்டி முடித்தபோது, விதிகளின் தொகை 243

விருந்து 315 ஆக உயர்ந்தது அரசியல் அமைப்பு மன்றம் திட்டத்தை நிறைவேற்றும் கட்டம் வந்தபோது, 315, 395 ஆக மாறிவிட்டது. இவ்வண்ணம், கட்டத்திற்குக் கட்டம் விதிகளின் எண்ணிக்கை உயர்ந்து கொண்டே வந்து, இப்போது, திட்டம், 395 விதிகளும் 22 பாகங்களும் 8 பிற்சேர்க்கைகளும் கொண்டதாய், 250 பக்கங்கள் நிறைந்ததாய், தூக்க முடியாத பளு மிகுந்ததாய் அமைந்து கிடக்கிறது.

திட்டத்தை உருவாக்க எடுத்துக்கொள்ளப்பட்ட காலமும், திட்டத்தின் பாரமும் மட்டுமல்ல, திட்டம் தீட்டுவதற்காகச் செலவழிக்கப் பட்டிருக்கும் பொருளும் ஏராளம்தான்.

இந்த அரசியல் திட்டத்தின் விதிகளை அலசி ஆராய்ந்து விவாதித்துக் கொண்டிருந்தனரே அரசியல் மன்ற உறுப்பினர்கள் மூன்றாண்டுக் காலம், அந்தக் காலத்தின் ஒவ்வொரு நாளுக்கும் ஆன செலவு—குறித்து வைத்துக் கொள்ளுங்கள்—ரூபாய் 30,000. நாள் முழுவதும் அரசியல் மன்றத்தின் நிகழ்ச்சிகள் நடந்து கொண்டிருக்க மாட்டா. ஒரு நாளுக்கு 5 மணி நேரம் தான் அரசியல் மன்றம் கூடும். எனவே அரசியல் திட்டம் விவாதிக்கப் பட்ட ஒவ்வொரு மணி நேரத்திற்கும் ரூ 6000 செலவாகியிருக்கிறது. இவ்விதமாக, அரசியல் திட்டத்தைத் தயாரிப்பதற்காக மொத்தத்தில் ஆகியிருக்கும் செலவு அறுபத்து மூன்று இலட்சத்து, தொண்ணூற்றூறு ஆயிரத்து எழுநூற்றி இருபத்தி ஒன்பது ரூபாய்கள்! தொகைப் படுத்திக் கூறுவதானல், 64 லட்சங்கள்! இவ்வளவு பெருந்தொகை செலவாகியிருக்கிறது இந்தத் திட்டத்தை நிறைவேற்ற! நினைவிருக்கட்டும், இந்தியா ஏழை நாடு! மறைந்த உத்தமர் காந்தியாரின் மணிமொழிகளிலே கூறுவதானல், தரித்திர நாராயணர்களின் பிரதேசம்! வயிறார இரண்டுவேளைக் கஞ்சி குடிக்கவும் வழியின்றி வேதனைப் படும் மக்கள் ஆயிரமாயிரம் இருக்கும் இந்தியாவில் அரசி

யல் திட்டம் தீட்டுவதற்காக ஆகும் செலவு ரூ 64 லட்சம்! எவ்வளவு வேதனை தரும் நிகழ்ச்சி! இதனை நினைத்துப் பார்த்தால், ஏழைகளின் உள்ளம் எப்படி கண்ணீர் வெள்ளமாகாதிருக்கும்? ஆட்சியாளரை அவர்கள் எப்படி சபிக்காமல் இருப்பர்? வயிறு கூழுக்கு அழ கூந்தல் வாசமலர் சூடி வீதிவலம் வர ஆசைப்படுவது போன்ற நிகழ்ச்சியல்லவா இது?

* * * *

இந்திய அரசியல் திட்டத்திற்குத் தரப்பட்டுள்ள விளம்பரமோ அமோகம்! அதற்காகச் செய்யப்பட்டுள்ள பிரசாரமோ, ஏராளம்! அது விழுங்கியிருக்கும் பணமோ பல லட்சம்! அதற்காக செலவழிக்கப் பட்டிருக்கும் நேரமும் கொஞ்சமல்ல— அதன் பாரமும் மிக அதிகம். ஆம்!

நேரம்
பாரம்
பணச் செலவு
பிரசாரம்
விளம்பரம்
கொண்டாட்டம்
கேளிக்கை
திருவிழா
போற்றித் திருஅகவல்

இவை எதிலும் குறைவில்லை இந்த அரசியல் திட்டத்திற்கு! யாவும் பரிபூரணமான முறையிலேதான் அமைந்திருக்கின்றன! இல்லை என்று யாரும் கூற முடியாது! ஆனால் ஒரே குறை இந்த அரசியல் திட்டத்தில் — இந்தத் திட்டத்தால் மக்களுடைய ஆதரவைப் பெறமுடியவில்லை!

பவுன் நிறமேனி — பவளம் போன்ற உதடு— கண்ணாடியைப் பழிக்கும் கன்னம்— மலர்ந்த தாமரை போன்ற

கண்கள் — அழகிய ஓவியம் அனைய புருவம் — நீண்ட அழகிய கூந்தல்— அழகின் தெய்வமப்பா அவள் — ஆனால் ஒரு குறை— அவள் காலையில்தான் இறந்து விட்டாள் என்று கூறினால் எப்படி இருக்குமோ அப்படிப் பட்ட நிலைதான் இந்த அரசியல் திட்டத்திற்கு இருக்கிறது. சகல திருக்கல்யாண குணங்களும் சம்பூர்ணமாக அமைந்து கிடக்கின்றன— ஆனால் உயிர்தான் இல்லை!

சிறகு இல்லாத பறவை, முள் இல்லாத பேனா, இதழ் இல்லாத ரோஜா, கருத்தில்லாத எழுத்து, மக்கள் ஆதரவு இல்லாத இந்த அரசியல் திட்டம்!

ஜனவரி 26 மக்களிடத்திலே எத்தகைய மாறுபாட்டையும் உண்டு பண்ணவில்லை. ஜனவரி 25லே எப்படி இருந்தார்களோ, ஜனவரி 24லே எப்படி இருந்தார்களோ, ஜனவரி 23லே எப்படி இருந்தார்களோ, ஜனவரி 22லே எப்படி இருந்தார்களோ, அப்படித்தான் மக்கள் ஜனவரி 26 அன்றும் இருக்கலானார்கள். அதே பேச்சு, அதே நினைப்பு, அதே நிலைமை, அதே வறுமைதான் ஜனவரி 26 அன்றும் இருக்கலாயிற்று. இந்திய அரசியல் திட்டம் வந்து விட்டது, இனி என்ன குறை நமக்கு, துன்பம் நீங்கும் — வேதனை விலகும் — இன்பம் பிறக்கும் — எழில் வாழ்வு உருவாகும் என்று யாரும் பேசிக்கொள்ளவில்லை. ஏதோ திட்டமாம், தீட்டி விட்டார்களாம் இன்று, நான் கேட்கிறேன், எந்தத் திட்டம் தீட்டி நமக்கென்ன லாபம். நம் உலர்ந்த வயிற்றுக்கு யாரப்பா ஒருவேளை உணவு போடுகிறார்கள் என்றுதான் மக்கள் மன்றத்தில் பேச்சு உலவலாயிற்று. பசி போக, வேதனை தீர, அவல வாழ்வு மறைய ஒரு வழியும் பிறக்கக் காணோம், அதைப்பற்றி ஒரு திட்டமும் யாரும் தீட்டக் காணோம், ஏதோ அரசியல் திட்டமாம்— யாருக்கு வேண்டும் அது என்றுதான் உரையாடல் ஊரெங்கும் நிகழலாயிற்று.

புதிய அரசியல் திட்டம் உருவாகிறது என்ற பேச்சைக் கேள்விப்பட்டவுடனே பொதுவாக எந்த நாட்டிலும் மக்க

ளிடையே ஓர் ஆரவாரம், ஆநந்த ஒலி, இன்ப முழக்கம் வீறிட்டெழும். அவர்கள் கண்களிலே ஒரு புது ஒளி பிறக்கும். அவர்கள் உள்ளத்திலே ஒரு புதுவித மகிழ்ச்சி இன்ப நர்த்தனம் புரியும். அவர்களே அறியாமல் அவர்களுடைய உதடுகள் களிப்புச் சிந்து பாடும். கால்கள் தக தகவெனக் குதித்தாடும். புதிய சகாப்தம் பிறந்து விட்டது, புதுவாழ்வு உருவாகி விட்டது என்று தம்மை மறந்து எக்காளமிடுவர் மக்கள்.

ஆனல் இந்தியாவின் அரசியல் திட்டம் உருவாக்கப் பட்டு மக்கள் மன்றத்தின்முன் கொண்டுவந்து நிறுத்தப் பட்டபோது மக்களிடையே அத்தகைய ஆரவார உணர்ச்சியோ ஆநந்தக் களிப்போ எழவில்லை. இந்தத் திட்டத்தால் நமக்கு எள்ளளவும் நன்மையில்லை என்னும் எண்ணமே அவர்களிடம் மேலோங்கி நின்றது. "யாரோ சிலர் எதற்காகவோ வகுத்துக்கொண்ட திட்டம்—நமக்கென்ன அதைப் பற்றி?" என்னும் கருத்தே அவர்கள் உள்ளத்தில் ஆழமாகப் பதிந்தது. அரசியல் திட்டம் நிறைவேறி விட்டது— அமுலுக்கும் வந்து விட்டது என்னும் செய்தி அவர்கள் செவிகளில் வந்து வீழ்ந்தபோது, தொலை தூரத்திற்கப்பால், புகைவண்டித் தொடரொன்று தண்டவாளத்தின்மீது கடகடவென்று ஓடிக் கொண்டிருக்கும் ஒலியைக் காதில் கேட்பது போன்ற சர்வசாதாரண உணர்ச்சி தான் அவர்கட்கு ஏற்பட்டதே தவிர மகிழ்ச்சியும் எழுச்சியும் ஊட்டத் தக்க எண்ணம் ஏதும் அவர்கள் உள்ளத்தில் கிளர்ந்தெழ வில்லை.

* * * *

"எல்லா அரசாங்கங்களும் எந்த நோக்கத்தை நிறைவேற்றுவதற்காக இருக்கின்றனவோ அந்த நோக்கத்தின் வெற்றிக்கு எந்த அரசியல் திட்டம் அதிகமான அளவுக்கு உதவுகிறதோ அதுதான் சிறந்த அரசியல் திட்டம்" என்கிறார் ஜான் மேரியட் என்னும் அறிஞர் அவர் தீட்டியுள்ள

“சர்வாதிகாரமும் ஜன நாயகமும்” என்னும் புத்தகத்தில்!

சிறந்த அரசியல் திட்டம் எது என்னும் கேள்விக்கு ஜான் மேரியட் தந்துள்ள இந்த விடையை நாம் ஒப்புக் கொண்டால், எல்லா அரசாங்கங்களும் எந்த நோக்கத்தை நிறைவேற்றுவதற்காக இருக்கின்றன என்னும் கேள்வி உடனே எழுகிறது.

இந்தக் கேள்விக்கு விடை அளிக்கையில் கிரேக்க அறிஞர் அரிஸ்டாடல், சமுதாய வாழ்க்கையை மிகச் சிறந்த வாழ்க்கையாக மாற்றுவதுதான் அரசாங்கத்தின் நோக்கம் என்கிறார். ஆங்கில அறிஞர் பெந்தாம், மிக அதிகமான மக்களுக்கு மிக அதிகமான நன்மையைச் செய்வதற்காகத் தான் அரசாங்கம் இருக்கிறது என்று கருதுகிறார். அரசியல் கலைஞர் லாக், “மக்களின் உயிர், உடைமை, உரிமைகளைப் பாதுகாப்பதுதான் அரசாங்கத்தின் இலட்சியமாக இருக்கவேண்டும்” என்று கூறுகிறார். ‘தனி மனிதனின் உரிமைகளைப் பாதுகாப்பதுதான் ஒரு சர்க்காரின் புனித மான கடமை’ என்று தெளிவுரை பகர்கிறார் ஜான் ஸ்டூவர்ட் மில். “சமுதாயத்தின் வாழ்க்கையை மேலும் மேலும் வளமுள்ளதாக மாற்றி அமைப்பதற்காக மக்கள் ஒன்றாகத் திரளும் ஓர் அமைப்புக்குத்தான் அரசாங்கம் என்று பெயர்” என்பதாகக் கருத்துரை வழங்குகிறார் பேராசிரியர் லாஸ்கி. ஒரு குறிப்பிட்ட வகுப்பாருக்கு மட்டுமல்ல, நாட்டில் உள்ள எல்லா மக்களுக்கும் எவ்வளவு முடியுமோ அவ்வளவு சிறந்த வாழ்க்கையை அளிக்க முயல்வதுதான் அரசாங்கத்தின் கடமை என்கிறார் பெர்னட்ஷா. இந்த அறிஞர் பெருமக்களின் கருத்துக்களையெல்லாம் ஒன்று திரட்டிப் பார்க்கும்போது மக்கள் வாழ்க்கையை வளம் மிக்கதாக மாற்றுவதுதான் சிறந்த அரசாங்கத்தின் கடமை என்பதும், அந்தக் கடமையை நிறைவேற்றும் வகையில் அமைந்திருக்கும் அரசியல் திட்டம்தான் நம்மால் போற்றப்படவேண்டிய திட்டம் என்பதும் நன்கு

புலனாகின்றன. அப்படியானால், இந்திய அரசியல் திட்டம், அந்தக் கடமையை நிறைவேற்றும் வகையில் அமைந்திருக்கிறதா? மக்கள் வாழ்க்கையை வளமுள்ளதாக மாற்றும் தன்மை அதன்பால் பொதிந்து கிடக்கிறதா? மிக அதிகமான மக்களுக்கு மிக அதிகமான நன்மையைச் செய்யும் பண்பு அதனிடம் காணப்படுகிறதா? இல்லை என்பது வெளிப்படை.

இல்லாமற்போன காரணத்தால்தான் அந்தத் திட்டம் வெளிவந்துவிட்டது என்னும் சேதியைச் செவிமடுத்தபோது மக்கள் உள்ளத்திலே இன்பம் அலைமோதவில்லை; உற்சாகம் பிறக்கவில்லை; உணர்ச்சியூற்றும் உருவாகவில்லை.

* * *

“எங்களுடைய அரசியல் அமைப்பு மன்றத்தில், 1949 நவம்பர் 26ம் நாளாகிய இன்று இந்தியாவின் மக்களாகிய நாங்கள் ஒப்புக்கொண்டு, நிறைவேற்றி, எங்களுக்கு நாங்களே அளித்துக்கொள்ளும் அரசியல் திட்டம் இது.........:—”

இந்திய அரசியல் திட்டத்தின் முதல் வாக்கியம் இப்படித்தான் தொடக்கமாகிறது. ஆனால் இந்த வாக்கியத்தில் காணப்படும் கருத்து உண்மை நிலைமையின் விளக்கம் அன்று.

இந்திய மக்களால் தீட்டப்பட்ட திட்டம் அல்ல இந்தத் திட்டம். இந்திய மக்களால் ஒப்புக்கொள்ளப்பட்ட திட்டமுமல்ல. இந்திய மக்களுக்கு இந்திய மக்களே அளித்துக்கொண்ட திட்டமுமல்ல.

இந்தத் திட்டத்தைத் தீட்டிய அரசியல் அமைப்பு மன்ற உறுப்பினர்கள் இந்திய மக்கள் அனைவருக்கும் பிரதிநிதிகள் ஆகமாட்டார்கள். அவர்கள் இந்திய மக்கள் அனைவருடைய நம்பிக்கையையும் பெற்று அங்கே வந்து அமர்ந்தனரில்லை.

அவர்களுக்குத் தங்கள் வாக்குரிமைகளை அளித்து அவர்களை டில்லி சட்டசபைக்கு உறுப்பினர்களாக அனுப்பிவைத்த மக்கள் படித்தவர்கள், பணக்காரர்கள் ஆகிய இருசாரார் மட்டும்தான். படித்தவர்கள், பணக்காரர்கள் ஆகிய இவர்களின் தொகை மொத்த மக்கள் தொகையில் நூற்றுக்கு இருபது பங்குகூட இராது. எனவே இன்றைய அரசியல் திட்டத்தை வகுத்த அரசியல் மன்ற உறுப்பினர்கள் நாட்டு மக்கள் அனைவருடைய பிரதிநிதிகள் அல்லர். மக்கட் தொகையில் நூற்றுக்கு இருபது பங்கு மட்டுமே உள்ள படித்தவர்கள் பணக்காரர்கள் ஆகியோருக்கு மட்டும்தான் பிரதிநிதிகள். எழுதப் படிக்கத் தெரியாமல், வீடுவாசல் என்னும் சொத்து உரிமை இல்லாமல், செத்த வாழ்வு வாழும் ஆயிரமாயிரம் ஆலைத் தொழிலாளர்கள் இருக்கிறார்களே, ஏழை உழவர்கள் இருக்கிறார்களே, கட்டை வெட்டுவோர்—கூலிவேலை செய்து பிழைப்போர்—ரிக்ஷாத் தொழில் புரிவோர் என்று இப்படியுள்ள எண்ணற்ற பாட்டாளி மக்கள் இருக்கிறார்களே, பாடுபட்டுப் பாடுபட்டுப் பலன் காணாது தவிக்கும் பாமரர்கள் இருக்கிறார்களே, நூற்றுக்கு எண்பது பங்குள்ள மக்கள், சமுதாய வாழ்க்கையின் முதுகெலும்பைப் போன்ற மக்கள், அந்த மக்களுக்குப் பிரதிநிதிகள் அல்லர் இவர்கள். ஒரு சிறு கூட்டத்திற்கு மட்டும்தான் பிரதிநிதிகள்.

அந்தச் சிறு கூட்டம் இவர்களைத் தேர்ந்தெடுத்து அனுப்பியது கூட வெள்ளைப் பரங்கியை விரட்டத்தானே தவிர அரசியல் திட்டத்தைத் தீட்ட அல்ல! அவர்கள், இவர்களை சட்ட மன்றத்திற்கு அனுப்பிவைத்த காலம் அரசியல் திட்டம் தீட்டுவதைப் பற்றிய பிரச்சினையே எழாத காலம்! வெள்ளையன் வெளியேறாத காலம்! துப்பாக்கிக் குண்டுகளையும் பீரங்கி சத்தத்தையும் பாதுகாப்பாகக் கொண்டு இந்தியாவை இனியும் அடக்கியாள முடியும் என்று சர்ச்சில் துரைகள் கனவு கண்டுகொண்டிருந்த காலம்! எனவே அந்தக் காலத்தில் பிரிட்டானிய சிங்கத்தின் பிடரியைப் பிடித்துக் குலுக்கும் ஆற்றல் பெற்ற

வர்கள் யார் என்னும் கேள்விதான் தேர்தல் கிதமாக்கப் பட்டது. சிறை சென்றவர்கள் யார்? அதைத்தான் வாக்குரிமை படைத்தவர்கள் அப்போது கேட்டனர். சட்ட நுணுக்கம் தெரிந்தவர்கள் யார் என்பதை அல்ல. தடியடிபட்டவர்கள் எவர் என்பதைத்தான் அவர்கள் அன்று அறிய விரும்பினர். திட்டம் தீட்டும் திறனுடையார்களை அல்ல!

எனவே, இன்றைய அரசியல் திட்டத்தைத் தீட்டியிருப்பவர்கள் எல்லா மக்களுடைய பிரதிநிதிகள் அல்லர்—ஒரு சிறு கூட்டத்தாருக்கு மட்டும்தான் பிரதிநிதிகள். அதுவும் திட்டம் தீட்டிட அனுப்பப்பட்டவர்களல்லர்—ஏகாதிபத்தியத்தை விரட்டிட அனுப்பப் பட்டவர்கள்.

அரசியல் திட்டத்தைத் தீட்டும் அதிகாரத்தைத் தங்களுக்கு அளிக்கவேண்டுமென்று இவர்கள் மக்களைக் கேட்கவுமில்லை. அவர்கள் இவர்களுக்கு அந்த அதிகாரத்தை அளிக்கவுமில்லை. இந்நிலையில் இவர்கள் இடப்படாத கட்டளையை, தரப்படாத அதிகாரத்தைக் கொண்டு, தாங்களாகவே நடத்தி முடித்திருப்பது முறையுமல்ல; அது அறமும் ஆகாது.

வெள்ளையர் ஆட்சியை விரட்டுவதற்காக அனுப்பப்பட்ட இவர்கள், திடீரென அந்தப் பணி முடிவு பெற்று, விடுதலை வாழ்க்கை உருவாகி, அரசியல் திட்டம் தீட்ட வேண்டிய புதுப்பணி தோன்றியவுடன், மக்களை அழைத்து, "நீங்கள் எங்களை எதற்காக சட்டமன்றத்திற்கு அனுப்பினீர்களோ அந்தப் பணி முடிந்துவிட்டது! இதோ ஓர் புதுப் பணி பிறந்திருக்கிறது! இதனையும் நாங்களே முடித்து விடலாமா? கட்டளை தருகிறீர்களா?" என்று கேட்டிருக்க வேண்டும். அதாவது அரசியல் திட்டத்தை வகுப்பதற்காகவென்றே, தனியாக, எல்லா மக்களுக்கும் வாக்குரிமை என்ற அடிப்படையில், புதிய தோர் தேர்தல் நடத்தியிருக்க வேண்டும். அந்தத் தேர்தலிலும் இவர்களே வெற்றிபெற்று வந்திருந்தால் அரசி

யல் திட்டத்தைத் தீட்ட இவர்களுக்கே முழு உரிமை உண்டு. அப்போது யாரும் அதை மறுக்க முடியாது.

ஆனால், இப்போது?

நாட்டு மக்களிலே மிகச் சிலர் மட்டும், எப்போதோ ஒரு காலத்தில், வேறு எதற்காகவோ அளித்த அதிகாரத்தை, இவர்கள் இந்தச் செயலுக்குப் பயன்படுத்திக் கொண்டிருக்கின்றனர்.

இச் செயல், அரசியல் நேர்மைக்குப் புறம்பானது; ஒழுங்கு முறைக்கு ஒவ்வாதது; மக்கள் நன்மைக்கும் மாறானது.

தரப்படாத அதிகாரத்தைக் கொண்டு, இடப்படாத கட்டளையை, சமுதாயம் ஒப்பமுடியாத முறையில் நிறைவேற்றி, மக்கள் மனக்கசப்பைத் தேடிக்கொண்டிருக்கின்றனர் காங்கிரஸ் ஆட்சியாளர்கள். இதற்குப் பெயர் விவேகமல்ல—வீண் செயல்!

3. கூட்டாட்சி—எங்கே?

அத்திப் பழத்தைப் பிட்டால் அத்தனையும் சொத்தை என்பார்கள். கூடை செங்கல்லும் பிடாரி என்பதாக மற்றோர் பழமொழியும் இருக்கிறது. காங்கிரஸ் ஆட்சியாளர்கள் தீட்டியுள்ள இந்திய அரசியல் திட்டம் இந்தப் பழமொழிகள் வகுத்துக் காட்டும் இலக்கணத்தை முற்ற முடிய நிறைவேற்றும் தன்மை படைத்ததோர் அரிய இலக்கியமாகவே அமைந்துகிடக்கிறது.

அரசியல் திட்டப் புத்தகத்தின் எந்தப் பகுதியைப் பிரித்துப் பார்த்தாலும் அங்கே குப்பையும் கூளமுமே நிறைந்து கிடக்கின்றன.

அந்தப் பெரிய சுவடியை எந்தக் கண்ணோட்டத்தைக் கொண்டு கூர்ந்து கவனித்தாலும் அது எண்ணற்ற பிழைகள் மலிந்ததோர் அபத்தக் களஞ்சியமாகவே காணப்படுகின்றது.

பக்கத்திற்குப் பக்கம், அத்தியாயத்திற்கு அத்தியாயம், பகுதிக்குப் பகுதி, மன்னிக்கமுடியாத குற்றங்களும் மறக்க முடியாத தவறுகளும் எண்ண முடியாத இழுக்குகளுமே செறிந்து மிடைந்து துதைந்து நிற்கின்றன.

இந்தப் பக்கத்திலே மக்களாட்சி தழைப்பதற்கான மாபெரும் பாதை வகுக்கப்பட்டிருக்கிறது—ஆனால் அதோ அந்தப் பக்கத்திலேதான் சர்வாதிகாரச் சிந்து இசைக்கப் பட்டிருக்கிறது என்று நன்மையையும் தீமையையும் தனித் தனியே பிரித்தெடுத்து வகைப்படுத்திக் காட்ட வழி ஏது மில்லை. எல்லாப் பக்கங்களுமே எண்ணற்ற தவறுகளின் எழில்மாட மாளிகைகளாக இருக்கின்றன.

இழுக்கான பிரிவுகளும் தவறான பகுதிகளும் இவ்வண்ணம் பக்கத்திற்குப் பக்கம் நிறைந்து ஏராளமாகக் காணப்படுகின்றன என்றபோதிலும் இந்தத் தவறுகள்

அத்தனையும் இரண்டு மூலாதாரத் தவறுகளிலிருந்தே கிளைத்து எழுந்து செழித்து ஓங்கி வளர்ந்திருக்கின்றன.

அந்த இரு தவறுகளுமே ஏனைய தவறுகள் எல்லாவற்றிற்கும் தோற்றுவாய்; பிற தவறுகளை எல்லாம் தப்பாமல் உருவாக்கும் அச்சு; எல்லாப் பிழைகளையும் தோற்றுவிக்கும் ஊற்று.

அந்த இரு தவறுகளைப் பற்றிய முழு விவரங்களையும் தெரிந்துகொள்ள வேண்டுமானால், இந்திய அரசியல் திட்டச் சுவடியை ஒரு முறைக்கு இருமுறை, இரு முறைக்கு மும்முறை கூர்ந்து கவனித்துப் படித்தாக வேண்டும்.

அப்படிப் படித்துப் பார்த்தால், இந்தத் திட்டத்தைத் தீட்டிய திருவளர் செல்வர்கள் செய்துள்ள முதற்பெருந் தவறு, பல்வேறு நாடுகளின் தொகுப்பாகிய இந்தியத் துணைக் கண்டத்தை ஒரு தனி நாடு என்று எண்ணி அந்த எண்ணத்தை அடிப்படையாகக் கொண்டு திட்டம் தீட்டத் தொடங்கிய தெளிவற்ற மனப் போக்கே என்பது எவருக்கும் எளிதிற் புலனாகும்.

இந்தியா ஒரு நாடு அன்று—ஒரு துணைக் கண்டம். இந்திய மக்கள் என்று பொதுவாக அழைக்கப்படும் மக்கள் அனைவரும் ஒரே தேசீய இனத்தைச் சேர்ந்தவர்களல்லர்—அவர்கள் தனித்தனியே உள்ள பல்வேறு தேசீய இனங்களைச் சேர்ந்தவர்கள். அவர்கள் அனைவரும் ஒரே மொழியைப் பேசுபவர்கள் அல்லர்—வெவ்வேறு மொழிகளைப் பேசுபவர்கள். அவர்கள் அத்தனை பேருடைய கலாசாரமும் ஒரே தன்மையானதன்று—வெவ்வேறு பண்புகள் வாய்ந்தது. அவர்கள் அனைவருக்கும் பொதுவானதோர் வரலாறு உண்டா? அதுவும் கிடையாது. ஒவ்வோர் இனத்தவரின் வரலாறும் தனித்தனியே, தனித்தனி குணங்களுடன் அமைந்து கிடக்கிறது. வாழும் வழி, நினைக்கும் நினைப்பு, உண்ணும் உணவு, உடுக்கும் உடை,

பேசும் முறை இவற்றிலேனும் அவர்கள் அனைவருக்கும் பொதுவான தன்மை உண்டா? இல்லை! சிறிதளவும் இல்லை!

வங்காளிகள் வேறு! பஞ்சாபியர் வேறு! குஜராத்தியர் வேறு! மராட்டியர் வேறு! அசாமியர் வேறு! தென்னாட்டவர் வேறு! இவர்கள் ஒவ்வொருவரும் தனித்தனி இனத்தவர்கள்; தனித்தனி மொழி பேசுபவர்கள்; தனித்தனி வாழ்க்கை வழி படைத்தவர்கள்; தனித்தனி கலாச்சாரத்தைப் போற்றி வளர்க்கும் பண்பு படைத்தவர்கள்.

இவர்களுடைய வரலாறும் சரி, தேசிய சிந்தனைகளும் சரி—வெவ்வேறுதான்.

இவர்களுடைய உள்ளத்தில் வீர உணர்ச்சியை எழுப்பும் போராற்றல் படைத்த முற்கால வீரர்களும் சரி, இவர்களுடைய வாழ்க்கையை வளமுள்ளதாக்கும் சிறப்பும் செல்வாக்கும் படைத்த இலக்கியச் செல்வங்களும் சரி—ஒன்றிற்கொன்று மாறுபட்டவைதான்.

ஒரு வங்காளிக்கு சுபாஷ் சந்திரபோஸ் என்னும் பெயரைக் கேட்டால் ஏற்படுகிற அளவு ஆநந்தம் சேரன் செங்குட்டுவன் என்னும் பெயரைக் கேட்டால் ஏற்படாது. அதுபோலவே ஒரு திராவிடனுக்கு திருவள்ளுவர் அல்லது விவேகி வேமன்னு என்னும் எழுத்துக்களைப் படிக்கும்போது உண்டாகும் களிப்பு பங்கிம் சந்திர சட்டர்ஜி என்னும் சொற்றொடரைப் படிக்கும்போதோ, கவிஞர் தாகூர் என்னும் பெயரைக் கண்ணுறும்போதோ நிச்சயம் உருவாகாது.

குரு நானக் அல்லது குரு கோவிந்தசிங் என்று சொல்லிப் பாருங்கள். சீக்கிய மண்டலத்தவர் உள்ளம் சிந்துபாடும் சிற்றுருக மாறும்; மனமோகன கீதம் பாடும். ஆனால் மாவீரன் சிவாஜி என்னும் பெயரைக் கூறிப்பாருங்கள். அவர்கள் முகத்தில் எத்தகைய உணர்ச்சியும்

உருவாகாது. காரணம், குரு நானக் அவர்களுடைய இனம்! சிவாஜி, வேற்று இனம்!

அதுபோலவேதான், மராட்டிய மண்டலத்தவரிடம் சென்று சிவாஜி என்னும் மூன்று எழுத்துக்களை உச்சரித்தாலே போதும். அவர்களுடைய கண்களிலே புது ஒளி பிறக்கும். முகம் புன்னகைப் பூந்தோட்டமாகும். ஆனால் குரு நானக் என்ற சொற்கள் அவர்கள் காதில் விழட்டும் —அப்போது அவர்கள் அதைப்பற்றி ஏதாவது கவலை கொள்கிறார்களா பாருங்கள்! மாட்டார்கள் !!

இத்தகு நிலைமை இருப்பது வியப்படைவதற்குரிய தோர் நிகழ்ச்சி அன்று. இயற்கையாக எவரும் எதிர் பார்க்கவேண்டிய சம்பவமேயாகும்.

தன் மொழி, தன் நாடு, தன் இனம், தன் இன வீரர்கள், தன் இன வீரர்களின் தீரம், தன் இன இலக்கியங்கள் இவற்றைப்பற்றி எண்ணிப் பார்க்கும்போது ஒருவனுக்கு ஏற்படுகின்ற எழுச்சியும் உணர்ச்சியும் வேற்று மொழி, வேற்று நாடு, வேற்று இனம், வேற்று இன வீரர்கள், வேற்று இன வீரர்களின் தீரம் என்றெல்லாம் கேள்விப்படுகிறபோது ஏற்படத்தான் செய்யாது; ஏற்பட முடியாது.

தன்னுடைய தந்தை வருகிறார் என்று கேள்விப்பட்டால் ஒரு மகனுக்கு ஏற்படுகிற ஆநந்தம் பக்கத்துவீட்டு பாலுவின் அல்லது எதிர்வீட்டு ஏகாம்பரத்தின் தந்தை வருகிறார் என்று கேள்விப்படுகிறபோது எப்படி ஏற்பட முடியும்!

வங்காள மொழி—வங்காள இனம்—வங்காளக் கவிஞர்கள்—வங்காளத் தலைவர்கள் என்றால் ஒரு வங்காளி பூரிப்படைவதும், சீக்கிய மொழி—சீக்கிய இனம்—சீக்கியக் கவிஞர்கள்—சீக்கியத் தலைவர்கள் என்றால் ஒரு சீக்கியன் பூரிப்படைவதும், மராட்டிய மொழி—மராட்டிய இனம்—மராட்டியக் கவிஞர்கள்—மராட்டியத் தலைவர்கள்

என்றால் ஒரு மராட்டியன் பூரிப்படைவதும் இயற்கை. ஏனெனில் ஒரு வங்காளி வங்க மக்களையே தன் இன மக்களாகவும், வங்க நாட்டையே தன் சொந்த நாடாக வும், வங்க மொழியையே தன் அருமை மொழியாகவும் கருதுகிறான். அதுபோலவே ஒரு சீக்கியன். அது போலவே ஒரு மராட்டியன், அதுபோலவேதான் ஒரு திராவிடன்.

இந்தியா என்னும் சொல்லைக் கேள்விப்பட்டவுடனே அது ஏதோ ஓர் அரசாங்க அமைப்பு என்றுதான் இந்தியாவில் உள்ள பல்வேறு இனத்தவரும் எண்ணுகின்றனரே தவிர, இந்தியாவா—அது நம் நாடல்லவா என்னும் எண்ணம் அவர்களில் யாருக்குமே எழுவதில்லை. வங்காளி வங்கத்தைத்தான் தன் நாடாகக் கருதுகிறான். குஜராத்தி குஜராத்தைத்தான் தன்னுடைய தரணியாக எண்ணுகிறான். திராவிடன் திராவிடநாட்டைத்தான் தான் பிறந்தபூமி என்று போற்றுகிறான்.

கட்சிப்பற்று காரணமாகவோ ஆராய்ச்சி அறிவின்மை காரணமாகவோ சிலர் இந்த உண்மையை மறுக்கக்கூடும். சிலர் மறந்துவிட்டதுபோல பாவனை புரியவும் கூடும். ஆனால், சிலர், மறுப்பதாலோ அல்லது மறப்பதாலோ இருக்கும் ஓர் உண்மை இல்லாது போய்விடாதே!

வரலாறு மிகத் தெளிவாக அறிவிக்கிறது—

க்ளைவும் கானன்வாலிசும் வெல்லெஸ்லியும் ஹேஸ்டிங்சும் இந்தத் துணைக் கண்டத்தில் நுழைந்து தங்கள் ஆதிக்கக் கொடியை நிலைநாட்டிக்கொண்டதற்கு முன்னாள் வரையில், இங்கே, இந்தியா என்றொரு "நாடு" இருந்தது கிடையாது. பாஞ்சாலமும் வங்காளமும், மராட்டியமும் குஜராத்தும், ராஜபுதனமும் அசாமும், தமிழகமும் ஆந்திரமும், கேரளமும் கன்னடமும்தான் இருந்தன! ஒரு நாடு அல்ல—பல நாடுகள், தனித்தனி அரசாங்கம், மொழி, வழி, இனம், கலாசாரம் ஆகியவற்றுடன் தனி வாழ்வு வாழ்ந்து கொண்டிருந்தன.

இந்தியா என்று இன்று அழைக்கப்படுகிற இந்த நிலப்பரப்பு, வெள்ளையர் ஆட்சிக்கு முன்பு, எந்தக் காலத்திலும் ஒரே ஆட்சியின் கீழ் இருந்தது கிடையாது. இராமாயண பாரத காலங்களில் 56 நாடுகளாக இருந்திருக்கின்றது இந்தத் துணைக்கண்டம். பிற்காலத்திலும் பலப் பல நாடுகளாகவேதான் இருந்திருக்கின்றது — என்றுமே ஒரு நாடாக உருவானது கிடையாது.

கி. மு. நான்காவது நூற்றாண்டில் அரசாண்ட சந்திரகுப்த மவுரியராலும் சரி, கி. மு. மூன்றாவது நூற்றாண்டில் நாடாண்ட அசோக மன்னராலும் சரி, இந்திய நிலப்பரப்பை ஒரே ஆட்சியின்கீழ்க் கொண்டுவர முடியவில்லை.

கி. பி. முதல் நூற்றாண்டில் இருந்த கனிஷ்கரும் முயன்று பார்த்தார். கி. பி. 4, 5, 6-ம் நூற்றாண்டுகளில் செங்கோல் ஓச்சிய குப்தர்களும் முயன்று பார்த்தனர். இந்தியாவை ஒரு நாடாக்க அவர்களால் இயலவில்லை.

கி. பி. 7-ம் நூற்றாண்டில் மன்னராக இருந்த ஹர்ஷர் இந்திய சக்ரவர்த்தியாகவேண்டுமென்று படாத பாடெல்லாம் பட்டார்—பயனில்லை! வடநாட்டைக்கூட முற்றிலும் கைப்பற்ற அவரால் முடியவில்லை: ராஜபுதனம், சிந்து, பாஞ்சாலம் ஆகிய பகுதிகள் அவருடைய பிடியில் சிக்க மறுத்துவிட்டன. தென்னாட்டிலேயோ அவரால் நுழையவே முடியவில்லை இரண்டாம் புலிகேசியால் அனுப்பப்பட்டுப் பரஞ்சோதி முனிவரின் தலைமையில் போராடிய தென்னாட்டுப் படைகள் வாதாபி என்னும் இடத்தில் ஹர்ஷருடைய படைகளை முறியடித்துத் துரத்தியதோடில்லாமல் தென்னாட்டுக்குள் ஹர்ஷர் காலடி எடுத்து வைக்க முடியாதபடி செய்துவிட்டன.

13-ம் நூற்றாண்டின் இறுதியிலே பாதுஷாவான அலாவுத்தீன் கில்ஜியும் 14-ம் நூற்றாண்டின் தொடக்கத்திலே சக்ரவர்த்தியான மகமத்—பின்—துக்ளக்கும் ஹர்ஷர் செய்து பார்த்துத் தோற்ற செயலையே செய்து முடிக்

கப் பார்த்தனர். ஹர்ஷரைப் போலவேதான் இவர்களும் அப்படிச் செய்யமுடியாமல் தோற்றனர்.

16-ம் நூற்றாண்டிலே பெருத்த செல்வாக்குடன் அரசாண்ட அக்பரும், அதற்கடுத்த நூற்றாண்டிலே டில்லி பாதுஷாவான அவுரங்கசீப்பும் ஒரு குடையின்கீழ் இந்தியாவை வைத்தாள எண்ணினர்—முடியவில்லை.

1858-ல் விக்டோரியா ராணி வெளியிட்ட அறிக்கைக்குப் பிறகுதான் இந்தியா ஒரே ஆட்சியின்கீழ் வந்தது. அப்போதும்கூட ஏறத்தாழ 500 சிற்றரசுகள் தனித் தனியே இந்தியாவில் இருக்கத்தான் செய்தன.

இவ்வண்ணம் கி. மு. 5-ம் நூற்றாண்டு முதல் கி. பி. 19-ம் நூற்றாண்டுவரை சந்திரகுப்தர்—அசோகர்—கனிஷ்கர்—ஹர்ஷர்—அக்பர்—அவுரங்கசீப் போன்ற பெரும் பெரும் மன்னர்கள் பெரு முயற்சி புரிந்தும்கூட இந்தியாவில் உள்ள பல்வேறு நாடுகளை ஒன்றாக்க முடியவில்லை என்றால், அதற்குப் பொருள், இந்தியா, பல்வேறு நாடுகளாகப் பிரிந்திருப்பதற்கு ஏற்ற இயற்கை அமைப்புடன் கூடியிருக்கிறதே தவிர ஒரே நாடாக இருக்கும் பண்பு அதற்குக் கிடையாது என்பதுதான். ஆம்! ஒரு நாடல்ல இந்தியா; பல நாடுகளின் தொகுப்பு!

வெள்ளை அதிகாரவர்க்கம் தன்னிடமிருந்த பட்டாளத்தையும் போர்க்கருவிகளையும் காட்டிப் பயமுறுத்தி, இந்தியாவை ஒரே நாடு என்று ஏடுகளில் எழுதிவைத்துக் கொண்டு, அதற்கேற்ற முறையிலேயே நாடாளவும் தொடங்கிற்று. என்றாலும், அந்தக் காலத்தில்கூட அந்த "ஒரு நாடு", பெயரளவில்தான், இன்னமும் சொல்லப் போனால், ஆட்சியாளரின் ஏட்டளவில்தான் இருந்ததே தவிர, உண்மையில், இந்தியா, அப்போதும் பல நாடுகளாகத்தான் இருந்தது.

பிரிட்டானியத்தின் இரும்புப் பிடியிலே சிக்கிச் சீரழிந்துகொண்டிருந்த இந்தியத் துணைக்கண்டத்தை விடுத

லைப் பாதையில் நடத்திச் செல்வதற்கான உரிமைப் போர் புரியும்போதெல்லாம் இந்தியாவில் உள்ள பல்வேறு இனத்தவரும் தோளோடுதோள் பிணைத்து நின்று போராடிய காரணத்தால், அவர்களுக்கிடையே இருந்த வேற்றுமைகள் அவ்வளவாக வெளியே தெரியாமல் இருந்தன. வெளியே தெரியாமல் இருந்தனவே தவிர, அவ் வேற்றுமைகள், அந்தக் காலத்தில்கூட, மறைந்துவிடவில்லை.

வெள்ளையன் வெளியேறினன். இந்தியாவின் பல்வேறு இனங்களுக்கிடையே இருந்த ஓரே ஒரு ஒற்றுமைச் சங்கிலியும் அறுந்தது. ஒவ்வோர் இனத்தவரும் உடனே தம்தம் வட்டாரத்தைப்பற்றி நினைக்கலாயினர். தனித்தரணி அமைத்து, தனி அரசு நிறுவி, தனி வாழ்வு வாழவேண்டுமென்னும் ஆசை ஒவ்வோர் இனத்தவர்க்கும் ஏற்படலாயிற்று.

தென்கோடியில், திராவிடர்கள், அமைத்தே தீருவோம் திராவிடத் தனி அரசு என்று வீரமுழக்கமிடலானர்கள். அதுபோலவே வடகோடியில் சீக்கியர்கள் அகாலிஸ்தான் தேவை என்று போர்ப்பரணி பாடலானர்கள். கிழக்கே வங்காளத்திலும் சுதந்தர வங்காள இயக்கம் புயல்போல் மூண்டெழலாயிற்று.

இத்தகு சூழ்நிலையிலேதான் இந்திய அரசியல் திட்டம் தீட்டப்பட்டது. அரசியல் திட்டத்தைத் தீட்டியவர்கள் வர்க்கத்துக்கோர் வட்டாரம் தேவை என்னும் இன எழுச்சிக் கிளர்ச்சி இதுபோல நாடெங்கும் இருப்பதை உணர்ந்து, ஒவ்வோர் இனத்தவரின் விடுதலை வேட்கையையும் உரிமை உணர்ச்சியையும் மதித்து, அவர்களுடைய உள்ளம் சிறிதும் புண்படாத முறையில் திட்டத்தைத் தீட்டியிருக்கவேண்டும். ஆனல் ஆளவந்தார்கள் இந்த அடிப்படை உண்மைகளை மறந்தனர்—இந்தியத் துணைக் கண்டத்தை ஒரு நாடு என்று கொண்டனர்—அந்தத் தவருன எண்ணத்தின் மீது திட்டத்தை அமைத்தனர்—

விளைவு, பக்கத்திற்குப் பக்கம் பெரும் பெரும் பிழைகள்! மக்களிடையே பரிபூரண அதிருப்தி!!

* * *

ஒரு குடியரசு நாட்டின் ஆட்சிமுறை இருவேறு வகையாக அமைந்திருக்கக்கூடும்.

சில நாடுகளில் தலைமை அதிகாரம் முழுவதும் மத்திய அரசாங்கத்திடமே குவிக்கப்பட்டிருக்கும். நாட்டில் உள்ள ஏனைய ஆட்சி உறுப்புக்கள் தமக்கென்று தனி அதிகாரம் எதுவும் பெற்றிருக்கமாட்டா. மத்திய அரசாங்கம் தானாக முன்வந்து என்னென்ன அதிகாரங்களை இந்தக் கிளை அரசாங்கங்கட்கு ஒப்படைக்கிறதோ அவற்றை மட்டும்தான் இந்த அரசாங்கங்கள் பெற்றிருக்க முடியும். ஒரு ஜில்லா போர்டு அல்லது தாலுகா போர்டு அல்லது பஞ்சாயத்து போர்டை உண்டாக்கவும் கலைக்கவும், அவற்றின் அதிகாரங்களைக் கூட்டவும் குறைக்கவும் எப்படி ஒரு மாகாண ஆட்சியாளருக்கு முழு உரிமை உண்டோ, அப்படித்தான், மேலே குறிப்பிடப்பட்ட கிளை அரசாங்கங்களின் அதிகாரங்களைக் கூட்டவும் குறைக்கவும் மத்திய அரசாங்கத்திற்கு முழு உரிமை உண்டு. இத்தகைய ஆட்சி முறையை ஒத்தை ஆட்சிமுறை [Unitary Government] என்று வழங்குவர். ஒரே தேசிய இனம் ஒரு நாடாக உருவாகும் இடங்களில் இந்த ஆட்சி முறை மிகவும் பயன்படும். எடுத்துக்காட்டாக, பிரான்ஸ், பிரஞ்சு இனம் ஒன்றை மட்டுமே தன்பால் கொண்டிருப்பது; எனவே அங்கு ஒத்தை ஆட்சிமுறை நடைமுறையில் இருக்கிறது. அந்த ஆட்சிமுறைதான் அங்கே இருக்க முடியும்—இருக்கவேண்டும்!

சில நாடுகளில், தலைமை அதிகாரம், இரண்டு கூறுகளாக வகுக்கப்பட்டு, ஒரு கூறு, மத்திய ஆட்சியிடமும் மற்றொரு கூறு, கிளை ஆட்சிகளிடமும் ஒப்படைக்கப்படும். இத்தகு நாடுகளில் கிளை ஆட்சிகளின அதிகாரங்களில் மத்திய ஆட்சி குறுக்கிட முடியாது. மத்திய ஆட்சியின்

அதிகாரங்களில் கிளை ஆட்சிகளும் தலையிட இயலாது. இத்தகைய ஆட்சிமுறை உருவாக்கப்படும்போது, கிளை ஆட்சிகள், தாமாக முன்வந்து, தமக்குள்ள அதிகாரங்களில் சிலவற்றை, குறிப்பாக வெளிநாட்டு உறவு, பாதுகாப்பு, போக்குவரத்து முதலிய துறைகளின் அதிகாரங்களை, மத்திய ஆட்சியிடம் ஒப்படைத்து விடுகின்றன. இப்படி ஒப்படைக்கப்படுகின்ற அதிகாரங்களில் மட்டும் தான் மத்திய ஆட்சிக்கு உரிமை உண்டு. ஏனைய அதிகாரங்கள் யாவும் கிளை ஆட்சிகளிடமே இருக்கும். இத்தன்மையதான ஆட்சிமுறைக்குக் **கூட்டாட்சி முறை** (Federal Government) என்று பெயர்.

ஒத்தை ஆட்சிமுறைக்கும் கூட்டு ஆட்சி முறைக்கும் மிகுந்த வேறுபாடு உண்டு. ஒத்தை ஆட்சி முறையில், மத்திய ஆட்சிக்கு 'எஜமானர்' நிலை! கிளை ஆட்சிகளுக்கு அந்த 'எஜமானர்' இட்ட கட்டளைப்படி நடந்து தீர வேண்டிய 'பணியாள்' நிலை! ஆனால் கூட்டாட்சி முறையில், மத்திய ஆட்சியைப் போலவே கிளை ஆட்சிகளும் எஜமானர்கள்தான்! சில துறைகளில் மத்திய ஆட்சிக்கு எஜமானர் நிலை! வேறு சில துறைகளில் கிளை ஆட்சிகட்கு எஜமானர் நிலை!—ஆனால் இருவருமே எஜமானர்கள் தான்—யாருக்கும் 'பணியாள்' நிலை கிடையாது.

மொழி—கலை—வரலாறு — பண்பாடு ஆகியவற்றில் ஒன்றிற்கொன்று வேறுபடும் அல்லது மாறுபடும் பல்வேறு தேசிய இனங்கள், ஏதோ சில காரணங்களால் ஒன்றுபட்டு, ஒரே ஆட்சியை அமைக்க நேரும்போது இந்தக் கூட்டாட்சி முறையைத்தான் கையாள்வது வழக்கம்.

18-ம் நூற்றாண்டின் இறுதியில் அமெரிக்காவிலிருந்த பல்வேறு தேசிய இனங்கள், பிரிட்டிஷ் ஆட்சியிலிருந்து விடுபட்டு தமக்குள் ஒற்றுமையை உருவாக்கிக்கொண்டு, ஆட்சிமுறையை வகுக்கத் தொடங்கியபோது, இந்தக் கூட்டாட்சி முறையைத்தான் பின்பற்றின. இன்றளவும்

கூட்டாட்சி முறைதான் அமெரிக்காவில் அமுலில் இருந்து வருகிறது.

அமெரிக்காவிலாவது மக்கள் தொகை கோடிக்கணக்கில் இருக்கிறது. ஆனால் ஐரோப்பாவில் உள்ள ஸ்விட்சர்லாந்து நாட்டின் மக்கள் தொகை கிட்டத்தட்ட நாற்பது லட்சம்தான். என்றாலும் அங்கே ஒத்தை ஆட்சி முறை அமுலில் இல்லை. கூட்டாட்சி முறைதான் இருக்கிறது. ஏனெனில் அங்கே ஜெர்மானியர்கள், பிரெஞ்சுக்காரர்கள், இத்தாலியர்கள், ருமானியர்கள் முதலான பலப்பல தேசிய இனங்கள் தனித்தனி மொழி, வழி, கலாசாரத்துடன் வாழ்கின்றனர். ஒத்தை ஆட்சிமுறை அமுலுக்கு வந்தால், மொத்த மக்கள் தொகையில் மூன்றில் இரு பங்கு உள்ள ஜெர்மானியர்களிடமே நாட்டாட்சி முழுவதும் கைமாறிவிடும் என்று ஸ்விஸ்நாட்டு ஏனைய இனத்தவர்கள் அஞ்சிய காரணத்தால், அங்கே, கூட்டாட்சி முறை ஏற்படுத்தப்பட்டு, ஒவ்வோர் இனத்தவருக்கும் தனித் தரணி பங்கிட்டுத் தரப்பட்டு, தத்தம் தரணியைத் தாமே ஆண்டு கொள்ளும் தன்னாட்சி உரிமையும் (Right of Self Determination) அளிக்கப்பட்டு, ஸ்விஸ் கூட்டாட்சியில் இருக்க எந்த இனத்தவருக்காவது விருப்பமில்லாமற் போகுமானால் தனியாகப் பிரிந்துசெல்லும் உரிமையும் கொடுக்கப்பட்டிருக்கிறது. இப்படிப்பட்ட தனியாட்சி உரிமை படைத்த நாடுகள் ஸ்விட்ஜர்லாந்து கூட்டாட்சியில் மொத்தம் 22 இருக்கின்றன. மீண்டும் நினைவூட்டுகிறோம், ஸ்விஸ் கூட்டாட்சியின் மக்கள் தொகை—இந்த 22 நாடுகளுக்கும் சேர்த்து—40 லக்ஷம்தான்! இந்த 22 நாடுகளில் மிகப்பெரிய நாட்டின் மக்கள் தொகை 5 லக்ஷம்! அதாவது சென்னை நகரத்தின் மக்கள் தொகையில் மூன்றில் ஒரு பங்கு! மிகப் பெரிய நாடே இந்த அளவினதாக இருக்குமானால் மிகச் சிறிய நாட்டின் அளவு எப்படி இருக்கும்! அதைச் சொல்லவும் வேண்டுமா தனியாக? எவரும் அதை எளிதில் உணர்ந்து கொள்ளலாம். "காஞ்சீபுரம், திருச்சிராப்பள்ளி, தஞ்சாவூர் போன்ற அளவும் மக்கட் தொகை

யும் உள்ள சிறு சிறு பகுதிகளுக்கெல்லாம் 'நாடு' என்ற பெரிய பட்டத்தையும் கொடுத்து, அதற்கேற்ற தனியாட்சி உரிமையும் அளிப்பதா, என்ன வேடிக்கை" என்று சில "அகண்ட இந்தியாக்கள்" கேலிசெய்யக் கூடும். வேடிக்கை அல்ல அது! பல்வேறு தேசிய இனங்களின் உரிமை உணர்ச்சியை மதிக்கவேண்டும் என்னும் உயரிய பண்பாட்டின் அடையாளச் சின்னம்! ஒவ்வோர் இனத்திற்கும், அதைவிட அதிக வலிவுள்ள ஏனைய இனங்கள் அதனைச் சுரண்டிக் கொழுக்காதபடி தடுத்துக்கொள்வதற்காக அளிக்கப்பட்டுள்ள இரும்புக் கவசம்!

ஸ்விட்சர்லாந்தின் அரசியல் வரலாற்றைப் போலவேதான் சோவியத் ரஷ்யாவின் சுவைமிக்க வரலாறும், பல்வேறு தேசிய இனங்கள் கூடிவாழும் ஒரு நிலப்பகுதிக்குக் கூட்டாட்சி முறையே மிகவும் ஏற்றது என்னும் உண்மையை அழுத்தந் திருத்தமாக எடுத்துக் காட்டுகிறது.

1922-ல் அகில சோவியத் சோஷலிசக் குடியரசு உருவாக்கப்பட்டபோது, அந்தக் குடியரசு ஒரு கூட்டாட்சியே என்பதும், அந்தக் குடியரசில் இணைந்து கொள்ளும் நாடுகள் ஒவ்வொன்றிற்கும் தம்மைத்தாமே ஆண்டுகொள்ளும் முழு உரிமை உண்டு என்பதும், விருப்பமில்லாதபோது கூட்டாட்சியை விட்டு விலகிச் செல்லும் அதிகாரம் அவற்றிற்கு இயல்பாகவே அமைந்திருக்கிறது என்பதும் சோவியத் அரசியல் திட்டத்தில் திட்டவட்டமாகக் குறிப்பிடப்பட்டன. "எந்த ஒரு தேசிய இனத்திற்கும் எந்த ஒரு பிரத்யேக உரிமையும் கிடையாது" என்று புரட்சித் தலைவர் லெனின் மீண்டும் மீண்டும் முழக்கமிட்டார். இவ்வண்ணம் ஒவ்வொரு தேசிய இனத்திற்கும் முழுத் தன்னாட்சி உரிமையும், தாராளமாகப் பிரிந்துசெல்லும் அதிகாரமும் கொடுக்கப்பட்ட காரணத்தால்தான் சோவியத் ரஷ்யாவில் இனத்தகராறோ, ஓர் இனம் மற்றோர் இனத்தைச் சுரண்டுகிறது என்ற கூச்சலோ சிறிதளவும் இல்லாமல் இருப்பதோடு, ஒவ்வோர் இனத்தவரும்

ஏனைய இனத்தவருடன் முழுமனதுடன் ஒத்துழைத்து ஒப்பற்ற நண்பர்களாகவும் இணைபிரியாக் கூட்டுத் தோழர்களாகவும் இருக்க முடிகிறது.

இப்போது சோவியத் கூட்டாட்சியில் 16 தனி அரசுகள் இருக்கின்றன. இவை ஒவ்வொன்றும் தாமாக தம் சொந்த விருப்பத்தின் காரணமாக சோவியத் கூட்டாட்சியில் இணைந்தவை. இவற்றிற்கிடையே ஒன்றிற்கொன்று எத்தகைய ஏற்றத்தாழ்வும் கிடையாது. இவற்றிலே எந்த ஒரு தனி அரசுக்கும் மற்ற அரசுகளுக்கில்லாத எந்த ஒரு சலுகையும் கொடுக்கப்படவில்லை.

ஒவ்வோர் தனி அரசும், அந்த அரசின் உறுப்புகளும், தம்தம் நாட்டு ஆட்சி மொழியாக தங்கள் தங்கள் சொந்த மொழியையே கையாளுகின்றன. எத்தகைய மொழி ஏகாதிபத்தியத்துக்கும் அங்கே இடமில்லை.

ஒவ்வோர் தனி அரசுக்கும் தனித்தனியே ஓர் அரசியல் திட்டம் தீட்டப்பட்டிருக்கிறது.

ஒவ்வோர் தனி அரசும் அதன் எல்லையைப் பாதுகாத்துக்கொள்ளும் முழு உரிமைகளும் பெற்றிருக்கிறது.

ஒவ்வோர் தனி அரசும் அதற்கென்று சொந்தமாகப் பட்டாளங்களை வைத்துக்கொள்ளும் உரிமை பெற்றிருக்கிறது.

ஒவ்வோர் தனி அரசுக்கும் தனித்தனி கொடியும் முத்திரையும் இருக்கின்றன.

ஒவ்வோர் தனி அரசைச் சேர்ந்தவர்களுக்கும் சோவியத் குடிமகன் என்னும் உரிமையோடு அந்தத் தனி அரசின் குடிமகன் என்னும் உரிமை (citizenship) வேறு தனியாகத் தரப்பட்டிருக்கிறது.

எந்தெந்த வகையில், அந்தத் தனி அரசு ஒவ்வொன்றும் ஒரு தனி நாடு என்னும் உணர்ச்சியை அந்த நாட்டுக்

குடிமக்களுக்கு ஊட்டமுடியுமோ அந்தந்த வகைகளிலெல்லாம் முழு கவனம் செலுத்தப்பட்டிருக்கிறது.

இவ்வாறு பிரிந்து செல்லும் உரிமை படைத்த பதினாறு தனி அரசுகளாக அமைந்திருக்கும் அந்த அளவோடு சோவியத் மக்களின் தன்னாட்சி உரிமை முற்றுப் பெற்றுவிடவில்லை. இந்தப் பதினாறு தனி அரசுகளில், எந்தெந்தத் தனி அரசில், சில குறிப்பிட்ட சிறுபான்மை வகுப்பினர், பெரும்பான்மை வகுப்பினரிடமிருந்து மாறுபட்டவர்களாய், தமக்கென்றுள்ள தனி பண்பாடு—மொழி—வாழ்க்கை வழி—வரலாறு ஆகியவற்றுடன் வாழ்கின்றனரோ, அந்தத் தனி அரசில், அந்தச் சிறுபான்மை மக்களுக்கு, அவர்கள் வரையில் தனி எல்லை அமைத்துக் கொண்டு, தனி அரசும் நிறுவிக் கொண்டு, சில குறிப்பிட்ட அதிகாரங்களுடன் தனியாக வாழும் உரிமை அளிக்கப்பட்டிருக்கிறது. ஒரு தனி அரசுக்குள் அமைந்திருக்கும் இத்தகைய சிறு அரசுகளுக்கு, "**தன்னாட்சி உரிமை படைத்த குடியரசுகள்**" என்று பெயர்.

தமக்கென்று தனியாக ஓர் அரசியல் திட்டம் தீட்டிக் கொள்வது, தம் ஆட்சி மண்டலம் முழுவதிலும் தம்முடைய மொழியையே கையாள்வது, தம் குடிமக்களுக்குத் தனி பிரஜா உரிமை வழங்குவது, தமக்கென்று தனி சட்டங்கள் வகுத்துக்கொள்வது, ஆகியவை, இந்தச் சிறு குடியரசுகளுக்கு அளிக்கப்பட்டுள்ள உரிமைகள் ஆகும். இந்தக் குடியரசுகளின் எல்லையையும் இவற்றின் ஒப்புதலின்றி மாற்றமுடியாது.

தனி அரசுக்குள் அமைந்துள்ள இத்தகு குடி அரசுகள் தவிர, மலையடிவாரங்கள்—காடுகள்—ஆற்றோரங்கள் முதலிய இடங்களில் வசிக்கும் வளர்ச்சியும் நாகரிகமும் அடையாத சமூகங்களுக்கும் சில தனியாட்சி உரிமைகள் வழங்கப்பட்டு, அவர்களுடைய வாழ்க்கையை உயர்த்துவதற்கும், அவர்களுடைய உள்ளத்தில் தன் மதிப்

புணர்ச்சியை ஊட்டுவதற்கும் சோவியத் அரசியல் திட்டம் பெரு முயற்சி புரிந்திருக்கிறது. 5000, 3000, 2000 என்பதுபோல மிகக் குறைந்த எண்ணிக்கை உடைய சில சமூகங்கட்கும் இத்தகைய தனியாட்சி உரிமை தரப்பட்டிருக்கிறது. விளக்கமாகச் சொல்வதானால் நம் நாட்டில் நீலகிரிப் பகுதியில் வாழும் தொதவர்களுக்குச் சில தனியாட்சி உரிமைகள் கொடுத்து, அவர்களையும் மனிதர்களாக்கி வாழவைத்தால் எப்படி இருக்குமோ அப்படிப்பட்ட உயர்நிலை, சோவியத் ரஷ்யாவில், அதன் அரசியல் திட்டத்தால் உருவாக்கப்பட்டிருக்கிறது.

சோவியத் ரஷ்யாவில் கிட்டத்தட்ட 60 தேசிய இனங்கள இருக்கும் காரணத்தால் ஒவ்வோர் இனத்திற்கும் கூடிய அளவு தனியாட்சி உரிமை வழங்க வேண்டும் என்றெண்ணி, அங்கே, இப்படிப்பட்ட நுணுக்கமான அரசியல் திட்டங்கள் எல்லாம் வகுக்கப்பட்டிருக்கின்றன.

அமெரிக்காவைப்போல, சோவியத் ரஷ்யாவைப் போல, ஸ்விட்சர்லாந்து நாட்டைப்போல, இந்தியாவிலும் பல்வேறு தேசிய இனங்கள் இருக்கின்றன. எனவே இந்தியாவுக்கான ஓர் அரசியல் திட்டமும், நேர்மையான முறையில் தீட்டப்படுவதாக இருந்தால், ஓர் கூட்டாட்சித் திட்டமாகவே இருத்தல் வேண்டும்.

அந்தத் திட்டத்தில், இந்தியக் கூட்டாட்சியில் இருக்க விருப்பமில்லாவிட்டால், பிரிந்துபோகும் உரிமை இந்தியத் தேசிய இனம் ஒவ்வொன்றிற்கும் தரப்பட வேண்டும்.

ஒவ்வோர் இனத்திற்கும், தனித்தரணி அமைத்துக் கொண்டு, தனி எல்லை வகுத்துக் கொண்டு, தனி அரசு நிறுவிக் கொண்டு, தனி வாழ்வு வாழ்ந்து, தத்தம் பண்பாடு—மொழி—மக்கள் வாழ்வு ஆகியவற்றை வளர்த்துக் கொள்வதற்கான எல்லா வசதிகளும் செய்து தரப்பட வேண்டும்.

ஒவ்வோர் இன அரசும் தன் குடிமக்களுக்குத் தனி பிரஜா உரிமை வழங்கும் உரிமை பெற்றிருக்க வேண்டும்.

மத்திய அரசாங்கத்திற்கு அந்த இன அரசுகள் **தாமாக முன்வந்து விட்டுக் கொடுக்கும் அதிகாரங்கள் போக** மற்ற எல்லா அதிகாரங்களும் அந்த இன அரசுகளிடமே இருக்க வேண்டும்.

சுருக்கமாகச் சொல்வதானால், இந்தியாவுக்கு வகுக்கப்படவேண்டிய அரசியல் திட்டம் சோவியத் ரஷ்யாவின் திட்டத்தைப் போல, ஐக்கிய அமெரிக்கக் குடியரசுகளின் திட்டத்தைப் போல, ஸ்விட்ஜர்லாந்து திட்டத்தைப் போல ஒரு கூட்டாட்சித் திட்டமாக அமைந்திருக்க வேண்டும்.

1945-ல், பூனாவில் கூடிய அனைத்திந்திய காங்கிரஸ் செயற்குழு, [A. I. C. C] இந்தியாவின் எதிர்கால அரசியல் திட்டம் எப்படி இருக்க வேண்டும் என்பதைப் பற்றி நீண்ட ஆராய்ச்சி செய்து, இறுதியில் இந்தியத் துணைக்கண்டத்தின் ஆட்சிமுறை கூட்டாட்சித் திட்டமாக அமைவதே சாலச் சிறந்தது என்றும், எனவே இந்தியா விடுதலை பெற்றதும் ஜனநாயக அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்படும் ஓர் அரசியல் அமைப்பு மன்றமானது ஒரு கூட்டாட்சித் திட்டத்தை வகுக்க வேண்டுமென்றும், அத்தகு கூட்டாட்சியில் இருக்க விருப்பமில்லாத எந்தப் பகுதியையும் வலுக்கட்டாயமாகச் சேர்க்கும் தன்மை அந்தத் திட்டத்தில் இருக்கக் கூடாதென்றும் தீர்மானம் நிறைவேற்றியிருக்கிறது!

இந்தியத் தந்தை காந்தியாரின் உள்ளத்தில் அமைந்திருக்கும் அரசியல் திட்டம் இதுதான் என்னும் முன்னுரையுடன், காந்தியாரின் சிறந்த நண்பரும் பிரதம சீடருமாகிய **பேராசிரியர் அகர்வால்** அவர்களால் தீட்டப்பட்டு, காந்தியடிகளாரின் ஒப்புதலுடனும் பாராட்டுடனும் வெளியிடப்பட்டுள்ள **காந்திய அரசியல் திட்டம்** என்னும்

நூலிலும், சுதந்தர இந்தியாவின் அரசியல், கூட்டாட்சிப் பாதையில்தான் சென்றாகவேண்டும் என்று தெளிவாகக் குறிப்பிடப்பட்டிருப்பதோடு, இந்தியக் கூட்டாட்சியில் சேரவோ அல்லது சேராமல் விலகவோ இந்தியாவின் உறுப்புகளுக்கு முழு உரிமை இருக்கவேண்டும் என்றும் அழுத்தந் திருத்தமாக அறிவிக்கப்பட்டிருக்கிறது.

ஆனல் இப்போது இந்திய அரசியல் திட்டத்தைத் தீட்டி முடித்திருக்கும் காங்கிரஸ் கனவான்களோ, பிற நாடுகளின் வரலாற்றுச் சுவடிகள் புகட்டும் கற் பாடத்தையும் புறக்கணித்து, 1945-ல் அனைத்திந் திய காங்கிரஸ் செயற்குழு நாட்டு மக்களுக்கு அளித் துள்ள வாக்குறுதியையும் மறந்து, காந்தியாரின் இலட் சியத் திட்டம் வகுத்துக் காட்டியுள்ள வழியையும் துறந்து, வெறும் ஒத்தை ஆட்சித் திட்டத்தையே வீரா வேசத்துடன் உருவாக்கியிருக்கின்றனர். யார் என்ன சொன்னபோதிலும் சரியே, இந்தத் திட்டம் பெயரளவுக் குக்கூட கூட்டாட்சித் திட்டம் என்று அழைக்கப்படும் தகுதியற்றது. பேராசிரியர் இரத்தினசாமி அவர்கள் குறிப் பிடுவதைப்போலஇந்தத் திட்டத்தின் ஒரு பக்கத்தில் கூட 'கூட்டாட்சி' என்னும் சொல் இடம் பெறவில்லை. இந்தத் திட்டத்தை எத்தனை முறை படித்துப் பார்த்தா லும் இதில் கூட்டாட்சியின் நிழல்கூட இருப்பதாகத் தென்படவில்லை.

அங்கும் இங்கும் காணப்படுகின்ற இரண்டோர் ஏமாற்றுச் சொற்களை எடுத்து எறிந்துவிட்டால் இந்தத் திட்டம் ஓர் ஒத்தை ஆட்சித் திட்டமே என்பது எளிதிற் புலனாகும். ஏனெனில், இந்திய அரசில் இணைந்திருக்க விரும்பாத எந்தப் பகுதியும் அதைவிட்டுப் பிரிந்து செல்வ தற்கான எந்த வழியும் இதில் வகுக்கப்படவேயில்லை.

பல்வேறு நாடுகளின் தொகுப்பாகிய இந்தியாவை ஒரு தனி நாடு என்று தவருக எண்ணிக்கொண்டனர் திட்டம் தீட்டிய "தேசியவாதிகள்."

அந்த அடிப்படைத் தவறு காரணமாக, இந்தியாவில் உள்ள பல்வேறு நாடுகளுக்கும் தனியாட்சி உரிமை தரத் தக்க கூட்டாட்சி முறையை வகுக்காமல், அந்த நாடுகளை, அவற்றின் விருப்பத்தை அறியாமலே, வலுக்கட்டாயமாக மத்திய ஆட்சியுடன் பிணைத்துவைக்கும் தன்மை படைத்த தோர் ஒத்தை ஆட்சி முறையை வகுத்தனர்.

அப்படி ஓர் ஒத்தை ஆட்சி முறையை வகுத்த காரணத்தால், இந்திய நாடுகள் ஒவ்வொன்றின் உரிமைகளை யும் பறித்தெடுத்துவிட்டு அவற்றை, ஜில்லா போர்டுகளைப் போலவும், பஞ்சாயத்து போர்டுகளைப் போலவும் அதிகார மற்ற வெற்றிடங்களாக, மாற்றி அமைக்க முனைந்தனர்.

அப்படி ஒவ்வொரு நாட்டின் உரிமைகளையும் ஒடுக்கி விட்ட காரணத்தால், மக்கள் வீறிட்டெழுந்து வீரப்போர் விளைத்து உரிமை முழக்கம் செய்யத் தொடங்கினல் என் செய்வது என்றஞ்சி, மக்களின் அடிப்படை உரிமைகளை யும் ஏராளமான அளவு கத்தரித்து விட்டனர்.

அப்படிக் கத்தரிக்கப்பட்ட அடிப்படை உரிமைகளை நிலை நாட்ட நீதி மன்றங்கள் முன்வரக்கூடாதே என்பதக் காக அவற்றின் அதிகார எல்லையையும் வெகுவாகக் குறைத்து விட்டனர்.

இவ் வண்ணம் ஒரு துணைக்கண்டமாகிய இந்தியாவை ஒரு நாடு என்று கருதித் திட்டம் தீட்டிய அடிப்படைத் தவறு காரணமாக வேறு பல எண்ணற்ற தவறுகளைச் செய்ய வேண்டியவர்களாகி விட்டனர் திட்டம் தீட்டிய திருவாளர்கள். அடிப்படை சரியான முறையில் அமைக் கப்படாவிட்டால், கட்டடம் முழுவதுமே கலகலத்துப் போவது இயற்கைதானே!

4. ஏழைக்கு ஏது இன்பம்?

ஏழைக்கு ஏது இன்பம்?—பாழும்
பணமில்லேன்னு உலகமே துன்பம்!

மந்த புத்திக் காரனையும் இந்திரன் சந்திரனின்னு
வர்ணனைகள் பண்ணுவாங்க! நல்ல
சொந்த புத்திக்காரனையும் சோத்துக்கு இல்லாமப்போனு
சோம்பேறி யின்னுவாங்க!—வாழ்வில் [ஏழைக்கு]
புள்ளைக் குட்டிக்காகச் சிறு கள்ளத்தனம் பண்ணினாலும்
மொள்ளமாரி யின்னுவாங்க! பெரும்
கொள்ளையடித்துப் பணத்தைக் குவிக்கிறவனைப் போயி
வள்ளலின்னு சொல்லுவாங்க—வாழ்வில் [ஏழைக்கு]

வான வீதியில் தண்ணிகாற்று உலவும் வெண்ணிலாவைப் போலத் தமிழ் நாடக உலகில் ஒளி வீசித் திகழும் நடிகவேள் டி. கே. சண்முகம், உள்ளம் உருக்கும் இந்த உணர்ச்சிக் கீதத்தை, இந்திய அரசியல் திட்டத்தைப் படித்துப் பார்த்து, அப்படிப் படித்துப் பார்த்ததன் விளைவாகத் தான் பாடினாரோ என்னவோ நாமறியோம்! ஆனால், இந்திய அரசியல் திட்டத்தைப் படித்துப் பார்க்கும் வாய்ப்புக் கிடைத்த எவரும், அப்படிப் படித்துப் பார்த்த பிறகு, இத்தகு சோக கீதத்தைத்தான் பாடுவர்— ஆநந்த பைரவியை அல்ல என்பது மட்டும் நமக்கு நன்றாகத் தெரியும்.

"ஏழைக்கு ஏது இன்பம்?—பாழும் பணமில்லேன்னு உலகமே துன்பம்!" என்று எழிலும் சுவையும் ததும்பும் முறையில் இசை ஓவியம்தன்னைத் தீட்டிக் காட்டினாரே டி. கே. சண்முகம், அது, இந்திய அரசியல் திட்டத்தைப் பொறுத்தவரை நூற்றுக்கு நூறு பங்கும் உண்மை.

வறுமை நச்சரவால் வதைக்கப்பட்டு, வேதனைத் தேளால் கொட்டப்பட்டு, வாழ்க்கைச் சுமையால் நசுக்

கப்பட்டு, முதலாளித்துவ ஈட்டி முனையால் இருதயத்தில் குத்தப்பட்டு, இரத்தக் கண்ணீர் வடித்த வண்ணம் துடித்துக் கிடக்கிறானே ஏழை, அவனுக்கு இந்தத் திட்டத்தால் அணுவளவும் நன்மையில்லை. சுமக்க முடியாத பாரத்தைச் சுமந்து வளைந்துபோயிருக்கும் அவனுடைய முதுகை நிமிர்த்த வேண்டுமே என்னும் அக்கறை, அன்பு, மனித உணர்ச்சி இந்தத் திட்டத்திலே எந்த மூலையிலும் காணப்படவில்லை. அவனுடைய கண்கள் சிந்தும் கண்ணீரால் அவனுடைய கன்னங்கள் நனைக்கப்படும் பரிதாபக் காட்சியைக் கண்டுங்கூட அந்தக் கண்ணீரைத் துடைக்க வேண்டுமே என்னும் எண்ணம் இந்தத் திட்டம் தீட்டியவர்களுக்கு ஏற்படவில்லை.

ஓர் அரசியல் திட்டம், மக்கள் நன்மையை மனதிலே கொண்டு தீட்டப்பட்ட திட்டமாக இருக்குமானால் அந்தத் திட்டத்தில், நாட்டிலே உள்ள **எல்லா மக்களுக்கும்** வேலை தேடித் தரும் **கடமை** ஆட்சியாளருக்கு உண்டு என்பதும், அது போலவே, ஆட்சியாளரிடம் சென்று தங்கட்கு ஒரு வேலையைக் கேட்டுப் பெறும் **உரிமை** வேலை இல்லாதிருக்கும் மக்கள் ஒவ்வொருவருக்கும் உண்டு என்பதும் அழுத்தந் திருத்தமாகக் குறிப்பிடப்பட்டிருக்க வேண்டும். சோவியத் ரஷ்யாவின் அரசியல் திட்டத்தில், இந்த "வேலை கேட்கும் உரிமை" தான் (The right to work) மக்களின் உரிமைகளிலே மிகச் சிறந்ததாகவும், இந்த வேலை கொடுக்கும் கடமைதான் (The Duty to give work) ஆட்சியாளரின் கடமைகளிலே மிகச் சிறந்ததாகவும் சொல்லப்பட்டிருக்கிறது. ஓர் அரசியல் திட்டம் முதலாளிகள் —ஜமீன்தாரர்கள் — நிலப்பிரபுக்கள் — பணக்காரர்கள் உயர்ந்த அந்தஸ்துக்காரர்கள் ஆகிய குறிப்பிட்ட சில வகுப்பாருக்கு மட்டும் நன்மை பயப்பதா அல்லது நாட்டிலே உள்ள எல்லா மக்களுக்கும் நன்மை பயப்பதா என்னும் கேள்விக்கான விடை, அந்தத் திட்டத்திலே மேலே சொன்ன உரிமையும் கடமையும் அமைந்திருக்கின்றனவா இல்லையா என்பதைத்தான் பொறுத்திருக்கிறது.

எந்தத் திட்டத்தில் வேலை கேட்கும் உரிமையும் வேலை கொடுக்கும் கடமையும் அமைந்திருக்கின்றனவோ அதுதான் மக்கள் திட்டம்; மக்களின் நன்மைக்கான திட்டம்; மக்களின் வாழ்க்கையை வளமும் இனிமையும் செறிந்ததாக மாற்றி அமைத்து மறுகோலம் செய்யும் திட்டம். அந்த உரிமையும் கடமையும் அமையாத் திட்டம், வேறு எந்த வகையில் எவ்வளவு சிறந்ததாயினும் சரியே, மக்கள் நல்வாழ்வைப் பொறுத்தவரை, எள்ளளவும் பயனற்ற வெற்றுரைக் குவியலே ஆகும்.

இந்திய அரசியல் திட்டத்தில் இந்த உரிமையும் இல்லை, கடமையும் கிடையாது. ஆனால் இதை வெற்றுரைக் குவியல் என்று கூறினாலோ ஆளவந்தார்கட்குக் கோபம் அளவின்றிப் பிறந்து விடுகிறது. ஆனால் கோபம் வந்து என்ன இலாபம்? கோபம் உண்மையை உரைக்கும் உள்ள உறுதி படைத்த நம் போன்றார் மீது அடக்குமுறை அம்புகளை எய்திடப் பயன்படலாம் அது தவிர, உண்மையை எப்படி அது மறைத்துவிடமுடியும்?

தங்கட்கு அளிக்கப்படும் வேலையிலிருந்து கிடைக்கும் ஊதியம், உண்ண உணவு— உடுக்க உடை— இருக்க இல்லம்— மருத்துவ வசதி—சுமாரான கல்வி— இவற்றைத் தேடிக் கொள்வதற்குத் தேவையான குறைந்தபட்ச அளவாவது இருந்தாக வேண்டும் என்றுகேட்கும உரிமை, வேலை கேட்கும் உரிமைக்கு அடுத்தபடியாக மக்களுக்கு இருந்தாக வேண்டிய அடிப்படை உரிமை. எடுத்துக்காட்டாக, "**இந்தியக் கண்டத்தில் உள்ள மக்களில், யாருடைய மாத ஊதியமும் நூறு ரூபாய்க்குக் குறையாமல் இருக்கும்படி ஆட்சியாளர்கள் பார்த்துக் கொள்ளவேண்டும்**" என்பதாக இந்திய அரசியல் திட்டத்தில் ஒரு விதி இருக்குமானால் அப்போது, இந்த உரிமை மக்களுக்குக் கொடுக்கப்பட்டிருப்பதாக அர்த்தம். ஆனால், இப்போது? இந்தியத் திட்டத்தில் இந்த விதி இல்லை! எனவே இந்த உரிமை மக்களுக்குக் கிடையாது என்பது தெளிவு.

இந்தியாவில் உள்ள அனைவருக்கும் வேலை தரும் கடமையையே இந்தத் திட்டம் ஆட்சியாளர்கள் மீது சுமத்தாமல் இருக்கும்போது, அப்படித் தரப்படும் வேலைக்கு அளிக்கப்படும் ஊதியம் எவ்வளவு இருக்கவேண்டும் என்பது பற்றி இந்தத் திட்டத்தில் ஒரு விதி எப்படி இருக்கமுடியும்?

நாட்டுமக்கள் அனைவருக்கும் ஆட்சியாளர்களால் கட்டாய ஆரம்ப இலவசக் கல்வி அளிக்கப்பட்டாக வேண்டும் என்று கேட்பது மக்களுக்கு இருக்கவேண்டிய மூன்றாவது அடிப்படை உரிமை. சோவியத் அரசியல் திட்டத்தில் இந்த உரிமை அமைந்திருக்கிறது. இங்கிலாந்து நாட்டில் இந்த உரிமை தரப்பட்டிருக்கிறது. அயர்லாந்து அரசியல் திட்டத்திலும் இந்த உரிமை காணப்படுகிறது. உலகத்தில் உள்ள பெரும்பாலான நாடுகளில் இந்தக் "கட்டாய ஆரம்ப இலவசக் கல்வி" உரிமை அரசியல் திட்டத்தில் இணைக்கப்பட்டிருக்கிறது. ஆனால் இந்திய அரசியல் திட்டத்தில்......? இல்லை! இந்த உரிமைகூட மக்களுக்குத் தரப்படவில்லை! பத்தாண்டு காலத்திற்குள் எல்லா மக்களுக்கும் இலவச ஆரம்பக் கல்வி அளிக்க ஆட்சியாளர்கள் முயற்சி செய்யவேண்டும் என்றுதான் இந்தத் திட்டம் குறிப்பிடுகிறதே தவிர, அளித்தே தீரவேண்டும் என்னும் கட்டளையைப் பிறப்பிக்கவில்லை ஆட்சியாளர்களுக்கு! பத்து ஆண்டுகளுக்குப் பிறகும், ஆட்சியாளர்கள், மக்கள் அனைவருக்கும் கட்டாய ஆரம்ப இலவசக் கல்வியைத் தாராமலிருந்தால், அப்போதும்கூட, மக்கள் அவர்களைப் பார்த்து, ஏன் இன்னமும் எங்கட்குக் கல்வி தரவில்லை என்று கேட்கமுடியாது, இந்தத் திட்டத்தின்படி! ஆட்சியாளர்கள், அவர்களாகப் "பெரிய மனது" வைத்து, மக்களுக்குக் கல்வியறிவு ஊட்டினால் ஊட்டலாம், இல்லாவிட்டால் எமக்கென்ன அது பற்றி என்று வீண்காலம் போக்கினாலும் போக்கலாம். இந்த அளவுக்கு, ஆட்சியாளருக்கு, தாராள உரிமை தருகிறது மிக தயாளத்துடன் இந்த அரசியல் திட்டம்!

பாட்டாளி மக்கள், எக் காரணத்தாலாவது வேலையை இழந்து அலமரும் நேரத்திலும், வயது முதிர்ந்து—தள்ளாமை எய்தி—உடல் தளர்ந்த காலத்திலும், தாங்கள் ஈடுபட்டுள்ள தொழிலில் எதிர்பாராத ஆபத்துகள் ஏற்பட்ட காரணத்தால் கைகால் முறிந்து, தொழில் செய்வதற்கான திறமையை இழந்து, உடல் துடித்துத் தவிக்கும் சமயத்திலும், விரைவில் குணமாகாத நோய்களால் தாக்குண்டு வேதனைப்படும் பருவத்திலும், அவர்கள் தங்கள் வாழ்க்கையைச் செவ்வனே நடத்திச் செல்வதற்குத் தேவையான வசதிகளை அவர்களுக்குச் செய்து தரவேண்டியது, சிறந்த அரசியல் திட்டத்தால் ஆட்சியாளர்களுக்கு விதிக்கப்படும் மற்றோர் கடமையாகும். இந்தக் கடமையை ஆட்சியாளர்கள் நிறைவேற்ற வேண்டும் என்று கேட்கும் உரிமையே, மக்களுக்கு இருக்கவேண்டிய நான்காவது அடிப்படை உரிமை ஆகும். இந்தியத் திட்டத்தில் இந்த உரிமை—கடமை—இரண்டும் காணப்படவில்லை.

தனித்தனியே சிதறுண்டு கிடக்கும் தங்கள் சக்தித் துளிகளை ஒன்று திரட்டி ஒரு சங்கமாக உருவாக்கி, கூட்டாக இருந்து தங்கள் கோரிக்கைகளுக்காகப் போராடும் உரிமை, தொழிலாளர்களின் மற்றோர் அடிப்படை உரிமை. இந்த உரிமையைப் பெறுவதற்காக உலகத் தொழிலாளர்கள் கொட்டிய குருதி கொஞ்சமல்ல. அவர்கள் தொடுத்த போராட்டங்களும் எளியவை அல்ல. சொல்லொணு இடுக்கண்களைத் தாங்கி, தியாகத் தீயில் குதித்தெழுந்து, பல தொழிலாளர்களைப் பலிகொடுத்து, துப்பாக்கிக்கும் பீரங்கிக்கும் அஞ்சாமல் எதிர்த்து நின்று போராடி அவர்கள் பெற்ற உரிமை இந்த சங்கம் அமைக்கும் உரிமை. இந்த உரிமையை பாட்டாளி மக்களின் தலையாய உரிமை என்றும் கூறலாம். தொழிலாளர் உலகின் இருதய பீடமாகவும் அவர்களுடைய பல்வேறு போராட்டங்களின் ஜீவசக்தியாகவும் இருப்பது இந்த உரிமை. இந்த உரிமை பறிபோகிறது என்றால் இதனைத்

தம் உயிரையும் கொடுத்துக் காப்பாற்றுவர் தொழிலாளர்கள். இந்திய அரசியல் திட்டம், தன்னுடைய 19-வது விதியில், முதல் உட்பிரிவில், இந்த உரிமையைத் தொழிலாளர்கட்கு அளிக்கிறது. "பரவாயில்லையே! இவ்வளவு முக்கியமான உரிமையை ஏழையர் உலகுக்கு அளித்திருக்கிறதே இந்தத் திட்டம்!" என்று எண்ணி யாரும் இறும்பூது எய்தி இன்ப முழக்கம் புரிந்திடத் தேவையில்லை. ஏனெனில் அதே 19-வது விதியின் நான்காவது உட்பிரிவு இந்த உரிமையை தொழிலாளரிடமிருந்து பறித்துவிடுகிறது.

முதல் பிரிவு, தொழிலாளர்களுக்கு சங்கம் அமைக்கும் உரிமை உண்டு என்று கூறுகிறது.

நான்காவது பிரிவு, இந்த உரிமையைப் பறித்துவிடுதற்கான அதிகாரம் ஆட்சியாளர்களுக்கு உண்டு என்று இயம்புகிறது.

அதாவது, வலது கை அளிக்கும் நன்கொடையை இடது கை பறித்துக் கொள்கிறது.

'வாருங்கள் தொழிலாளர்களே! உங்கட்கு மிக முக்கியமான உரிமை உண்டு—சங்கம் அமைக்கும் உரிமை' என்று கூறுகிறது அரசியல் திட்டம். என்ன வியப்பு! என்ன வியப்பு! என்று கூவிய வண்ணம் ஓடோடி வருகின்றனர் தொழிலாளர்கள். அவர்கள் அருகே வந்ததும், "ஆமாம் தொழிலாளர்களே! உங்கட்கு சங்கம் அமைக்கும் உரிமை உண்டு! ஆனல் சர்க்காருக்கு அந்த உரிமையைப் பறிக்கும் உரிமை உண்டு" என்று 'இன்பமொழி' பேசுகிறது அரசியல் திட்டம்.

பசியால் துடிதுடித்து வேதனைப் படுபவன், "ஐயா, பசி வயிற்றைக் கிள்ளுகிறது, காதடைத்துப் போகிறது, காலணு இருந்தால் கொடுங்கள்" என்று கேட்கும்போது, "போடா—போ—காலணு கிடையாது" என்று கூறுவது கொடுமை. ஆனல் அதைவிட அதிகக் கொடுமை, அவ

னுக்குக் காலணு கொடுத்துவிட்டு, அவனுடைய உள்ளத்திலே மகிழ்ச்சியைத் தூவி விட்டு, அடுத்த கணமே அந்தக் காலணுவைத் திரும்பப் பறித்துக் கொள்வது! இந்திய அரசியல் திட்டம், 19-வது விதி, முதல் உட்பிரிவில், சங்கம் அமைக்கும் உரிமையை அளித்துவிட்டு, அதே விதி, 4-ம் உட்பிரிவில் அந்த உரிமையைப் பறித்தெடுத்துக் கொள்வது இத்தகையதோர் பெருங்கொடுமை தான்.

* வேலை கேட்கும் உரிமை

* குறைந்த பட்ச ஊதியம் கேட்கும் உரிமை

* கட்டாய ஆரம்ப இலவசக் கல்வி கேட்கும் உரிமை

* வேலை இல்லாக் காலம், வயதான காலம், எதிர் பாரா ஆபத்திற் சிக்கிய காலம், உடல் நலம் அழிந்த காலம் ஆகிய இக்காலங்களில் வாழ்க்கையை நடத்திச் செல்வதற்கான உதவித் தொகை கேட்கும் உரிமை

* சங்கம் அமைத்துக் கூட்டாகப் பணியாற்றும் உரிமை

இந்த ஐந்து உரிமைகளும் தொழிலாளர் நல்வாழ்வு என்னும் கட்டிடத்தின் அடிப்படைகள். தொழிலாளர் சமுதாயமே ஒரு நாட்டின் முதுகெலும்பு போன்றது; இருதயம் போன்றது; நுரையீரல் போன்றது. எனவே தொழிலாளர்தம் வாழ்வை உயர்த்தும் வன்மை படைத்த இவ்வுரிமைகள் ஐந்தும் ஓர் அரசியல் திட்டத்தில் இடம் பெறவேண்டியது இன்றியமையாத தொன்றாகும்.

ஆனால் இந்தியத் திட்டத்தில் இவ்வுரிமைகளில் ஒன்றேனும் இடம் பெறவில்லை.

இந்த உரிமைகள் ஒன்றேனும் இடம் பெறவில்லை என்பதுமட்டுமல்ல. இந்த உரிமைகளுக்கு நேர்மாறான விதிமுறைகளும், இந்த உரிமைகளைக் குழிதோண்டிப்

புதைக்கும் தன்மை படைத்த ஏற்பாடுகளும் ஏராளமாகக் காணப்படுகின்றன.

தொழிலாளர்களுக்கு, வேலை கேட்கும் உரிமையையும், குறைந்த பட்ச ஊதியம் கேட்கும் உரிமையையும் அளிக்க மறுக்கும் இந்தத் திட்டம், முதலாளிகளின் சொத்துக்கு மட்டும் முழுப் பாதுகாப்பு அளிக்கிறது.

அவர்கள் எவ்வளவு வேண்டுமானாலும் சொத்துகளைச் சேர்த்து வைக்கலாம்.

அப்படிச் சேர்க்கப்படும் சொத்துக்கு அதிகபட்ச எல்லை எதுவும் கிடையாது.

அந்தச் சொத்துக்களில் ஒரு சிறு பகுதியைக்கூட நாட்டின் பொதுச் சொத்தாக, சமுதாயத்தின் பொதுவுடைமையாக மாற்ற முடியாது.

அந்தச் சொத்துகளில் ஏதேனும் ஒரு பகுதியை நாட்டின் பொதுவுடைமையாக ஆக்கியே தீரவேண்டும் என்ற நிலைமை வருமானால், அப்போது, அந்தச் சொத்துக்குரியாருக்கு, போதுமான நஷ்ட ஈடு கொடுத்தாக வேண்டும்.

நஷ்ட ஈடு கொடுக்காமல், எவ்வளவு பெரிய கோடீஸ்வரருடைய சொத்திலிருந்து எவ்வளவு சிறு தொகையை மக்கள் நன்மைக்காக வென்று எடுத்துக்கொண்டாலும் அது செல்லாது.

நாம் ஏமாந்திருந்த காலத்தில் எத்தர்களென இங்கு நுழைந்து, நம் உழைப்பையும் பொருளையும் இயற்கைச் செல்வத்தையும் சுரண்டி, அப்படிச் சுரண்டிய பொருளைக் கொண்டு மேலும் நம் நாட்டைச் சுரண்டிப் பிழைப்பதற்காகப் பல்வேறு தொழில்களை இங்குத் துவக்கி நடத்தும் வெள்ளை முதலாளிகளின் இன்றைய பொருளாதாரப் பெருங்கொள்ளைக்குத் தடை எதுவும் கிடையாது.

தேயிலைத் தோட்டங்கள், நிலக்கரிச் சுரங்கங்கள், சணல் காடுகள், பெரிய பெரிய பாங்கிகள், கம்பெனிகள்,

தொழிற்சாலைகள், பருத்தி ஆலைகள், கப்பல் ஓட்டும் நிலையங்கள் ஆகிய இத் துறைகளில் நடைபெறும் வெள்ளையர் ஏகாதிபத்தியத்திற்கு அணுவளவும் சங்கடம் கிடையாது

தொழில் வளர்ச்சி என்ற பெயரால் மக்கள் வரிப் பணத்திலிருந்து அளிக்கப்பட்ட நன்கொடை, சுங்க வரி என்ற பெயரால் தரப்பட்ட ஆதரவு, சுதேசி இயக்கம் என்ற பெயரால் கொடுக்கப்பட்ட விளம்பரம், கூலிவேலை என்ற பெயரால் தொழிலாளர்கள் அளித்த உழைப்பு ஆகிய இவ்வளவு உணவையும் உண்டு கொழுத்து ஓங்கி வளர்ந்திருக்கின்ற முதலாளித்துவத் தொழிற் சாலைகளைத் தேசிய மயமாக்கும் திட்டம் துளியும் இல்லை.

டாடா—பிர்லா—டால்மியா—தலால்— கோயங்கா-சிங்கானியா கும்பலிடமிருந்து, கொள்ளை லாபம்—கள்ள மார்க்கெட்— வியாபாரத் தந்திரம்— ஏய்த்துப் பிழைப்பது— அதிக விலைக்கு விற்பது— சரக்குகளை முடக்கி வைத்து சாகசம் செய்வது— மிகக் குறைந்த கூலிக்கு மிக அதிக உழைப்பைப் பெறுவது முதலான பல அக்கிரமமான முறைகளால் அவர்களுடைய பொக்கிஷத்தில் குவிக்கப்பட்டிருக்கும் இமயமலை போன்ற செல்வத்தைப் பறிமுதல் செய்வதற்கான வழி எதுவும் வகுக்கப்படவில்லை.

ஜமீன்தாரர்கள், மிராஸ்தாரர்கள், நிலப் பிரபுக்கள் ஆகியோரின் சொத்துக்குப் பரிபூரண பாதுகாப்பு அளிக்கப்படுகிறது. உழுபவனுக்கே நிலம் என்ற உன்னதக் கோட்பாடு காற்றில் பறக்க விடப்படுகிறது.

இந்திய மன்னர்களைக் காட்டிக்கொடுத்து, வந்தேறிய வெள்ளையர்களுக்குச் செல்லப் பிள்ளைகளாக மாறி, சொந்த நாட்டுக்குத் துரோகம் புரிந்து, அப்படித் துரோகம் புரிந்த செயலுக்குப் பரிசாகப் பல தரணிகளை ஆளும் உரிமை பெற்ற சிற்றரசர்களுக்கு, அவர்களுடைய சொத்துக்கு, அவர்களுடைய ஆதிக்கத்திற்கு, "ஆசிர்வாதம்" செய்யப் படுகிறது.

எடுத்துக் காட்டாக, ஐதராபாத் நிஜாமுக்கு மாத மொன்றுக்கு எட்டுலட்சத்து, முப்பத்துமூன்று ஆயிரத்து மூன்று ரூபாய் சொந்தச் செலவுக்காக ஒதுக்கப்படுகிறது. கணக்குப் போட்டுப் பார்த்தால் அவருடைய ஒரு நாள் செலவு ரூ. 27, 778 ஆகிறது. இது தவிர, அவருடைய சொந்த நிலங்களை சர்க்கார் எடுத்துக் கொண்டனர் என்ற சாக்கைக்காட்டி அவருக்குச் சொந்தமாக 25 லட்ச ரூபாய் பணமுடிப்பு வேறு கொடுக்கப்பட்டிருக்கிறது.

இதைப் போலவே, பீரார் இளவரசருக்கும் அவரது குடும்பத்தாருக்குமாக ஆண்டுதோறும் 20 லட்சம் ரூபாய் கொடுத்துவர திட்டமிடப்பட்டிருக்கிறது.

மன்னர் ஆட்சி தொலைந்து மக்கள் ஆட்சி மலர வேண்டும் என்பதற்காகச் சீறியெழுந்து சிங்க ஏறுகள் போல் போராடிவந்த சமஸ்தானமக்களின் கிளர்ச்சி ஒதுக்கப்பட்டு, அவர்கள் எந்த மன்னர்களின் ஆட்சி ஒழிய வேண்டும் என்பதற்காகப் போராடினார்களோ அந்த மன்னர்களை "ராஜ பிரமுகர்கள்" என்ற பெயரால் மக்களை அடக்கி ஆள்வதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றனர்.

பெரிய அதிகாரிகள் வாங்கும் கொள்ளை ஊதியத்திற்கு எத்தகைய கட்டுப்பாடும் விதிக்கப்படவில்லை. அதிகபட்ச ஊதியம் இவ்வளவுதான் இருக்கலாம் என்பது போன்ற விதிமுறை எதுவும் ஏற்படுத்தப்படவில்லை.

பல ஆண்டுகளுக்கு முன்னர் கராச்சியில்கூடிய அனைத்திந்திய காங்கிரஸ் மாநாடு, இந்தியாவில் யாருடைய ஊதியமும் மாதம் ஒன்றிற்கு 500 ரூபாய்க்கு மேல் இருத்தல் கூடாதென்று திட்டவட்டமாகத் தீர்மானம் நிறைவேற்றியிருக்கிறது.

மறைந்த மாவீரர்—இந்தியத் தந்தை—காந்தியார் இந்தியா தரித்திர நாராயணர்களின் நாடு என்று அடிக்கடி கூறிவந்திருக்கிறார்.

இந்திய மக்களின் வறுமையை, அவர்கள் படும் வேதனையை, அவர்களுடைய பட்டினிக் கொடுமையை அனைவருக்கும் நினைப்பூட்டுவதற்காகவே அவர், இடுப்பில் முழத் துண்டு மட்டும் அணிந்து, மற்ற ஆடம்பர உடைகளை அகற்றி எளிய கோலத்தில் காட்சிதந்து வந்தார்.

இந்திய மக்களின் தினசரி வருமானம் கிட்டத்தட்ட 6 அணுதான் இருக்கும் என்று கூறப்படுகிறது

ஆனால், இந்த அரசியல் திட்டத்தில் குடியரசுத் தலைவருக்கு ஏற்படுத்தப்பட்டிருக்கும் மாதஊதியம் ரூபா. 10,000. கவர்னர்களுக்கு ஏற்படுத்தப்பட்டிருக்கும் மாத ஊதியம் ரூ. 5,500

ஊதியம் என்ற பெயரால் தரப்படும் தொகைமட்டும் தான் இது. இது தவிர, குடியரசுத் தலைவருக்கும் சரி, மாகாண கவர்னர்களுக்கும் சரி,

சில்லறை அலவன்ஸ்
இராணுவச் செயலாளர் அலவன்ஸ்
விருந்து அலவன்ஸ்
மருத்துவ அலவன்ஸ்
வீட்டு சாமான் அலவன்ஸ்
கான்ட்ராக்ட் அலவன்ஸ்
பயணச் செலவு அலவன்ஸ்

முதலான பல "அலவன்ஸ்" தொகைகள் வேறு, தனியாக அளிக்கப்பட்டிருக்கின்றன.

மாகாணங்களைப் பொறுத்தவரை ஒவ்வொரு கவர்னருக்கும் கீழ்க்கண்ட முறைப்படி "அலவன்ஸ்" தொகைகள் ஒதுக்கப்பட்டிருக்கின்றன.

சென்னை	ரூ	4,92,500
பம்பாய்	ரூ	3,55,800
மேற்கு வங்காளம்	ரூ	3,70,500
உத்திரப் பிரதேசம்	ரூ	2,95,000

கி. பஞ்சாப்	1,79,900
பீகார்	1,94,000
மத்திய பிரதேசம்	1,55,500
அசாம்	1,70,000
ஒரிசா	1,53,400

இந்த "அலவன்ஸ்கள்" ஒரு புறம் இருக்க, குடியரசுத் தலைவருக்கும், கவர்னர்களுக்கும் அரண்மனைகள் போன்ற மாளிகைகள் வேறு வாடகையின்றி விடப்பட்டிருக்கின்றன.

இப்போது குடியரசுத் தலைவராகவும், மாகாண கவர்னர்களாகவும் இருப்பவர்கள் அனைவரும் காங்கிரஸ்காரர்கள் தான். கராச்சி காங்கிரஸ் மாநாட்டில் இந்தியாவில் எவருடைய மாத ஊதியமும் 500 ரூபாய்க்கு மேல் ஒரு பைசாவும் இருக்கக்கூடாது என்று முழக்கமிட்டவர்கள் தான். "ஓர் இந்தியனின் சராசரி மாதவருமானம் ரூ 4—11—0 தானே! அத்தகைய ஏழை இந்தியர்களின் வரிப் பணத்திலிருந்து நீர் 15,000 ரூபாய் மாத ஊதியப் பெறுகிறீரே! இது தகுமா, முறையா, அறமா? மனிதத் தன்மை தானாகுமா?" என்று அறப்போர் வீரர் காந்தியார் அந்த நாள் வைசிராய் இர்வினுக்குத் திறந்தமடல் ஒன்று விடுத்த போது "அருமை! அருமை!" என்று ஆர்வத்துடன் கைதட்டி மகிழ்ந்தவர்கள் தான்! அவர்களேதான் இப்போது பத்தாயிரக் கணக்கில் ஊதியமும், லட்சக் கணக்கில் அலவன்சும், மகாராஜாதி ராஜர்களையும் கோடீஸ்வரர்களையும் தோற்கடிக்கும் கோலாகல வாழ்வும் வாழத் தொடங்கியிருக்கிறார்கள். அந்த ஊதியத்தையும் அலவன்சையும் கோலாகல வாழ்வையும் அரசியல் திட்டத்தின்படி உறுதிப் படுத்திக் கொண்டும் விட்டார்கள்.

இந்தியத் தலைவருக்கு 10,000-மும், கவர்னர்களுக்கு 5500-ம் மாத ஊதியம் என்று ஏற்படுத்தியது போலவே, இந்தியத் தலைமை நீதி மன்றத்தின் (Supreme Court)

முதல் நீதிபதிக்கு 5,000மும் ஏனைய நீதிபதிகளுக்கு 4000மும், மாகாணங்களில் உள்ள உயர் நீதிமன்றங்களின் முதல் நீதிபதிக்கு 4000மும், பிற நீதிபதிகளுக்கு 3500-ம், இந்திய ஆட்சியாளரின் கணக்குத் தணிக்கையாளருக்கு 4000மும் திங்கள் ஊதியமாகத் தரப்படவேண்டும் என்று கட்டளை பிறப்பித்திருக்கிறது இந்திய அரசியல் திட்டம்.

இதுமட்டுமல்ல! வெள்ளை அதிகார வர்க்கத்தால் வேலைக்கு அமர்த்தப்பட்ட ஐ. சி. எஸ். அதிகார வர்க்கம் இருக்கிறதே, அந்த அதிகார வர்க்கத்து "அதிசயப் பிராணிக"ளுக்கு அந்தக் காலத்தில் வெள்ளை ஆட்சியால் எவ்வளவு உயர்ந்த ஊதியம் ஏற்பாடு செய்யப் பட்டதோ, அந்த ஊதியம் அவ்வளவும் அப்பழுக்கின்றி இனியும் அப்படி அப்படியே தரப்பட்டதாக வேண்டும் என்று தன் பவளவாய் திறந்து சில முத்துக்களையும் உதிர்த்திருக்கிறது புதிய அரசியல் திட்டம்.

சுருக்கமாகச் சொல்வதானால், இந்திய அரசியல் திட்டத்தில்,

* பிரிட்டிஷ் சுரண்டலுக்கு ஒத்துழைப்பு
* அமெரிக்கச் சுரண்டலுக்கு வரவேற்பு.
* முதலாளித்துவ முதலைகளுக்குப் பாதுகாப்பு.
* நிலப் பிரபுத்துவக் கழுகுகளுக்கு ஆதரவு.
* மிட்டா — மிராஸ் — ஜமீன் சுரண்டல் தலைவர்களுக்கு 'ஆசீர்வாதம்'
* குறுநில மன்னர்களின் கோலாகல வாழ்வுக்கு 'வாழ்த்து'
* கவர்னர்கள்—நீதிபதிகள்—ஐ. சி. எஸ். அதிகார வர்க்கத்தவர்கள் ஆகியோரின் குபேர வாழ்க்கைக்குக் 'கைலாகு'
* தனிஉடமை ஏகாதிபத்தியத்துக்குத் "ததாஸ்து"

ஆகிய இவ்வளவும் இருக்கின்றன.

ஆனல்,

ஏழைத் தொழிலாளர்களுக்கும், பரிதாபத்திற்குரிய மத்தியதர வகுப்பினருக்கும், உழவர் பட்டாளத்திற்கும்,

* வேலை கேட்கும் உரிமை கிடையாது.

* 'குறைந்த பட்ச ஊதியம்' கேட்கும் உரிமை கிடையாது.

* இலவச ஆரம்பக் கல்வி கேட்கும் உரிமை கிடையாது.

* மருத்துவ வசதி கேட்கும் உரிமை கிடையாது.

* முதுமைப் பருவம், நோய்வாய்ப்பட்ட சமயம், வேலையில்லாக் காலம், ஆபத்திற் சிக்கிய நேரம் ஆகிய காலங்களில் 'உதவித் தொகை' கேட்கும் உரிமை கிடையாது.

* சங்கம் அமைத்து, கூட்டுச் சக்தியைத் திரட்டித் தம் கோரிக்கைகளுக்காகப் போராடும் உரிமை கிடையாது.

* மீறிப் பேசினல், ஆட்சியாளர்கள் எவ்வளவு காலத்திற்கு விரும்புகிருர்களோ அவ்வளவு காலம், விசாரணையின்றி, வெஞ்சிறையில் அடைபட்டுக் கிடக்கும் உரிமையைத் தவிர, வேறு எத்தகைய எழுத்து உரிமையும் கிடையாது; பேச்சு உரிமையும் கிடையாது.

* பத்திரிகை சுதந்தரம் கிடையாது.

* தொழிற் சாலைகளை தேசிய மயமாக்க வேண்டும் என்று கேட்கும் உரிமை கிடையாது.

ஆம்! பொதுவுடைமைத் தென்றல் வீசவில்லை இந்திய அரசியல் திட்டத்தில்! முதலாளித்துவ விஷ வாடைதான் வீசுகிறது.

ஏழைகளின் மனம் நிறைந்த பாராட்டுதலைப் பெற முடியாது இத்திட்டத்தால்! பிர்லாக்களின் புன்சிரிப்பைத் தான் பரிசாகப் பெற முடியும்.

பாடுபடும் கரங்களிலே பெருமையுடன் வீற்றிராது இத்திட்டம். மதோன்மத்தர்களின் மாளிகைகளிலே உள்ள அலங்கார பீரோக்களிலேதான் தவழ முடியும்.

* * * *

"ஆயிரம் இருக்கட்டும் சார்! இந்தத் திட்டம், இந்தியாவில் உள்ள 21 வயதான எல்லா மக்களுக்கும் வாக்குரிமை வழங்கியிருக்கிறதே, இது ஏழைகளின் நன்மைக்கான ஏற்பாடுதானே சார், இதைக்கூடவா சார் மறுக்க முடியும்?'' என்று சில நுனிப் புல் அறிஞர்கள், தட்டிக் கேட்க ஆளில்லாவிடத்தில் சண்டப் பிரசண்டம் புரியக்கூடும்.

உண்மையிலேயே, 'எல்லா மக்களுக்கும் வாக்குரிமை' என்னும் ஏற்பாட்டை மேற்போக்காகப் பார்க்கும்போது, அது, ஏழை மக்களின் அரசியல் போர்க் கருவி என்பதாகவேதான் பலருக்கும் தோற்றமளிக்கும். ஆனால் இந்தியாவின் சூழ்நிலையையும் அரசியல் திட்டத்தின் ஏனைய பகுதிகளையும் நினைவில் நிறுத்திக்கொண்டு அந்த ஏற்பாட்டை சற்றுக் கூர்ந்து கவனித்துப் பார்த்தால், அது, எந்த விதத்திலும் ஏழைகளின் வாழ்க்கையை ஏற்றமுறச் செய்யாது என்பது எழிலுற விளங்கும்.

பலம் பொருந்திய பத்திரிகைகள் யாவும் முதலாளிகளால் நடத்தப் படுகின்றன அல்லது முதலாளிகளின் தயவை நாடி வாழ வேண்டிய நிலையில் இருக்கின்றன.

வானொலியும் படக்காட்சியும் ஏழைகளுக்கு எட்டாத பிரசாரக் கருவிகளாக இருக்கின்றன; முதலாளித்துவ முகாமுக்கே அவை விளம்பரப் பொறிகளாகப் பயன் படுகின்றன.

விலை உயர்ந்த ஒலிபெருக்கிக் கருவிகள், பொதுக் கூட்ட மண்டபங்களின் அதிகப்படியான வாடகை, தேர்தலுக்கு நிற்பவர் கட்டவேண்டிய முன்பணம், ஒரு தேர்தலுக்கு நின்றால் செலவாகும் ஏராளமான தொகை,

பொதுக்கூட்டங்களுக்கு ஆட்சியாளர்களால் விதிக்கப்படுகின்ற எண்ணற்ற தடைகள்—இவற்றின் காரணமாக, ஓர் ஏழை, தேர்தலுக்கு நின்று வெற்றி பெறுவதென்பது பெரும்பாலும் இயலாத செயலாகவே முடிகிறது.

பிரசார பீரங்கிகள், தாராளப் பொருள் வசதி, ஆட்சியாளர் சலுகை இவை யாவும் முதலாளித்துவ முகாமுக்கு மட்டுமே கிடைக்கக்கூடிய இன்றைய சமுதாய அமைப்பில், ஏதோ ஏழைக்கும் வாக்குரிமை கிடைத்துவிட்டது என்ற ஒரு காரணத்தாலேயே, பணக்காரர்களைப் போலவே தேர்தலுக்கு நின்று வெற்றி பெற்று அதிகார பீடமேறி ஆட்சி புரிவதற்கான வாய்ப்பு அவனுக்கும் கிடைத்துவிட்டது என்று கூறுவது சிறிதும் பொருந்தாது.

* * * *

இந்திய அரசியல் திட்டத்தின் பக்கங்களைப் புரட்டிப் பார்க்கப் பார்க்க, "ஏழைக்கு ஏது இன்பம்! பாழும் பணமில்லேன்னு உலகமே துன்பம்!" என்னும் இசைப் பாட்டுதான் நம் நினைவிற்கு வருகிறது.

ஏழை இந்தத் திட்டத்திலே முற்றிலும் புறக்கணிக்கப் பட்டிருக்கிறான்.

250 பக்கங்கள் கொண்ட இந்த அரசியல் "மகா பாரதத்"தில் அவனுடைய உருவத்தை ஒரு பக்கத்தில்கூட பார்க்க முடியவில்லை.

எந்தப் பக்கத்தை எடுத்துப் பார்த்தாலும் டால்மியா தான் காணப்படுகிறார். வால்சந்த் ஹீராசந்துதான் காணப்படுகிறார், சிங்கானியாதான் காணப்படுகிறார், டாடாவும் பிர்லாவும் கோயங்காவும்தான் காணப்படுகின்றனர். ஏழை—அந்த மெல்லிய சிறு உருவம்—அவனைக் காணவே முடியவில்லை.

சமதர்ம இலட்சியத்தின் சாயல்கூட, அதன் வாடைகூட, அதன் சிறு நிழல்கூட இருப்பதாகத் தெரியவில்லை இத் திட்டத்தில்.

"இல்லையே உணவில்லையே, கதி இல்லையே எனும் எளிமை, இனிமேல் இலை! எனவே முரசறைவோம் முரசறைவோம்!" என்று முரசு கொட்டத் தவறிவிட்டனர் இத்திட்டம் தீட்டிய பேரறிவாளர்கள்.

ஏழையை—ஏழையை முழு மனிதனுக்கும் ஆற்றல் படைத்த சமதர்ம இலட்சியத்தை—எல்லார்க்கும் எல்லாமும் இருப்பதான இடம் நோக்கிச் செல்வது இந்த வையம் என்னும் உண்மையை அடியோடு மறந்து விட்டிருக்கின்றனர் அன்னார். இதுதான் இந்த அரசியல் திட்டத்தின் இரண்டாவது அடிப்படைத் தவறு. நாம் சென்ற அத்தியாயத்திலே குறிப்பிட்டிருந்ததுபோல பல நாடுகளின் தொகுப்பு நிலமாகிய இந்தியக்கண்டத்தை ஒரு நாடு என்று கருதி, கூட்டாட்சித் திட்டம் வகுக்காமல், ஒத்தை ஆட்சித் திட்டம் வகுத்தது, முதல் அடிப்படைத் தவறு.

இந்த இருபெருந் தவறுதல்களைச் செய்துவிட்ட பிறகு, திட்டம், எப்படி, ஒரு பெருஞ் சிறப்பினதாய் ஒளி வீசித் திகழ முடியும்?

4. அடக்குமுறை அத்தியாயம்

ஜன நாயகம் என்றால் என்ன ? — மிகச்சிறு கேள்வி! ஆனால் மிகச் சிக்கலான கேள்வி! சிக்கலான கேள்விதான் என்றாலும், நிச்சயம் கேட்கப்பட்டாக வேண்டிய கேள்வி! உலகின் பற்பல பகுதிகளிலும் சர்வாதிகார சிந்து இசைக்கப்படுகிற இந்தக் காலத்தில், அதுவும் "நான் ஒரு சர்வாதிகாரிதான் — என்னால் ஒரு சர்வாதிகாரியாகத்தான் இருக்கமுடியும் — நான் பொது வாழ்வில் ஈடுபட்ட நாள் முதலாகவே சர்வாதிகாரியாகத்தான் இருந்திருக்கிறேன்— இனியும் அப்படித்தான் இருப்பேன்"—என்று சில தலைவர்கள் வெளிப்படையாகவும் தைரியமாகவும் பேசத் துணிந்திருக்கிற இந்த நாட்டில், இந்தக் கேள்வியை எழுப்புவதும், இந்தக் கேள்விக்கான விடையைக் கண்டறியும் முயற்சியில் ஈடுபடுவதும் மிகவும் அவசியமான செயல்கள் ஆகும்.

ஜன நாயகம் என்றால் என்ன ? இந்தக் கேள்வியை எழுப்பினால், முன்னரெல்லாம், மிக எளிதிலே விடை கூறி விடுவார்கள்! "ஜன நாயகம்தானே ? அது தெரியாதா ? நாட்டிலே தேர்தல் ஒன்றை நடத்தவேண்டும்! அந்தத் தேர்தலிலே அரசியல் கட்சிகள் பல போட்டியிடவேண்டும்! அப்படிப் போட்டியிடும் கட்சிகளிலே, எந்தக் கட்சிக்கு வாக்காளர்களின் பெருமிதமான ஆதரவு கிடைக்கிறதோ, அந்தக் கட்சி, நாட்டின் ஆட்சிப் பீடத்திலே அமர வேண்டும்! ஒரு குறிப்பிட்ட காலம் முடியும்வரையிலே அந்தக் கட்சி நாடாளவேண்டும். பிறகு, மீண்டும் தேர்தல் நடக்கும். அந்தத் தேர்தலிலே வெற்றி பெறும் கட்சி அதன் பிறகு நாடாளத் தொடங்கும்! இது தானப்பா ஜன நாயகம்!'' என்று, முன்பு, யாரைக் கேட்டாலும், சர்வசாதாரணமாக, மறுமொழி தந்துவிடுவார்கள். இந்த விடை தவறானதுமல்ல. விடை சரியானதுதான். ஆனால், "ஜன நாயகம் என்றால் என்ன ?" என்னும் கேள்விக்கு அளிக்கப்படவேண்டிய சரியான முழு விடையின் ஒரு பகுதிதான் மேலே பொறிக்கப்பட்டுள்ள பதில்.

அப்படியானால், இந்தக் கேள்விக்குரிய முழு விடை தான் என்ன?

பேராசிரியர் லாஸ்கி, "தற்கால அரசில் சுதந்திரத்தின் நிலை" என்னும் தம் புத்தகத்தில், இந்தக் கேள்வியை நன்ருக அலசி ஆராய்ந்து, இதற்குரிய விடையை எழில்பட எடுத்து விளக்கியிருக்கிருர்.

1. சில குறிப்பிட்ட ஆண்டுகளுக்கு ஒரு முறை, ஆட்சியாளர்களை மாற்றி அமைத்துக்கொள்ளும் உரிமை மக்களுக்கு இருக்கவேண்டும்.

2. பேச்சுரிமை, எழுத்துரிமை முதலாகிய சில அடிப்படை மனித உரிமைகள் மக்களுக்குத் தரப்பட்டிருக்க வேண்டும்.

3. எந்தக் காரணத்தை முன்னிட்டும் அந்த உரிமைகள் ஆட்சியாளர்களின் அதிகாரப் போக்கால் நசித்துப் போகாவண்ணம் அவற்றைப் பாதுகாப்பதற்காக மக்களின் உரிமை சாசனம் (A Bill of Rights) நிறைவேற்றப்பட வேண்டும்.

இந்த மூன்று நிபந்தனைகளையும் நிறைவேற்றும் முறையில் அமைந்துள்ள ஆட்சிமுறைக்குத்தான் ஜனநாயகம் என்ற பெயர் பொருந்தும் என்பதாக அறிஞர் லாஸ்கி குறிப்பிடுகிருர்.

லாஸ்கி எடுத்து விளக்கியுள்ள மூன்று நிபந்தனைகளையும் கருத்தான்றிப் படித்துப் பார்த்தால், பெரும்பான்மை மக்களின் ஒப்புதலைப்பெற்ற ஓர் அரசியல் கட்சி நாட்டாட்சிப் பீடத்தில் அமர்ந்திருப்பதால் மட்டும் ஜன நாயக ஆட்சி ஏற்பட்டுவிடாது என்பதும், பேச்சுரிமை—எழுத்துரிமை—காரணம் காட்டாமல் கைது செய்யப்படாமல் இருக்கும் உரிமை முதலாகிய சில அடிப்படை உரிமைகள் நிலை நாட்டப்பட்ட ஆட்சியில்தான் ஜன நாயக ஒளி வீசும் என்பதும் தெளிவாகப் புலப்படும்.

ஏதேனும் ஓர் ஆட்சியில் எழுத்துரிமையும் பேச்சுரிமையும் பறிக்கப்படுமானல், மக்கள் காரணமின்றிக் கைதுசெய்யப்பட்டு சிறைச்சாலைகளில் அடைக்கப்படுவார்களானல், ஆட்சியாளர்களின் நினைப்பிற்கும் நோக்கத்திற்கும் மாருக ஒருவர் பேசிவிட்டார் என்ற ஒரு காரணத்திற்காக—அவர் அப்படிப் பேசியது நியாயமானதுதான் என்ருலும்கூட—அவர் கடுந் தண்டனைக்கு உள்ளாகும் நிலைமை உருவாகியிருக்குமானல், ஆளவந்தார்கள் கிழித்த கோட்டைத் தாண்டாமல் இருப்பவர்களுக்கு மட்டும்தான் நாட்டில் வாழும் உரிமை உண்டு— ஏனையோருக்கு அந்த உரிமை கிடையாது என்னும் போக்கில் ஆட்சி நடைபெறுமானல், அரசாங்கத்தை ஏற்று நடத்தும் அரசியல் கட்சியின் செல்லப்பிள்ளைகளுக்கும் தொண்டரடிப் பொடியார்களுக்கும் மட்டுமே நாட்டிலே வீடு உண்டு, மற்றவர்கட்கு வீடு சிறைக்கூடுதான் என்னும் அடிப்படைமீது ஆட்சி முறைக் கட்டிடம் எழுப்பப்பட்டிருக்குமானல், அந்த ஆட்சி, பெரும்பான்மை மக்களின் ஒப்புதலால் உருவாகிய ஆட்சியாக இருந்தாலும் அதனை ஜன நாயக ஆட்சி என்று கூற, அரசியல் அறிவும் சிந்தனைத்தெளிவும் படைத்த யாருமே, இந்தக் காலத்தில் ஒப்புக்கொள்ள மாட்டார்கள்.

ஹிட்லர், ஜெர்மானிய மக்களில் பெரும்பாலோரின் ஓட்டுகளை மட்டுமல்ல, இருதய பூர்வமான ஆதரவையும் பெற்றுதான், ஆட்சிப் பீடத்தைக் கைப்பற்றினர். முக்கியமான நடவடிக்கையை மேற்கொண்ட ஒவ்வொரு நேரத்திலும், அவர் ஜெர்மானிய மக்களின் சம்மதத்தை அறிய போராவலுடன் முன் வரத்தான் செய்தார். அப்படி அவர் தங்களை நாடிவந்த ஒவ்வொரு சமயமும், ஜெர்மானியர்கள், தங்களுடைய அமோகமான ஆதரவை அவருக்கு அளிக்கத்தான் செய்தனர். இறுதி வரையிலே, ஹிட்லர், ஜெர்மானிய மக்களில் பெருப்பாலோருடைய ஓட்டுகளைத் தன் சட்டைப் பையிலேதான் வைத்துக் கொண்டிருந்தார். இதனை எவரும் மறக்கமுடியாது. ஆனல் இதே நேரத்தில், அந்தக் காரணத்தை முன்நிறுத்தி,

ஹிட்லர் ஒரு ஜனநாயகவாதி என்றோ, அவருடைய ஆட்சி ஜனநாயக ஆட்சி என்றோ, யாராவது கூறமுடியுமா? சர்வாதிகார ஆட்சி என்ற சொற்றொடர் எங்கேனும் ஒலித்தால் ஹிட்லர் ஆட்சி என்ற சொற்றொடரும் கூடவே ஒலிக்கத்தானே செய்கிறது? சர்வாதிகாரப் பாதைக்குத் தலைசிறந்த எடுத்துக்காட்டாகத் திகழ்வதே ஹிட்லர் பாதை தானே? பெரும்பான்மை மக்களின் ஒட்டுப் பலத்தைக் கொண்டு உருவாக்கப்படும் ஆட்சிதான் ஜனநாயக ஆட்சி என்றால், ஹிட்லர் ஆட்சிக்கு ஜனநாயக ஆட்சி என்னும் பட்டப்பெயர் சூட்டப்பட வேண்டுமே? ஆனால் அந்த ஆட்சிக்கு அந்தப் பெயர் யாராலும் சூட்டப்படுவதில்லையே—ஏன்?

எனவேதான் பேராசிரியர் லாஸ்கி, ஒரு நாட்டில் ஜனநாயக மணம் கமழ்கிறதா இல்லையா என்பதைக் கண்டறிவதற்கான கருவி தேர்தல் பெட்டி மட்டும் அன்று என்றும், உரிமை வாழ்வு என்னும் தராசும் அந்தப் பணிக்கு அவசியம் தேவை என்றும் எடுத்துக்காட்டியிருக்கிறார்.

இதே கருத்தைத்தான், சிந்தனைச் சிற்பி எச். ஜி. வெல்ஸ், அவர் இயற்றியுள்ள "மனித சமுதாயத்தின் கண்ணோட்டம்" என்னும் புத்தகத்திலே, "ஜனநாயகக் கண் கொண்டு பார்க்கும்போது எதேச்சாதிகாரங்கள் அவ்வளவும் சட்டவரம்பைக் கடந்தவை என்பது தெளிவாகத் தெரிகிறது. நாட்டிலே நிகழும் பலாத்கார வெறிச்செயலை எதிர்த்து ஒழிப்பது எவ்வளவு நியாயமான செயலோ அவ்வளவு நியாயமான செயலே எதேச்சாதிகாரப் போக்கை எதிர்ப்பதும்" என்று குறிப்பிட்டிருக்கிறார்.

இக்கருத்துக்களையே சுருக்கமாகவும், வேறு வகையாகவும் குறிப்பிடவேண்டிய வேறோர் இடத்தில், பேராசிரியர் லாஸ்கி, "சட்டத்தின் ஆட்சியே ஜனநாயகத்தின் அடிப்படை" என்று எழுதியிருக்கிறார்.

சட்டத்தின் ஆட்சி என்றால் என்ன? சட்டநூல் வல்லுநர் டைசி விளக்கம் தருகிறார். "சட்டப்படி நிறுவப்பட்டுள்ள நீதி மன்றங்களில், சட்டமுறைப்படி ஒருவன்

குற்றவாளி என்று நிரூபிக்கப் பட்டாலொழிய, வேறு எக் காரணத்தை முன்னிட்டும் ஒருவன் எந்தத் தண்டனைக்கும் ஆளாகக்கூடாது. இதுதான் சட்டத்தின் ஆட்சி.''

ஆம்! ஒரு நாட்டிலே, யார் எந்தத் தண்டனைக்கு உள்ளாவதாக இருந்தாலும், அந்தத் தண்டனை, அவர், சட்டப்படி செய்த குற்றத்திற்கு சட்டப்படி அளிக்கப்பட்டதாக இருக்கவேண்டும். அப்போதுதான் அந்த நாட்டிலே ஜனநாயக ஒளி வீசுகிறது என்று பொருள். அப்படியின்றி, ஆட்சியாளர்கள், தம் கருத்துக்கு மாறான கருத்துக் கொண்டவர்களையெல்லாம் நீதி மன்றத்தில் கொண்டு வந்து நிறுத்தாமலே சிறைச்சாலைக்குள் தள்ளுவது என்னும் நிலைமை நடைமுறையில் இருக்குமானால், அந்த நிலைமையில் இருக்கும் நாட்டின் ஆட்சி ஜனநாயக ஆட்சி ஆகாது, எதேச்சாதிகார ஆட்சியே ஆகும். அங்கே அப்போது சட்டம் ஆட்சி புரியாது. ஆளவந்தார்களின் ஆணவம்தான் ஆட்சி புரியும். நீதியும் நேர்மையும் அந்த நாட்டில் நிலைக்க மாட்டா; ஒரவஞ்சகமும் அடக்குமுறைக் கொடுமையும்தான் நிலைத்து நிற்கும். தென்றல் மகிழ்ந்துலவும் குளிர் பூஞ்சோலையாக இராது மக்கள் வாழ்வு. உடல்—உள்ளம்—இரண்டையும் வாட்டிவதைக்கும் பாலைவனமாகத்தான் இருக்கும்.

'' ஆமப்பா! டைசியும் லாஸ்கியும் வெல்சும் பிறரும் கூறுவது மெய்தானப்பா! சமாதான காலத்தில், நாட்டில் சாந்தி நிலவும் நேரத்தில், அமைதியும் பொறுமையும் சமுதாயத்தில் அரசோச்சும் வேளையில், நீதி மன்றத்தில் கொண்டுவந்து நிறுத்தி நீதிபதிகளின் நல்ல தீர்ப்பைப் பெறாமல் எவரையும் தண்டிப்பது தவறுதானப்பா! உண்மைதானப்பா! ஆனால் போர்க் காலத்தில், வெள்ளமும் புயலும் மூண்டெழும் வேளையில், பஞ்சமும் பெருநோயும் பூகம்பமும் பேராபத்துகளும் நாட்டைத் தழுவும் நேரத்தில், அப்போதெல்லாம் கூடவா, மக்களை வழக்கு மன்றத்திற்குக் கொண்டுவந்து, நிதானமாக விசாரித்து, அமைதி

யாகத் தீர்ப்பு வழங்கி, மெதுவாகப் பணியாற்றிக் கொண்டிருக்க முடியும்? அத்தகைய அவசரக் காலங்களில், குற்றம் புரிபவர்களை நீதிமன்றங்களுக்குக் கொண்டுவராமலே தண்டிக்கும் தனி உரிமை ஆட்சியாளர்களுக்குத் தரப்பட வேண்டாமா? கூறப்பா, நண்பா, சிந்தித்துப் பாரப்பா" என்று பலர் அடிக்கடி பேசத் தொடங்குகிறார்கள்.

இந்தப் பொருந்தா வாதத்தையும் ஏற்க மறுக்கிறார் அரசியல் அறிஞர் ஹெரால்டு லாஸ்கி.

இதோ அறிஞர் லாஸ்கி வருகிறார், பேசுகிறார், கேளுங்கள் :—

"பொது அமைதிக்குப் பேராபத்து ஏற்பட்டுள்ள வேளையிலோ, அல்லது, ஏற்படும் என்று எண்ணப்படுகிற நேரத்திலோ, அதிகார பீடத்தில் அமர்ந்திருப்பவர்கள் நியாயமான முறையில் நடந்துகொள்வார்கள் என்று என்னால் நம்பமுடியவில்லை

"சாதாரண சட்டப்படி உள்ள அதிகாரங்களைத் தவிர அவசர காலங்களுக்கு என்று ஏற்படுத்தப்படும் விசேஷ அதிகாரங்களைப் பயன்படுத்தும்போது, எந்த நாட்டிலும் ஆட்சியாளர்கள் முறை கேடாகத்தான் நடந்துகொண்டிருக்கின்றனர்.

"விசேஷ அதிகாரங்களைப் பயன்படுத்தும்போது, ஆட்சியாளர்கள், நேர்மையான முறையில் நடந்துகொண்டிருக்கிறார்கள் என்று காட்டுவதற்குரிய எடுத்துக் காட்டு ஒன்றைக் கூட உலக வரலாற்றில் என்னால் காணமுடியவில்லை

"விசேஷ அதிகாரங்களைப் பயன்படுத்தும்போது சாதாரண மனிதர்கள் மட்டும்தான் தவறிவிடுகிறார்கள் என்பதில்லை. ஆப்ரகாம் லிங்கன் அன்பு ததும்பும் உள்ளமும் தாராள மனப்போக்கும் படைத்தவர். அவருடைய ஆட்சியிலகூட விசேஷ அதிகாரம் அநீதியைத்தான் விளைவாக அளித்திருக்கிறது. ஆப்ரகாம் லிங்கனின் படைத்

தலைவர், கொஞ்சம்கூட நியாயமற்ற முறையில் மக்களின் அடிப்படை உரிமைகளைப் பறித்தபோது, லிங்கன் அந்தத் தளபதியின் செயலை எதிர்க்கவில்லை—ஆதரிக்கத்தான் செய்தார்.

"எனவேதான் நான் கூறுகிறேன், விசேஷ அதிகாரங்களை எப்படிப்பட்டவர்கள் கையாண்டாலும் சரி, அவற்றைக் கையாளும் காலம் சமாதான காலமாயினும் சரி அல்லது நெருக்கடிக் காலமாயினும் சரி, அந்த அதிகாரங்களால் அநீதி, அக்கிரமம், தவறு ஏற்பட்டே தீரும்.

"நீங்கள் அயர்லாந்தின் வரலாற்றைப் படியுங்கள் அல்லது ரஷ்யாவின் சரித்திரத்தைப் புரட்டுங்கள். பவேரியாவின் கதையைப் பாருங்கள் அல்லது ஹங்கேரியின் பழமையைக் கருதுங்கள், இந்தியாவின் வரலாற்றை வேண்டுமானாலும் படித்துப் பாருங்கள். எந்த நாட்டின் வரலாற்றுச் சுவடியைத் திறந்து பார்த்தாலும், அங்கே, நியாயம் வழங்கும் அதிகாரம் நீதிபதியிடமிருந்து பறித்தெடுத்து ஆட்சியாளர்களிடம் ஒப்படைக்கப்பட்ட ஒவ்வொரு வேளையிலும் அநீதி நேர்ந்தே இருக்கிறது என்னும் உண்மை பளிங்குபோல் விளங்கக் காண்பீர்கள்.

"பழமைக்கு மாறான கருத்துக்கள் நாட்டில் நடமாடத் தொடங்கினாலே போதும், உடனே சமுதாயத்தின் அமைதி அழிந்துபோகும் என்று எண்ணுகிற மூடமதி படைத்தவர்கள் ஒவ்வொரு சமுதாயத்திலும் ஏராளமாக இருக்கிறார்கள். இப்படிப்பட்டவர்கள் மந்திரிகளாக வந்து விடுகிறார்கள். வந்ததும் புதிய கருத்துக்களை நாட்டிற்கு அளிக்கும் டால்ஸ்டாய்க்கும் தொரோவுக்கும் வில்லியம் மாரிசுக்கும் பெர்னட்ஷாவுக்கும் சரியான இடம் சிறைச்சாலைதான் என்று இவர்கள் முடிவு கட்டிவிடுகிறார்கள். இப்படிப்பட்ட மந்திரிகளிடம் நீதிமன்றங்களைப் பற்றிய கவலையே இல்லாத விசேஷ அதிகாரங்கள் சிக்கிக் கொண்டால் விளைவு என்ன ஆகும் என்பதைக் கூறவா வேண்டும்?"

கூறவா வேண்டும்? மந்திரி கட்சியினரைத் தவிர ஏனைய கட்சிகளைச் சார்ந்தவர்கள் மீது அடக்குமுறை சட்டிகள் பாய்ச்சப்படும். ஆட்சியாளர்களின் திறமையின்மையை எடுத்துக் காட்டுபவர்கள் மீது அதிகாரக் குண்டுகள் வீசப்படும். சொல்லவா வேண்டும்? மக்கள் நன்மையை மந்திரிகள் மறந்தபோதும், உண்மை உலவக் கூடாது என்று ஊராளவந்தவர்கள் ஓங்கி முழங்கும் போதும், உறுதிபடைத்த உள்ளத்தோடு ஆட்சியாளரை அமைதியான முறையில் எதிர்த்து நிற்பவர்கள் மீது பாணங்கள் பல தொடுக்கப்படும். இயம்பவா வேண்டும? மக்கள் ஏமாந்திருந்தால், மெஜாரிடி கட்சியின் தலைமைப் பீடத்தவர்கள், தம்முடைய மெஜாரிடி பலத்தைப் பயன் படுததிக் கொண்டு, மக்கள் உரிமைகள் அனைத்தையும் ஒடுக்கிவிட்டு விசேஷ அதிகாரங்கள் என்ற படிக்கட்டுகள் மீது மடமடவென ஏறி, சர்வாதிகாரக் கோபுரத்தின் மீது சென்று அமரக்கூடும். விளக்கவா வேண்டும்? சூழ்ச்சி படைத்தவர்கள், சூதுமதி நிறைந்தவர்கள், குள்ள உள்ளம் வாய்ந்தவர்கள், கருத்தில் நஞ்சுகொண்டவர்கள் எப்படியோ ஓட்டுகளைப் பெற்று அதிகார தேவதைகளாக உயர்ந்து விட்டால், பிறகு, பெர்லின் பாதையிலே நடக்க முற்படுவர்; ஹிட்லரின் தோழர்களாக ஆக ஆவல்கொள்வர்; முசோலினியின் மறுபதிப்புகளாக மாறிவிடுவர். வியாக்யானமா தேவை இதற்கு?

ஒரு நாட்டிலே ஜனநாயகப் பண்பு ததும்ப வேண்டுமானால், மக்களாட்சிக் கோட்பாடு மகத்தான மதிப்பும் மாண்புள்ள செல்வாக்கும் பெற்றுத் திகழவேண்டுமானால், எல்லாரும் அந்நாட்டு மன்னர் என்னும் கவிதை காற்றிலே கலந்து வரும் கீதமாக மட்டுமல்ல, நாட்டிலே நடைமுறையில் இருக்கும் நாதமாக ஒலிக்கவேண்டுமானால், அந்த நாட்டிலே பெரும்பாலான மக்களின் ஆதரவைப் பெற்று அரசு கட்டில் ஏறும் இயக்கத்தவர்கள், பெர்லின் பாதையில் தங்கள் பயணத்தைத் தொடங்க எண்ணும்போது, உடனே, சற்றே விலகி இரும் பிள்ளாய், என்று கூறி,

அவர்களின் அந்த ஆணவக் கருத்தை அடித்து நொறுக்கித் தூள் தூளாக்கிவிடும் தூய்மைப் பண்பு படைத்த வன்மை சேர் கருவி ஒன்று இருந்துதீர வேண்டும். அத்தகைய பேராற்றல் படைத்த கருவியாக இருக்கக்கூடிய தன்மை, ஒரு ஜனநாயக நாட்டில், அந்த நாட்டின் அரசியல் திட்டத்திற்கே உண்டு.

ஒரு ஜனநாயக நாட்டின் அரசியல் திட்டம் மாண்பு மிகுந்ததாக இருக்கவேண்டுமானுல், அந்தத் திட்டம், மெஜாரிடி கட்சி, ஹிட்லர் வடிவெடுக்க எண்ணும்போது, அந்த எண்ணம் ஆகாது இங்கு என்று தடுத்து நிறுத்தும் ஆற்றல படைத்ததாக இருக்கவேண்டும். வேறு வகையாக விளம்புவதானுல், அந்த அரசியல் திட்டத்தில் சட்டத்தின் ஆட்சி இருக்கவேண்டும்; எதேச்சாதிகாரத்தின் நடனம் இருத்தல் ஆகாது. விளக்கமாகக் கூறுவதானுல், நீதி மன்றம் தீர்ப்பு வழங்கினுலொழிய யாரையும் எத்தகைய தண்டனைக்கும் உள்ளாக்கும் அதிகாரம் எந்த நிலையிலும் ஆட்சியாளருக்குக் கிடையாது என்னும் விதி அழுத்தந் திருத்தமான முறையில் அரசியல் திட்டத்தில் பொறிக்கப் பட்டிருக்க வேண்டும்.

இந்த நிபந்தனை, எந்த நாட்டின் அரசியல் திட்டத்திற்கும் பொருந்தும்; இந்தியத் துணைக் கண்டத்தின் அரசியல் திட்டத்திற்கோ மிக மிகப் பொருந்தும்.

சேற்றிலே சிக்கிய செந்தாமரைபோல, நெடுங்காலமாக மத மாயையிலே கட்டுண்டு கிடக்கும் நிலப்பகுதி, இந்தியா.

இந்தியத் துணைக்கண்டத்தவரின் வாழ்க்கையைக் கவ்விக்கொண்டுள்ள அளவு, மதம், வேறு எந்த நாட்டவரின் வாழ்க்கையையும் கவ்விக்கொண்டில்லை.

இந்திய மக்கள் மதத்திலே பிறக்கிறுர்கள்; மதத்திலே வாழ்கிறுர்கள்; மதத்திலேயே மாள்கிறுர்கள். பிறக்கும் நாள் முதல் இறக்கும் நாள் வரை, மதம் எனும் மாயை

தான் இந்திய மக்களைத் தன் மனம்போன வண்ணம் ஆட்டிப் படைக்கிறது.

உண்பதிலே மதம்; உடுப்பதிலே மதம்; உறங்குவதிலே மதம்! உறங்குவதிலே மட்டுமா, பாயை விரிப்பதிலேயும் அதைச் சுருட்டுவதிலேயும் கூட மதம்தான்!

வீட்டைவிட்டு வெளிக் கிளம்புவதிலே மதம்; வீட்டிற்குள் வந்து நுழைவதிலே மதம்; வீடு கட்டத் தொடங்குவதிலே மதம்; வீட்டைக் கட்டி முடிப்பதிலேயும் மதம்தான்!

மக்கள் இல்லத்திலே, உத்தியோக மண்டலத்திலே, ஆட்சிப்பீடத்திலே, தபால் முத்திரையிலே, சர்க்கார் இலச்சினையிலே, நிழல் படக் காட்சியிலே, பள்ளிப் பாடத்திலே, இலக்கிய உலகத்திலே, எங்கும் எங்கெங்கும் மதத்தின் ஆட்சிதான் தங்கு தடையின்றி நடந்துகொண்டிருக்கிறது!

நெற்றியிலே அணியும் பொட்டிலிருந்து காலிலே அணியும் செருப்பு வரை, மதம், கூடாரம் அடித்துக் கொண்டிருக்கிறது.

அவன் ஓர் கவிஞன்—நெஞ்சை அள்ளும் எழுத்தோவியங்கள் அவன் உள்ளத்திலிருந்து உருண்டோடி வருகின்றனவா—இந்தியரிடம் அந்தக் கவிஞனைக்கொண்டு செல்லுங்கள். "அடடா! என்ன அருமையான கவிதை! எவ்வளவு அற்புதமாகப் பாடுகிறான்" என்று கூறமாட்டார்கள். அவன் திறமையைக் கண்டு, ஆற்றலைக் கண்டு, மகிழ்ச்சிமிகக் கொண்டு அவனைப் பாராட்டமாட்டார்கள்! "எல்லாம் ஆண்டவன் அருளப்பா! ஆண்டவன் அருள்! அவனா பாடுகிறான்? சரஸ்வதி அல்லவா அவன் நாக்கிலிருந்துகொண்டு பாடுகிறாள்?" என்றுதான் கூறுவார்கள்.

காவியம் தீட்டுபவன்—ஓவியம் இயற்றுவன், சிற்பம் சமைப்பவன்—சிலைகள் வடிப்பவன், ஆடைகள் நெய்பவன்—கூடைகள் செய்பவன், விஞ்ஞான வல்லுநன்—கணித

னால் கலைஞன் என்று எங்கே யாரிடம் எந்தத் திறமை இருந்தாலும் சரி, அந்தத் திறமை, அவர்களுடைய சொந்த முயற்சியால் அவர்களுக்குக் கிடைத்தது என்று கூறமாட்டார்கள் இந்தியர்கள். அது எல்லாம் வல்ல எம்பிரான் அளித்த அருட்பிரசாதம் என்றுதான் கூறுவார்கள்.

அந்த அளவுக்கு, மக்கள், இந்தத் துணைக்கண்டத்தில், தன்னம்பிக்கை அற்றவர்களாக, சுய சிந்தனையை இழந்தவர்களாக, தம்மையே தாம் பறிகொடுத்துவிட்ட பரிதாப நிலையினராக ஆக்கப்பட்டுவிட்டார்கள் பற்பல நூற்றாண்டுகளாக அவர்கள் அருந்திவந்த மத அபின் காரணமாக!

ஓரளவு செல்வாக்கும் கொஞ்சம் புகழும் கிடைத்து விட்டால் போதும் ஓர் அரசியல் வாதிக்கு! அவன் உடனே ஓர் அவதார புருஷனாக, தேவதூதனாக, இந்த நாடு உய்ய ஆண்டவனால் அனுப்பப்பட்ட புண்ணிய ஆத்மாவாக எளிதில் மாறிவிடலாம்! அந்த நிலையிலே, விரைவில் அவன் ஆட்சிப்பீடத்திலும் அமர்ந்துவிடலாம். பிறகு அவன் ஆயிரம் தவறுகள் செய்தாலும் சரி, அவனை அதிகாரப் பீடத்திலிருந்து இறக்குவது மிக மிகக் கடினம்.

திறமை படைத்தவன் எவனையும், இந்தியர்கள், இறைவனின் அருள்பெற்றவன் என்றே எண்ணி வழிபடுகிற காரணத்தால், அந்தத் திறமை படைத்தவன், கொஞ்சம் சூதுமதி படைத்தவனாகவும் இருந்துவிட்டால், என்றென்றும் மக்களை ஏய்த்துப் பிழைக்கும் எத்தனாக அவன் உருமாறிவிடுவது இயற்கை. மதத்திரை கண்களை மூடிக்கொண்டிருக்கும் காரணத்தால், அவனுடைய சூழ்ச்சித் திட்டத்தை உணர முடியாது இந்தியர்களால்! உணர்ந்தவர்கள் கூறினாலும் உண்மையை உணரவிடாது அவர்கள் உள்ளத்தில் வேரூன்றிப்போயிருக்கும் மதவெறி!

ஆண்டவனே தவறு செய்தாலும் அஞ்சாநெஞ்சுடன் அதைக் கண்டிக்கத்தான் செய்வோம் என்று அண்டம்

அதிர முழங்குகிற பகுத்தறிவுவாதிகள்கூட, தங்கள் தலைவர் தவறு செய்யும்போது, அந்தத் தவறால் பெருங்கேடு விளைவது உறுதி என்பதை நன்கறிந்த நிலையிலுங்கூட, அவரை எதிர்த்து ஒரு சொல் கூறவும் அஞ்சுவார்கள் இந்தத் துணைக் கண்டத்தில்! அவர்கள், மதத்தை மறுப்பவர்கள் தான் என்றபோதிலும், பரம்பரை பரம்பரையாக அவர்கள் இரத்தத்தில் ஊறிப்போயிருக்கும் மதவெறி, அவர்களை அவர்களை அறியாமலே பூஜா மனோபாவம் படைத்தவர்களாக ஆக்கிவிடுகிறது.

இத்தகு மனவளம் நிறைந்த துணைக்கண்டத்தில் சர்வாதிகாரிகள் தோன்றுவது மிக எளிது. தோன்றிய பிறகு அவர்கள் வளர்வதோ அதனினும் எளிது.

பொதுவாக, எந்த நாட்டிற்கு அரசியல் திட்டம் வகுப்பவர்களும், அந்த நாட்டில் சர்வாதிகார நச்சுக்காற்று நுழையமுடியாத விதத்தில், திட்டத்தைத் தீட்டவேண்டும். இந்தியத் துணைக் கண்டம், சர்வாதிகார அபாயத்திற்கு மிக எளிதிலே இடங்கொடுத்துவிடக் கூடிய நிலையில் இருக்கும் காரணத்தால், இந்த நிலப்பகுதிக்கு அரசியல் திட்டம் அமைப்பவர்கள், பிற நாட்டாரை விட சற்றுக் கூடுதலான விழிப்புணர்ச்சியுடன் இருந்தாகவேண்டும்.

இருந்திருக்கிறார்களா அப்படி? இந்திய விளை நிலத்தில் சர்வாதிகார வெட்டுக்கிளிகள் ஜனநாயகப் பயிரைக் கொத்தித் தின்று நாசமாக்கா வண்ணம் இருப்பதற்கான எல்லா முன்னேற்பாடுகளையும் செய்திருக்கிறார்களா? இந்த இந்திய அரசியல் திட்டத்தில், சட்டத்தின் ஆட்சி, செங்கோல் செலுத்துகிறதா? சிறிதும் ஆட்டம் கொடுக்கமுடியாத வகையில் ஜனநாயகம் நிலைநாட்டப்பட்டிருக்கிறதா அதில்? பேச்சுரிமை எழுத்துரிமை முதலாகிய அடிப்படை உரிமைகள் தக்க முறையில் பாதுகாக்கப்பட்டிருக்கின்றனவா?

அரசியல் திட்டச் சுவடியைக் கொஞ்சம் புரட்டிப் பார்ப்போம்.

முதல் நான்கைந்து பக்கங்களைத் தள்ளியதும், புதிய அத்தியாயம் ஒன்று தென்படுகிறது. அத்தியாயத்தின் தலைப்பு என்ன? அடிப்படை உரிமைகள்! தலைப்பு நம் உள்ளத்தில் களிப்பை எழுப்பும் முறையிலேதான் அமைந்திருக்கிறது. ஆனால் தலைப்பு மட்டும் களிப்பை ஊட்டும் வகையிலே அமைந்து, உள்ளே இருக்கும் விதிகள் மன எரிச்சலை அளிப்பனவாக இருந்தால் என்ன பயன் உண்டு அதனால்?

சற்று, உள்ளே நுழைந்து பார்ப்போம்.

நுழைந்ததும்,நாம் முன்னே ஒருமுறை கண்டு மகிழ்ச்சி மிகக் கொண்டு, பின்னர் ஏமாந்த 19-வது விதி தென்படுகிறது.

19-வது விதி தெரிவிக்கிறது :—

"(1) பேச்சாலும் பிறவகையாலும் தம் மனக் கருத்தைத் தெரிவிக்கும் உரிமை

(2) அமைதியான முறையில், ஆயுதங்கள் ஏந்தாமல், கூட்டம் கூடும் உரிமை

(3) சங்கம் அல்லது கழகம் அமைக்கும் உரிமை

இந்த உரிமைகள் இந்தியக் குடிமக்கள் அனைவருக்கும் உண்டு."

19-வது விதி, இந்த அளவோடு நின்றுவிட்டிருந்தால், உண்மையிலேயே நாம், பூரிப்பும் பெருமையும் கொள்ள முடியும். "எழுத்துரிமையும் பேச்சுரிமையும் தாராளமாகத் தரப்பட்டிருக்கின்றன இத் திட்டத்தில்—வாழ்க இத் திட்டம்!" என்று பெரு மகிழ்ச்சியுடன் பேசமுடியும்

ஆனால், விதி, இந்த அளவோடு நின்றிருக்கிறதா? இல்லை! மேலே பொறிக்கப்பட்டுள்ளது, விதியின் முதல் பகுதி மட்டும்தான். இந்த முதல் பகுதிக்குக் கீழே 2, 3, 4-ம் பகுதிகள் வேறு காணப்படுகின்றன.

"இப்போது நடைமுறையில் உள்ள பல சட்டங்கள் மூலமும், இனி நிறைவேற்றக் கூடிய பல சட்டங்கள் மூலமும், பொது அமைதியை முன்னிட்டு, ஆட்சியாளர்கள், மேலே முதல் பகுதியில் குடிமக்கட்குத் தரப்பட்டுள்ள உரிமைகளை நியாயமான அளவு கட்டுப்படுத்துவார்களானால் அது தவறாகாது."

என்று இந்த 2, 3, 4-ஆம் பகுதிகள் தெரிவிக்கின்றன.

ஒரே வாசகத்தில் கூறுவதானால், இந்த 2.3-4-ஆம் பகுதிகள், முதல் பகுதியையும், அந்தப் பகுதிமூலம் அளிக்கப்பட்டுள்ள உரிமைகளையும் வெறும் கேலிக் கூத்தாக ஆக்கிவிடுகின்றன.

இப்போது நடைமுறையில் உள்ள

போலீஸ் சட்டங்கள்,
அச்சுக்கூட சட்டங்கள்,
கிரிமினல் லா திருத்தச் சட்டங்கள்;
வங்காள ரெகுலேஷன் சட்டம் 1818
சென்னை ரெகுலேஷன் சட்டம் 1819
பம்பாய் ரெகுலேஷன் சட்டம் 1827

மற்றும், பிரிட்டானியம், தன்னுடைய அடக்குமுறைக் கொடுங்கோல் ஆட்சியை நிலைநாட்டிக் கொள்வதற்காகவும், இந்திய மக்களின் உரிமைக் குரலை ஒடுக்குவதற்காகவும் நிறைவேற்றிவைத்துள்ள எண்ணற்ற சட்டங்கள்

ஆகிய இவற்றால், மக்களின் எழுத்துரிமையும் பேச்சுரிமையும் முற்றிலும் பறிக்கப்பட்டுவிடுகின்றன. இச் சட்டங்கள் யாவும் சைத்தான் சட்டங்கள் என்றும், அநீதியின் உருவங்கள் என்றும், அக்ரமத்தின் சின்னங்கள் என்றும் பலமுறை, இன்றைய அரசியல் திட்டத்தை வகுத்த காங்கிரஸ் கட்சியினரால், வெள்ளையர் ஆட்சி இங்கிருந்த காலத்தில், சித்தரிக்கப்பட்டிருக்கின்றன. இச் சட்டங்கள் மீது, காங்கிரஸ் கட்சியினர் அந்தக் காலத்தில் வீசிய தூற்

றல் பாணங்களும் சுடுசொல் அம்புகளும் கொஞ்சமல்ல. இச் சட்டங்களால் இந்தியா அடைந்துள்ள துயரமும் வேதனையும் ஏராளம்.

இந்தியாவில் உள்ள தலைசிறந்த சட்டவல்லுநர்களில் ஒருவரும், பாட்னா உயர்நீதிமன்ற முன்னாள் நீதிபதியும், காலஞ்சென்ற அறப்போர் வீரர் சி. ஆர். தாஸ் அவர்களின் உடன்பிறந்தவரும் ஆகிய பி. ஆர். தாஸ், சென்னையில் 1949-ல் நடைபெற்ற அனைத்திந்திய மக்கள் உரிமை மாநாட்டில் தலைமை தாங்கிப் பேசியபோது, "சட்டத்தின் ஆட்சிக்கு மாறாக எதேச்சாதிகார ஆட்சியை நிலைநாட்டும் மேற்படி சட்டங்கள் எல்லாம் நடைமுறையில் இருக்கும் வரை, இந்தியாவில் ஜனநாயக ஒளி வீசுகிறது என்று பேசுவதோ, அரசியல் நீதி வழங்கப்படுகிறது என்று கூறுவதோ, பேச்சுரிமை எழுத்துரிமைகள் அனைத்தும் உண்டு என்று இயம்புவதோ, வெறும் பைத்தியக்காரத்தனமே ஆகும்!" என்று குறிப்பிட்டுள்ளார்.

இவ்வளவு கொடுமையும் குரூரமும் நிறைந்த இச் சட்டங்கள் அனைத்தையும் மனமார ஒப்புக்கொண்டு இச் சட்டங்களால் மக்களின் உரிமைகள் பறிக்கப்படும் அக்கிரமத்திற்கும் அநீதிக்கும் 'ததாஸ்து' கூறிவிட்டு, இவ்வளவுக்கும் பிறகு, நாங்களும் பேச்சுரிமை எழுத்துரிமைகளை மக்களுக்கு வழங்குகிறோம் என்று அரசியல் திட்ட நிர்மாணகர்த்தாக்கள் பேசுகிறார்கள் 19 ஆம் விதியின் முதற்பகுதிமூலம் என்றால், அந்தப் பேச்சிலே நாணயம் இருக்கிறது என்று யார் கூறமுடியும்?

சுற்றி வளைத்துப் பேசுவானேன்? உண்மை இது தான். அடிப்படை உரிமைகளை வழங்குகிறோம் என்று வாயளவில் சொல்லிக்கொண்டே, செயல் முறையில், அந்த உரிமைகளைப் பறித்துக்கொள்வதற்காக அமைக்கப் பட்டிருக்கும் தந்திரமான தோர் ஏற்பாடு, 19-வது விதி.

இந்த விதியைக் கண்டு, இதனால் மக்கள் உரிமைக்கும் ஜனநாயகக் கோட்பாட்டிற்கும் ஏற்பட்டுள்ள ஆபத்தைக்

கண்டு, கொதிப்படையும் உள்ளத்தைச் சற்று சமாதானப் படுத்திக்கொண்டு, மேலும் இரண்டோர் பக்கங்களைப் புரட்டினால், 21-வது விதி காட்சி அளிக்கும்.

"சட்டம் ஏற்படுத்தியுள்ள முறைப்படி தவிர வேறு எந்த முறையாலும் யாருடைய உயிரையோ உரிமையையோ பறிக்கக் கூடாது."

இதுதான் 21-வது விதி. மேலெழுந்த வாரியாகப் பார்க்கும்போது இந்த விதி, ஆட்சியாளரின் எதேச்சாதிகாரப் போக்கைத் தடுத்து நிறுத்துகிறது—நீதி மன்றங்களின் தீர்ப்பைப் பெற்றாலொழிய யாரையும் தண்டிக்கும் அதிகாரம் ஆட்சியாளருக்குக் கிடையாது என்னும் சிறந்த நிலையை உருவாக்குகிறது—மக்களின் பேச்சுரிமை எழுத்துரிமைகளைக் கண்ணும் கருத்துமாகக் காப்பாற்ற முனைந்திருக்கிறது என்றெல்லாம்தான் எண்ணத் தோன்றும் யாருக்கும்! ஆனால், உண்மையில், இந்த விதி, அப்படியெல்லாம் நம்மால் போற்றிப் புகழப்படவேண்டிய புனிதமான தொண்டு எதனையும் செய்து முடித்துவிடவில்லை. இந்த விதி செய்து முடித்திருக்கும் காரியம் எல்லாம், மக்களின் பேச்சுரிமை எழுத்துரிமைகளைப் பறித்துவிட்டு, நீதி மன்றங்களின் அதிகாரத்தைக் குறைத்துவிட்டு, ஆட்சியாளர்களின் எதேச்சாதிகாரப் போக்கைப் போற்றிப் பாதுகாத்து அதற்குத் தேவையான எல்லாவகை ஆதரவுகளையும் அளித்திருப்பதுதான். **சட்ட நிபுணர் பி. ஆர். தாஸ்** குறிப்பிட்டிருப்பதைப் போல, அரசியல் திட்டத்தின் இந்த 21-வது விதியை, ஜனநாயகக் கோட்பாட்டிற்கும் மக்களின் உரிமை வாழ்க்கைக்கும் ஏற்பட்டுள்ள மிகப் பயங்கரமான ஆபத்து என்றே அறிவுத் தெளிவுள்ள எவரும் கருதுவர்.

"**சட்டம் ஏற்படுத்தியுள்ள முறைப்படிதவிர**, வேறு எந்த முறையாலும் யாருடைய உயிரையோ உரிமையையோ பறிக்கக்கூடாது"

என்று உள்ள இந்த விதி, இப்படியில்லாமல்,

"நியாயமான சட்டமுறைப்படிதவிர, வேறு எந்த முறையாலும் யாருடைய உயிரையோ உரிமையையோ பறிக்கக் கூடாது"

என்று இருந்திருக்குமானால், அப்போது, நிச்சயமாக, இந்த விதியை, ஜனநாயகக் கோட்பாட்டிற்குக் கிடைத்துள்ள ஒப்பற்ற பாதுகாவலன் என்று எவரும் போற்றுவர். ஆனால், இப்போது, இந்த விதியின் வாசகம் அமைந்துள்ள தலைகீழ் முறையைக்கொண்டு பார்க்கும்போது, இந்த விதியை, ஜனநாயகத் தத்துவத்தின் மீது வீசப்பட்ட விபரீதமான வெடிகுண்டு என்றுதான் நாம் சித்தரிக்க முடியும்.

"சட்டம் ஏற்படுத்தியுள்ள முறை"
"நியாயமான சட்டமுறை"

இந்த இரண்டு சொற்றொடர்களுக்குமிடையே உள்ள வேறுபாடு, வட துருவத்திற்கும் தென் துருவத்திற்கும் உள்ள வேறுபாட்டைவிட அதிகம். முன்னது புயலானல், பின்னது தென்றல்! முன்னது வேம்பு ஆனல் பின்னது செந்தேன்! முன்னது அனலானல் பின்னது குளிர்ச்சி! இரண்டிற்குமிடையே உள்ள இடைவெளி—வேறுபாடு—தன்மை மாற்றம் அத்துணை அதிகம்.

சட்டம் ஏற்படுத்தியுள்ள முறைப்படிதான் ஆட்சி நடைபெறவேண்டும் என்று கூறிவிடுவதால், அநீதி தடுக்கப்பட்டதாக ஆகிவிடாது. மாறாக அநீதி புரிவதற்கு ஆட்சியாளருக்கு அருமையானதோர் பாதுகாப்புக் கிடைத்ததாகவே ஆகும். ஏனெனில், ஆட்சிப்பீடத்தில் அமர்ந்துள்ள மெஜாரிட்டிக் கட்சியினர், மக்கள் உரிமைகளை மட்டந்தட்ட வேண்டும் என்று கருதினல், உடனே அத்தகு தன்மை படைத்ததோர் சட்டத்தை, தம்மிடம் மெஜாரிடி பலம் அமைந்திருக்கும் காரணத்தால் எளிதில் நிறைவேற்றிவிட்டு, பிறகு அச் சட்டத்தின் துணைகொண்டு, அச் சட்டத்தின் பெயரால், மக்கள் உரிமைகளுக்கு உலைவைக்கத்

தொடங்குவர். அங்கிலையில் யாரேனும் அவர்களை நோக்கி "ஆகுமா இந்த அநீதி? அடுக்குமா? முறையா? தகுமா இச்செயல்? இவ்வண்ணம் மனந்துணிந்து மக்கள் உரிமை களைப் பறிக்கலாமா?" என்று கேட்டால், உடனே, ஆட்சி யாளர்கள் அவர்கள் பக்கம் திரும்பி, "சட்டம் ஏற்படுத்தி யுள்ள முறைப்படிதானே நாங்கள் நடக்கிறோம்? தவ றென்ன இதில் இருக்கிறது? அப்படி நடக்கவேண்டும் என்றுதானே அரசியல் திட்டம் ஆணையிடுகிறது? அந்த ஆணைப்படிதானே நாங்கள் பணியாற்றியிருக்கிறோம்?" என்று வேகவேகமாக விடைகூறுவர்.

ஆனால், "சட்டம் ஏற்படுத்தியுள்ள முறைப்படி ஆட்சி நடைபெறவேண்டும்" என்று இருப்பதற்கு மாறாக, வாச கம், "நியாயமான சட்டமுறைப்படி ஆட்சி நடைபெற வேண்டும்" என்று இருக்குமானல், அப்போது ஆட்சியா ளர்கள், மக்கள் உரிமைகளுக்கு வேட்டுவைக்கும் பண்பு படைத்த சட்டங்களை இயற்ற முடியாது. அப்படி அவர் கள் இயற்றினல், உடனே எவரும், அந்தச் சட்டங்களை எதிர்த்து நீதிமன்றம் செல்லமுடியும். சென்றால், நீதிமன் றம், சற்றும் தயக்கமின்றி, "நியாயமான சட்டமுறைப்படி ஆட்சி நடைபெறவேண்டும் என்று அரசியல் திட்டம் கூறு கிறது—இந்தச் சட்டமோ, மக்கள் உரிமைகளை மறுக்கும் காரணத்தால் அநியாயமான சட்டமாகிறது, ஆகவே இச் சட்டம் அரசியல் திட்டப்படி செல்லாது." என்று சிறந்த தீர்ப்பு வழங்கமுடியும். அத்தகு நிலையில், மெஜாரிடி கட்சி யினர், மக்கள் உரிமைகளை மறுக்கும் சிறு சட்டமும் செய்ய அஞ்சுவர். பேச்சுரிமை எழுத்துரிமைகளை எதிர்த்துத் தம் சுண்டுவிரலை உயர்த்தவும் நடுங்குவர். இந்த உரிமைகளை ஒடுக்கும் வகையான எத்தகைய சின்னஞ்சிறு பணி புரியவும் தயங்குவர். சொல்லவா வேண்டும்? அப் போது, உரிமை வாழ்வு உன்னத இடம் பெற்று ஒளிவீசித் திகழும்; சர்வாதிகார எண்ணம் படைத்தவர்களின் சல சலப்பும் சூழ்ச்சித் திட்டமும் சுக்குநூருகிச் சிதறி மடி யும்; ஜனநாயகத் தத்துவமோ வானில் உலவிடும் வெண்

ணிலா போல மக்கள் மன்றத்தில் ஈடு இணையற்ற விதத்தில் இன்பப் பவனிவரும்.

இந்த உண்மைகளை நன்கு உணர்ந்த காரணத்தால் தான், ஜனநாயக நாடுகளுக்கு அரசியல் திட்டம் வகுக்கும் பணியினை மேற்கொண்டவர்கள், ஒவ்வொரு நாட்டிலும்,

"நியாயமான சட்டமுறைப்படி தவிர வேறு எந்த முறையாலும் யாருடைய உயிரையோ உரிமையையோ பறிக்கக் கூடாது."

என்னும் முறையில் இந்த விதியை அமைத்திருக்கின்றனர்.

அமெரிக்க அரசியல் திட்டத்தில், பதினான்காம் திருத்தம் என்ற பகுதியில் இந்த வாசகம் காணப்படுகிறது. அதுபோலவே, அயர்லாந்து அரசியல் திட்டத்தில், 70-ஆம் விதி, இந்த முறையில் அமைந்திருக்கிறது. அவ்வண்ணமே, வேறு பல நாடுகளின் அரசியல் திட்டத்திலும் இந்த வகையான வாசகம் திட்டவட்டமான முறையில் பொறிக்கப்பட்டிருக்கிறது.

தொடக்கத்தில், இந்தியாவின் அரசியல் அமைப்பு மன்றமும், இந்த வகையான வாசகம்தான் இருக்க வேண்டும் என்று தீர்மானித்திருந்தது. ஆனால் எக்காரணத்தாலோ, பின்னர் "**நியாயமான சட்டமுறைப்படி**" என்னும் இந்த வாசகம் விலக்கப்பட்டு, இந்த வாசகத்திற்கு மாறாக, "**சட்டம் ஏற்படுத்தியுள்ள முறைப்படி**" என்னும் வாசகம் இணைக்கப்பட்டது.

"எக்காரணத்காலோ" என்று சொன்னோம்? தவறு அங்ஙனம் இயம்பியது! மக்களின் உரிமைக் குரலை ஒடுக்க வேண்டும் என்ற ஒரே காரணத்தை முன்னிட்டுத்தான் இந்த அருவருக்கத்தக்க மாறுதலை அளவற்ற விருப்பத்துடன் அவசர அவசரமாகச் செய்திருக்கின்றனர் அர

சியல் திட்டம் அமைத்த அந்த அற்புத சித்தர்கள். இது உண்மை! வெறும் புனைந்துரை இல்லை!

ஜப்பானிய நாட்டின் அரசியல் திட்டம் ஒன்றைத் தவிர வேறு எந்த நாட்டின் அரசியல் திட்டத்திலும், “சட்டம் ஏற்படுத்தியுள்ள முறைப்படி” என்னும் இந்த அவமானகரமான சொற்றொடர் காணப்படவில்லை. ஹிட்லர், முசோலினி ஆகிய சர்வாதிகாரக் கொடுங்கோலர்களுடன் இணைபிரியா நேசம் கொண்டிருந்ததும், தன் நாட்டு ஆட்சி முறையை ‘முழுக்க முழுக்க’ பாசிசப் பாதையிலேயே அமைத்துக்கொண்டிருந்ததும் ஆகிய ஜப்பான் நாட்டு அரசியல் திட்டம் ஒன்றிலேதான் இந்தச் சொற்றொடர் காணப்படுகிறது என்று சொன்ன அளவிலேயே இச் சொற்றொடரில் மறைந்திருக்கக்கூடிய கயமை ஏராளம் என்பதை எவரும் ஒப்புக்கொள்வர். குருடன் என்று சொன்னாலே போதாதா? அவனுக்குக் கண் பார்வை கிடையாது என்பதை வேறு தனியாக விளக்கிக்கொண்டா இருக்கவேண்டும்?

ஆனால் ஒன்று! ஜப்பான் நாட்டு அரசியல் திட்டத்திலேகூட இந்த விபரீத வாசகம் இந்த விசித்திர வடிவிலே பொறிக்கப்பட்டுள்ளதே தவிர, இந்த விதியைத் தொடர்ந்து வரும் வேறு மூன்று விதிகள், இந்த வாசகத்தில் நெளியும் கயமையையும் கொடுமையையும் எவ்வளவோ குறைத்துவிடுகின்றன.

அந்த நாட்டு அரசியல் திட்டத்தில், 31-வது விதியில், இந்த வாசகம் காணப்படுகிறது. ஆனால்,

“நீதி மன்றத்தில் சென்று வழக்காடும் உரிமையை எந்தக் குடி மகனிடமிருந்தும் பறிக்கக்கூடாது” என்று 32-வது விதியிலும்,

“கைது செய்யப்படுவதற்கான காரணத்தை உடனே கூறாமலும், வழக்கறிஞர் வைத்துக்கொள்வதற்கான உரிமையை உடனே வழங்காமலும் எந்தக் குடிமகனையும் கைது

செய்வதோ சிறையிலடைப்பதோ கூடாது. கைது செய்யப்பட்ட எந்தக் குடி மகனுவது நீதிமன்றத்திற்குச் சென்று, தான் கைது செய்யப்பட்டதன் காரணம் யாது என்று வினவினல், அவனுடைய வழக்கறிஞர் முன்னிலையிலும், வெளிப்படையாகவும் உடனே, தக்க காரணம் காட்டப்பட்டாகவேண்டும்.'' என்று 34-வது விதியிலும்,

''போதுமான தகுதிபடைத்த நீதி அலுவலரால், நியாயமாக இருக்கக்கூடிய காரணத்தை முன்னிட்டுப் பிறப்பிக்கப்பட்ட வாரண்ட் இல்லாமல், யாருடைய இல்லமோ, உடமைகளோ, தஸ்தாவேஜிகளோ எத்தகைய சோதனைக்கும் பறிமுதலுக்கும் உள்ளாக்கப்படக்கூடாது.'' என்று 35-வது விதியிலும்,

காணப்படுகிற வாசகங்கள் மூலமாக 31-வது விதியின் வாசகத்தில் உள்ள விபரீதம் மறைந்தே போய்விடுகிறது. ஆனல், இந்திய அரசியல் திட்டம் தீட்டிய திருவாளர்களோ ஜப்பான் நாட்டு 31-வது விதியை மட்டும் பறித்தெடுத்துத் தம்முடைய திட்டச் சுவடியில் இணைத்துக்கொண்டு, அதனைத் தொடர்ந்து காணப்படும் ஏனைய மூன்று விதிகளையும் துச்சமென ஒதுக்கிவிட்டார்கள். அதன் முடிவு? ஜப்பான் நாட்டைவிடக் கொடுமையும் எதேச்சாதிகாரத் தன்மையும் படைத்ததோர் அரசியல் திட்டம்!!

சட்டக்கலை வல்லுநர் சர் புரோஜேந்திரமித்தர், இந்திய அரசியல் திட்டத்தின் இந்த 21-வது விதியைப்பற்றிக் குறிப்பிடுகையில், ''இந்த விதி, கொடுங்கோல் சட்டங்களை எதிர்த்து நிற்பதற்குரிய சிறு பாதுகாப்பையும் அளிக்கவில்லை இந்திய மக்களுக்கு!'' என்று அளவற்ற மனவேதனையுடன் அறிவிக்கிறார்.

அதே நேரத்தில், **அறிஞர் பி. ஆர். தாஸ்**, ''கொடுங்கோல் சட்டங்களிடமிருந்து தப்புவதற்கு நமக்கு வழியே இல்லை. ஆட்சியாளரின் எதேச்சாதிகார நடவடிக்கைகளிலிருந்து மீளவும் நமக்கு மார்க்கமே இல்லை. வேண்டு

மென்றே, இந்திய அரசியல் திட்டம், சட்டத்தின் ஆட்சியைப் புறக்கணித்துவிட்டு சர்க்காரின் எதேச்சாதிகார ஆட்சியை நிலைநாட்டியிருக்கிறது. நான் கேட்கிறேன், இத்தகைய சுதந்தரத்தைப் பெறுவதற்குத்தானு, இந்திய தேசிய காங்கிரசும் இந்திய மக்களும் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தை எதிர்த்து, 1885:ஆம் ஆண்டு முதல் வீரப்போர் தொடுத்து நடத்தினர்கள்? இத்தகு விபரீத நிலை விளைவதற்குத்தானு காந்தியடிகள் காங்கிரசின் தலைமைப் பொறுப்பை ஏற்று அரும்புணி ஆற்றி வந்தார்?''

என்று கேட்டுவிட்டு, "இந்த 21-வது விதியில், சட்டம் ஏற்படுத்தியுள்ள முறைப்படி என்னும் வாசகத்தை நுழைத்ததன்மூலம் மக்களின் உயிரும் உரிமைகளும், ஆட்சியாளரின் தயவைப் பொறுத்து நிலைநிற்கக்கூடிய கேவல நிலைக்குத் தள்ளப்பட்டுவிட்டனவே! அந்தோ இது கொடுமை! கொடுமை!" என்று இரத்தக் கண்ணீர் வடிக்கிருர்.

அறிஞர் பி ஆர். தாஸ் மட்டுமா, உரிமை வேட்கையும் தூய உள்ளமும் படைத்த யாருமேதான் வேதனை வேதனை என்று கூறிக் கண்ணீர் சிந்திக் கலங்கி நிற்பர் இந்த 21-வது விதியைக் காணும்போது! அதிலும், எந்த இந்திய தேசிய காங்கிரஸ், முன்பு மக்கள் உரிமைகளை நிலைநாட்டுவதற்காக மாபெரும் போராட்டங்கள் பலவற்றை மாநிலமே வியக்கும் வண்ணம் நடத்திக் காட்டிற்ரே, அதே காங்கிரஸ், இன்று, 'மக்கள் உரிமைகளைக் குழிதோண்டிப் புதைக்கும் வீர வெட்டியானைக் காட்சி அளிக்கத் தொடங்கிவிட்டது என்ருல், யார்தான் இந்நிலைகண்டு உள்ளம் வெதும்பி சோக பிம்பங்களாக உருமாருதிருக்க முடியும்? உண்மை, உண்மை — மக்களாட்சிக் கோட்பாட்டிலே மகத்தான நம்பிக்கை படைத்த அனைவருடைய உள்ளத்தையும் ஆயிரம் ஈட்டிகளால் குத்திக் குடையும் ஈவு இரக்கமற்றதன்மை படைத்ததுதான் இந்த விதி! மறக்கமுடியாது இதை எவரும்! மறப்பவர் மாண்புள்ள குணம் உடையவரும் ஆகார்.

வேதனையூட்டும் இந்த விதியைக் கண்டு, வழியும் கண்ணீரை ஒரு கரத்தால் துடைத்துக்கொண்டு, மற்றொரு கரத்தால், அரசியல் திட்டச் சுவடியை ஏந்தி, அடுத்துக் காணப்படும் 22-வது விதியைப் படித்துப் பார்ப்போம்.

22-வது விதியைப் படித்ததும், 'அந்தோ!-ஏன் படித்தோம் இதனை' என்ற எண்ணம் ஏற்படுவது உறுதி. அந்த அளவுக்குக் கொடுமை மிகுந்தது இந்த 22.

19, 21—ஆகிய விதிகளில் ததும்பும் விஷமம் எங்கோ ஓடி ஒளிந்துவிடும் 22-ன் வருகையைக் கண்டதும்! 22, அவ்வளவு அபூர்வமான பண்பு படைத்தது! மக்கள் உரிமைகளை ஒழித்துக் கட்டும் பணியில் 22-க்கு இணை 22-ஏதான்!

"மாகாண ஆட்சியாளர்கள், யாரை வேண்டுமானாலும், எப்போது வேண்டுமானாலும், எந்த நிலையில் வேண்டுமானாலும், எத்தகைய வாரண்டும் இல்லாமல், எந்த நீதிமன்றத்தின் முன்னும் நிறுத்தாமல், தாராளமாகக் கைது செய்து தயவு தாட்சண்ணியமின்றிச் சிறையில் அடைத்துவிடலாம்."

"மூன்றுமாத காலம் வரையில் அவர்களை இது போல வெஞ்சிறையில் அடைத்துவைக்க மாகாண ஆட்சியாளர்கட்கு முழு உரிமை உண்டு."

"மூன்றுமாத காலத்திற்கு மேலும் அவர்களைச் சிறையில் வைத்திருக்க வேண்டுமானல், ஆட்சியாளர்களால் நியமிக்கப்படும் ஓர் ஆலோசனைக் குழு, [Advisory Board] அப்படி அவர்களைச் சிறையில் வைத்திருப்பதற்குப் போதுமான காரணங்கள் இருக்கின்றன என்று ஆட்சியாளருக்கு அறிவித்தால்தான் முடியும்."

"ஆலோசனைக் குழுவின் கருத்துரையை அடிப்படையாகக் கொண்டு மூன்று மாதத்திற்குமேல் எவ்வளவு காலம் வரையில், விசாரணையின்றி மக்க

ளைக் காவலில் வைத்திருக்க முடியும் என்பதையும், என்னென்ன சூழ்நிலைகள் இருக்கும்போது அந்த ஆலோசனைக் குழுவின் கருத்துரையைப் பெறுமலே கூட மூன்று மாதத்திற்குமேல் மக்களை விசாரணை யற்ற காவலில் வைத்திருக்க முடியும் என்பதையும், ஆலோசனைக் குழு தன் பணியை ஆற்றும்போது கையாளவேண்டிய நடைமுறைத் திட்டம் யாது என் பதையும் தீர்மானிக்கும் அதிகாரம் மத்திய சட்ட சபைக்கே உண்டு.''

"மாகாண ஆட்சியாளர்கள் யாரையேனும் விசா ரணை யின்றிக் காவலில் வைத்தால், அப்படி வைப் பவர்களுக்கு, எவ்வளவு விரைவாக முடியுமோ அவ் வளவு விரைவில், எவ்வெக்காரணங்களை முன்னிட்டு அவர்கள் அதுபோன்ற காவலில் வைக்கப்பட்டுள் ளார்கள் என்பதை அறிவிக்க வேண்டும்."

"அதுபோலவே, அக்காவல் உத்தரவைதிர்த்து மனுச் செய்துகொள்ளும் வாய்ப்பும் இயன்ற அளவு விரைவில் அவர்களுக்கு அளிக்கப்பட வேண்டும்.''

"முன் சொல்லப்பட்ட ஆலோசனைக் குழுவில் உறுப்பினர்களாக இருக்கக்கூடிய தகுதி, உயர்நீதி மன்ற நீதிபதிகளாக முன் இருந்தவர்கள்—இப்போது இருப்பவர்கள்—இனி இருக்கக்கூடியவர்கள் ஆகிய வர்கட்கே உண்டு.''

இவைதாம், 22-ம் விதியின் திரண்ட முடிவுகள். இந்த முடிவுகளில் புதைந்தும் ஒளிந்தும் ஒதுங்கியும் இருக்கும் கொடுமைமுழுவதையும் உணர, இவற்றைச் சற்று கூர்ந்து கவனித்துப் பார்ப்போம்.

விசாரணையின்றிக் காவலில் வைக்கப்படுவர்கட்கு அவர்கள் ஏன் அப்படி வைக்கப்படுகிறுர்கள் என்பதற்குரிய காரணங்களை, எவ்வளவு விரைவில் முடியுமோ அவ்வளவு விரைவில் அறிவித்துவிட வேண்டும் என்று இந்த விதி தெரி

விக்கிறது. எவ்வளவு விரைவில் முடியுமோ அவ்வளவு விரைவில் என்றால் என்ன பொருள்? ஒரு நாளா, ஒரு வாரமா, ஒரு மாதமா, ஓராண்டா எந்தக் கால அளவைக் குறிப்பிடுகிறது அந்தச் சொற்றொடர்? ஒரு வாரம் அல்லது பத்து நாட்களுக்குள் காரணங்கள் அறிவிக்கப்படவேண்டும் என்று திட்டவட்டமாக ஏன் குறிப்பிடப்படவில்லை? 250 பக்கங்களும், 22 பாகங்களும், எட்டு பிற்சேர்க்கைகளும், 395 விதிகளும் கொண்ட இந்த மாபெரும் அரசியல் திட்டச் சுவடியில், காரணம் காட்டுவதற்குரிய கால எல்லையைத் தெளிவாகக் குறிப்பதற்குத்தானா இடம் இல்லாமல் போய் விட்டது? 'எவ்வளவு விரைவில் முடியுமோ அவ்வளவு விரைவில்' என்னும் சொற்றொடர், "எவ்வளவு காலம் பொறுத்து முடியுமோ அவ்வளவு காலத்திற்குப் பிறகு" என்றும் பொருள் தரக்கூடிய மாயாவி மொழிதானே? உடனடியாகக் காரணம் காட்டாமல் இருப்பதற்காகக் கையாளப்பட்ட தந்திரமின்றி வேறென்ன இது?

இப்படியெல்லாம் காலம் தாழ்த்திக் காரணத்தைத் தெரிவிப்பது கூட பொதுநலத்திற்கு மாறானது என்று ஆட்சியாளர்களால் கருதப்பட்டால், அவர்கள் காரணம் காட்டவே தேவையில்லை என்று 52-வது விதியின் மற்றோரிடத்தில் காணப்படுகிறது. பொதுநலம் என்றால் என்ன பொருள்? அதை வரையறுப்பது யார்? நீதிமன்றமா? அல்ல! ஆட்சியாளர்கள்! ஆகவே, ஆட்சியாளர்கள், காரணம் காட்டுவது, தங்கள் நலனுக்கு உகந்தது என்று கருதுகிறபோது, காரணம் காட்டுவார்கள்—அப்போது, காரணம் காட்டுவதுதான் பொதுநலனுக்கு உகந்தது என்று வாதாடுவார்கள். அதுபோலவே, காரணம் காட்டாமல் இருப்பதுதான் தங்கள் நலனுக்கு ஏற்றது என்று எண்ணுகிறபோது, எடுத்துக்காட்டுவதற்கு என்று நியாயமான காரணமே இல்லாமல் இருக்கும்போது, தங்கள் ஆட்சியின் தவறுகளை இடித்துக்காட்டி வீரமுழக்கம் செய்துவந்தனர் என்ற ஒரு காரணத்திற்காகவே சிலர் கைதுசெய்யப்படுகிறபோது, மாற்றுக் கட்சியைச் சேர்ந்தவர்கள்—மகத்தான ஆற்றல்

படைத்தவர்கள்--மக்கள் மதிப்பைப் பெற்றவர்கள்--ஓயாது தங்கள் கட்சிக்காகப் பணிபுரிபவர்கள் இன்னோன்ன பிறரை அவர்கள் வெளியே இருப்பதால் அவர்களுடைய கட்சிகள் வளர்கின்றன—அப்படி வளர்வது ஆட்சிப் பீடத்தில் அமர்ந்துள்ள தங்களுக்கு ஆபத்து—ஆகவே அவர்களை யெல்லாம் சிறையிலடைத்து அவர்களுடைய இயக்கப் பணியை நிறுத்தவேண்டும் என்ற நச்சு நினைப் பின்மீது சிறைவைக்க முனைகிறபோது, சிறைவைக்கப்பட்ட தற்கான உண்மைக் காரணங்களை ஒளிக்காது உரைப்பின் உலகம் சிரிக்கும், ஊர் கை கொட்டிக் கேலி செய்யும் என்று எண்ணப்படுகிறபோது, அப்போதெல்லாம், ஆட்சி யாளர்கள், காரணம் காட்டாமல் இருந்து விடுவார்கள். அங்கிலேயில், காரணம் காட்டாமல் இருப்பதுதான் பொது நலனுக்கு உகந்தது என்று சட்டம்பேசி விடுவார்கள். பொதுநலன்' என்னும் சொல்லுக்குப் பொருள் கூற வேண்டியவர்களும் ஆட்சியாளர்கள். காவல் கைதிகள் சிறைவைக்கப்பட்டதற்கான காரணங்களை விளக்கிக் கூற வேண்டியவர்களும் ஆட்சியாளர்கள். ஆகவே, அவர்கள், 'பொது நலன்' என்னும் சொற்றொடரை, தங்கள் சொந்த 'நலனுக்கு ஏற்றவண்ணமெல்லாம் திரித்தும் பிரித்தும் கூட் டியும் குறைத்தும்தான் பொருள் கூறிவிடுவார்கள். எனவே காரணம் காட்டுவதும் காட்டாமல் இருப்பதும், ஆட்சி யாளரின் தனிப்பட்ட விருப்பத்தையும் தயவையும் பொறுத்த பிரச்சினையாகி விடுகிறது. அவர்கள் மனம் வைத்தால் காரணம் காட்டுவார்கள்! இல்லையேல், இல்லை!! அவ்வளவுதான்!!

எவ்வளவு விரைவில் முடியுமோ அவ்வளவு விரைவில்' காவல் கைதிகட்கு, அவர்கள் காவலில் வைக்கப்படுவதை எதிர்த்து மனுச்செய்து கொள்ளும் வாய்ப்பு அளிக்கப்பட வேண்டும் என்று 22-வது விதி கட்டளையிடுகிறது. ஆட் சேப மனுவைச் சமர்ப்பிப்பதற்கான வாய்ப்பு அளிக்கப் படுவது மகிழ்ச்சிக்குரிய செய்திதான். ஆனால், ஆட்சேப மனுவை யாரிடம் சமர்ப்பிக்க வேண்டுமாம் தெரியுமோ?

ஆட்சியாளரிடம்! அதாவது, யாருடைய செயலை எதிர்த்து மனுச் செய்யப்படுகிறதோ அவர்களே அந்த மனுவை விசாரிக்கும் நீதிபதிகளாக ஆகிறார்கள்! பிரதிவாதியே நீதிபதியாகவும் இருக்கிறார்—இந்நிலையில் வாதிக்கு நீதி கிடைக்கும் என்று யவர்தான் துணிந்து கூறமுடியும்?

மூன்று மாதங்களுக்குமேல் ஒருவர் விசாரணையின்றிக் காவலில் வைக்கப்படவேண்டுமானால், அப்படி வைக்கப்படுவதற்குத் தேவையான காரணங்கள் இருக்கின்றன என்று, அந்த மூன்று மாத காலம் முடிவதற்குள் ஆலோசனைக் குழு தெரிவித்தாக வேண்டும் என்பதாக 52-வது விதியின் மற்றோர் பகுதி தெரிவிக்கிறது. காவலில் வைப்பதற்குப் போதுமான காரணங்கள் இல்லை என்று ஆலோசனைக் குழு அறிவித்துவிட்டால், காவல் கைதிகளை ஆட்சியாளர்கள் விடுதலை செய்து விடுவார்களா? சொல்வதற்கில்லை! ஆலோசனைக் குழுவின் அனுமதியின்றிகூட சிறை வைப்பதற்கான அதிகாரம், டில்லி சட்டசபை நிறைவேற்றக்கூடிய வேறோர் சட்டத்தின்படி அவர்களுக்குக் கிடைக்கிறது—ஆகவே, அந்த அதிகாரத்தைக் கொண்டு ஆட்சியாளர்கள், ஆலோசனைக் குழுவின் ஆய்வுரைக்கு மாறாகவும் காவல் கைதிகளைச் சிறையில் வைத்திருக்க முடியும்.

ஆலோசனைக் குழுவினர், ஒரு காவல் கைதி சிறை வைக்கப்பட்டுள்ளது முறைதானா என்பதை ஆலோசித்துக் கொண்டிருக்கையில், அந்தப் பணிக்குத் தேவையான எல்லா தஸ்தாவேஜிகளும் அவர்களிடம் தரப்படுமா? உறுதி கூற முடியாது. எந்த நேரத்திலும், எந்த தஸ்தாவேஜியையும், 'பொது நலத்திற்கு மாறானது' என்னும் காரணத்தைக் காட்டி, ஆலோசனைக் குழுவினரிடம் தராமல் முடக்கி வைத்துக்கொள்ள முடியும் ஆட்சியாளர்களால்! காவல் கைதியைப்பற்றிய பல உண்மைகள் மறைக்கப்படுகிற அந்நிலையில் ஆலோசனைக் குழு எந்தக் கருத்தைத் தெரிவித்தால்தான் என்ன—அந்தக் கருத்து நியாயமானது என்று எவரும் கூறமுடியாது.

ஆலோசனைக் குழுவில் யார்யார் இருப்பார்கள் என்பதை அறிவிக்கும்போது, உயர்நீதிமன்ற நீதிபதிகளாக இருந்தவர்கள்—இருப்பவர்கள்—இனி இருக்கக்கூடியவர்கள் ஆகியவர்கள் இருப்பர் என்று தெரிவிக்கப்படுகிறது. இனி நீதிபதிகளாக ஆகக்கூடியவர்கள் என்ற சொற்றொடர் எந்த வழக்கறிஞருக்கும் பொருந்துமாதலால், ஆளும் கட்சியினர், தங்கள் கட்சி வழக்கறிஞர்களை மட்டுமே ஆலோசனைக் குழுவின் உறுப்பினர்களாக நியமிக்கக்கூடும். அங்ஙனம் நியமிக்கப்பட்டால், அப்படி நியமிக்கப்பட்டவர்கள், தங்களால் விசாரிக்கப்படும் காவல் கைதிகள் மாற்றுக்கட்சியினராக இருக்கும்போது, கட்சி வேறுபாடு காரணமாக நீதிநெறிதவறி கருத்துரை வழங்கக் கூடும். அப்படி வழங்கினால், அதனைத் தடுப்பதற்கு இந்த 22-வது விதியில் எத்தகைய தடுப்பு முறையும் வகுக்கப்படவில்லை.

இவ்வண்ணமெல்லாம் 22-வது விதியின் வாசகங்களை சற்று அலசி ஆராய்ந்து பார்க்கும்போது, அந்த வாசகங்களில் பற்பல வார்த்தை ஜாலங்கள் செய்யப்பட்டிருந்தாலும், அந்த வார்த்தை ஜாலங்களையெல்லாம் தாண்டி கம்பீரமாக வீற்றிருக்கும் அதன் உண்மைப் பொருள் யாது என்பது வெள்ளிடைமலையென விளங்காமற் போகாது.

"மத்திய சட்டசபையிலும் மாகாண சட்டசபையிலும் ஓரே கட்சியினர் மெஜாரிடி பலம் பெற்றுவிட்டால், அவர்கள், தேவையானபடி சட்டங்களை நிறைவேற்றி வைத்துக்கொண்டு, யாரை வேண்டுமானாலும், எப்போது வேண்டுமானாலும், எந்த நிலையில் வேண்டுமானாலும், எவ்வளவு காலத்திற்கு வேண்டுமானாலும், எத்தகைய காரணமும் இல்லாமல், எந்த நீதிமன்றத்தின் முன்னும் நிறுத்தி விசாரித்துத் தீர்ப்புப் பெறாமல், தாராளமாகச் சிறையில் வைத்திருக்க முடியும். இந்த நடைமுறையை எதிர்க்கவோ மாற்றவோ அரசியல் திட்டப்படி எவருக்கும் எத்தகைய உரிமையும் கிடையாது.'

இதுதான் 22-ம் விதியின் உண்மைப் பொருள்! இதனை இவ்வண்ணமே வெளிப்படையாக விளம்பினால் வெறுப்பும் எதிர்ப்பும் நாட்டில் அதிகமாகும் என்றெண்ணியே திட்டம் தீட்டிய திருக்கரங்கள், பற்பல சொற்களை அப்படியும் இப்படியும் உருட்டி, ஏதேதோ செப்பிடு வித்தைகளைச் செய்து, வேறு எப்படி எப்படியோ வார்த்தைகளைக் கோத்து, 22-ம் விதியை உருவாக்கியிருக்கின்றன. உண்மை—அதை எப்படி ஒளித்துவைத்தால் என்ன—அது மறைந்தா போகும்?

"விசாரணையின்றி மக்களைச் சிறையில் தள்ளுவது அறக்கொடிய செயலாயிற்றே! மனித இனத்தின் தன்மானத்திற்கே இழுக்குத்தேடும் பழிமிகு பணியாயிற்றே! புரியலாமா இதனை?" என்று கேட்டால், சிலர் தங்களை அறிவின் சிகரங்கள் என்று எண்ணிக்கொண்டு, "இப்போது இந்தியா கம்யூனிஸ்ட் அபாயத்தில் அல்லவா சிக்கிக்கொண்டிருக்கிறது? இத்தகு நெருக்கடி வேளையில் தர்மநியாயம் பேசிக்கொண்டிருந்தால் ஆகுமா? ஆபத்துக்குப் பாபம் ஏது?" என்று விடைகூறுவர். ஆனால் அவர்கள் உணரவேண்டும், இந்த விதி நெருக்கடி காலங்களுக்கு மட்டும்தான் என்று அரசியல் திட்டத்தில் எங்குமே குறிப்பிடப்படவில்லை உண்மையில் இந்த விதி சாதாரண காலங்களுக்காகவேதான் வகுக்கப்பட்டிருக்கிறது. நெருக்கடி காலங்களுக்கென்று வேறு விதிகள் தனியாகப் பொறிக்கப்பட்டிருக்கின்றன.

ஆயிரம் வாதங்களை எழுப்பியும் பயனில்லை—இந்த 22-வது விதி இந்திய அரசியல் திட்டத்தின் அவமானச் சின்னம் என்பதை எவரும் ஒப்புக்கொண்டே தீரவேண்டும். லாகூர் உயர் நீதிமன்ற முன்னாள் நீதிபதி பக்ஷி தேக் சந்த் அவர்களின் வார்த்தைகளிற் கூறுவதானால், அமைதியான காலத்தில் மக்களை விசாரணையின்றிக் காவலில் வைக்கும் அதிகாரத்தை ஆட்சியாளருக்கு அளிக்கும் அரசியல் திட்டம் உலகில் வேறு எந்த நாட்டிலுமே இதுவரை நிறைவேற்

றப்பட்டது கிடையாது. பாசிச நாடாகிய ஜப்பானின் அரசியல் திட்டத்திலேகூட இத்தகு விதி ஏதும் அமைக்கப்படவில்லை. உலகிலே உள்ள எந்த ஜனநாயக நாட்டிற்குச் சென்றாலும், இந்தியர்கள் இந்த விதியை மனதில் நிறுத்திப் பார்க்கும்போது, வெட்கத்தால் தலையைத் தாழ்த்திக் கொள்ளத்தான் வேண்டும்! இவ்விதி அவ்வளவு வேதனை தரக்கூடிய ஒரு பொருள்!

மக்களின் உரிமைகளை முற்றிலும் புறக்கணிக்கும் முறையில் அமைந்துள்ள 19—21—22 ஆகிய இவ்விதிகளையும், இன்னும் இவைபோன்ற வேறு பல விதிகளையும் வரிசையாக நிறுத்திவைத்து, இவற்றின் தொகுப்புக்கு, அடிப்படை உரிமை அத்தியாயம் என்னும் பெயரைச் சூட்டியிருக்கிறார்கள் அரசியல் திட்டம் அமைத்த அறிஞர்கள். நாம் விளக்கிக்கூறத் தேவையில்லை, அந்த அத்தியாயத்திற்கு அந்தப் பெயர் பொருந்தாது. அந்த அத்தியாயத்திற்குப் பொருத்தமான பெயர்—நியாயமாக அதற்குச் சூட்டப்படவேண்டியபெயர்—சிறந்த பெயர் "அடக்குமுறை அத்தியாயம்" என்பதுதான்! ஆம்! அந்தப் பெயர்தான் அந்த அத்தியாயத்தின் உண்மைத் தன்மையை உள்ளது உள்ளபடி எடுத்துக்காட்டும் தன்மைபடைத்த சொற்றொடர் ஆகும்.

6. பேர்லின் பாதை

சட்டசபையில் பெரும்பாலான இடங்களைக் கைப்பற்றும் ஒரு கட்சி, ஆட்சிப் பீடத்தில் அமர்வதால் மட்டும் ஜனநாயக ஆட்சி ஏற்பட்டு விட்டதாக ஆகாது என்பதும், அந்தப் பெரும்பான்மைக் கட்சி, குடிமக்களின் பேச்சுரிமை—எழுத்துரிமை—சங்கம் அமைக்கும் உரிமை முதலாகிய அடிப்படை உரிமைகளுக்குக் கேடு சூழா வண்ணம் ஆளும்போதுதான் உண்மை ஜனநாயக ஆட்சி நிலவும் என்பதும், அத்தகைய உண்மை ஜனநாயக ஆட்சிக்கு வழி கோலுவதுதான் சிறந்ததோர் அரசியல் திட்டத்தின் முதற் பெருங் கடமை என்பதும், புதிய இந்திய அரசியல் திட்டம் அந்தக் கடமையை ஆற்றத் தவறிவிட்டது என்பதும், அப்படித் தவறிவிட்ட காரணத்தால், அந்த அரசியல் திட்டத்தில் உள்ள "அடிப்படை உரிமைகள்" என்னும் அத்தியாயம் வெறும் அடக்குமுறை அத்தியாயமாகவே காட்சி தருகிறது என்பதும் சென்ற அத்தியாயத்தில் தெளிவாக விளக்கப்பட்டன.

இந்த அத்தியாயத்தில், இந்தியக் குடியரசின் தலைமை அதிகாரம் யாரிடத்தில் ஒப்படைக்கப் பட்டிருக்கிறது என்பதையும், அவர் தேர்ந்தெடுக்கப்படும் முறை எத்தகையது என்பதையும், அவருக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரங்களின் எல்லை எது என்பதையும், அவர் தேர்ந்தெடுக்கப்படும் முறை—அவருக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரங்கள் ஆகிய இவற்றால் ஜனநாயகக் கோட்பாட்டிற்கு நன்மை விளையுமா அல்லது தீமை நேருமா என்பதையும் சிறிது ஆராய்ந்து பார்ப்போம்.

புதிய அரசியல் திட்டத்தின்படி, இந்தியக் குடியரசின் தலைமை அதிகாரம், குடியரசுத் தலைவரிடம் ஒப்படைக்கப் பட்டிருக்கிறது.

அவர் தான் குடியரசின் அடையாளச் சின்னம்.
அவர்தான் குடியரசின் அதிகாரங்களின் உறைவிடம்.

அவர்தான் குடியரசின் தனிப்பெருந் தலைவர். அவருடைய அதிகாரம்தான், குடியரசில் உள்ள மற்ற எல்லாருடைய அதிகாரங்களையும்விட உயர்வானது.

குடியரசின் ஆட்சி, அவர் பெயரால்தான் நடத்தப்படும். குடியரசின் தூதுவர்கள் அவர் பெயரால்தான் நியமிக்கப்படுவர். குடியரசின் அதிகாரங்கள் அவர் பெயரால்தான் செலுத்தப்படும்.

இவ்வளவு அதிகாரங்கள் படைத்த குடியரசுத் தலைவர், குடிமக்களிடமிருந்து நேரடியாகத் தேர்ந்தெடுக்கப்படுவதுதான் முறை. அவர், நாட்டிலே உள்ள வயதுவந்த குடிமக்கள் அனைவரும் கலந்து கொள்ளக்கூடிய தேர்தலில் வெற்றிபெற்று தலைவர் பீடத்தில் அமர்வதுதான் நியாயம். அமெரிக்காவில் குடியரசுத் தலைவர் அப்படித்தான் தேர்ந்தெடுக்கப்படுகிறார். குடியரசின் தனிப்பெருந் தலைவராக இருக்கவேண்டிய ஒருவர், குடிமக்கள் அனைவரும் பங்கெடுத்துக் கொள்ளும் நேரடித் தேர்தல் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்டால்தான் தலைவருக்கும் மதிப்பு; மக்களுக்கும் கௌரவம். அப்பொழுதுதான், மக்களாட்சிக் கோட்பாட்டிற்கும் மகத்தான மதிப்பு அளிக்கப்பட்டதாக ஆகும். அத்தகு நிலைமை இருந்தால்தான், மக்கள், தலைவரைப்பற்றி எண்ணுகிற போதெல்லாம் பூரிப்பும் பெருமையும் அடைவர். அத்தன்மைத்தாய சூழ்நிலை இருக்கும் போதுதான், நாட்டிலே உள்ள ஒவ்வொருவரும், தலைவரைப்பற்றிக் குறிப்பிடும்போது, "இவர் எங்கள் தலைவர்—எங்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவர்—எங்களுடைய வாக்குரிமைகளைப் பெற்றுவந்த தலைவர்—இவரைத் தேர்ந்தெடுத்த உரிமை எங்கள் ஒவ்வொருவருக்கும் உண்டு" என்று மட்டற்ற மகிழ்ச்சியுடன், உணர்ச்சியுடன், உற்சாகத்துடன் குறிப்பிடுவர்.

ஆனால் நமது அரசியல் திட்டம், அத்தகு மகிழ்ச்சி பெறுவதற்கான வாய்ப்பை நம் மக்களுக்கு அளிக்கத் தவறிவிட்டது. இந்திய அரசியல் திட்டத்தின்படி, தலைவர்,

மக்களால் தேர்ந்தெடுக்கப்பட மாட்டார். தலைவர் தேர்தலுக்கென்று, தனியாக, மக்கள் அனைவரும் கலந்துகொள்ளக்கூடிய, நாடு முழுவதும் நடைபெறவேண்டிய தேர்தல் நடைபெறாது. ஒவ்வொரு மாகாணத்திலும் உள்ள கீழ் சபை, டில்லியில் உள்ள மத்திய ஆட்சியின் மேல் சபை—கீழ் சபைகள் ஆகிய இம் மூன்று அவைகளின் உறுப்பினர்களுக்கு மட்டுமே தலைவரைத் தேர்ந்தெடுக்கும் உரிமை உண்டு. மக்களுக்கு அந்த உரிமை கிடையாது. இந்த மூன்று அவைகளின் மொத்த உறுப்பினர்களில் பெரும்பாலோருடைய விருப்பம் எவர் மீது படிகிறதோ அவர்தான் குடியரசுத் தலைவர் என்னும் உயரிய நிலையை அடைவார். ஆம்! ஏறத்தாழ முப்பத்து முக்கோடி மக்கள் நெருங்கி வாழும் இத் துணைக் கண்டத்தில், தலைவர் தேர்தலில் கலந்து கொள்ளும் வாய்ப்பு—அந்த வாய்ப்பினைப் பெற்றதால் ஏற்படும் நியாயமான களிப்பு—அந்தக் களிப்புணர்ச்சியுடன் கலந்து தோன்றும் பெருமை—அந்தப் பெருமித உணர்வுடன் இணைந்து பிறக்கும் பொறுப்புணர்ச்சி ஆகிய இத்தனையும், கைப்பிடி அளவுள்ள ஒரு சில பிரதிநிதிகளுக்கு மட்டுமே, தனி உடைமை ஆக்கப்பட்டிருக்கிறது மக்களின் பொதுவுடைமை ஆக்கப்படவில்லை. நாட்டு மக்களின் இதய வீணையைத்தட்டி எழுப்பும் இன்ப நாதமாக இராது தலைவர் தேர்தல். யாரோ சிலரின் மூளைக்கு மட்டும் வேலை வைக்கும் சின்னஞ் சிறு நிகழ்ச்சியாகத்தான் இருந்துவிடும். இந்தியத் துணைக் கண்டத்தின் வடகோடியிலிருந்து தென் கோடிவரை, எங்கும், எங்கெங்கும் உணர்ச்சியை எழுச்சியை உள்ளக் கிளர்ச்சியை ஊட்டும் உன்னத சம்பவமாக இராது தலைவரைத் தேர்ந்தெடுக்கும் வாய்ப்பு. எங்கோ மூலை முடுக்குகளில் உள்ள சட்டசபைக் கட்டிடங்களின் வெல்வெட் நாற்காலிகளை மட்டும் சிறிதே அசைத்து அடக்கிவிடும் உணர்ச்சியற்ற சடங்காகவே அமைந்து விடும்.

"சட்டசபைகளின் உறுப்பினர்கள் மக்களால் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்—குடியரசுத் தலைவர் அந்த உறுப்

பினர்களால் தேர்ந்தெடுக்கப்படுகின்றார்—எனவே இந்த முறை ஜனநாயக முறைதானே—இதிலே தவறு எங்கே இருக்கிறது?'' என்று சிலர் கேள்விப் பாணம் பூட்டக் கூடும். ஆனால் இந்தக் கேள்வி அறிவுக்குப் பொருந்தாது. மக்கள் தமதம் தொகுதிகளில், தத்தமக்குப் பிடித்தமான வர்களை, தம் தம் பிரதிநிதிகளாக சட்டசபைக்கு அனுப்பு கின்றனர். எனவே, மக்கள், அந்தப் பிரதிநிதிகளை மனமார விரும்புகின்றனர் என்பது மறுக்கமுடியாத உண்மை. ஆனால், மக்கள், அந்தப் பிரதிநிதிகளை விரும்புவதாலேயே அந்தப் பிரதிநிதிகளால் தேர்ந்தெடுக்கப்படும் தலைவரையும் விரும்பியே தீருவார்கள் என்று எப்படிக் கூறமுடியும்? அப்படிக் கூறுவதற்கு எங்கே, என்ன காரணம் இருக்கிறது? சில சமயங்களில், மக்கட் பிரதிநிதிகள், ஒரு குறிப்பிட்ட மனிதரைத் தலைவராக்க எண்ணக்கூடும். ஆனால், அதே நேரத்தில், மக்களின் விருப்பம், வேறொருவர் மீது பதிந்திருக்கக்கூடும். இப்படி ஒரு நிலைமை ஏற்படமுடியாது என்று யார் எப்படி உறுதி கூறமுடியும்? எனவே, அரசியல் திட்டம் வகுத்துள்ள முறைப்படி நடைபெறும் தேர்தலில் மக்கள் மனக் கருத்துக்கு நேர்மாறானவர்கள் தலைவராக வந்தால் அதிலே வியப்படைவதற்கு ஒன்றுமில்லை.

தலைவர் தேர்தலிலேயே, ஜனநாயகம், இந்த அளவுக்குக் கத்தரிக்கப்பட்டுவிட்டதே, இனி தலைவருக்கு அளிக்கப்பட்டுள்ள உரிமைகளை அலசிப் பார்க்கும்போது, மக்களாட்சித் தத்துவத்திற்கு வெட்டப்பட்டுள்ள எத்தனைப் பெரும் பள்ளங்களைக் காணவேண்டி இருக்குமோ என்னும் ஐய உணர்ச்சியும், அதன் காரணமாக, ''மூடிவைத்து விடுவோம் அரசியல் திட்டச் சுவடியை—இனியும் காணப் படக்கூடிய இத்தகு பகுதிகளைப் படித்துவிட்டு வீணாக உள்ளத்தை வேதனைக் கூடமாக்கிக் கொள்வானேன்?'' என்னும் வெறுப்புணர்ச்சியும் ஜனநாயக உள்ளம் படைத்த ஒவ்வொருவருக்கும் ஏற்படத்தான் செய்யும்.

என்றாலும், நம் உள்ளத்தைக் குடையும் அவ்வெறுப் புணர்ச்சியையும் ஐய உணர்வையும் சற்றே கையமர்த்தி விட்டு, அரசியல் திட்டத்தில் தலைவருக்கென்று தனியாக ஒதுக்கப்பட்டுள்ள உரிமைகளின் தன்மையை ஒரு சிறிது நோக்குவோம. வேதனை தரக்கூடிய திட்டம்தான் என்றாலும், திட்டத்தின் முழு உருவமும் நமக்குத் தெரிந்திருக்க வேண்டுமல்லவா? அப்படித் தெரிந்திருந்தால்தானே, திட்டத்தை எதிர்த்துப் பணிபுரிவதும் திட்டத்தை மாற்றி அமைத்து மறுகோலம் செய்வதற்கான வழிவகைகளை வகுப்பதும் எளிதாகும்?

புதிய அரசியல் திட்டப்படி தலைவருக்கு அளிக்கப்பட்டுள்ள உரிமைகள் இரண்டு வகைப்படும். எல்லாக் காலங்களிலும் பயன்படுத்துவதற்காகவென்று அவருக்கு அளிக்கப்பட்டுள்ள உரிமைகள் ஒருவகை. நெருக்கடிக் காலங்களில் மட்டும் கையாள்வதற்காகவென்று அவருக்குத் தரப்பட்டுள்ள உரிமைகள் மற்றோர் வகை.

தலைவருக்கு அளிக்கப்பட்டுள்ள இந்த இருவகை உரிமைகளில் நெருக்கடிக் கால உரிமைகளை மட்டும் இங்கே எடுத்துவைத்து அலசி ஆராய்ந்து பார்போம்.

நெருக்கடிக் கால உரிமைகள்

இந்தியத் துணைக் கண்டம் முழுமையிலுமோ அல்லது அதன் சிலபல பகுதிகளில் மட்டுமோ, எதிர்காலத்தில், மூன்றுவகை நெருக்கடிகள் ஏற்படக்கூடும் என்று இந்திய அரசியல் திட்டம் கருதுகிறது.

அவையாவன: 1. பாதுகாப்பு பற்றிய நெருக்கடி. 2. பணநிலை பற்றிய நெருக்கடி. 3. அரசியல் அமைப்பு பற்றிய நெருக்கடி.

இவ்வண்ணம் நாட்டில் ஏற்படக்கூடிய நெருக்கடிகள் மூன்று வகையினவாக அமைந்திருக்கும் காரணத்தால்,

இப்படியாகவே, தலைவருக்கு அளிக்கப்பட்டுள்ள நெருக்கடிக் கால உரிமைகளும் மூன்று தொகுதிகளாக வகுக்கப்பட்டுள்ளன.

அம் மூன்று தொகுதிகளில், முதல் தொகுதியை, "பாதுகாப்பு பற்றிய நெருக்கடி ஏற்பட்ட காலத்தில் கையாளக்கூடிய உரிமைகள்" என்னும் தலைப்பின்கீழும், இரண்டாவது தொகுதியை, "பணநிலை பற்றிய நெருக்கடி ஏற்பட்ட காலத்தில் கையாளக்கூடிய உரிமைகள்" என்னும் தலைப்பின்கீழும், மூன்றாவது தொகுதியை, "அரசியல் அமைப்பு பற்றிய நெருக்கடி ஏற்பட்ட காலத்தில் கையாளக்கூடிய உரிமைகள்" என்னும் தலைப்பின்கீழும், குறித்துவைத்துக் கொள்வது நல்லது.

இப்போது, மேற்குறிப்பிட்ட மூன்று தொகுதிகளையும் ஒவ்வொன்றாக ஜனநாயகத் தராசில் வைத்து எடைபோட்டுப் பார்ப்போம். அப்படிப் பார்த்தால், அந்தத் தொகுதிகளில் உறைந்துகிடக்கும் ஜனநாயகத்தின் அளவு மட்டுமல்ல, அரசியல் திட்டத்தை வகுத்த அதிகார வர்க்கத்தாரின் உள்ளத்தில் அமைந்துகிடக்கும் ஜனநாயகத்தின் அளவும் நமக்குத் தெரிந்துவிடும்.

இதோ அரசியல் திட்டச் சுவடியின் 171-ம் பக்கம். இந்தப் பக்கத்திலேயும், இதைத் தொடர்ந்து காணப்படும் ஆறு பக்கங்களிலேயும்தான் குடியரசுத் தலைவரின் நெருக்கடிக் கால உரிமைகள் யாவும் நிரல்நிரலே பொறித்து வைக்கப்பட்டிருக்கின்றன.

சரி. நல்லது. "பாதுகாப்பு பற்றிய நெருக்கடி ஏற்பட்ட காலத்தில் தலைவர் கையாளக்கூடிய உரிமைகள்" என்னும் தலைப்பின்கீழ் நாம் குறித்து வைத்துள்ள பகுதியை முதலில் ஆராய்வோம்.

பாதுகாப்பு பற்றிய நெருக்கடி ஏற்பட்ட காலத்தில் தலைவர் கையாளக்கூடிய உரிமைகள்

பாதுகாப்பு பற்றிய நெருக்கடி என்றால் என்ன? அத்தகு நெருக்கடி ஏற்பட்டபோது தலைவர் கையாளக் கூடிய உரிமைகள் யாவை?

இந்தக் கேள்விகளுக்குத்தானே நமக்கு விடை கிடைக்கவேண்டும்?

இதோ, அரசியல் திட்டச் சுவடி! படித்துப் பார்ப்போம்!

> "போர் அல்லது வெளிநாட்டுப் படை யெடுப்பு அல்லது உள்நாட்டுக் குழப்பத்தால் இந்தியா முழுமைக்குமோ, அல்லது அதன் ஏதாவது ஒரு பகுதிக்கோ ஆபத்து ஏற்பட்டுவிட்டது என்று தலைவர் எண்ணினால், உடனே, அவர், அத்தகைய ஆபத்து ஏற்பட்டுவிட்டது என்று ஓர் அறிக்கையை வெளியிடலாம். இந்த அறிக்கைக்குத்தான் பாதுகாப்பு பற்றிய நெருக்கடி அறிக்கை என்று பெயர்."

இது, இந்தப் பகுதியில் காணப்படும் முதல் வாசகம். இந்த வாசகத்தைப் பார்க்கும் போதே சர்வாதிகாரச் சாயல் அல்லவா இதில் தென்படுகிறது! போர் அல்லது வெளிநாட்டுப் படைபெடுப்பு அல்லது உள்நாட்டுக் குழப்பம் இருக்கிறது என்று தலைவர் எண்ணினாலே போதும், நெருக்கடி அறிக்கையை அவர் பிறப்பித்துவிடலாம் என்று காணப்படுகிறதே, அப்படியானால், அத்தகு நிலைமை உண்மையில் இல்லாவிட்டாலும், ஏதேனும் ஒரு தவறான உள் எண்ணத்தை வைத்துக்கொண்டு, தலைவர், நெருக்கடியைப் பிறப்பித்தாலும், அது சரி என்றல்லவா ஆகிறது? இல்லாத நெருக்கடியை, இருப்பதாக எண்ணிக் கொண்டு, வேண்டாத அறிக்கையைத் தேவை இல்லாத

சோத்தில், விபரீதமாக வெளியிடும் விசித்திரமான உரிமையைக் குடியரசுத் தலைவருக்குக் குதூகலத்துடன் தருகிறதே இந்த விதி—இது, தேவைதானா? தலைவருடைய எதேச்சாதிகார மனப்போக்கை வளர்ப்பதற்குப் பயன்படுமே தவிர இந்த விதி, மக்கள் மன்றத்தின் ஜனநாயக உரிமைகளைப் போற்றிப் பாதுகாக்க ஒருபோதும் பயன்படாதே! பயன்படாது என்றால் இந்த விதி எதற்காக இங்கே நுழைக்கப்பட்டது?

இன்னொரு பிரச்சினை! போர் அல்லது வெளிநாட்டுப் படையெடுப்பு இருக்கும்போது நெருக்கடி அறிக்கையை வெளியிடுவது நியாயமான செயலாக இருக்கக் கூடும். ஆனால், உள்நாட்டுக் குழப்பம் இருக்கும்போது கூட, அப்படி இல்லாவிட்டாலும் இருப்பதாகத் தலைவர் எண்ணினால் கூட, நெருக்கடி அறிக்கை பிறப்பிக்கலாம் என்று உள்ள பகுதிக்கு என்ன அவசியம்? உள்நாட்டுக் குழப்பம் என்றால் என்ன பொருள்? ஆளும் கட்சிக்கு மாறான கட்சியினர், சட்ட வரம்புக்கு உட்பட்ட முறையில், ஆட்சியாளரின் தகாச் செயலை எதிர்த்து, நாட்டின் எதேனும் ஒரு பகுதியில், அமைதியான கிளர்ச்சியை வேகமாக நடத்தினால் கூட, அந்தக் கிளர்ச்சி, உள்நாட்டுக் குழப்பத்திற்கு வித்தூன்றுகிறது என்னும் போலிக் காரணத்தைக் காட்டி, அக் கிளர்ச்சி பரவியுள்ள வட்டாரத்தில் நெருக்கடி அறிக்கையை வெளியிடும் உரிமையைத் தலைவருக்கு அளிக்கும் வகையில் அல்லவா அமைந்திருக்கிறது இந்த வாசகம்? இதனால், மக்கள் உரிமைப் பயிர் சிதையவும் அழியவும் கருகவும் நாசமாகவும் அல்லவா வழி ஏற்பட்டுவிடும்?

இருக்கட்டும். அடுத்த வாசகத்தைப் பார்ப்போம்.

> "போர் அல்லது வெளிநாட்டுப் படையெடுப்பு அல்லது உள்நாட்டுக் குழப்பம் உண்மையாகவே நாட்டில் உருவாகிய பிறகுதான் நெருக்கடி அறிக்கையைப் பிறப்பிக்கவேண்டும் என்னும் கட்டாயமில்லை. அப்படிப்பட்ட சூழ்நிலை

இனிமேல் உருவாகக்கூடும் என்று தலைவர் எண்ணி னல்கூட, முன்னதாகவே, அவர், நெருக்கடி அறிக்கையைப் பிறப்பிக்கும் உரிமையைப் பெற்றிருக்கிறார்."

முதல் வாசகத்தால் மக்கள் உரிமைக்கு ஏற்பட்ட ஆபத்து இந்த வாசகத்தால் இரண்டு மடங்காகவல்லவா வளர்கிறது! சரி. அடுத்த வாசகம் என்ன கூறுகிறது?

"தலைவர், நெருக்கடி அறிக்கையைப் பிறப்பித்தபின்னர், டில்லி பாராளு மன்றத்தின் இரண்டு சபைகளிலும், அந்த அறிக்கையை ஆலோசனைக்கு வைக்கவேண்டும்.

"அந்த ஆலோசனையின் முடிவாக, இரு சபைகளும், அந்த நெருக்கடி அறிக்கையை ஒப்புக்கொள்ள மறுத்துவிட்டால், இரண்டு மாத காலத்திற்குமேல் அந்த அறிக்கைக்கு வாழ்வு கிடையாது."

படிக்கப் படிக்க, விபரீதம், கூடுதலாக அல்லவா ஆகிறது?

பாதுகாப்பு பற்றிய நெருக்கடி அறிக்கையைப் பிறப்பிக்கும் உரிமை எந்தத் தனி மனிதரிடமும் இருக்கக் கூடாது—பொதுமக்களின் பிரதிநிதிகளைத் தன்னகத்தே கொண்டுள்ள பாராளுமன்றத்திடம்தான் இருக்கவேண்டும்—அதுதான் முறை—அதுதான் நியாயம் என்று நாம் கருதுகிறோம். ஆனால், அரசியல் திட்டம், அந்த உரிமையை, மக்கள் மன்றமாகிய பாராளுமன்றத்திடம் அல்ல, ஒரு தனி மனிதராகிய குடியரசுத் தலைவரிடம் தருகிறது. "அப்படித் தருவதே தவறு—என்றாலும் எப்படியோ தரப்பட்டுவிட்டது—எனவே, தலைவர், நெருக்கடி அறிக்கையை வெளியிடுவதற்கு முன்னால் பாராளு மன்றத்தைச் சிறிது கலந்தாலோசிக்கவேண்டும்—அப்போதுதான் தலைவர்தம் செயலில் சிறிதாவது ஜனநாயக மணம் கமழும்" என்று

நாம் எண்ணுகிறோம். ஆனால் பாராளு மன்றத்தை ஒரு வார்த்தைகூடக் கேட்காமல் நெருக்கடி அறிக்கை வெளியிடும் உரிமை தலைவருக்கு அளிக்கப்படுகிறது. அப்படி அளிக்கப்படுவது மக்கள் உரிமையை மதிக்க மறுக்கும் மனப்போக்கை அல்லவா வளர்த்துச் செல்லும் என்று நாம் எண்ணமிடுகிறோம். அந்த எண்ணம் மறைவதற்குள், அடுத்த வாசகம், தலைவரின் அறிக்கை முற்றிலும் தவறானது என்று பாராளு மன்றம் அதனை அடியோடு ஒதுக்கித் தள்ளிவிட்டால்கூட இரண்டு மாத காலம், அந்த அறிக்கை அமுலில் இருந்தே தீரும் என்று புன்முறுவல் பூத்த முகத்துடனே 'பெர்லின் கீதம்' பாடுகிறது.

மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் பிரதிநிதிகள் நிரம்பிய மக்கள் மன்றம், பாராளுமன்றம்; அந்தப் பாராளுமன்றத்தின் தீர்ப்பு, மக்கள் தீர்ப்பு; இந்திய சமுதாயத்தின் தீர்ப்பு; இந்தியாவின் தீர்ப்பு! அந்தத் தீர்ப்பையும் மீறிச்செல்லும் அற்புதமான அதிகாரம் ஒரு தனி மனிதராகிய தலைவருக்குத் தரப்படுகிறது!

நியாயமா?—இல்லை!

தேவையா ?—கிடையாது!

ஜனநாயக முறையா இது ?—அல்லவே அல்ல!

என்றாலும் ஏன் இப்படிப்பட்ட முறை கையாளப் படுகிறது ?

இந்தக் கேள்விக்கு ஒரே ஒரு விடைதான் உண்டு! அந்த விடை இதுதான் :—" இந்திய அரசியல் திட்டம் ஒரு சர்வாதிகார சாசனம்!'

இந்திய அரசியல் திட்டம் ஒரு சர்வாதிகார சாசனம் என்பதைத் திட்டவட்டமாக எடுத்துக்காட்டும் பகுதி இது ஒன்றுதானா? இல்லை! இன்னமும் பல இருக்கின்றன! அந்தப் பகுதிகளையும் பார்ப்பது நல்லது! பார்ப்போமா ?

தலைவரின் நெருக்கடி அறிக்கையைப் பாராளுமன்றம் ஒப்புக்கொள்ளா விட்டாலுங்கூட, அந்த அறிக்கை இரண்டு மாத காலம் அமுலில் இருக்கும் என்பதை மேலே கண்டோம். ஆனால் அந்த அறிக்கையைப் பாராளுமன்றம் ஒப்புக்கொண்டால்..........அப்போது அந்த அறிக்கை எவ்வளவு காலம் நடைமுறையில் இருக்கும்? திட்டவட்டமான கால எல்லை குறிக்கப்பட்டிருக்கிறதா அரசியல் திட்டத்தில்? இல்லை! அந்த எல்லையைக் கோடிட்டுக் காட்டும் உரிமையேனும் பாராளுமன்றத்திற்கு அளிக்கப்பட்டுள்ளதா? கிடையாது! எனவே, பாராளுமன்றம், ஒருமுறை சரி என்று தலை அசைத்துவிட்டால் போதும், நெருக்கடி அறிக்கையை, தன் மனம்போன போக்கில், எத்தனை ஆண்டுகளுக்கு வேண்டுமானாலும் நடைமுறையில் வைத்திருக்கும் உரிமை, தலைவருக்கு ஏற்பட்டுவிடுகிறது.

பாராளுமன்றம் நடைபெற்றுக் கொண்டிருக்கும் போது நெருக்கடி அறிக்கை பிறப்பிக்கப்பட்டால் இந்த நிலை! இனி, பாராளுமன்றம் ஒத்திவைக்கப்பட்டிருக்கும் போது அறிக்கை பிறக்குமானால் அந்த அறிக்கையின் 'வாழ்வு' எப்படி இருக்கும்?

இதோ அரசியல் திட்டம் பேசுகிறது:—

"பாராளுமன்றம் ஒத்திவைக்கப்பட்டிருக்கிற காலத்தில், தலைவர், நெருக்கடி அறிக்கையைப் பிறப்பித்தால், அந்த அறிக்கை பாராளுமன்றம் ஒத்திவைக்கப்பட்டிருக்கிற காலம் முழுவதும் செல்லும்.

"பாராளுமன்றம் மீண்டும் பணியாற்றத் தொடங்கியதும், அப்படிப் பணியாற்றத் தொடங்கிய ஒரு மாத காலத்திற்குள், தலைவரின் அறிக்கையை மன்றத்தின் இரு சபைகளும் ஒப்புக்கொண்டால், அந்த அறிக்கை, அந்த ஒரு

மாத காலத்திற்கு மேலும் நடைமுறையில் இருக்கும்.

"பாராளுமன்றம், அறிக்கையை ஒப்புக் கொள்ளத் தவறிவிட்டால், அந்த ஒரு மாத காலம் முடிந்ததும், அந்த அறிக்கையின் காலமும் முடிந்துவிடும்."

இது, நெருக்கடி அறிக்கையைப்பற்றிய மற்றோர் பகுதி.

முன்னே குறிப்பிட்ட பகுதியில் உள்ள விதிகளின் மூலம், தலைவருக்கு, அவர் பிறப்பித்த அறிக்கையை ஒப்புக்கொள்ள முடியாது என்று பாராளுமன்றம் தீர்ப்பு அளித்துவிட்டால்கூட, அதனை, இரண்டு மாத காலம், நடைமுறையில் வைத்திருக்கும் உரிமை ஏற்படுகிறது.

ஆனல் இப்போது குறிப்பிட்டுள்ள பகுதியின் மூலமோ, தலைவரின் அறிக்கையைப் பாராளுமன்றம் ஏற்க மறுத்துவிட்ட அதே நிலையில், அதே அறிக்கையை, ஏழு மாத காலம் நடைமுறையில் வைத்திருக்கும் உரிமை தலைவருக்கு ஏற்பட்டு விடுகிறது.

எங்ஙனம் இந்த உரிமை தலைவருக்கு ஏற்பட்டு விடுகிறது எனில் விளக்குவோம். பாராளு மன்றம் ஒத்திவைக்கப்பட்டுள்ள காலத்தில் நெருக்கடி அறிக்கை பிறப்பிக்கப் பட்டால், அப்படி, அப் பாராளுமன்றம் ஒத்திவைக்கப் பட்டுள்ள காலம் முழுவதும் நெருக்கடி அறிக்கை செல்லுபடியாகும் என்று மேலே தெரிவிக்கப்பட்டிருக்கிறது. அரசியல் திட்டச் சுவடியின் வேறோர் பகுதியில், பாராளுமன்றம் ஆறுமாதம் வரையில் ஒத்திவைக்கப் படலாம் என்றும், அப்படி அதனை ஒத்திவைக்கும் உரிமையும் தலைவருக்குத்தான் உண்டு என்றும் குறிப்பிடப்பட்டிருக்கின்றன. எனவே, எப்போது வேண்டுமானலும் பாராளுமன்றத்தை ஆறுமாத காலம் ஒத்திவைக்கும் உரிமையும், அப்படி ஒத்திவைக்கப்பட்டுள்ள காலத்தில் நெருக்கடி அறிக்கை

யைப் பிறப்பிக்கும் உரிமையும், அப்படிப் பிறப்பிக்கப்பட்ட அறிக்கையை அந்த ஆறு மாத காலம் முழுவதும் நடைமுறையில் வைத்திருக்கும் உரிமையும், ஆறுமாத காலம் முடிவுற்றுப் பாராளுமன்றம் பணியாற்றத் தொடங்கிய பிறகும்—தொடர்ந்து—ஒரு மாத காலம் அறிக்கையை அமுலில் வைத்திருக்கும் உரிமையும் தலைவருக்கு உண்டு என்பதும், இத்தனை உரிமைகளையும் அவர், பாராளுமன்றத்தின் ஒப்புதல் இல்லாமலே கையாளமுடியும் என்பதும், பாராளுமன்றத்தின் தீர்ப்பு தலைவர் அறிக்கைக்கு நேர் மாறானதாக இருக்கும் நிலையிலேகூட, அறிக்கையை, ஏழு மாத காலம் அமுலில் வைத்திருக்க அவரால் முடியும் என்பதும் சிலைமேல் எழுத்துப்போல் தெள்ளத் தெளிய விளங்குகின்றன.

ஏழு மாதங்கள்! ஆம்! ஒரு நாள் அல்ல, இரு நாள் அல்ல, ஒரு வாரம் இரு வாரமும் அல்ல, ஏழுமாத காலம், பாராளுமன்றத்தைத் துச்சமெனமதித்து, அது அளிக்கக் கூடிய தீர்ப்பைப் பற்றி அணுவளவும் கவலையற்று, தான், தன் சொந்த விருப்பம் ஒன்றையே காரணமாகக் கொண்டு வெளியிடக்கூடிய அறிக்கையை, நடைமுறையில் வைத்திருக்கும் உரிமை, தலைவருக்குத் தரப்பட்டிருக்கிறது. தலைவரின் நெருக்கடி அறிக்கையால் நாட்டிற்குப் பெருங்கேடு விளைவது உறுதியினும் உறுதி என்பதை ஐயமற உணர்ந்த போதிலுங்கூட, அச் செயலைத் தடுத்து நிறுத்தும் ஆற்றல், அரசியல் திட்டத்தின்படி, பாராளுமன்றத்திற்கு, ஏழுமாத காலம் வரை கிடையாது. ஏழுமாத காலம் முடிந்த பிறகு தான், பாராளுமன்றத்தில் வீற்றிருக்கும் மக்களின் பிரதிநிதிகள், தலைவரின் செயலுக்கு முற்றுப்புள்ளி வைக்கமுடியுமே தவிர, அதுவரை, அவர்கள், தலைவரின் தகாச்செயல் கண்டு கொதிப்படைந்தாலும் கோபமுற்றாலும் வெறுப்படைந்தாலும் வேதனைப்பட்டாலும், வாய்மூடி மௌனிகளாகத்தான் அடங்கிக்கிடக்க முடியுமே தவிர, அந்த ஆகாத அறிக்கைக்கு மாண தண்டனை விதிக்கமுடியாது. ஏழு மாத காலம் தலைவர் சர்வாதிகாரியாக இருப்பார்—

அதைத் தடுக்கும் ஆற்றல் யாருக்கும் கிடையாது. அவர் வைத்தது சட்டம், இட்டது கட்டளை அந்த ஏழு மாதமும்! ஏன் இப்படி, எதற்காக அப்படி என்று கேட்கும் உரிமை எவரிடமும் இல்லை! பலபடக் கூறுவானேன்? "ஜனசமூகமே! உனக்கு இந்தியாவில் இடம் இல்லை!" என்று, அரசியல் திட்டம், முரசு கொட்டித் தெரிவிக்கும் இமையே உருவாய் வந்த திருமிகு பகுதி இது!

"மத்திய அரசாங்கத்தால் விதிக்கப்பட்டாலும், மாகாண அரசாங்கங்களால் வசூலிக்கப்பட்டு, மாகாண அரசாங்கங்களுக்காகவே எடுத்துக்கொள்ளப்படும் வரிகள்,

"மத்திய அரசாங்கத்தால் விதிக்கப்பட்டு மத்திய அரசாங்கத்தாலேயே வசூலிக்கப்பட்டாலும், மாகாண அரசாங்கங்கட்குத் தரப்பட்டு விடும் வரிகள்,

"மத்திய அரசாங்கத்தால் விதிக்கப்பட்டு மத்திய அரசாங்கத்தாலேயே வசூலிக்கப்பட்டாலும், மத்திய அரசாங்கம்—மாகாண அரசாங்கங்கள் இந்த இரு சாராருக்குமிடையே பங்கு போட்டுக்கொள்ளப்படும் வரிகள்,

"மத்திய அரசாங்கத்தினரால், மாகாண அரசாங்கங்கட்கு நன்கொடையாக அளிக்கப்படும் தொகைகள்,

"ஆகிய இந்தப் பல்வேறு தலைப்புகளின் கீழ் மாகாண அரசாங்கங்கட்குச் சேரவேண்டிய பணத்தை, பாதுகாப்பு பற்றிய நெருக்கடி அறிக்கை நடைமுறையில் இருக்கும் காலத்தில், அப்படி மாகாண அரசாங்கங்களிடம் சேர்க்காமல், மத்திய அரசாங்கத்திடமே நிறுத்திவைத்துக் கொள்ளும் உரிமை, தலைவருக்கு உண்டு."

நெருக்கடி அறிக்கைக் காலத்தில் தலைவருக்குள்ள உரிமைகளைப்பற்றி விளக்கிக்கூறும் பல விதிகளில் ஒன்று, இவ் வண்ணம் தெரிவிக்கிறது.

என்ன பொருள் இவ் விதிக்கு? தலைவர், நெருக்கடி அறிக்கையைப் பிறப்பித்துவிட்டால், பின்னர் அவரால், மாகாண அரசாங்கங்களைப் பணமின்றித் திண்டாடித் திகைக்கும்படிச் செய்யமுடியும் என்று பொருள். மாகாண சுயாட்சி, பணநெருக்கடி என்னும் துப்பாக்கி மூலம் குடியாசுத் தலைவரால் சுட்டு வீழ்த்தப்படுகிறது என்று பொருள். தலைவர் மனம் வைத்தால், அவரால், மாகாண அரசாங்கங்களைத் தன் காலின் கீழ்ப் போட்டு மிதித்துத் துவைத்து அடக்கி அழிக்கும் உரிமையை, மத்திய அரசாங்கத்திற்குத் தாமுடியும் என்று பொருள். மாகாண மக்களின் உள்ளக் கருத்தைப் பற்றிய கவலையே இன்றி, டில்லி ஏகாதிபத்யம், வானுற ஓங்கி வளம்பெற வளர்வதற்கான சீதார் அருமையான திட்டம் தீட்டப்பட்டிருக்கிறது என்று பொருள். ஆம், ஆம், இந்த விதியால் மாகாண அரசாங்கங்களின் சுதந்தரம் பறிபோகிறது; பணப்பெட்டி காலியாகிறது; டில்லி, எள் என்று கேட்பதற்குமுன்னே எண்ணெயாக வந்து நிற்கவேண்டிய அளவு அடிமைகளாக இருந்து தீரும் நிலை, மாகாண அரசாங்கங்கட்கு ஏற்படுகிறது. ஒரு தனி மனிதராகிய தலைவரின் அதிகாரத்தை அளவுக்கு மீறிய உயரத்தில் ஏற்றி நிறுத்தியிருக்கிறது இந்த விதி.

"இந்த விதி மிகவும் கொடுமையானது இப்படியெல்லாம் விதிகளை வகுப்பது என்று நாம் தொடங்கிவிட்டால், இதன் விளைவாக, மத்திய அரசாங்கம், தன் கைகளிலே வைத்து உருட்டும் மாப்பொம்மைகள்தான் மாகாணங்கள் என்னும் நிலை ஏற்பட்டுவிடும். எனவே, இந்த விதியை நான் மிக வன்மையாகக் கண்டிக்கிறேன்"

—குலாதர் சாலியா

"கொஞ்சம்கூட குழைவு நெளிவு இல்லாத முழுப் பொருளாதார ஏகாதிபத்யத்தை ஏற்படுத்திக்கொள்வதற்

கான அதிகாரத்தையே இந்த விதி மத்திய அரசாங்கத்திற்கு அளிக்கிறது. இந்த விதியை நிறைவேற்றிய பிறகு, மாகாண சுயாட்சி என்று பேசுவது வெறும் கேலிக்கூத்தே தவிர வேறில்லை அந்த நிலையில் மாகாண சுயாட்சி இருக்கிறது என்று கூறுவதேகூட தவறுதான். இந்த விதி மிகவும் அநியாயமானது. இந்த அநியாயமான விதியை எதிர்த்து இம் மன்றத்தின் உறுப்பினர் ஒவ்வொருவரும் போராடியே தீரவேண்டும்."

—பண்டிட் குன்ஸ்ரு

"பொருளாதாரத் துறையில் தலைவருக்கு எதேச்சாதிகார உரிமைகள் அளிப்பதை, நாம் இந்த அரசியல் திட்டத்தை ஆராயத் தொடங்கிய நாள் முதலாகவே நான் வன்மையாகக் கண்டித்து வந்திருக்கிறேன். நானும் மற்றும் பல உறுப்பினர்களும் இந்தப் பிரச்சினையைப் பற்றி எழுப்பிய கண்டனக் குரல்கள் எல்லாம் வெறும் காட்டுக் கூச்சலாகி வீணாகிவிட்டதைக்கண்டு நான் மிகவும் வருந்துகிறேன்.

—பேராசிரியர் சிவன்லால் சாக்சேனா

"இந்த விதியின் மூலம் தலைவருக்கு அளிக்கப்படும் உரிமைகள் மிகவும் தீவிரமானவை. நெருக்கடிக் காலங்களில், புதிய அணைக்கட்டு நிறவுதல் முதலாகிய பொருளாதாரப் பெருந்திட்டங்களில் மாகாண அரசாங்கங்கள் பணத்தைச் செலவிடுதல் கூடாது என்று அவற்றைக் கேட்டுக் கொள்ளும் உரிமை வேண்டுமானால் மத்திய அரசாங்கத்திற்கு இருக்கலாமே தவிர, மாகாண அரசாங்கங்கள், தம் அன்றாட செலவுகளை முடிப்பதற்குப் பயன்படுத்திக் கொள்ளும் வரிகளையும் பண வருவாய்த் துறைகளையும் மாகாணங்களிடமிருந்து மத்திய அரசாங்கம் பறித்துக் கொள்வது என்பது முறையே ஆகாது. அது முற்றிலும் தவறானதோர் திட்டம்."

—தோழியர் ரேணுகா ராய்

"நம் ஒப்புதலை வேண்டி நிற்கிற இந்த விதியில் நியாயமோ அல்லது அறிவுடைமையோ இருப்பதாக என்னால்

கண்டுபிடிக்க முடியவில்லை. பிரிட்டிஷ் ஏகாதிபத்யம் வகுத்துக்கொண்ட அந்தப் பழைய 93 ஆம் விதிப்படி, மாகாண ஆட்சியைக் கவர்னரே தன் நேரடி ஆதிக்கத்தின் கீழ் எடுத்துக் கொண்டபோது கூட, மத்திய அரசாங்கம் மாகாண அரசாங்கங்கட்கு அளிக்கும் நன்கொடைகள் நிறுத்தப்படவில்லை. மத்திய அரசாங்கம், சிலபல வரிகளை வசூலிக்கும் போது, அது மாகாண அரசாங்கங்களின் ஏஜண்டாக இருந்து, மாகாண அரசாங்கங்களின் சார்பில் வரி வசூலிக்கிறது என்றுதான் பொருள். எனவே அப்படி வசூலிக்கும் தொகையில் ஒரு பகுதியை, மத்திய அரசாங்கம், மாகாண அரசாங்கங்களுக்குத் திருப்பித் தருகிறதே அந்தத் தொகை, மத்திய அரசாங்கத்தால் மாகாண அரசாங்கங்கட்கு அளிக்கப்படும் பிச்சை அல்ல. அது, மாகாண அரசாங்கங்களின் உரிமை. இந்த விதியில் அனுமதிக்கப்பட்டிருப்பதைப்போல, மாகாண அரசாங்கங்களின் உரிமையை மத்திய அரசாங்கம் பறித்துக்கொள்ளும் கொடுமை எந்த ஜனநாயக நாட்டிலும் அனுமதிக்கப்பட மாட்டாது.

—ஒரிசாவின் முன்னுள் அமைச்சர் பி. விஸ்வநாத தாஸ்

இவர்கள் ஒவ்வொருவரும் அரசியல் அமைப்பு மன்றத்தின் உறுப்பினர்கள். இந்தக் கருத்துரைகள் இவர்கள் அங்கே ஆற்றிய சொற்பொழிவுகளிற் பொதிந்துகிடப்பவை. இவர்களிற் பலர் அரசியல் திட்டத்தை வகுத்த காங்கிரஸ் கட்சியின் அரும்பெரும் தலைவர்கள். திட்டம் தீட்டும் கட்சித் தோழர்களுக்கே இவ்வளவு ஆத்திரத்தை, ஆத்திரத்தை மட்டுமல்ல, ஆவேசத்தை, ஆவேசத்தை மட்டும்கூட அல்ல, அளவற்ற வெறுப்புணர்ச்சியை ஊட்டும் இந்த விதி, உண்மையில் எவ்வளவு அருவருக்கத் தக்கது என்பதை நாம் எடுத்துவிளக்கத் தேவையில்லை.

மாகாண அரசாங்கங்களின் பணவருவாய்த் துறைகளை அபகரித்துக் கொண்டு அவற்றின் சுய ஆட்சி உரிமைக்கும் சுயமரியாதைப் பண்பாட்டிற்கும் வேட்டுவைக்கும்

உரிமையை, இந்த விதி, மத்திய அரசாங்கத்திற்குத் தந்திருக்கிறது. மத்திய அரசாங்கத்திற்கு என்றால் பொது மக்களின் பிரதிநிதிகள் அடங்கிய பாராளுமன்றத்திற்கு அல்ல—அந்தப் பாராளுமன்றத்திலிருந்து உருவாக்கப்பட்டிருக்கின்ற அமைச்சர் அவைக்குக்கூட அல்ல. பொது மக்களிடமிருந்து நேரடியாகத் தேர்ந்தெடுக்கப்படாத ஒரு தனி மனிதரிடம்—குடியரசுத் தலைவரிடம் தரப்பட்டிருக்கிறது அந்த உரிமை.

நினைவிருக்கட்டும்—இந்த விதியின்படி மாகாண அரசாங்கங்களின் பணவருவாய்த் துறைகளை அபகரிக்கும் போது, தலைவர், பாராளுமன்றத்தைக் கலந்தாலோசிக்க வேண்டும் என்ற அவசியம் துளியும் இல்லை.

இதுவும் நினைவிருக்கட்டும்—இத்தகு செயல் புரிவது நாட்டு நலனுக்கு வேட்டுவைக்கும் தன்மையது என்று பாராளுமன்றம் தீர்ப்பளித்தால்கூட, அந்தத் தீர்ப்பையும் மீறி, சில சமயங்களில் இரண்டு மாத காலமும், வேறு சில சமயங்களில் ஏழு மாத காலமும் இந்தத் தவறான செயலினைத் தங்குத் தடையின்றித் தொடர்ந்து செய்யும் உரிமை தலைவருக்கு இருக்கிறது.

இதையும் மறந்துவிட வேண்டாம்—தலைவர் இத்தகு செயல் புரியும்போது இதனைத் தடுக்கும் உரிமை மத்திய அரசாங்கத்திற்கும் இல்லை; மாகாண அரசாங்கங்கட்கும் இல்லை. மத்திய சட்டசபைகளுக்கும் இல்லை; மாகாண சட்டசபைகளுக்கும் இல்லை.

இப்போது கூறுங்கள்—இதுதான் ஜனநாயகமா?

இதற்கும் விடைகூறுங்கள்—இத்தகு விதிமுறைகளைத் தன்னகத்தே கொண்டுள்ள இந்த அரசியல் திட்டம் ஜனநாயகத் திட்டமா?

விடைகூறுவதற்கு முன்னால், பாதுகாப்பு பற்றிய நெருக்கடி அறிக்கை அமுலில் இருக்கும் காலத்தில்,

தலைவர் கையாளக்கூடிய வேறோர் அதிகாரம் இருக்கிறது—அதையும் தெரிந்து கொள்ளுங்கள்.

"பாதுகாப்பு பற்றிய நெருக்கடி அறிக்கை அமுலில் இருக்கும்போது, பேச்சுரிமை—எழுத்துரிமை—சங்கம் அமைக்கும் உரிமை முதலாகிய அடிப்படை உரிமைகளுக்குக் கேடு விளைவிக்கும் தன்மை படைத்த சட்டங்களை நிறைவேற்றவும், அதே தன்மை படைத்த வேறு பல அதிகாரங்களைப் பிரயோகிக்கவும் ஆட்சியாளர்களுக்கு உரிமை உண்டு.

"பேச்சுரிமை முதலாகிய அடிப்படை உரிமைகளை நிலைநாட்டிக் கொள்வதற்காக ஆட்சியாளர்களை எதிர்த்து நீதிமன்றங்களில் வழக்குத் தொடுக்கலாம் என்பதாகப் பொதுமக்களுக்கு உள்ள உரிமையை, பாதுகாப்பு பற்றிய நெருக்கடி அறிக்கை அமுலில் இருக்கும் காலத்தில், இல்லாமல் செய்துவிடக்கூடிய அதிகாரம் தலைவருக்கு உண்டு.

"பாதுகாப்பு பற்றிய நெருக்கடி அறிக்கை அமுலில் இருக்கும் காலத்தில், அடிப்படை உரிமைகளை நிலைநாட்டிக் கொள்வதற்காக யாரும் புதிய வழக்குகள் தொடுக்கக்கூடாது என்று பிரகடனம் செய்யும் உரிமை மட்டுமல்ல, ஏற்கெனவே நீதி மன்றத்தில் விசாரிக்கப் பட்டுவரும் அத்தகைய பழைய வழக்குகளின் விசாரணையை நெருக்கடிக் காலம் முடிய நிறுத்திவைக்கும் அதிகாரமும் தலைவருக்கு உண்டு."

அரசியல் திட்டச் சுவடியில், 175—176—ஆகிய இரண்டு பக்கங்களில் பொறிக்கப்பட்டுள்ள எழுத்துக்கள் இவை! எழுத்துக்களா இவை? அல்ல அல்ல! புத்துலகச் சிற்பிகள் பற்பலர் பல்வேறு நூற்றாண்டுகளாகப்

பெரும்பாடுபட்டு எழுப்பியுள்ள ஜனநாயகக் கோட்டை மீது வீசப்பட்டுள்ள வெடிகுண்டுகள்!

உள்ளத்தில் தோன்றிடும் உயரிய கருத்துக்களை அச்சம் தயை தாட்சண்யமின்றி ஊர் மக்களுக்கெல்லாம் எடுத்துரைக்கும் உரிமை, இருபதாம் நூற்றாண்டில் வாழும் இன்பப்பேறு படைத்த மக்களுக்கெல்லாம் கிடைத்துள்ள தோர் ஒப்பற்ற பெருமை!

ஈடு இணையற்ற இந்த உரிமையை அடைவதற்காக மனித சமுதாயம் கொட்டிய குருதி கொஞ்சமல்ல. அடைந்த இன்னல்களும் இலேசானவை அல்ல. புரிந்த தியாகமும் சிறியதல்ல.

இந்த உரிமையைப் பெறுவதற்காகப் போராடிப் போராடி அந்த வீரப் போராட்டத்திலேயே வாழ்க்கையைப் பறிகொடுத்தோர் ஆயிரமாயிரம்.

சிந்தனைச் சிற்பி சாக்ரடீஸ், இந்த அரிய உரிமையை மக்களெல்லாம் பெறுவதற்காகத்தான் மனக்கிலேசம் சிறிது மின்றி ஒரு கோப்பை விஷத்தை உண்டு மாண்டார்.

இத்தாலிய வீரர் புரூனோ இதே உரிமையை நிலை நாட்டப் போராடிய காரணத்தால்தான் உயிரோடு தீயிலிட்டுப் பொசுக்கப்பட்டார்.

புத்துலக விடிவெள்ளி ரூசோ எழுத்துரிமையும் பேச்சுரிமையும் தேவை தேவை என்று இடிமுழக்கம் எழுப்பிய காரணத்தால்தான் கல்லடியும் சொல்லடியும் பட்டு மக்களால் வெறுக்கப்பட்டு மறைந்தார்.

அஞ்சா நெஞ்சர் வால்டேர், அணுவளவும் தயக்கமின்றி, சிந்தனையைச் சிறைப்படுத்தும் தீய சக்திகள் மீது சீறிப் பாய்ந்த காரணத்தால்தான் பயங்கர பாஸ்டில் என்னும் பாழும் சிறையில் தள்ளப்பட்டுப் பற்பல கொடுமைகளுக்கு ஆளானார்.

அறப்போர் அண்ணல் காந்தியார், பேச்சுரிமை என் பிறப்புரிமை என்று அச்சம் துளியுமின்றி அண்டம் அதிர அதிர்வேட்டுக் கிளப்பினர் என்பதால்தான் எத்தனையோ முறை வெஞ்சிறையில் கிடந்து வாடி வதங்கினர்.

கல்லடிபட்ட ரூசோ, கடுவிஷம் குடித்த சாக்ரடீஸ், வெஞ்சிறை வாழ்ந்த வால்டேர், வீர மரணம் எய்திய புரூனே, சாவைத் தழுவிய சவனரோலா, மதகுருக்களை எதிர்த்த மார்ட்டின் லூதர், ஆகிய இவர்கள் மட்டும்தானா —அல்ல அல்ல— நூறு நூறுபேரவர் உண்டு சிந்தனைச் சுதந்தரத்திற்கு இடப்பட்டிருந்த தளைகளைக் கூறு கூறாக் கியவர்கள்! காலொடிந்தவர்கள், கையிழந்தவர்கள், நரம்பு அறுந்தவர்கள், எலும்பு முறிந்தவர்கள், வாழ்வு பறிபோன வர்கள், வாழும் வகையைப் பறிகொடுத்தவர்கள், உற்றா ரால் தூற்றப்பட்டவர்கள், ஊரார் உறுமலுக்கு ஆளானவர் கள், அதிகார வர்க்கத்தால் தாக்குண்டவர்கள், ஆணவக் காரர்களால் அழிக்கப்பட்டவர்கள் என்று எண்ணற்ற பேர் கள் உண்டு பேச்சுரிமைப் போர் வீரர்கள் பட்டியலிலே தங்கள் பெயர்களையும் பொறித்துக் கொண்டவர்கள்!

எத்தனையோ சாக்ரடீஸ்களின் குருதி, எண்ணற்ற ரூசோக்களின் வியர்வை, நூற்றுக்கணக்கான வால்டேர் களின் தியாகம், ஆயிரமாயிரம் காந்திகளின் போராட்டம் ஆகிய இந்த அடிப்படைகளின்மீது எழுப்பப்பட்டிருக்கிற அற்புதமான கட்டிடம்தான் கருத்துச் சுதந்தரம்! அந்தக் கருத்துச் சுதந்தரத்தைத்தான் கருகிய மொட்டாக ஆக்கப் பார்க்கின்றன இந்திய அரசியல் திட்டத்தின் 175—176-ம் பக்கங்கள்.

உள்ளத்தின் உணர்ச்சிகளை உள்ளபடி எடுத்துரைக்கும் உரிமைக்காகப் போராடிய உலக உத்தமர்களை வேண்டு மென்றே கேலிசெய்யும் விபரீத செயலைத்தான் புரிகின்றன இந்த இரண்டு பக்கங்களிலும் காணப்படும் கருத்தற்ற விதி முறைகள்.

“இந்தியத் தலைவருக்குத் தரப்பட்டிருப்பதைப்போல, அடிப்படை உரிமைகளையும் மீறி நடக்கும் அதிதீவிர அதிகாரம், உலகத்தில் உள்ள வேறு எந்த நாட்டின் அரசியல் திட்டத்திலும் எவருக்கும் தரப்படவில்லை. தனிமனிதர்களின் சுதந்தரத்திற்கு மட்டுமல்ல, இந்தியாவில் உள்ள பல்வேறு மாகாணங்களின் சுதந்தரத்திற்கும் ஒருசேர ஏற்பட்டுள்ள மிகப் பெரிய ஆபத்து, இந்த விதி! சென்ற இருபது முப்பது ஆண்டுகளாக எந்தெந்தக் கொள்கைகளையும் தத்துவங்களையும் காப்பாற்றுவதற்காக நாம் பெரும் பெரும் போராட்டங்களை நிகழ்த்தினோமோ, அந்தக் கொள்கைகளுக்கெல்லாம் முற்றிலும் முரண்பட்டு நடக்கக்கூடியதோர் அரசாங்கத்தை—ஒரு போலீஸ் இராஜ்யத்தை—ஒரு சர்வாதிகார சர்க்காரை உருவாக்குகிறது இந்த விதி! அத்தகையதோர் ஆட்சியில், ஒரு குற்றமும் அறியாத கோடிக்கணக்கான ஆண்கள் பெண்கள் ஆகியோரின் உரிமைகளும் சுதந்தரங்களும் ,நிச்சயம் பறிக்கப்பட்டுவிடும். அந்த ஆட்சி நடைபெறும் காலத்தில் அமைதி நிலவுமானல், அந்த அமைதி, பாலைவனத்தில் காணபபடும் பாழும் அமைதியாகவும், சுடுகாட்டில் நிலவும் செத்துப்போன அமைதியாகவும்தான் இருக்கும். இந்த நாட்டின் அரசியல் வாழ்க்கையில் எதிர்காலத்தில் ஏதாவது புயல் மூளுமானல், அந்தப் புயல், இந்த நிலையில், நாமெல்லாம் எழுப்பிவரும் ஜனநாயகக் கட்டிடத்தையே தூள் தூளாகச் சிதறடித்துவிடும்! ஆம், அது உறுதி.”

—எச். வி. காமத்

“இந்தியாவின் தலைவர்களெல்லாரும் பிரிட்டானிய ஆட்சியால் சிறைச்சாலைக்குள் தள்ளப்பட்ட 1942-ல் கூட—அந்தப் புரட்சிகரமான காலத்தில்கூட, அடிப்படை உரிமைகளை நிலை நாட்டிக் கொள்வதற்காக நீதிமன்றம் போகும் உரிமை மக்கள் மன்றத்திடமிருந்து அபகரிக்கப்படவில்லை. ஆனல் இப்போது, அத்தகைய புரட்சிகரமான சூழ்நிலை எதுவும் இல்லாத இந்தக் காலத்தில், நீதிமன்றத்

தின் உரிமைகள் இவ்வளவுதூரம் பறிக்கப்படுகின்றன. இது தேவைதானு?"

—சிவன்லால் சாக்சேனு

"தேர்தல்கள் முடிந்து, பெரும்பான்மைக் கட்சி காடாளத் தொடங்கிவிட்ட பிறகு, மக்களின் உரிமைகளை நிலைநாட்டிக்கொள்வதற்கான ஒரே ஒருவழி நீதிமன்றங்களின் துணையை நாடுவதுதான். ஆனுல் அந்த ஒரே ஒரு வழியையும் அடைத்துவிட்டு, மக்கள், நீதிமன்றங்களின் வாயிலை நெருங்கவும் முடியாதபடி செய்துவிட்டால், பிறகு, காட்டில் காட்டு ஆட்சிதான் நிலவும்—வேறென்ன ஆட்சி உலவும்?"

—மகாவீர தியாகி

"இந்த அரசியல் திட்டத்திலேயே, தலைவருக்கு நெருக்கடிக் காலச் சிறப்பு உரிமைகளைத் தரும் அத்தியாயம்தான் மிகவும் பிற்போக்கான பகுதி. பிற்போக்கே உருவாகி வந்த இந்தப் பகுதிக்குச் சிகரம் வைத்தது போல அமைந்துள்ளது மக்கள் நீதிமன்றங்களை நாடுவதைத் தடுக்கும் இந்த விதி."

—பேராசிரியர் கே. டி. ஷா

ரூசோவையும் வால்டேரையும் காந்தியடிகளையும் சாக்ரடீசையும் கேலி செய்யும் இந்தக் குருட்டுவிதி இந்திய அரசியல் அமைப்பு மன்றத்தில் நிறைவேற்றப்பட்டபோது அங்கே எழுப்பப்பட்ட ஒரு சில சுதந்தர கீதங்களின் சிற்சில பகுதிகளே மேலே பொறிக்கப்பட்டிருப்பவை.

எச். வி. காமத்தும் கே. டி. ஷாவும், சிவன்லால் சாக்சேனுவும் மகாவீர தியாகியும் எடுத்து விளக்கியுள்ள இந்தக் கருத்துரைகள் அவர்கள் நால்வரின் சொந்த எண்ணங்களல்ல—இந்திய மக்களின் இருதய கீதங்கள்! ஒவ்வொரு ஜனநாயகவாதியின் உள்ளத்திலேயும் உன்னதபவனிவரும் உத்தமக் கருத்துக்கள்!

எழுத்துரிமையும் பேச்சுரிமையும் மனித சமுதாயத்தின் இரு கண்கள்! அந்தக் கண்களுக்கு அதிகார வர்க்கத்

தாரால் நேரக்கூடிய ஊனங்களைப் போக்கும் அறிவும் ஆற்றலும் படைத்த டாக்டர்கள், நீதிபதிகள்! கண்களுக்கு ஆபத்து என்றால் டாக்டர்களை நாடுவது மனித சமுதாயத்தின் உரிமை! அந்த உரிமைக்கு உலைவைக்கிறது இந்திய அரசியல் திட்டம்! இந் நிலையில் யார்தான் மனம் துடிதுடித்துப் பதறிடாமல் இருக்க முடியும்?

இதுவரை நாம் இந்த அத்தியாயத்தில் எழுதியுள்ள எழுத்துக்களால், பாதுகாப்பு பற்றிய நெருக்கடி ஏற்பட்டுள்ள காலத்தில் தலைவருக்கு உள்ள அதிகாரங்கள் என்னென்ன என்பதும், அந்த அதிகாரங்களின் பிரயோகத்தால் ஜனநாயகக் கோட்பாட்டிற்கு ஏற்படக்கூடிய கெடுதி எந்த அளவு என்பதும் வெளியாகின்றன.

இனி, பணநிலை பற்றிய நெருக்கடி ஏற்படுகிற காலத்தில் தலைவருக்குள்ள உரிமைகள் எவை எவை என்பதையும், அந்த உரிமைகளால் ஜனநாயகப் பயிர் வளருமா அல்லது சிதையுமா என்பதையும் சிறிதளவு எண்ணிப் பார்ப்போம்.

பணநிலை பற்றிய நெருக்கடி ஏற்பட்ட காலத்தில் தலைவர் கையாளக்கூடிய உரிமைகள்

"இந்தியாவின் அல்லது அதன் ஏதாவது ஒரு பகுதியின் பணநிலை, நெருக்கடிக்குள்ளாகியிருக்கிறது என்று தலைவர் எண்ணினால், உடனே அவர், அத்தகைய நிலைமை ஏற்பட்டிருக்கிறது என்பதாக ஒரு பணநிலை நெருக்கடி அறிக்கையைப் பிரகடனம் செய்யலாம்.

"பாதுகாப்பு பற்றிய நெருக்கடியைப் போலவே, இந்த அறிக்கையையும், தலைவர், அதனைப் பிறப்பித்த பிறகு, பாராளுமன்றத்தின் இரு சபைகளின் முன்னும் அதனை ஆலோசனைக்கு வைக்கவேண்டும்.

"பாதுகாப்பு பற்றிய நெருக்கடி அறிக்கையைப் பாராளுமன்றம் ஒப்புக்கொள்ளாவிட்டாலும்கூட அஃது எங்ஙனம் இரண்டு மாத காலம் நடைமுறையில் இருந்தே தீருமோ அதுபோலத்தான், பணநிலை நெருக்கடி அறிக்கையைப் பாராளுமன்றம் ஒப்புக்கொள்ளாவிட்டாலும் அதுவும் இரண்டு மாதகாலம் அமுலில் இருந்தே தீரும்.

"பாராளுமன்றம் ஒருவேளை அறிக்கையை ஒப்புக்கொள்ளுமானல், பாதுகாப்பு அறிக்கையைப்போலவே இந்த அறிக்கையும், தலைவர் எவ்வளவு காலத்திற்கு விரும்புகிருரோ அவ்வளவு காலம் அமுலில இருக்கும்.

"பாராளுமன்றம் ஒத்திவைக்கப்பட்ட காலத்தில் பணநிலை நெருக்கடி அறிக்கை பிறப்பிக்கப்படுமானல் பாதுகாப்பு அறிக்கையைப் போலவே, இந்த அறிக்கையும், பாராளுமன்றம் ஒத்திவைக்கப்பட்ட காலம் முழுவதும் செல்லும். அதோடு நில்லாமல், பாராளுமன்றம் திறக்கப்பட்ட பிறகும் ஒரு மாத காலம் நடைமுறையில் இருக்கும்."

பணநிலை நெருக்கடி அறிக்கையைப் பற்றி அரசியல் திட்டம் அளித்துள்ள சில விதிகளின் கருத்துரை இது.

இந்தப் பணநிலை நெருக்கடி அறிக்கையைப் பிறப்பிக்கும் முறையைப் பொறுத்த அளவில் பாதுகாப்பு நெருக்கடி அறிக்கையைப் பிறப்பிக்கும் முறைக்கும் இதற்கும் துளியளவு வேறுபாடும் காணேம்.

பாதுகாப்பு நெருக்கடி அறிக்கையை எங்ஙனம் பாராளுமன்றத்தைக் கேட்காமலே வெளியிடும் உரிமை தலைவருக்கு இருக்கிறதோ அப்படித்தான் இந்தப் பணநிலை

நெருக்கடி அறிக்கையையும் பாராளுமன்றத்தைக் கேட்காமலே வெளியிடும் உரிமை அவருக்கு இருக்கிறது.

அந்த அறிக்கையை எப்படிப் பாராளுமன்றம் நிராகரித்துவிட்டால்கூட, அதனை, பாராளுமன்றம் நடைபெறும் காலமாயிருந்தால் இரண்டு மாத காலமும், பாராளுமன்றம் ஒத்திவைக்கப்பட்ட காலமாயிருந்தால் ஏழுமாத காலமும் அமுலில் வைத்திருக்கும் அதிகாரம் தலைவருக்கு இருக்கிறதோ அப்படித்தான் இந்த அறிக்கையைப் பொறுத்த அளவிலும்கூட இருக்கிறது.

ஜனநாயகப் பாதையைத் துறந்து, எதேச்சாதிகார வீதியில் நடப்பதற்குத் தேவையான சூழ்நிலையும் வசதிகளும் தலைவருக்கு அங்கே அமைத்துக்கொடுக்கப்பட்டிருப்பதைப் போலவேதான் இங்கேயும் அமைத்துத் தரப்பட்டிருக்கின்றன.

> "பண நிலை நெருக்கடி அறிக்கை நடைமுறையில் இருக்கும்போது, பொருளாதாரத் துறையில் இப்படி இப்படித்தான் நடந்து கொள்ள வேண்டுமென்று மாகாண அரசாங்கங்களுக்குக் கட்டளையிடும் உரிமை மத்திய அரசாங்கத்திற்கு உண்டு.
>
> "அதே சமயத்தில், மாகாண அரசாங்கங்களுக்கு இன்னின்ன கட்டளைகளைப் பிறப்பியுங்கள் என்று மத்திய அரசாங்கத்திற்குத் தாக்கீது பிறப்பிக்கும் அதிகாரம் தலைவருக்கு இருக்கிறது.
>
> "பண நிலை அறிக்கை அமுலில் இருக்கும்போது மாகாண சட்ட சபைகளில் நிறைவேற்றப்படுகிற எல்லா மசோதாக்களும்—வரவு செலவு மசோதா உட்பட—தலைவருடைய பார்வைக்குக் கட்டாயம் கொண்டுவரப்பட்டு, அவருடைய ஒப்புதலைப் பெற்ற பிறகே சட்டங்களாக மாறமுடியும்."

பணியிலே நெருக்கடி அறிக்கையைப் பற்றி அரசியல் திட்டத்தில் அமைந்துள்ள வேறு சில விதிகள் இவை.

மாகாண சுய ஆட்சிக்கு ஒரு மரண ஓலை—தலைவரின் எதேச்சாதிகாரத்திற்கு ஒரு ததாஸ்து—குடியாட்சிக் கோட்பாட்டிற்கு ஒரு படுகாயம்— பெர்லின் கீதத்திற்கு ஒரு பாராட்டு—பாசிசப் பொற்சிலைக்கு ஒரு பூமாரி ஆகிய இவ்வளவும் இருக்கின்றன பணியிலே நெருக்கடி பற்றிய இந்தப் பிற்போக்கான விதிகளில்! விதிகளே பேசுகின்றன—விளக்கம் வேறு தேவையில்லை.

இனி, அரசியல் அமைப்பு பற்றிய நெருக்கடி என்றால் என்ன என்பதையும், அந்த நெருக்கடிக் காலத்தில் தலைவருக்குள்ள உரிமைகள் எவை எவை என்பதையும், அந்தப் புதிய பூந்தோட்டத்திலாவது ஜனநாயகத் தென்றல் பவனி வருவதற்கான சூழ்நிலை உருவாக்கப்பட்டிருக்கிறதா என்பதையும் ஆராய்ந்து அறிய முயல்வோம்.

அரசியல் அமைப்பு பற்றிய நெருக்கடி ஏற்பட்ட காலத்தில் தலைவர் கையாளக்கூடிய உரிமைகள்.

“ஏதாவது ஒரு மாகாணத்தின் அரசாங்கமானது இந்த அரசியல் திட்டத்தில் தீட்டப்பட்டுள்ள விதிகளின்படி நடத்தப்படமுடியாத நிலை ஏற்பட்டுவிட்டது என்று **தலைவர்** கருதுவாரானால்,

“உடனே, அவர், அந்த மாகாண அரசாங்கத்தின் எல்லா அதிகாரங்களையுமோ அல்லது தேவையான அதிகாரங்களைமட்டுமோ தன் கைக்கு மாற்றிக்கொண்டு, அவற்றைத் தானே அமுல் நடத்தத் தொடங்கலாம்.

"அதுபோலவே, அவர், அந்த மாகாண கவர்னரின் எல்லா அதிகாரங்களையும், அல்லது தேவையான அதிகாரங்களைமட்டும், தானே எடுத்துக் கொள்ளலாம்.

"அதுமட்டுமல்லாமல், மாகாண சட்ட சபைகளின் அதிகாரங்கள் அனைத்தையும் டில்லி பாராளுமன்றத்திற்கு எடுத்துக் கொடுத்துவிட்டேன் என்று அவர் அறிவித்துவிடலாம்.

"அப்படி அவர் அறிவித்ததன் மூலம் தனக்குக் கிடைத்துள்ள மாகாண சட்டசபைகளின் அதிகாரங்களை அமுல் செலுத்தும் உரிமையை, பாராளுமன்றம், தலைவரிடமே ஒப்படைத்து, அவரே அந்த அதிகாரங்களைச் செலுத்திவரட்டும் என்று தீர்மானித்து விடலாம்.

"இவ்வாறாகத் தனக்குக் கிடைத்த மாகாண சட்டசபைகளின் அதிகாரங்களை அமுல் செலுத்தும் உரிமையை, தலைவர், தனக்குக் கீழ்ப்பட்ட எந்த அதிகாரிக்கும் மாற்றிக் கொடுக்கலாம்.

"மாகாண சட்டசபைகளின் அதிகாரங்களை இப்படியெல்லாம் தனக்குக் கீழ்ப்பட்ட அதிகாரிகளின் கைகளில் ஒப்படைக்கிறபோது அப்படிச் செய்வதற்குத் தேவையான எல்லா வித புதிய சட்டங்களையும் விதிகளையும் நடைமுறைகளையும் தலைவர், தானே பிறப்பிக்கலாம். அல்லது டில்லி பாராளுமன்றமும் பிறப்பிக்கலாம்.

"இவ்வளவும் இல்லாமல், மாகாண அரசாங்கத்தின் எந்த உறுப்பின் அல்லது எந்த அதிகாரியின் எந்த உரிமைகளையும் தற்காலிக

மாக நிறுத்திவைத்திருக்கிறேன் என்று உத்தரவு பிறப்பிக்கும் அதிகாரமும் தலைவருக்கு உண்டு.''

அரசியல் அமைப்பு நெருக்கடியைப்பற்றி அரசியல் திட்டத்தில் உள்ள விதிகள் இவை. இவற்றை விதிகள் என்று கூறுவதைவிட மாகாண சுய ஆட்சியைப் போட்டுப் புதைப்பதற்காகத் தோண்டப்பட்டுள்ள படுகுழிகள் என்று கூறினால் மிகவும் பொருத்தமாக இருக்கும். உண்மையும் அதுதான்!

மாகாண அரசாங்கத்தின் அதிகாரங்கள்,

மாகாண கவர்னரின் அதிகாரங்கள்,

மாகாண சட்டசபைகளின் அதிகாரங்கள்,

மாகாணத்தில் உள்ள ஏனைய சிறிய பெரிய அதிகாரிகளின் அதிகாரங்கள்,

ஆகிய இவ்வளவு அதிகாரங்களையும் அவரவர்களிடமிருந்து பறித்து எடுத்து, அவற்றை ஒன்று சேர்த்து ஓர் உருவாக்கி, ஒரு தனி மனிதராகிய தலைவரிடம் தருகின்றன இந்த விதிகள் என்றால், இவற்றை விதிகள் என்று எப்படிக் கூறமுடியும்? ஒவ்வொரு மாகாண அரசாங்கத்திற்கும் எதிர்காலத்தில் தரப்படக்கூடிய ஒரு கோப்பை நஞ்சு என்றுதானே கூறமுடியும்?

பஞ்சாயத்துப் போர்டுகளுக்காவது கொஞ்சம் கூடுதலான உரிமைகள் இருக்கும்—அந்தப் போர்டுகள் அழிக்கப் படுகிறபோது ஏன் என்று எதிர்த்துக் கேட்கிற சுதந்தர நிலைமையாவது அவைகளுக்கு இருக்கும்—மாகாண அரசாங்கங்களுக்கு அந்த அளவு உரிமை கூட இல்லை—மத்திய அரசாங்கத்தின் தலைவர் மனம் வைத்தால் போதும்—மாகாண அரசாங்கங்கள் மண் பொம்மைகள் ஆகப்பட்டுவிடும்—அவற்றால் ஒரு துரும்பைக்கூட இப்படி அப்படி அசைக்கமுடியாத அற்புத நிலை உருவாகிவிடும்.

ஏதாவது ஒரு மாகாணத்தில் ஏதாவது ஒரு சிறு கிளர்ச்சி ஏற்பட்டால் போதும்—அரசியல் அமைப்பு நெருக்கடி அந்த மாகாணத்தில் ஏற்பட்டுவிட்டது என்று கூறிவிடுவார் தலைவர்—கூறுவதோடா நிற்பார்! அவரே அந்த மாகாணத்தின் கவர்னராகி விடுவார்—அவரே அந்த மாகாண சட்டசபையுமாவார்—அவரே அந்த மாகாண அரசாங்கமாகவும் உருமாறி விடுவார்—அதாவது அந்த மாகாண கவர்னர், சட்டசபை, அரசாங்கம் ஆகிய அனைவரின் அதிகாரங்களேயும் அவரே ஏற்றுக்கொண்டு விடுவார்—மாகாணம் அவருடைய கோடி ஆதிக்கத்தின்கீழ் வந்துவிடும்.

மாகாண அரசாங்கத்தை நடத்திச் செல்லும் உரிமை ஒரு குறிப்பிட்ட கட்சிக்குக் கிடைத்து, மத்திய அரசாங்கத்தை நடத்திச் செல்லும் பெருமை வேறோர் கட்சிக்குக் கிடைக்குமானல்—அந்த இரு கட்சிகளுக்குமிடையே ஓயாத பகையும் தீராத வெறுப்பும் ஏராளமாக இருந்தால்—அந்த இரு கட்சிகளிலே ஒரு கட்சி வளர்ந்தால் மற்ற கட்சி அழிந்தே தீரவேண்டிய நிலே நாட்டில் இடம் பெறுமானல்—ஒன்று கீரியாகவும் மற்றொன்று பாம்பாகவும், ஒன்று வல்லூறுகவும் மற்றொன்று மாடப்புறுவாகவும், ஒன்று புலியாகவும் மற்றொன்று புள்ளி மானகவும் உவமை கூறத்தக்க நிலே இந்தியாவில் உலவிக் கொண்டிருக்குமானல், நிச்சயமாக, மத்திய அரசாங்கத்தை நடத்திச் செல்லும் கட்சி, மாற்றுக் கட்சியின் ஆதிக்கத்தில் உள்ள மாகாண அரசாங்கத்தைக் கலைத்துவிட்டு, மாகாண சட்டசபையையும் மூடிவிட்டு, அந்த மாகாணத்தைத் தன்னுடைய கோடி ஆதிக்கத்தின்கீழ் வைத்துக் கொள்ளத்தான் ஆசைப்படும்! அந்த ஆசையைத்தான் மிக எளிதிலே நிறைவேற்றிவைக்கின்றது அரசியல் அமைப்பு நெருக்கடி என்ற தலைப்பின் கீழாகக் தலைவருக்குத் தரப்பட்டுள்ள ஏராளமான அதிகாரங்கள்!

திராவிட முன்னேற்றக் கழகம், சென்னை மாகாணத்தில் ஆளும் கட்சி! அகில இந்திய காங்கிரஸ், மத்திய ஆட்

சிப் பீடத்தை அலங்கரிக்கும் கட்சி! நினைத்துப் பாருங்கள் —இப்படி ஒரு நிலை உருவாகுமானால்—மத்திய அரசாங்கத் தலைவர், அரசியல் அமைப்பு நெருக்கடி என்ற போலிக் காரணத்தைக் கூறிவிட்டு சென்னை அரசாங்க உரிமைகளைத் தானே எடுத்துக் கொண்டு, சென்னையை, தன் நேரடி ஆதிக்கத்தின்கீழ் கொண்டுவராமலா இருப்பார்!

பசித்தவன் எதிரே புசித்தற்குரிய பொருள்—அள்ளிக் கொள்ளாமலா இருப்பான்! பரம ஏழைக்குப் பக்கத்தில் பளபளப்பான பொன் நகைகள்—எடுத்துக் கொள்ளாமலா நிற்பான்? பெரிய பூனைக்கு எதிரில் சிறிய எலி—வேண்டாம் என்று ஒதுக்கிவிடும்? மத்திய ஆட்சியாளர் எதிரில், மாற்றுக் கட்சியினர்தம் ஆதிக்கத்தில் உள்ள மாகாண அரசாங்கத்தைக் கலைக்கும் உரிமை!—பயன்படுத்திக் கொள்ளாமலா போவர்!!

"தலைவர், அரசியல் அமைப்பு நெருக்கடி அறிக்கையைப் பிறப்பித்தபின்னர், டில்லி பாராளு மன்றத்தின் இரண்டு சபைகளிலும், அந்த அறிக்கையை ஆலோசனைக்காகச் சமர்ப்பிக்க வேண்டும்.

"அந்த ஆலோசனையின் முடிவாக, இரு சபைகளும் அந்த அறிக்கையை ஒப்புக்கொள்ள மறுத்துவிட்டால், அந்த அறிக்கை, அது பிறப்பிக்கப்பட்ட நாள் முதல் இரண்டு மாத காலம் தான் அமுலில் இருக்கமுடியும்.

"ஒருக்கால், பாராளுமன்றம், அந்த அறிக்கையை ஏற்றுக்கொள்வது என்று முடிவு செய்துவிட்டால் அறிக்கை, பாராளுமன்றம ஒப்புக்கொண்ட நாள் முதல் ஆறு மாத காலம் அமுலில் இருக்கும்.

"அந்த ஆறு மாத காலம் முடிந்துவிட்டால் மேற்கொண்டும் ஓர் ஆறு மாத காலம்

அறிக்கையின் வாழ்நாளை நீடிக்கும் உரிமை பாராளுமன்றத்திற்கு உண்டு.

“ இந்த ஆறு மாத கால தவணையை மீண்டும் மீண்டும் புதுப்பிக்கும் உரிமையும் பாராளுமன்றத்திற்கு இருக்கிறது.

“ ஆனால் எந்தக் காரணத்தைமுன்னிட்டும், மூன்று ஆண்டுகளுக்குமேல் அரசியல் அமைப்பு நெருக்கடி அறிக்கை அமுலில் இருத்தல் கூடாது.”

இந்திய அரசியல் திட்டத்தின் 356-வது விதி இது!

இந்த விதியின்படி, மூன்று ஆண்டு காலம் மத்திய ஆட்சியின் தலைவர் என்று சொல்லத்தக்க நிலையில் உள்ள இந்தியக் குடியரசுத் தலைவர், எந்த ஒரு மாகாணத்தின் அரசாங்கத்தையும் துச்சமென ஒதுக்கித் தள்ளிவிட்டு, அந்த மாகாணத்தைத் தானே எடுத்தாளும் தனிப் பெரும் நிலையைப் பெற்றிடமுடியும்!

* * *

இதுவரை இந்த அத்தியாயத்தில் நாம் எடுத்துக் காட்டிய விளக்கங்களிலிருந்து கீழ்க்கண்ட பல உண்மைகள் வெள்ளிடை மலையெனத் தெளிவாகத் தெரிகின்றன.

1. புதிய அரசியல் திட்டத்தின்படி இந்தியக் குடியரசின் தலைமை அதிகாரம் ஜனாதிபதி என்று சொல்லப்படும குடியரசுத் தலைவரிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது.

2. அந்தக் குடியரசுத் தலைவர், வயது வந்த இந்தியக் குடிமக்கள் அனைவரும் கலந்து கொள்ளக் கூடிய நேரடித் தேர்தல் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்டவர் அல்லர். ஒவ்வொரு மாகாணத்திலும் உள்ள கீழ்சபை, டில்லியில்

உள்ள கீழ்சபை—மேல் சபைகள் ஆகிய இவற்றின் உறுப்பினர்களால் மட்டுமே தேர்ந்தெடுக்கப்பட்டவர். இந்த முறை முழு ஜனநாயக முறை ஆகாது.

3. பாதுகாப்புப் பற்றிய நெருக்கடி அறிக்கை, பணம் பற்றிய நெருக்கடி அறிக்கை, அரசியல் அமைப்பு பற்றிய நெருக்கடி அறிக்கை ஆகிய மூன்று அறிக்கைகளைப் பிறப்பிக்கும் உரிமை குடியரசுத் தலைவருக்குள்ள ஏரானமான உரிமைகளில் மிக முக்கியமான ஓர் உரிமை.

4. இந்த மூன்று முக்கிய அறிக்கைகளைப் பிறப்பிக்கும் உரிமை, பொதுமக்களின் இருதயமாக அமைந்துள்ள பாராளுமன்றத்திடம் தரப்படாமல் ஒரு தனி மனிதராகிய தலைவரிடம் தரப்பட்டிருப்பது ஜனநாயகப் பண்புக்கு ஒரு சிறிதும் ஒத்தது ஆகாது.

5. இந்த அறிக்கைகளைப் பாராளுமன்றம் ஒப்புக்கொள்ள மறுத்துவிட்டாலுங்கூட, சில சமயங்களில் இரண்டு மாத காலமும், வேறு சில சமயங்களில் ஏழு மாத காலமும், இந்த அறிக்கைகளைத் தொடர்ந்து அமுலில் வைத்திருக்கும் உரிமை தலைவருக்கு இருக்கிறது. பாராளுமன்றத்தின் தீர்ப்பையும் மீறிச் செல்லும் இந்த உரிமை ஒரு தனி மனிதரிடம் தரப்பட்டிருப்பது, மக்கள் ஆட்சிக் கோட்பாட்டிற்கு முற்றிலும் முரணானது.

6. மேற்குறிப்பிட்ட மூன்று அறிக்கைகளில், பாதுகாப்பு அறிக்கை அமுலில் இருக்கும்போது, மாகாண அரசாங்கங்களுக்குச் சேரவேண்டிய வரித்தொகைகளை அவற்றிடம் சேர்க்காமல் மத்திய அரசாங்கத்திடமே நிறுத்திவைத்துக் கொள்ளும் உரிமை, தலைவருக்கு உண்டு. தலைவர் இப்படிச் செய்வதால் மாகாணங்கள் போதுமான பணமின்றித் திண்டாடித் திகைக்க நேரிடுகிறது. வேறு விதமாகச் சொல்வதானால் மாகாண சுய ஆட்சிக்கு மரண தண்டனை விதிக்கப்படுகிறது.

7. அதே பாதுகாப்பு அறிக்கை அமுலில் இருக்கும் போது, பேச்சுரிமை முதலாகிய அடிப்படை உரிமைகளை நீதிமன்றங்களில் நிலைநாட்டிக் கொள்ள மக்கள் முயன்றால், அந்த முயற்சியைத் தடுப்பதற்கான முழு உரிமையும் தலைவருக்கு இருக்கிறது.

8. பண நெருக்கடி அறிக்கை அமுலில் இருக்கும் போது, மாகாண சட்டசபைகளில் நிறைவேற்றப்படும் வரவு செலவு மசோதாக்கள் கூட தலைவரின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டு அவரின் ஒப்புதல் பெற்றாகவேண்டும், பெற்றால்தான் அந்த மசோதாக்கள் சட்டங்களாகலாகும்.

9. அரசியல் அமைப்பு நெருக்கடி ஏற்பட்டுவிட்டது என்ற காரணத்தைக் காட்டி, மாகாண சட்டசபைகள், மாகாண கவர்னர், மாகாண அரசாங்கம், மாகாண அதிகாரிகள் ஆகிய இந் நான்கு திறத்தாரின் அதிகாரங்களையும் தன் பெயருக்கே மாற்றிக்கொண்டு, எந்த ஒரு மாகாணத்தையும் தானே ஆளும் தனி உரிமை தலைவருக்கு உண்டு. இந்திய ஜனநாயகத்திற்கு ஏற்பட்டுள்ள மிகப் பெரிய ஆபத்து, தலைவர் என்னும் தனி மனிதருக்குள்ள இந்த உரிமை.

இந்த ஒன்பது உண்மைகளையும் நினைவிலே நிறுத்திக் கொள்ளுங்கள்! பிறகு கூறுங்கள், இந்தியக் குடியரசுத் தலைவர் ஒரு ஹிட்லராக ஆகவேண்டுமென்று எண்ணினால், அது என்ன அவ்வளவு கடினமான காரியமா?

தலைவருக்குத் தரப்பட்டுள்ள அதிகாரங்களைப் பொறுத்தவரை, இந்திய அரசியல் திட்டம், இந்தத் துணைக் கண்டத்துக்கு வகுத்துக் கொடுத்துள்ள பாதை, மக்கள் ஆட்சிப்பாதை அல்ல-பெர்லின் பாதை என்று நாம் கூறிட விழைந்தால், அது என்ன அவ்வளவு தவறான கூற்று?

அகில இந்திய காங்கிரஸ் ஆராய்ந்தாராய்ந்து தீட்டியுள்ள இந்தத் திட்டம், ஜனநாயகத் திட்டம் அல்ல, ஒரு

சர்வாதிகார சாசனந்தான் என்று, காங்கிரஸ் பிரபலஸ்தர் தோழர் எச். வி. காமத் அவர்களே பேசியிருக்கிறாரே அரசியல் அமைப்பு மன்றத்தில், அந்தப் பேச்சு என்ன பொய்யா?

* * * *

"குடியரசுத் தலைவருக்கு முன்னால் அளவுக்கு மீறிய அதிகாரங்கள் குவிக்கப்பட்டிருக்கின்றன என்று நான் கருதுகிறேன். அந்த அதிகாரங்களின் தன்மையைப் பார்க்கிறபோது, ஜெர்மானியக் குடியரசுத் தலைவருக்கு, அதாவது ஹிட்லருக்கு, அந்த நாட்டில் அளிக்கப்பட்ட அளவற்ற அதிகாரங்களே என் நினைவுக்கு வருகின்றன."

—அருண் சந்திர குகா

"ஜெர்மனியில் நிறைவேற்றப்பட்ட வீமார் அரசியல் திட்டம் எப்படி அந்த நாட்டில் ஒரு ஹிட்லர் உருவெடுப்பதற்கு உறுதுணையாக இருந்ததோ, அப்படித்தான் நாம் தீட்டும் இந்த அரசியல் திட்டத்தில் குடியரசுத் தலைவருக்குத் தரப்பட்டுள்ள அதிகாரங்கள், அந்தத் தலைவரையே ஒரு சர்வாதிகாரியாக மாற்றிவிடும் தன்மை படைத்தனவாக இருக்கின்றன."

—அகில இந்திய காங்கிரஸ் முன்னாள் பொதுச் செயலாளர்
சங்கர் ராவ்தேவ்

"இந்த அரசியல் திட்டத்தில் மத்திய அரசாங்கத்திற்குத் தரப்பட்டுள்ள அதிதீவிர உரிமைகள், ஜெர்மானிய நாட்டில் ஹிட்லரிசத்தைத் தோற்றுவித்த அந்த நாட்டு அரசியல் திட்டத்தின் விதிகளைப் போலவே காணப்படுகின்றன—என்பது என் கருத்து."

—பி. டி. சாக்கோ

"போராவசை படைத்த ஒரு தலைவர், இந்த அரசியல் திட்டத்தின் மூலம் அவருக்குத் தரப்பட்டுள்ள நெருக்கடிக்கால உரிமைகளையும் ஏனைய உரிமைகளையும் தக்க முறை

யில் பயன்படுத்தினால் மிக எளிதில் ஒரு சர்வாதிகாரியாக மாறிவிட முடியும்."

—சர்தார் ஹுகும் சிங்

"தலைவருக்குத் தரப்பட்டுள்ள நிர்வாக அதிகாரங்கள், ஒரு சர்வாதிகாரியாக மாறக்கூடிய நிலைமை அவருக்கு அளித்திருக்கின்றன என்பதில் சிறிதும் ஐயமில்லை."

—ஏமிய குமார் கோஷ்

அரசியல் அமைப்பு மன்ற உறுப்பினர்களில் ஐவர் அளித்துள்ள அறிவுரைக் கொத்து இது. இந்த அறிவுரைக் கொத்தை அர்த்தமற்றது என்றோ அபத்தக் களஞ்சியம் என்றோ அலட்சியப்படுத்த முடியுமா யாராலாவது? நாம் கேட்கிறோம், முடியுமா?

---

7. டில்லி தர்பார்!

ஸ்பெயின்
போர்த்துகல்
பிரான்ஸ்
பெல்ஜியம்
ஜெர்மனி
இத்தாலி
டென்மார்க்
ஹாலந்து
ஸ்வீடன்
நார்வே
செக்கோஸ்லோவேகியா
ருமேனியா
போலந்து
பின்லாந்து
லாட்வியா
லிதுவேனியா

முதலாகிய பல்வேறு நாடுகள் அடங்கிய ஒரு பூபாகம், ஐரோப்பா!

தமிழ்நாடு
ஆந்திரா
கேரளம்
கர்நாடகம்
வங்காளம்
அசாம்

குஜராத்
மகா கோசலம்
மராட்டியம்
பஞ்சாலம்
சிந்து
மத்ய பாரத்
உத்கல்
ராஜஸ்தான்
அகாலிஸ்தான்

என்று அழைக்கப்படும் வெவ்வேறு நாடுகள் அடங்கிய ஒரு நிலப்பகுதி, இந்தியா!

ஐரோப்பா என்பது ஒரு நாடு அல்ல—பல்வேறு நாடுகள் அடங்கிய ஒரு வட்டாரம்!

அதுவேபோலத்தான், இந்தியா என்பதும் ஒரு நாடு அல்ல—தனித்தனி நாடுகள் பலவற்றைத் தன்னகத்தே கொண்டுள்ள ஒரு நிலப்பகுதி!

ஒரே ஒரு நாடாக அமைந்திராமல், பல்வேறு நாடுகளைத் தன்னகத்தே கொண்டுள்ள பூபாகத்திற்கு, நிலநூல், நெடுங்காலத்திற்கு முன்னரே தந்துள்ள பெயர், கண்டம்!

இந்த நிலநூல் முறைப்படி அழைப்பதானால், ஐரோப்பாவை ஒரு கண்டம் என்றே அழைக்கவேண்டும்.

அதுபோலவே, இந்தியாவையும் ஒரு கண்டம் என்றே குறிப்பிடல்வேண்டும்.

இந்தியா என்பதாக ஒரு நாடு இல்லை—கேரளம், கர்னுடகம், குஜராத், வங்காளம், பாஞ்சாலம் என்றுதான் நாடுகள் உள்ளன.

இந்தியன் என்பதாக ஓர் இனமும் கிடையாது—மலேயாளிகள், கன்னடர்கள், குஜராத்திகள், வங்காளிகள், பஞ்சாபியர்கள் என்றுதான் தேசிய இனங்கள் உள்ளன.

இந்தப் பல்வேறுபட்ட இனங்கள் ஒவ்வொன்றும், தத்தமக்கென்ற—நாம் முன்னரே குறிப்பிட்டிருக்கிறோம்—தனித்தனியான மொழியும், வாழ்க்கை வழியும், கலாச்சார முறையும், வரலாற்றுப் புகழும் படைத்தவர்கள்.

நிலநூல், மொழிநூல், வரலாற்றுநூல், அரசியல்நூல் ஆகிய எந்தக் கோணத்திலிருந்து பார்த்தாலும் சரியே, இவர்கள் ஒவ்வொருவரும் தனித்தனி தேசிய இனத்தவர் என்பதை எவரும் உணர்ந்துகொள்ளலாம்.

ஆனால், ஆங்கிலேயர்கள், கிழக்கிந்தியக் கம்பெனி என்னும் தங்கள் வாணிப அமைப்பின் மூலமாக இந்தியாவைக் கைப்பற்றத் தொடங்கியபோது, இந்தியாவின் எந்தெந்தப் பகுதிகள் எந்தெந்த நேரத்தில் அவர்கள் கைக்குள் சிக்கிற்றோ, அந்தந்தப் பகுதிகளை அந்தந்த நேரத்திலேயே, ஒன்றாகத் திரட்டி ஓர் உருவாக்கி, அந்த உருவத்திற்கு ஒரு 'மாகாணம்' என்னும் பெயரையும் சூட்டிடலாயினர்.

தாங்கள் கைப்பற்றிய பகுதிகள் எக்காரணத்தை முன்னிட்டும் தங்கள் கையைவிட்டு நழுவி அகலக்கூடாது என்னும் ஒரே ஒரு கொள்கையை முன்னால் நிறுத்தி, அந்தக் கொள்கை நிறைவேற்றம் ஒன்றையே குறிக்கோளாகக் கொண்டு, அந்தக் குறிக்கோளுக்கு ஏற்றவண்ணம் ஆங்கிலேயரால் அமைக்கப்பட்டவையே இன்றைய தினம் இந்தியாவில் உள்ள பல்வேறு மாகாணங்கள்.

மொழி, வாழ்க்கை வழி, இன வரலாறு என்னும் அடிப்படை மீது உருவாக்கப்பட்டவை அல்ல இந்த மாகாணங்கள். பிரிட்டானிய ஆட்சியின் சொந்த சௌகரியத்திற்கு ஏற்ற வண்ணம் உருவாக்கப்பட்டவை.

"தனித்தனி இனத்திற்குத் தனித்தனி இடம்" அல்லது "வர்க்கத்திற்கு ஒரு வட்டாரம்" என்னும் அடிப்படையில் மாகாணங்களை உருவாக்கினால், ஒவ்வொரு தேசிய இனமும், கட்டுக்கோப்பும் ஒற்றுமையும்

பெற்றுவிடும்—அப்படிப் பெற்றுவிட்டால் அந்த இனம், வேகவேகமாக வளரத் தொடங்கிவிடும்—அப்படி வளர்ந்தால், அந்நிய ஆதிக்கத்தை அடியோடு ஒழித்துக்கட்ட வேண்டும் என்கிற விடுதலை ஆர்வமும் வீர உணர்ச்சியும் அந்த இனத்து மக்கள் அனைவரிடமும் துள்ளிக் குதிக்கத் தொடங்கிவிடும்—அப்படிப்பட்ட விழிப்புநிலை ஏற்படத் தொடங்கிவிட்டால் தங்கள் ஆட்சிக்குப் பேராபத்து ஏற்பட்டுவிடும் என்பதை ஆங்கிலேயர் நன்குணர்ந்திருந்தனர்.

எனவேதான் அவர்கள், மொழியை அடிப்படையாக வைத்து மாகாணங்களை அமைக்காமல், ஒரே மொழி பேசும் வட்டாரத்தைப் பல்வேறு துண்டுகளாக உடைத்து, ஒவ்வொரு துண்டை ஒவ்வொரு மாகாணத்தோடு இணைத்து, ஒவ்வொரு மாகாணத்தையும் பற்பல மொழிகள் பேசப்படும் ஒரு கதம்ப வட்டாரமாக உருவாக்கி, மொழிப் போராட்டம்—இனப் போராட்டம்—கலாச்சாரப் போராட்டம் ஆகியவற்றின் நிலைக்களமாக அமைத்துவைத்தனர் மாகாணங்களை.

பிரிட்டானியத்தின் 'பிரித்தாளும் தந்திரம்', மாகாணங்களை உருவாக்கியுள்ள முறையிலே, மிக அற்புதமாகத் தன் கைவண்ணத்தைக் காட்டியுள்ளது.

எடுத்துக்காட்டாக, கன்னடம் என்னும் ஒரே மொழியைப் பேசும் ஒரே இன மக்களில் ஒரு பகுதியினர் சென்னை மாகாணத்திலும், மற்றொரு பகுதியினர் பம்பாய் மாகாணத்திலும், வேறொரு பகுதியினர் மைசூர் சிற்றரசிலும், இன்னொரு பகுதியினர் மத்திய மாகாணத்திலுமாகப் பிரித்துவைக்கப்பட்டிருக்கின்றனர்.

அதுபோலவே ஆந்திர இனத்தவர்கள் சென்னை மாகாணத்தில் பலரும், ஹைதராபாத்தில் சிலருமாகச் சிதறுண்டு போகும்படி செய்யப்பட்டிருக்கின்றனர்.

இப்படியே இந்தியப் பூபாகத்தில் உள்ள ஒவ்வொரு தேசிய இனத்தவரும் தனித்தனி கூறுகளாகத் துண்டி

போடப்பட்டு வெவ்வேறு மாகாணங்களில் கிடந்து வதையும்படி செய்யப்பட்டுவிட்டனர் வெள்ளையர் வகுத்த விபரீத முறையால்!

ஒரே மொழி பேசும் ஒரே இன மக்கள் வெவ்வேறு மாகாணங்களில் தனித்தனியே வாழும்படி செய்யப்பட்டதால் அவர்களிடையே இருக்கவேண்டிய ஒற்றுமை உணர்ச்சி இல்லாமற் போயிற்று.

அதுபோலவே வெவ்வேறு மொழி பேசும் வெவ்வேறு இன மக்கள் ஒரே மாகாணத்தில் ஒன்றாக வாழும்படி செய்யப்பட்டதால், அவர்களிடம் இருக்கத் தேவையில்லாத வேற்றுமை உணர்ச்சி தளிர்விட்டுத் தழைக்கலாயிற்று.

இருக்கும் ஒற்றுமை குலைந்தது—இல்லாத வேற்றுமை வளர்ந்தது!

மொழிவழியாக மாகாணங்களை அமைக்காமல், தன் மனப்போன வழியாக அவற்றை அமைத்ததுதான், பிரிட்டிஷ் ஏகாதிபத்யம், இந்திய மக்களுக்குச் செய்த கேடுகளில் எல்லாம் பெருங்கேடு ஆகும்.

எனவேதான், இந்தியா விடுதலை பெற்றதும், இங்கே செய்யப்படவேண்டிய முதற்பெருஞ் செயல், மொழி வழி மாகாண அமைப்பு என்று இந்திய தேசிய காங்கிரஸ் அந்த நாளில் வீர முழக்கம் செய்தது.

ஏறத்தாழ முப்பது ஆண்டுக் காலமாக, தேசியத் தளபதிகள், மொழிவழி மாகாண அமைப்பே எங்கள் இயக்க இலட்சிய கீதம் என்று கிண்கிணி நாதம் எழுப்பிவந்தனர்.

அறப்போர்த் தளபதி காந்தியார், எண்ணற்ற முறை, மொழிவழி மாகாணப் பிரிவினையை ஆதரித்தும் வலியுறுத்தியும் சொற்பொழிவுகள் ஆற்றியுள்ளார்.

1920 லேயே, காங்கிரஸ், இந்தப் பிரிவினைக் கோரிக்கையை முற்றிலும் ஆதரித்துத் திட்டவட்டமான முறையில் தெளிவான தீர்மானம் நிறைவேற்றியிருக்கிறது.

காத்திபடிகளாரும் காங்கிரஸ் கட்சியும் மட்டுமே அல்ல, இந்தியாவில் உள்ள பொதுநல இயக்கங்கள் அனைத்துமே மொழிவழிப் பிரிவினை தேவை தேவை என்று தான் தத்தம் இலட்சிய வீணையை இசைத்து வந்துள்ளன.

எனவே, விடுதலை பெற்ற இந்தியாவின் ஆட்சிப் பீடத்தில் அமர்ந்திடும் உரிமை பெற்ற காங்கிரஸ் ஆளவந்தார்கள், அந்த உரிமையைப் பெற்றதும் முதலில் செய்திருக்கவேண்டிய நற்செயல், இந்தியாவில் உள்ள பழைய மாகாண அமைப்புகளைக் கலைத்து, மொழியின் அடிப்படையில் புதிய மாகாணங்களை உருவாக்குவதுதான்.

அவ்வாறு மொழிவழி மாகாணங்களை உருவாக்கிய பிறகு, அவர்கள், அந்த மாகாணங்கள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு மாகாணமல்ல—ஒவ்வொரு நாடு என்பதை வெளிப்படையாக அறிவித்திருக்கவேண்டும்.

அப்படி அறிவித்த பிறகு, அந்த ஒவ்வொரு நாட்டிலேயும், வயது வந்த வாக்காளர்கள் அனைவரும் கலந்து கொள்ளக்கூடிய பொதுத் தேர்தல் ஒன்றை நடத்தியிருக்க வேண்டும்.

அப்படி நடத்திய பிறகு, அந்தப் பொதுத் தேர்தலில் வெற்றிபெற்ற மக்கட் பிரதிநிதிகளைக்கொண்டதாக, ஒவ்வொரு நாட்டிற்கும் தனித்தனியே ஒவ்வோர் அரசியல் அமைப்பு மன்றம் நிறுவியிருக்கவேண்டும்.

அப்படி நிறுவியபிறகு, இந்தியாவில் உள்ள ஒவ்வொரு நாட்டிற்கும் இந்தியக் கூட்டாட்சியோடு இணைந்து இருக்கவோ, அல்லது பிரிந்து சென்று தனித்து நிற்கவோ முழு உரிமை உண்டு என்பது தெளிவாக விளக்கப்பட்டிருக்க வேண்டும்.

அப்படி விளக்கப்பட்டபிறகு, ஒவ்வொரு நாட்டின் அரசியல் அமைப்பு மன்றத்தையும் நோக்கி, அந்த நாடு, இந்தியாவுடன் இணைந்திருக்க விரும்புகிறதா அல்லது

தனியாட்சி செலுத்த விழைகிறதா என்பதைக் கேட்டிருக்க வேண்டும்.

அப்படிக் கேட்டபிறகு, இந்திய பூபாகத்தில் உள்ள பல்வேறு நாடுகளில், எந்தெந்த நாடு, தத்தம் அரசியல் அமைப்பு மன்றத்தின் மூலமாக இந்தியாவுடன் இணைந்திருப்பதற்கான விருப்பத்தைத் தெரிவிக்கிறதோ, அந்தந்த நாட்டின பிரதிநிதிகளை மட்டும் கொண்டதாக, ஒரு புதிய பொது இந்திய அரசியல் அமைப்பு மன்றம் நிறுவியிருக்க வேண்டும்.

அப்படி நிறுவப்பட்ட அரசியல் அமைப்பு மன்றத்தின் மூலமாக, தாமாக, தம் சொந்த விருப்பத்தின் காரணமாக, இந்தியாவுடன் இணைந்துள்ள பல்வேறு நாடுகளுக்கான ஒரு மத்திய ஆட்சியை உருவாக்கியிருக்க வேண்டும்.

அப்படி உருவாக்கப்பட்ட மத்திய ஆட்சியினிடம் பாதுகாப்பு, வெளிநாட்டு உறவு, போக்குவரத்து ஆகிய மூன்று துறைகளைப்பற்றிய அதிகாரங்களை மட்டும் ஒப்படைத்துவிட்டு மற்ற எல்லாத் துறைகளிலும், தன்னுடன் இணைந்து நிற்கும் தனி நாடுகளுக்கு முழு சுய ஆட்சி உண்டு என்று தெரிவிக்கப்பட்டிருக்கவேண்டும்.

அப்படிப்பட்ட நிபந்தனைகட்கு உட்பட்டு முதலில் இந்தியாவுடன் இணைந்து நிற்கும் நாடுகளிலும் ஏதேனும் ஒரு நாடு, பின்னொரு காலத்தில், இந்தியாவைவிட்டுப் பிரிந்துபோக விரும்பினால், அந்தக் காலத்தில், அப்படியே புதிய பிரிந்து போகும் உரிமை அந்த நாட்டிற்கு உண்டு என்பது அரசியல் திட்டத்தில் தெளிவாகக் குறிக்கப்பட்டிருக்க வேண்டும்.

எந்தெந்த நாடுகள் முதலிலிருந்தே இந்தியாவுடன் இருக்க மறுக்கின்றனவோ அவற்றை அவற்றின் விருப்பப்படி தனியரசு செலுத்தட்டும் என்று விட்டுவிட வேண்டும்.

புரட்சித் தலைவர் லெனின் முதலில் சோவியத் ரஷ்ய கூட்டாட்சியை உருவாக்கியபோது இந்த அரிய முறை

யைத்தான் கையாண்டார். எந்தெந்த நாடுகள் தாமாக முன் வந்து சோவியத் கூட்டாட்சியுடன் இருக்கவிரும் பினவோ அவற்றை மட்டும் சேர்த்துக்கொண்டு, எந்தெந்த நாடுகள் தனித்திருக்க விரும்பினவோ அவற்றைத் தனித் திருக்க அனுமதித்துவிட்டார்.

தலைவர் லெனின் மட்டுமல்ல, மக்கள் நன்மையை நாடும் மனவளம் படைத்தவர் எவரும் இந்த ஜனநாயக முறையைத்தான் கையாள்வர்.

ஆனால் இந்திய பூபாகத்திற்கான புதிய அரசியலை வகுத்த பூமான்கள் இந்த இனியமுறையைக் கையாண்ட னரா?

இல்லை!

பிரிட்டிஷ் ஏகாதிபத்யம் தன்னுடைய சுரண்டல் சுக போக வாழ்வுக்குத் துணைபுரியும் வகையில் உருவாக்கி வைத்திருந்த பழைய மாகாண முறையை அப்படியே ஒப் புக்கொண்டு, அந்த ஏகாதிபத்திய முறை மீது தங்களிட மிருந்த காங்கிரஸ் முத்திரையைப் பொறித்துவிட்டனர். மொழிவழி மாகாண எண்ணத்தை முற்றிலும் மறந்து விட்டனர்.

பழைய முறைப்படி அமைந்த மாகாணங்களை அப் படியே ஒப்புக்கொண்டது மட்டுமல்ல, அந்த மாகாணங் களை, அவற்றின் விருப்பத்தைக் கேளாமலே இந்திய மத்திய ஆட்சியில் வலுக்கட்டாயமாக இணைத்தும்விட்டனர்.

ஒவ்வொரு மாகாணத்திற்கு ஒவ்வோர் அரசியல் அமைப்புமன்றம் என்ற உன்னத தத்துவத்தை உதறித் தள்ளிவிட்டு இந்தியா முழுமைக்குமாக ஒரே ஒரு அரசியல் அமைப்பு மன்றத்தை உருவாக்கினர்.

அந்த அரசியல் அமைப்பு மன்றத்தையும், இந்தியா வில் உள்ள வயதுவந்த வாக்காளர்கள் அனைவரும் கலந்து கொள்ளக்கூடிய புதிய பொதுத் தேர்தல் நடத்தி உருவாக்க

வில்லை. சுதந்தர இந்தியாவில் அல்ல—அடிமை இந்தியாவில், இப்போது அல்ல—எப்போதோ ஒரு காலத்தில், எல்லா மக்களும் கலந்துகொள்ளக்கூடிய தேர்தலில் அல்ல—100-க்குப் 15 பேர் மட்டும் அதாவது, படித்தவர்களும் பணக்காரர்களும் மட்டும் கலந்துகொண்ட தேர்தலில், இந்தியாவுக்கான அரசியல் திட்டத்தை வகுப்பதற்காக என்று அல்ல—வெள்ளையர் ஆட்சியை வீழ்த்தும் வீரச் செயல் புரிவதற்காகவென்று, தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளைக் கொண்ட டில்லி சட்டசபை உள்ளதல்லவா, அதற்கே அரசியல் அமைப்பு மன்றம் என்ற புதிய பெயரைச் சூட்டிடலாயினர்.

மொழிவழி மாகாண அமைப்பு இல்லை—அந்த மாகாணம் ஒவ்வொன்றும் ஒவ்வொரு நாடு என்பதை ஒப்புக்கொள்ளும் நிலைமை இல்லை—அந்த ஒவ்வொரு மாகாணத்திற்கும் ஒவ்வோர் அரசியல் அமைப்பு மன்றமும் இல்லை—அந்த மாகாணங்கள் தாமாக முன்வந்து இந்தியாவுடன் சேர்வது என்பதும் இல்லை—சேர்ந்து நிற்கும் விருப்பம் அற்றவை பிரிந்து நிற்பது என்னும் உரிமையும் கிடையாது—பிரிட்டானிய முறைப்படி அமைந்த மாகாணங்கள் வலுக்கட்டாயமாகச் சேர்க்கப்படுகின்றன இந்தியாவுடன்—யாரால்?—பிரிட்டிஷ் ஆட்சியால் தேர்ந்தெடுக்கப்பட்ட பழைய டில்லி சட்டசபையால்!

இதற்குப் பெயர்தான் சுதந்தர அரசியல் திட்டமாம்! சொல்கிறார்கள் சுயராஜ்ய சூரர்கள் தைரியமாக! எவ்வளவு வெட்கக் கேடான நிலை!

அப்படித்தான் பழைய முறைப்படி அமைந்த மாகாணங்கள் அவற்றின் விருப்பத்தைக் கேளாமலேயே, முறையற்ற முறையால், இந்தியாவுடன் இழுத்துச் சேர்த்துக் கட்டப்பட்டனவே, அந்த மாகாணங்களுக்கு, பாதுகாப்பு—வெளிநாட்டு உறவு—போக்குவரத்து ஆகிய இத் துறைகள் தவிர்த்த ஏனைய எல்லாத் துறைகள் பற்றிய முழு

அதிகாரங்களாவது தரப்பட்டிருக்கின்றனவா—இல்லை—கிடையாது!

காங்கிரஸ் கண்ணியவான்களால் வகுக்கப்பட்டுள்ள "சுதந்தர" அரசியல் திட்டத்தில், பிரிட்டானிய ஆட்சியினரால் வகுக்கப்பட்ட அடிமை அரசியல் திட்டத்தில் இருந்த அளவு சுதந்தரம் கூட—அந்த அளவு உரிமைகள் கூட, மாகாண ஆட்சிகளுக்குத் தரப்படவில்லை.

இந்த அரசியல் திட்டத்தில் எங்குப் பார்த்தாலும் 'பலமான மத்திய சர்க்கார்'தான் தென்படுகிறது! மாகாண ஆட்சி—அதைத் தேடிப் பார்த்தால் கூட அது கண்ணில் தென்படுவதே இல்லை.

டில்லி! டில்லி! எல்லாம் டில்லி!—இந்த வாசகம் தான் இந்த அரசியல் திட்டத்தின் இருதய கீதமாக இருக்கிறது.

மாகாணங்கள், மத்திய ஆட்சியின் நிழல்களாகத்தான்—மத்திய ஆட்சி இட்ட கட்டளைபை மறக்காமல் நிறைவேற்றவேண்டிய ஏவலர்களாகத்தான் இருக்கின்றன!

மத்திய ஆட்சி ஆட்டுவித்தபடி ஆடிடும் பதுமைகள் தான் மாகாணங்கள் என்று கூறினால் அது தவறாகாது. உண்மையிலேயே அத்தகு நிலைதான் தரப்பட்டுள்ளது மாகாணங்களுக்கு—புதிய திட்டப்படி!

இந்த அரசியல் திட்டப்படி, ஆட்சிப் பீடத்தவரின் அதிகாரங்கள மூன்று வகையாகப் பிரிக்கப்படுகின்றன.

1. மத்திய ஆட்சிக்குரிய அதிகாரங்கள், 2. மாகாண ஆட்சிகளுக்குரிய அதிகாரங்கள். 3. இருசாராருக்கும் பொதுவாக உள்ள அதிகாரங்கள்.

மத்திய ஆட்சிக்குரிய அதிகாரங்கள் என்னென்ன?

இதோ பாருங்கள் பட்டியலை:—

1. இந்தியாவின் பாதுகாப்புக்கான எல்லா அதிகாரங்கள்.

2. கடல் படை, தரைப்படை, விமானப் படை, மற்ற படைகள் பற்றிய அதிகாரங்கள்.

3. பாசறை அமைப்பது; பாசறை அமைந்துள்ள வட்டாரத்தின் ஆட்சியை நடத்துவது.

4. கடல்—தரை—விமானப் படைகள் பற்றிய தொழிற்சாலைகள் நடத்துவது.

5. போர்த் தளவாடங்கள், கருவிகள், மருந்துகள் தயாரிப்பது.

6. அணுச் சக்தித் தயாரிப்பு, அதற்குத் தேவையான சரக்கப் பொருள்கள் பற்றிய அதிகாரங்கள்.

7. போர் நடத்துவதற்குத் தேவையானவை என்று பாராளுமன்றத்தால் தீர்மானிக்கப்படுகின்ற எல்லாத் தொழிற்சாலைகளின் அதிகாரம்.

8. உள்நாட்டுப் பாதுகாப்பு, வெளிநாட்டு உறவு, இவற்றின் தொடர்பான காரணங்களுக்காக விசாரணையின்றிக் காவலில் வைக்கும் உரிமை.

9. போர்—அமைதி—வெளிநாட்டு உறவு பற்றிய எல்லா அதிகாரங்கள்.

10. பிரஜா உரிமை.

11. ரயில்வேக்கள்.

12. தேசிய சாலைகள் என்று பாராளுமன்றத்தால் குறிப்பிடப்படும் நெடுஞ்சாலைகள்.

13. உள்நாட்டில் நீர்வழிப் போக்குவரத்து.

14. கடற்படைக் கல்வி புகட்டுவது; அப்படிப் பட்ட கல்வியை மாகாண ஆட்சியாளர்கள் புகட்டுவாராயின் அதனைக் கட்டுப்படுத்துவது.

15. கலங்கரை விளக்குகள்.

16. முக்கிய துறைமுகங்கள்—அவற்றின் அதிகாரி கள்—அவற்றின் ஆட்சிமுறையை வகுக்கும் உரிமை.

17. விமான வழிகள்; விமான நிலையங்கள்; விமானக் கல்வி; அந்தக் கல்வியை மாகாண ஆட்சிகள் புகட்டுமாயின் அதனைக் கட்டுப்படுத்தும் அதிகாரம்.

18. தபால்—தந்தி—இன்னபிற

19. நாணயங்கள் வெளியிடுவது முதலியன

20. இந்தியாவின் ரிசர்வ் பாங்கி

21. தபால் நிலைய சேவிங்ஸ் பாங்கி

22. வெளிநாடுகளுடன் வாணிபம்; ஏற்றுமதி இறக்குமதி அதிகாரம்.

23. மாகாணத்திற்கு மாகாணம் நடைபெறும் வாணிபம் பற்றிய அதிகாரங்கள்.

24. பாங்கி, இன்சூரன்ஸ் முதலான ஜாயின்ட் ஸ்டாக் (லிமிடெட்) கம்பெனிகள் பற்றிய அதிகாரங்கள்.

25. பாங்கிகள் பற்றிய அதிகாரம்

26. செக்குகள், பிராமிசரி நோட்டுகள், முதலியன பற்றிய அதிகாரங்கள்.

27. இன்சூரன்ஸ்

28. பங்கு மார்க்கெட்

29. ட்ரேட் மார்க், காபிரைட், பேடன்ட் உரிமைகள்.

30. சரியான எடைக்கற்கள், அளவைகள் முதலியவற்றை ஏற்படுத்துவது.

31. வெளிநாட்டுக்கு ஏற்றுமதி செய்யப்படும் பொருள்கள்—மாகாணத்திற்கு மாகாணம் விற்பனையாகும் பொருள்கள்—இவற்றின் தரத்தை நிர்ணயிப்பது.

32. பொது நன்மையை முன்னிட்டு மத்திய ஆட்சியிடமே இருந்தாக வேண்டும் என்று பாராளுமன்றத்தால் குறிப்பிடப்படும் தொழில்கள் பற்றிய அதிகாரங்கள்.

33. எண்ணெய்க் கிணறுகள்—சுரங்கங்கள்.

34. அவற்றில் வேலை செய்பவர்களைக் கட்டுப்படுத்தும் அதிகாரங்கள்.

35. பல மாகாணங்களிற் பாயும் ஆறுகள் பற்றிய அதிகாரங்கள்.

36 கடலில் மீன் பிடித்தல்.

37. உப்பு உற்பத்தி — விநியோகம்—அவைபற்றிய கட்டுப்பாடுகள்.

38. அபின் உற்பத்தி—ஏற்றுமதி.

39. பொதுமக்களிடம் காட்ட சினிமாப் படங்களை அனுமதிக்கும் அதிகாரம்.

40. விஞ்ஞானம், ஆராய்ச்சி, தொழில் நுணுக்கம் தொடர்பான உயர்தர நிலையங்களின் தரத்தை நிர்ணயிக்கும் அதிகாரம்.

41. குடிமதிப்பு (சென்சஸ்).

42. மாகாண சட்டசபைகள், மத்திய சட்டசபைகள் இவற்றின் தேர்தல் பற்றிய அதிகாரங்கள்.

43. உயர்நீதி மன்றங்களை உருவாக்குவது, முதலிய அதிகாரங்கள்.

44. விவசாய வருமானம் தவிர்த்த ஏனையவருமானங்கள் மீது வருமான வரி விதிக்கும் அதிகாரம்.

45. ஏற்றுமதி இறக்குமதி வரிகள் விதிப்பது.

46. புகையிலை வரி விதிப்பது.

47. கார்ப்பரேஷன் வரி விதிப்பது.

48. விவசாயம் தவிர்த்த ஏனைய முதல் (Capital) மீது வரி விதிப்பது.

49. விவசாயம் தவிர்த்த ஏனைய சொத்துகள்மீது மரணவரி விதிப்பது.

50. விவசாயம் தவிர்த்த ஏனைய சொத்துகள் மீது வார்சு வரி விதிப்பது.

51. ஸ்டாம்ப் வரி

52. பத்திரிகைகள்மீதும் அவற்றில் வெளியாகும் விளம்பரங்கள்மீதும் விற்பனை வரி விதிப்பது.

இவையும், இவைபோன்ற இன்னும் பல்வேறு துறைகளைச் சார்ந்த அதிகாரங்களும், "மத்திய ஆட்சிக்கு உரியவை" என்னும் பட்டியலில் பொறிக்கப்பட்டுள்ளன.

நாட்டின் பொதுப் பாதுகாப்பு—தபால், தந்தி, ரயில்வே முதலிய போக்குவரத்து அமைப்புகள்—வெளிநாட்டு உறவு ஆகிய மூன்று முக்கிய துறைகள் மட்டும் தான், ஒரு கூட்டாட்சி அமைப்பின்கீழ், மத்திய ஆட்சியாளரிடம் ஒப்படைக்கப்படவேண்டும். ஏனைய எல்லாத் துறைகளும் மாகாண ஆட்சியாளரின் முழுப்பொறுப்புக்கே விட்டுவிடப் படவேண்டும். இதுதான் ஜனநாயக முறை. இதுதான் சிறந்த வழி

ஆனால் நாம் பார்க்கிறோம் மேலே உள்ள பட்டியல் மூலமாக—இம் மூன்று துறைகள் தவிர்த்த ஏனைய பல துறைகள்—பலப்பல துறைகள்—மக்கட் சமுதாயத்தின் நாளும் இருதயமும் போன்ற முதன்மையான துறைகள்—முறைப்படி மாகாண ஆட்சியாளரிடமே இருந்திருக்க வேண்டிய துறைகள்—மத்திய ஆட்சியாளரிடம் ஒப்படைக்

கப்பட்டிருக்கின்றன. இது தவறு—பெருந் தவறு— மாபெருந் தவறு—என்றாலும் இத் தவற்றினைத்தான தாங்கரிய மகிழ்ச்சியுடன் திட்டவட்டமாகச் செய்துள்ளனர் திட்டம் தீட்டிய தேசபக்தக் குழுவினர்.

கடல் படையை, தரைப் படையை, விமானப் படையை, பிற படைகளை, வைத்து நடத்திக் கொண்டு செல்லும் அதிகாரம் மத்திய ஆட்சியிடம் இருக்கவேண்டியதுதான். ஆனால் பொருளாதார இயந்திரத்தை இயக்கிவைக்கும் மின்சார சக்திபோல அமைந்துள்ள பாங்கிகள் என்னும் அமைப்பைக் கட்டுப்படுத்தும் அதிகாரம் மாகாண ஆட்சியிடம்தானே இருக்கவேண்டும்—ஆனால், மத்திய ஆட்சியிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கிறதே—அது, ஏன்?

போர் வீரர்கள் தங்குவதற்கான பாசறைகளை அமைப்பதும், அந்தப் பாசறைகள் அமைந்துள்ள வட்டாரங்களின் ஆட்சியை ஒழுங்கு படுத்துவதும், போர்த்தளவாடங்கள்—மருந்துகள்—கருவிகள் தயாரிப்பதும ஆகிய இந்த அதிகாரங்கள் மத்திய ஆட்சியினருக்குத் தரப்படுவதை யாரும் வேண்டாம் என்று கூறி வெறுத்து ஒதுக்க மாட்டார்கள். ஆனால் பங்கு மார்க்கெட் பற்றிய அதிகாரத்தையும், 'பிராமிசரி நோட்' பற்றிய உரிமையையும், ட்ரேட் மார்க்' பற்றிய ஆட்சித் துறையையும், இன்சூரன்ஸ் பற்றிய இலாகாவையும் மாகாண ஆட்சிகளுக்கல்லவா அளித்திடல் முறை—ஆனால் மத்திய ஆட்சிக்குத்தானே அளிக்கப்பட்டிருக்கிறது—இது, எதற்காக?

அணுச்சக்தித் தயாரிப்பு டில்லி ஆட்சிப் பீடத்திடம் இருக்கட்டும்—ஆனால் சினிமாப் படங்களைப் பொதுமக்களிடம் காட்டுவதற்கு அனுமதிக்கும் அதிகாரம்—இது கூடவா 'டில்லி'யின் கரங்களிலேயே சிக்கவைக்கப்பட வேண்டும்—ஆனால் சிக்கவைக்கப்பட்டிருக்கிறதே—இது என்ன நீதி?

தபால்—தந்தி—மற்ற பல போக்குவரத்துத் துறைகள் மத்திய ஆட்சியினரின் மேற்பார்வையில் இருப்பதால்

இழுக்கு ஒன்றும் இல்லை ஆனால், கடலில் மீன் பிடிப்பது, உப்பை ஊராருக்கெல்லாம் வழங்குவது, சரியான எடைக்கற்களை நிர்ணயிப்பது, சங்கடம் தரும் அபினியை உற்பத்தி செய்வது—இவை எல்லாம் கூடவா மாகாண ஆட்சிகளிடம் ஒப்படைக்கக் கூடாத அவ்வளவு பயங்கரமான அதிகாரங்கள்—இல்லையே—என்றாலும் ஒப்படைக்கப் படவில்லையே—ஏன்?

மாகாண ஆட்சிகளுக்குத் தரப்பட்டுள்ள அதிகாரங்கள் மிக மிகக் கொஞ்சம்—ஆனால் மத்திய ஆட்சியினருக்குத் தரப்பட்டுள்ள உரிமைகள் மிக மிக அதிகம்—அரசியல் துறையில் இந்த அநீதி—ஆனால் அரசியல் துறையில் மட்டும்தான் இந்த அநீதி என்று கூறிவிட முடியாது—பொருளாதாரத் துறையில் மாகாண ஆட்சிகளுக்குத் தரப்பட்டுள்ள நிலை இதைவிட மட்டமானது; மன வேதனை மிகத் தரக்கூடியது.

தன் ஆட்சிக்கு உட்பட்ட மக்கள்மீது பல வகையான வரிகளை விதித்து, அந்த வரிகளுக்கான தொகையை வசூல் செய்வதுதான், எந்த அரசாங்கமும், தனக்கு வருமானம் தேடிக்கொள்வதற்காகக் கையாளும் முக்கியமான மார்க்கம்.

நீதி மன்றங்களில் போடப்படும் அபராதத் தொகை, டிராம்—பஸ்—ரயில் முதலிய போக்குவரத்துத் துறைகளை ஆட்சியாளரே எடுத்து நடத்துவதால் அவர்களுக்குக் கிடைக்கக்கூடிய இலாபம், உள்நாட்டு மக்களிடமிருந்தோ, வெளிநாட்டு ஆட்சியாளர்களிடமிருந்தோ வாங்கக்கூடிய கடன், ஆகிய வேறு பல துறைகளால் அரசாங்கம் தன் வருமானத்தைப் பெருக்கிக்கொள்ள முடியுமானாலும், வரி வசூல் முறையைப் போல, அதிக வருவாயைக் குறைந்த செலவில் அளிக்கக்கூடிய வசதி, அந்த வேறு வகை வருமானம் எதற்கும் கிடையாது.

வரிகளிலே இரண்டு வகை உண்டு. சில வரிகளால் கிடைக்கும் வருமானம் ஆண்டுக்கு ஆண்டு வளர்ந்து

கொண்டே போகும். முதலில் பத்து கோடிதான் வசூல் என்றிருக்கும். அடுத்த ஆண்டு, பத்து, பதினைந்தாகும். பிறகு, பதினைந்து, இருபதாகும். பிறகோ முப்பது—நாற்பது—ஐம்பது என்ற விதத்திலே, வரி, வளர்பிறையாகும்.

வேறு சில வரிகள் உண்டு. இவை, எந்த ஆண்டிலும் ஏறத்தாழ ஒரே நிலையினவாக இருக்கும்; சில வேளைகளில் இவற்றால் கிடைக்கும் தொகை தேய் பிறையாக மாறுவதுமுண்டு.

வருமானவரி, ஏற்றுமதி இறக்குமதி வரி, மாணவரி, ஸ்டாம்ப் வரி, பத்திரப் பதிவு வரி, விற்பனை வரி—இவைகளெல்லாம் முதல் வகையைச் சேர்ந்தவை; நாளுக்கு நாள் வளர்ந்து ஓங்கி உயர்ந்து நிற்கும் தன்மை படைத்தவை.

நிலவரி, வீட்டுவரி—இவைகளெல்லாம் இரண்டாவது பிரிவின்கீழ் வருபவை; தினம்தினம் வளர்ந்து செழிக்கும் ஆற்றல் அற்றவை.

இந்த இருவகை வரிகளிலே முதல் வகையைச் சேர்ந்தவைதாம் முக்கியமானவை; எந்த நாட்டு ஆட்சியாளரும் அளவற்ற ஆர்வத்துடன் நாடித் தேடிப் பெறுகின்ற உயர்ந்த நிலையில் நிற்பவை; ஏராளமான வருவாயை ஆட்சியாளரின் பொக்கிஷத்திற்குக் கொண்டு சேர்ப்பவை.

இவ்வளவு முக்கியமான வரிகள்—வளரும் வரிகள்—வருவாயை அளிக்கக்கூடிய வரிகள்—வாழ்க்கை நீரோடையை வளமாக்கக்கூடிய வாய்ப்பும் வசதியும் படைத்த வரிகள் நியாயமாகப் பார்த்தால் நிச்சயமாக மாகாண ஆட்சியாளரிடம்தான் ஒப்படைக்கப்படுதல் வேண்டும்.

கல்வி

சுகாதாரம்

போலீஸ்

சிறைச்சாலை
நீதிமன்றம்

இவை ஒவ்வொன்றும் ஏராளமான செலவை உண்டு பண்ணும் ஒப்பற்ற ஆற்றல் படைத்ததோர் ஆட்சித் துறை. இந்த ஆட்சித் துறைகள் அத்தனையும் மாகாண ஆட்சியாளர்களின் தனி உடமைகளாகத்தான் உள்ளன. மத்திய ஆட்சியாளரின் பொறுப்பில் உள்ள துறைகளாக இல்லை. இதன் காரணமாக செலவு ஏராளம் மாகாண ஆட்சியாளர்களுக்கு! எனவே அவர்களுக்கு வருவாயும் ஏராளமாக இருந்தாகவேண்டும். தெளிவாகக் கூறுவதானால், வளரும் வரிகள் எல்லாம் அவர்களிடமே தரப்படலவேண்டும்.

ஆனால் இந்திய அரசியல் திட்டம் என்ன செய்திருக்கிறது தெரியுமோ? விற்பனை வரி ஒன்றைத் தவிர மற்ற எல்லா வளரும் வரிகளையும் மத்திய ஆட்சியாளருக்கே தத்தம் செய்துவிட்டிருக்கிறது.

வருமான வரியும் மத்திய ஆட்சியினருக்குத்தான்; ஏற்றுமதி இறக்குமதி வரியும் மத்திய ஆட்சியினருக்குத்தான்! மரணவரியும் மத்திய ஆட்சியினருக்குத்தான்—வாரிசு வரியும் அதே ஆட்சியினருக்குத்தான்.

வளரும் வரிகளிலே விற்பனை வரி ஒன்றுதான் மாகாண ஆட்சியினருக்கு உரிமை உடையது! அதிலேகூட முழு உரிமை கிடையாது மாகாணங்களுக்கு! பத்திரிகைகள்மீதும், அவற்றிலே வெளியாகும் விளம்பரங்கள்மீதும், வெளிநாடுகட்கு ஏற்றுமதியாகும் பண்டங்கள்மீதும், உள்நாட்டுக்குள் இறக்குமதியாகும் பொருள்கள்மீதும், மாகாணத்தைவிட்டு மாகாணம் சென்று விலையாகும் வணிகப் பண்டங்கள்மீதும் விற்பனை வரி விதிக்கும் உரிமை மாகாண ஆட்சியாளருக்குக் கிடையாது. அந்த உரிமை மத்திய ஆட்சிக்குத்தான்.

நிலவரி ஒன்றுதான் மாகாண ஆட்சியாளரிடம் மிச்சமாகவும் முழுமையாகவும் விடப்பட்டுள்ள ஒரே ஒரு

முக்கியமான வரி. நிலவரி—நாம் முன்னரே குறிப்பிட்டிருக்கிறோம்—வளராத வரி! நிலவரி, வளராது! வளர முடியாது! ஆனால் குறையும்! சில சமயங்களில் மறையவும் செய்யும்! போதுமான அளவு மழை பொழியாவிட்டால், பயிர்கள சாவியாகிச் சாய்ந்து போய்விட்டால், வெயிலின் கொடுமையால் கதிர்கள் கருகிவிட்டால், உழவர் குலத்தவர்கள் துயரத்தால் துவளத் தொடங்கி விட்டால், நிலவரி குறைக்கப்படும்—சில வேளைகளில் கிஸ்தி முழுவதுமே வஜா செய்யப்பட்டுவிடும். மினுக் மினுக் என்று எரிவதும் சிறு காற்றடித்தால் அணைவது மான பரிதாப நிலையில் உள்ளதோர் அகல் விளக்கு, நிலவரி! அந்த அகல் விளக்கு ஒன்றை மட்டும் மாகாண ஆட்சியாளரிடம் மனமுவந்து அளித்துவிட்டு நாட்டிற்கெல்லாம் நல்ல வெளிச்சத்தை நயமாக அளிப்பீர் நல்லோரே நீர் என்று அவர்களைப் பார்த்துப் பதிகம் பாடுகிறது அரசியல் திட்டம்.

செலவு ஏராளம், வரவோ மிகக் கொஞ்சம்—இந்த நிலை மாகாண ஆட்சிகளுக்கு!

வரவு ஏராளம், செலவோ மிகச் சிறிது—இந்த வசதி மத்திய ஆட்சியினருக்கு!

ஒரு கண்ணுக்கு வெண்ணெய்! மற்றொரு கண்ணுக்கு சுண்ணாம்பு!

இதன் விளைவு என்ன ஆகும்?

என்ன ஆகும்?

ஒரு கண்ணின் பார்வை கெடும்! கெட்ட பிறகு அந்தக் கண், என்றென்றும் மற்ற கண்ணின் துணையின்றித் தனித்தியங்க முடியாத தரித்திர நிலையில் விழும்! மாகாண ஆட்சிகள் அத்தனையும் மத்திய ஆட்சியின் ஏவலர்களாக, எடுபிடிகளாக, கூப்பிட்ட குரலுக்கு என் என்று கேட்கவேண்டிய ஏழைகளாக, கோழைகளாக இருக்கவேண்டிவரும்.

"மத்திய ஆட்சியினருக்கு மட்டும் உரியவை" என்னும் பட்டியலின்கீழ் உள்ள அதிகாரங்களைக் கையாள்வதால் மட்டுமே இவ்வளவு ஏராளமான உரிமைகள் மத்திய ஆட்சியினருக்கு ஏற்படுகின்றன. ஆனால் அவர்களுக்கு உள்ள அதிகாரங்களின் எல்லை இவ்வளவோடு நிற்கவில்லை.

"மத்திய ஆட்சி—மாகாண ஆட்சிகள்—இரு சாராருக்கும் பொதுவான அதிகாரங்கள்" என்னும் பட்டியல் வேறு இருக்கிறது அல்லவா, அந்தப் பட்டியலின்கீழ் உள்ள உரிமைகள், தத்துவப்படி இரு சாராருக்கும் பொதுவானவை என்றாலும் நடைமுறையில், அவைகளும் மத்திய ஆட்சியினரின் சொந்த சொத்துகளாகவே இருக்கின்றன.

> "ஏதேனும் ஒரு சட்டத்தைச் செய்யும் உரிமை, மாகாண சட்டசபைகள், மத்திய சட்டசபைகள் இரு சாராருக்கும் பொதுவாக இருக்குமானல், அந்த சட்டத்தைப் பொருத்தவரை, மாகாண ஆட்சிகள் மத்திய ஆட்சிக்கு அடங்கி நடக்கவேண்டியவையே."

அரசியல் திட்டத்தின் 162-ம் விதி, இது! இரு சாராருக்கும் பொதுவான அதிகாரங்கள் என்பவை உண்மையில் மத்திய ஆட்சியின் அதிகாரங்களே என்பதற்கு இன்னும் என்ன விளக்கம் தேவை?

போகட்டும்! மத்திய ஆட்சிக்கு மட்டும் உரியவை, இரு சாராருக்கும் உரியவை, என்னும் இரண்டு பட்டியல்களின் கதிதான் இப்படி இருக்கிறது! மாகாண ஆட்சிகளுக்கு மட்டும் உரியவை என்னும் பட்டியல் இருக்கிறதே, அந்தப் பட்டியலில் உள்ள அதிகாரங்களாவது அந்தப் பட்டியலின் தலைப்புக்கு ஏற்றவண்ணம் மாகாண ஆட்சிகளுக்கு மட்டும் உரியவையாக இருக்கின்றனவா?

அதுவுமில்லை!

> "மாகாண ஆட்சிகளுக்கு மட்டும் உரியவை என்ற பட்டியலில் காணப்படும் ஏதாவது ஓர் அதிகாரம், நாட்டின் பொது நலனை முன்னிட்டு

மத்திய ஆட்சியிடம் இருக்கவேண்டியது அவசியம் என்று டில்லி மேல்சபை மூன்றில் இரு பங்கு மெஜாரிட்டி வோட்டுமூலம் தீர்மானித்து விட்டால், அப்படித் தீர்மானித்த நாள் முதல் அந்த அதிகாரம் மத்திய ஆட்சிக்கு உரியதாகி விடுகிறது.

"டில்லி மேல் சபையின் தீர்மானம் மூலமாக மத்திய ஆட்சிக்கு ஏற்பட்ட அதிகாரம் ஓர் ஆண்டு காலம் நடைமுறையில் இருக்கும்.

"டில்லி மேல் சபை, மீண்டும் மீண்டும் இத்தகைய தீர்மானங்களை நிறைவேற்றுவதன்மூலம் மேலும் மேலும் ஒவ்வோர் ஆண்டுக்கு, மாகாண ஆட்சிக்குரிய அதிகாரத்தை மத்திய ஆட்சியினருக்கு உரியதாக நிலைநாட்ட முடியும்."

அரசியல் திட்டத்தில் 117-ம் பக்கத்தில் காணப்படும் இந்த விதியின்படி, மாகாண ஆட்சிக்குரிய எந்த அதிகாரத்தையும், மத்திய ஆட்சி, தன்னுடையதாகவே உரிமைப் படுத்திக் கொள்ளமுடியும்.

எனவே,

மாகாண ஆட்சிகளுக்கு மட்டும் உரியவை,

மத்திய ஆட்சிக்கு மட்டும் உரியவை,

இரு சாராருக்கும் பொதுவாக இருப்பவை,

என்று மூவேறு பிரிவுகளாக அரசாங்க அதிகாரங்கள் பிரித்து வைக்கப்பட்டிருந்தாலும், உண்மையில் இந்த மூன்று பிரிவுகளைச் சேர்ந்த எல்லா அதிகாரங்களும் மத்திய ஆட்சியின் சொந்த அதிகாரங்களாகவே அமைந்துள்ளன என்பது தெளிவாகிறது.

சமாதான காலம் என்று சொல்லப்படுகிற சாதாரண காலத்திலேயே மாகாண ஆட்சிகளைத் தன் மனம்போன

படி ஆட்டிப் படைக்கும் மகத்தான அதிகாரம் மத்திய ஆட்சியினருக்கு இருக்கிறது என்றால், இனி, நெருக்கடிக் காலம் என்று சொல்லப்படுகிற காலத்தில் மத்திய ஆட்சியினரின் ஏகாதிபத்யம் எப்படி இருக்கும் என்பதை விளக்கமாகவா கூறிக்கொண்டிருக்கவேண்டும் — இயற்கையாக எவரும் உணர்ந்துகொள்ளக்கூடிய உண்மைதானே அது!

பாதுகாப்புபற்றிய நெருக்கடி ஏற்பட்டுவிட்டது அல்லது ஏற்பட இருக்கிறது என்று குடியரசுத் தலைவர் எண்ணினாலே போதும், உடனே, அவர் ஒரு நெருக்கடி அறிக்கையைப் பிறப்பித்துவிடுவார் என்பதை சென்ற அத்தியாயத்தில் படித்தோம் அல்லவா? அந்த நெருக்கடி அறிக்கை அமுலில் இருக்கும்போது, மாகாண ஆட்சியாளர்கள், தங்கள் மாகாணத்தை இப்படி இப்படித்தான் ஆளவேண்டுமென்று மத்திய ஆட்சியினர் கட்டளை பிறப்பிக்கலாம்; மாகாண ஆட்சிக்கு மட்டும் உரியவை என்று குறிப்பிடப்பட்டுள்ள எந்தத் துறையைப்பற்றிய எந்த சட்டத்தையும் மத்திய சட்டசபைகளே நிறைவேற்றலாம்; மத்திய ஆட்சியினர் அரசியல் திட்டப்படி மாகாண ஆட்சியினருக்குத் தரவேண்டிய நன்கொடைகள், பல்வேறு வரிகளில் பங்குகள் ஆகியவற்றைக் குறைத்துத் தரலாம், அல்லது தராமலே இருக்கலாம்; சுருக்கமாகக் கூறுவதானால் மத்திய ஆட்சியினர் மாகாண சுய ஆட்சிக்கு முற்றுப்புள்ளி வைத்துவிடலாம்.

இது, பாதுகாப்புபற்றிய நெருக்கடி ஏற்பட்டபோது மாகாணங்கள் பெறக்கூடிய நிலை.

இனி, அரசியல் அமைப்புபற்றிய நெருக்கடி ஏற்பட்டுவிட்டது என்று தலைவர் கருதுகிறபோது, அதாவது ஏதாவது ஒரு மாகாணத்தில் அரசியல் திட்டத்தின் விதி முறைகளின்படி செயல்கள் நடைபெற முடியாத நிலை ஏற்பட்டுவிட்டது என்று அவர் அறிக்கை வெளியிடுகிறபோது, மாகாணங்களின் 'நிலை' என்ன ஆகும்?

இதோ, விளக்கம் :—

அரசியல் நெருக்கடி அறிக்கை அமுலில் இருக்கும் காலத்தில்,

1. மாகாண அரசாங்கத்தின் எல்லா அதிகாரங்களையும் அல்லது தேவையான அதிகாரங்களை மட்டும் தலைவரே எடுத்துக் கொள்ளலாம்.

2. மாகாண கவர்னர்களின் எல்லா அதிகாரங்களையும் அல்லது தேவையான அதிகாரங்களை மட்டும் தலைவர் எடுத்துக் கொள்ளலாம்.

3. மாகாண சட்டசபைகளின் அதிகாரங்களை, தலைவர், டில்லி சட்டசபைகளுக்கு எடுத்துக் கொடுத்துவிடலாம்.

4. மாகாணங்களில் உள்ள எந்த அதிகாரி அல்லது நிறுவனத்திற்குத் தரப்பட்டுள்ள எந்த உரிமை அல்லது அதிகாரத்தையும், தலைவர், தேவையானபடி திருத்தலாம், மாற்றலாம், கூட்டலாம், குறைக்கலாம்.

இது, அரசியல் அமைப்பு பற்றிய நெருக்கடி அமுலில் இருக்கும்போது மாகாணங்கள் பெறக்கூடிய மகத்தான "அந்தஸ்து"!

இனி, பணம் பற்றிய நெருக்கடி ஏற்படுகிறபோது, அதாவது, இந்தியா முழுமையிலும் அல்லது அதன் ஏதாவது ஒரு பகுதியில்மட்டும், பணநிலை, நெருக்கடிக்கு உள்ளாகியிருக்கிறது என்று தலைவர் அறிக்கை பிறப்பிக்கிற போது, மாகாணங்கள் பெறக்கூடிய அந்தஸ்து பற்றிய தகவல் தேவையா?

இதோ, அதற்கான விவரம்:—

"பண நெருக்கடி அறிக்கை அமுலில் இருக்கும்போது, 1. பணத்துறையில் இன்னின்ன முறைகளில் தான் நடந்துகொள்ளவேண்டும் என்று மகாண ஆட்சிகளுக்குத் தாக்கீது பிறப்பிக்கும் உரிமை மத்திய ஆட்சிக்கு

உண்டு. 2. வரவு செலவுத் திட்டம் உட்பட மாகாணங்களில் நிறைவேற்றப்படுகிற எல்லா மசோதாக்களும் தலைவரின் ஒப்புதல் பெற அவரிடம் அனுப்பப்பட்டாக வேண்டும்.''

இது, பண நெருக்கடி வேளை உருவாகியுள்ள காலத்தில் மாகாண ஆட்சிகள் அடையக்கூடிய "ஆனந்தவாழ்வு"!

பலபடக் கூறுவானேன்—மத்திய ஆட்சியாளர்கள் மனம் வைத்தால், மாகாண சட்டசபைகளைக் கலைத்துவிட்டு, மாகாண கவர்னர்களின் "கைகளைக்" கட்டிப் போட்டுவிட்டு, மாகாண அரசாங்கத்தை பண்பொம்மையாக ஆக்கிவிட்டு, மாகாண நீதிமன்றங்களின் உரிமைகளை ஒடுக்கிவிட்டு, மாகாண மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட மாகாண சட்டசபைப் பிரதிநிதிகளை முற்றிலும் புறக்கணித்துவிட்டு, மாகாண மந்திரிகளை ஒதுக்கித் தள்ளிவிட்டு, தாங்களே, தங்கள் மனம்போனபடி, ஜாம் ஜாம் என்று ஆண்டுகொண்டிருக்கலாம் மாகாணங்களை!

ஆம்! அத்தகைய டில்லி தர்பார்தான், இந்திய அரசியல் திட்டத்தின், பக்கத்திற்குப் பக்கம் பாவசக் காட்சி வழங்குகிறது.

ஆனால், மாகாண சுய ஆட்சி—வர்க்கத்துக்கு ஒரு வட்டாரம் என்ற நிலை—இந்தியாவில் உள்ள பல்வேறு இனங்களுக்கும் ஒரு புதுவாழ்வு—இந்தியத் துணைக் கண்டத்தில் அடங்கியுள்ள ஒவ்வொரு நாடும் முழு வளர்ச்சி பெறுவதற்கான முதல்தரமான வாய்ப்பு—அது இல்லை இந்தத் திட்டத்தில்!

நிச்சயமாக இல்லை!

---

8. ஹிந்தி ஏகாதிபத்யம்

இந்திக்குத் தமிழ்நாட்டில் ஆதிக்கமாம்—நீங்கள்
எல்லாரும் வாருங்கள் நாட்டினரே!
செந்தமிழ்க்குத் தீமை வந்தபின்னும்—இந்தத்
தேகம் இருந்தொரு லாபமுண்டோ?

இப் புவி தோன்றிய நாள்முதலாய்—எங்கள்
இன்பத் தமிழ்மொழி உண்டுகண்டீர்!
தப்பிழைத்தார் இங்கு வாழ்ந்ததில்லை—இந்தத்
தான்தோன்றிகட்கு என்ன ஆணவமோ?

எப்பக்கம் வந்து புகுந்துவிடும்—இந்தி
எத்தனை பட்டாளம் கூட்டிவரும்?
அற்பம் என்போம் அந்த இந்திதனை—அதன்
ஆதிக்கம் தன்னைப் புதைத்திடுவோம்!

எங்கள் உடல் பொருள் ஆவியெல்லாம்—எங்கள்
இன்பத் தமிழ்மொழிக்கே தருவோம்!
மங்கை ஒருத்தி தரும் சுகமும்—எங்கள்
மாத் தமிழ்க் கீடில்லை என்றுரைப்போம்!

சிங்கமெனற இளங் காளைகளே!—மிகத்
தீவிரம் கொள்ளுவீர் நாட்டினிலே!
பங்கம் விளைத்திடில் தாய்மொழிக்கே—உடல்
பச்சைஇரத்தம் பரிமாறிடுவோம்!

தூங்குதல் போன்றது சாக்காடு—பின்னர்,
தூங்கி விழிப்பது நம் பிறப்பு!
தீங்குள்ள இந்தியை நாம் எதிர்ப்போம்—உயிர்
தித்திப்பை எண்ணிடப் போவதில்லை!

மாங்குயில் கூவிடும் பூஞ்சோலை—நமை
மாட்ட நினைக்கும் சிறைச்சாலை!
ஏங்கவிடோம் தமிழ்த் தாய்தனையே—உயிர்
இவ் வுடலை விட்டு நீங்கும் வரை!

உணர்ச்சியை, ஊக்கத்தை, உற்சாகத்தைத் தட்டி எழுப்பும் இந்த உன்னத கீதம், 1938—39 ஆம் ஆண்டு களில், தமிழகம் எங்கணும், நாள் தோறும், தன் வீரமுழக் கத்தை எழுப்பியபடி இருந்தது

புரட்சிக் கவிஞர் பாரதிதாசனார் இயற்றிய இந்த எழில் மிகு கீதம் மட்டும்தானா—இந்தக் கீதத்திலே இணைந்து நிற்கும் இன்பமான நாதம்—அந்த நாதத்தை ஊடுருவிப் பாயும் வீரத் தமிழ் உணர்ச்சி—அந்தவீர உணர்ச்சியை வித்தாகக் கொண்டு வீறிட்டெழுகின்ற அறப்போர் ஆர்வம்,—அந்த அளவற்ற ஆர்வத்தின் விளைவாக ஏற்படுகின்ற தமிழ்ப் பாதுகாப்புப் போராட்டம், இத்தனையும், அந்த இரண் டாண்டு காலம், தமிழகத்தையே ஒரு குலுக்குக் குலுக்கி விட்டன என்றால் அது மிகையாகாது.

1938—39 ல், அன்பர் இராஜகோபாலாச்சாரியார், சென்னை மாகாண முதலமைச்சர்! தூங்கிக் கிடக்கும் தமி ழர்களைத் தட்டி எழுப்பி அவர்களை வீரத்தின் சின்னங்க ளாகவும், அஞ்சாமையின் உருவங்களாகவும் ஆக்கவேண்டு மென்று எண்ணித்தானோ என்னவோ, அவர், வடநாட்டு இந்தியைத் தமிழ்நாட்டு மாணவர்கள் எல்லாரும் கட்டாய மாகப் படித்தாகவேண்டும் என்றோர் விபரீத உத்திரவைத் திடீரென்று நாட்டில் நடமாட விட்டுவிட்டார். அந்த உத்தரவு பிறந்ததுதான் தாமதம்—தமிழர்கள் போர்க் கோலம் பூண்டுவிட்டனர்—இன்பத் தமிழ் இருக்க இந்திச் சனியன் எமக்கெதற்கு என்று விண்ணதிர மண்ணதிர வீர முழக்கம் எழுப்பத் தொடங்கிவிட்டனர்—ஊருக்கு ஊர் போர்க்களம் உருவாகிவிட்டது.

"சேனை ஒன்று தேவை—பெருஞ் சேனை ஒன்று தேவை—செந்தமிழைக் காப்பதற்குச் சேனை ஒன்று தேவை" என்று அன்பழைப்பு விடுத்தனர் மொழிப் போர்த் தலைவர்கள். ஆயிரமாயிரம் இளங்காளைகள் அணி அணியாக வந்து நின்றனர் தமிழ்ப் பாதுகாப்புப் போராட்ட நிலையத்தில்.

காளையர்கள் மட்டுமா—இல்லை—கன்னியர்களும் வந்தனர். வீரர்கள் மட்டுமா—கிடையாது—வீராங்கனைகளும் ஓடோடி வந்தனர் களத்திற்கு.

புலவர்கள் ஓர் புறம்—புரட்சி வீரர்கள் ஓர் புறம். துறவிகள் ஓர் புறம்—தூய இளைஞர்கள் ஓர் புறம். மாணவர்கள் ஓர் புறம்—அவர்கள்தம் ஆசிரியர்கள் ஓர் புறம். இங்ஙனம் படை வரிசைகள் பலப்பல உருவாயின—ஒன்றிற்கொன்று சிறிதும் சளைக்காத படைவரிசைகள்—ஒன்றை ஒன்று வீரத்திலும் விவேகத்திலும் மிஞ்சி நிற்கும் படைவரிசைகள்!

தமிழ்ப் பெருங் கடல் மறைமலை அடிகளார்—வீரத் தமிழ்ப் புயல் நாவலர் பாரதியார்—நற்றமிழ் நனிகற்ற நல்லறிஞர் கா. சுப்ரமணியனார்—அஞ்சா நெஞ்சர் உமாமகேசுரனார் போன்ற பேரறிஞர்களும் புலவர் தலைவர்களும் போர்வத்துடன் போராட்ட அணிவகுப்பில் முன் வரிசையில் வந்து நின்று முத்தமிழ் முழக்கம் எழுப்பிடலாயினர்.

பெரியார் இராமசாமி—அறிஞர் அண்ணாதுரை—வீரர் விசுவநாதம்—கரூர் ஈழத்தடிகள் முதலானவர்கள் போர்த் தலைவர்களாக இருந்து, புரட்சி முரசு கொட்டி, பொன்னனை தமிழைக் காக்கவும் பொல்லாங்கு தரும் இந்தியைத் துரத்தவும் பெரியதோர் பட்டாளத்தைத் திரட்டிச் சிறந்ததோர் போராட்டத்தை நடத்தலாயினர்.

சிறை—தடியடி—அடக்குமுறை—உருட்டல் மிரட்டல்—ஜாமீன் பாணங்கள்—மித்திரபேதம் எதற்கும் அஞ்சவில்லை எழில்தமிழ் அன்னையின் மதலைகள் அன்னவர்கள்.

ஆட்சியாளர்கள் அம்புகள் பல தொடுத்தனர்—அடக்குமுறைக் குண்டுகள் பல வீசினர்—கடுங்காவல் தந்தும் கல் உடைக்கச் செய்தும் தமிழர்கள் உள்ளத்தை நோகச் செய்தனர்—தோகைமயில்கள் எனத்தகும் தோழி

யர்கள் கூட்டத்தையும் வெஞ்சிறையில் போட்டு அடைத்து வாட்டி வதைத்து வம்புகள் புரிந்தனர். என்றாலும் போர் நிற்கவில்லை—தமிழர் வீரம் மறையவில்லை—வீராங்கனைகளின் தீரமும் திடசித்தமும் துளியும் குறையவில்லை—போராட்டம் நாளுக்குநாள் வளரலாயிற்று—மேலும் மேலும் வளரலாயிற்று. அடக்குமுறை வலுக்க வலுக்க, போராட்டம், அரைக்க அரைக்க மணக்கும் சந்தனமாயிற்று; அடக்க அடக்க ஓங்கி எழும் பந்தாயிற்று; வெட்ட வெட்டத் தளிர்க்கும் தமிழ்ப் பயிராயிற்று. போராட்டத்தின் வேகமும் விறுவிறுப்பும், அளவும் ஆற்றலும், விநாடிக்கு விநாடி, விரைவான வளர்ச்சிபெற்று ஆட்சியாளர்களை அஞ்சி நடுங்கச் செய்தது.

சிறைச்சாலைக்குள் தள்ளப்பட்ட செந்தமிழர்களில் இருவர் வெறும் பிணங்களாகத் திருப்பித் தரப்பட்டனர் ஆச்சாரியார் ஆட்சியினரால். கண்டனர் அக் கர்லைகளின் வெற்றுடலைத் தமிழர்கள். பெரு வீரம் கொண்டனர். கட்டாய இந்தியை ஒழித்தன்றி ஒருபோதும் வீடு திரும்ப மாட்டோம் என்று சூளுரை புகன்றனர் அத் தூய உடல்கள் முன்னிலையில்.

அந்தச் சூளுரை வீண்போகவில்லை—1940 பிப்ரவரி 21-ஆம் நாள் கட்டாய இந்தி, விட்டேன் ஓட்டம் என்று அலறித் துடித்த வண்ணம் தென்னாட்டை விட்டு விரண்டோடிற்று—வெற்றி முரசு கொட்டினான் தமிழன்.

எட்டு ஆண்டுகள் கழிந்தன.

1948!

ஓமந்தூர் இராமசாமியார் முதலமைச்சர்! அன்பர் அவினாசிலிங்கனார், கல்வி அமைச்சர்!

அந்தக் காலத்தில் ஆகாத இந்தியை நுழைத்துவிட்டு அன்பர் ஆச்சாரியார் பட்ட வேதனையை அறியாமல் அமைச்சர் அவினாசியார் மறுபடியும் கட்டாய இந்தியைத் தமிழ்க் குழந்தைகளின்மீது திணிக்கலானார்.

மீண்டும் போராட்டம் தமிழகத்தில் — மறுபடியும் முன்னாள் முழக்கங்கள்—1948ல், 1938!—போர் மும்முரமாக நடைபெற்றது—சீறிப் போரிடும் சிங்க ஏறுயிற்று தமிழகம்—தியாகத் தீயில் குதித்துக் குதித்தெழும் தங்கக் கட்டிகளாயினர் தமிழர்கள் — முடிவு என்ன — சொல்லவும் வேண்டுமா — இரண்டே ஆண்டுகளுக்குள், வெற்றி வெற்றி என்று தமிழர்கள் துள்ளிக்குதிக்கும் இன்பநிலை பிறந்தது — 1950-ல் கட்டாய இந்தி கட்டோடு தொலைந்தது.

1938—1948—இரண்டுமுறை, இந்தி, இன்பத் தமிழகத்தின்மீது படையெடுத்தது—இரண்டு முறையும் அம்மொழி ஓடஓட விரட்டியடிக்கப்பட்டது வீரத் தமிழர்களால்!

இந்தி எதிர்ப்புப் போராட்டம் என்றவுடனே தமிழ் மக்கள் அத்தனைபேரும் ஒன்றுதிரண்டு ஒரே அணிவகுப்பில் நிற்கலாயினர் இருமுறையும்.

வேறு எந்தப் பிரச்சினையிலேயும், தமிழ்மக்களிடம் இவ்வளவு ஒற்றுமை இருந்ததில்லை இந்திக் கட்டாயத்தை எதிர்த்துப் போரிடுவது என்கிற இந்த ஒரு பிரச்சினையிலேதான் தமிழ் இனத்தவர் அத்தனைபேரும் தங்களுக்குள்ளே இருந்துவரும் வேறு வேற்றுமைகள் நூறுநூறுயிரத்தையும் துச்சமென ஒதுக்கித் தள்ளிவிட்டு தோளோடு தோள் கோத்துநின்று ஒற்றுமைக் கீதம் இசைத்திடலாயினர்.

சாதி வேற்றுமை—மத வேற்றுமை—கட்சி வேற்றுமை—தமிழர்களிடையேபே காணப்படும் எல்லா வேற்றுமைகளுமே தூள்தூளாகிவிட்டன இருமுறையும்.

"வெள்ளம்போல் தமிழர்கூட்டம் வீரம்கொள் கூட்டம்! அன்னார் உள்ளத்தால் ஒருவரே! மற்று உடலினால் பலராய்க் காண்பார்" என்பது வெறும் கவிதைதான் வேறு சமயங்களில்! ஆனால் இந்த இரண்டு சமயங்களில்

மட்டும் அந்தக் கவிதை வெறும் கவிதையாக இல்லை—உண்மை நிலைமையாகவே மாறிவிட்டது—மெய்யாகவே, தமிழர்கள் உடலினால் பலரே தவிர உள்ளத்தால் ஒருவரே என்னும் உயரிய நிலை நாட்டில் உருவாகியிருந்தது.

இந்தி மொழியின்மீது தமிழ்மக்களுக்கு இவ்வளவு வெறுப்புணர்ச்சியும், இவ்வளவு அருவெறுப்பும், இவ்வளவு ஆத்திரமும் ஆவேசமும் இருப்பதற்குக் காரணம், அந்த மொழி, வடமொழியின் வழிமொழியாக அமைந்திருப்பதுதான் ஆகும்.

வடமொழிதான் தமிழர் வாழ்வை வதைத்தமொழி; தமிழ்நாட்டு நாகரிகத்தைச் சிதைத்த மொழி; தமிழின் தூய்மையை அழகை அழித்த மொழி; தென்னாட்டுக் கலையை மூடநம்பிக்கைக் குகையாக மாற்றி அமைத்து மாசுபடுத்திய மொழி! ஆகவேதான் வட மொழியின் அடிப்படையில் எழுந்த இந்திமொழி தமிழகத்தில் நுழைகிறது என்றால் தமிழரிடையே எதிர்ப்புணர்ச்சி புயலென எழுகிறது; போராட்டம், சண்டமாருதமென உருவாகிறது; தமிழகம், கொந்தளிக்கும் கடலாக மாறி சீறி எழுந்து சினத்துடன் போராடுகிறது.

ஒன்றே குலமும் ஒருவனே தேவனும் என்னும் மொழியையே தங்கள் வாழ்க்கை வழியாகக் கொண்டு உயரிய வாழ்க்கையை வாழ்ந்தவர்கள் தமிழர்கள். அந்த அழகிய வாழ்க்கையின் அருமையைக் குலைத்து எண்ணத் தொலையாத சாதிகளையும் எழுதிமுடியாத கடவுள்களையும் தமிழ் நாட்டில் உற்பத்தி செய்து தமிழினத்தின் வீழ்ச்சிக்கு வித்திட்டது ஆரியம்.

அகநானூறு என்றும் புறநானூறு என்றும் நற்றிணை என்றும் கல்ல குறுந்தொகை என்றும் இயற்கைக்கு மாறுபடாத எழில் நிறைந்த இலக்கியங்களைத் தீட்டி மக்கள் உள்ளத்தைப் பண்படுத்திவந்த மாசற்ற இனத்தவர்கள் தமிழர்கள். அத்தகையவர்களிடையே கந்தபுராணம் என்றும் காஞ்சிப்புராணம் என்றும் பெரியபுராணம்

என்றும் கம்பன்காதை என்றும் பற்பல பொய்மூட்டைகளை அவிழ்த்துக் கொட்டி இவற்றின் பெயர்தான் இலக்கியம் என்று கூறித் தூய்மை நிறைந்த தமிழர் இலக்கியத்தைத் தும்பும் தூசும் நிறைந்ததாக மாற்றியது ஆரியம்.

பழந்தமிழ் என்னும் ஒரு பெரும் மொழியை தமிழ், தெலுங்கு, மலையாளம், கன்னடம், என்னும் பல மொழிகளாக உடைத்து, பழந்தமிழர் என்னும் ஒரு தனி இனத்தவரை தமிழர் தெலுங்கர் மலையாளியர் கன்னடர் என்னும் பல்வேறு பிரிவினராகப் பிரித்துப் பிளவு படுத்தி, பழந்தமிழ்நாடு என்னும் ஒரு திரு நாட்டை தமிழகம், ஆந்திரம், கேரளம், கருநாடகம் என்னும் பல தனி நாடுகளாகச் சிதறடித்துச் சீர்கேடுறச் செய்த சிறுமைப் பண்புடைய மொழி ஆரியம்.

ஆரியமொழியாலும், அந்த ஆரியத்தைத் தங்கள் தாய்மொழியாக எண்ணி மகிழ்ந்து இறுமாந்திருக்கும் இனத்தவராலுமே தமிழர் வாழ்க்கை—தமிழர் நாகரிகம்—தமிழர் கலை—தமிழர் மொழி—தமிழர் பண்பாடு—தமிழர் கலாசாரம் அத்தனையும் பாழ்பட்டன என்பதைத் தமிழகம் தெள்ளத் தெளிய உணர்ந்திருக்கிறது

உணர்ந்திருக்கும் காரணத்தால்தான், ஆரிய மொழியை மட்டுமல்ல அதனோடு இரத்தபாசமுடைய இந்திச் சிறுமொழியையும் தமிழகம் இவ்வளவு வீராவேசத்துடனும் இவ்வளவு திடநெஞ்சத்துடனும் எதிர்த்து நின்று அறப்போர் தொடுக்கிறது.

தமிழகத்தில் இந்திமொழிக்கு எத்துணை அளவு எதிர்ப்பு உள்ளதோ அதற்குச் சிறிதும் குறையாத அளவு, வங்காளத்திலும் அந்த மொழிக்கு எதிர்ப்பு இருக்கிறது. வங்காளிகள், தங்கள் அழகு மொழியைச் சிதைக்க வரும் வம்பு மொழியாக எண்ணி இந்தியை முற்றிலும் வெறுத்து ஒதுக்குகின்றனர்.

வங்காளம் மட்டுமல்ல, பாஞ்சாலம், அஸ்ஸாம், குஜராத், சீக்கியமண்டலம் ஆகிய பல்வேறு நாடுகளும்

இந்திமொழியின் ஆதிக்கத்தை எதிர்ப்பதிலே முழுமூச்சாகவே ஈடுபட்டுள்ளன.

உண்மையை ஒளிக்காமல் சொல்வதானல், இந்தியத் துணைக் கண்டம் முழுமையிலுமே, இந்திமொழி வெறுக்கப்படுகிற அளவு, வேறு எந்த மொழியும் வெறுக்கப்படவில்லை என்றே கூறியாகவேண்டும்.

இந்தியைத் தாய்மொழியாகக் கொண்ட உத்தர பிரதேஷ்,—மத்திய பிரதேஷ்—மக்களைத் தவிர, மற்ற இந்திய மக்கள் அத்தனைபேரும், தத்தம் மொழிகள் பெற்றுள்ள உயரிய இடத்தைக் கைப்பற்றி, அங்கு ஆதிக்கம் செலுத்திட விழையும் ஏகாதிபத்ய மொழி இந்தி—ஆகவே அந்த மொழிக்கு அதிக இடம் தருவது கூடாது—ஆகாது என்றே கருதுகின்றனர்.

இந்தியத் துணைக் கண்டம் முழுமையிலும் உள்ள இஸ்லாமியர்களோ, இந்திமொழியை. சென்ற ஒரு நூற்றூண்டு காலமாகவே, தங்கள் பகைமொழியாகக் கருதி வெறுத்து ஒதுக்கிவருகின்றனர்.

கி. பி. 1100 முதல் 1400 வரை, வேற்று நாட்டு இஸ்லாமிய மன்னர்கள் பலர் அடிக்கடி வட இந்தியாவின்மீது படையெடுத்து, இறுதியில், டில்லியில் தங்கள் அரசாட்சியை நிலைபெறச் செய்யலாயினர்.

இங்ஙனம் ஏறத்தாழ 600 ஆண்டுகளுக்கு முன்னல் டில்லியிலும் அதைச் சுற்றியிருந்த பகுதிகளிலும் இஸ்லாமிய அரசு நிலைபெற்ற காலத்தில், அந்தப் பகுதிகளில், வடமொழிச் சிதைவான ஒருவகை மொழிகள் பேச்சு வழக்கில் இருந்துவந்தன. அந்த மொழிகள் இலக்கண இலக்கிய வளம்பெற்றிருக்கவில்லை. அதுவரை அந்த மொழிகளில் சிறந்த கவிஞர்களோ இலக்கிய கர்த்தாக்களோ தோன்றி எத்தகைய உயிரோவியங்களையும் தீட்டினர்களில்லை. அடிக்கடி ஏற்பட்ட படையெடுப்புகளின் காரணமாகக் கண்டபடி சிதைவுற்றுச் சீர்கேடு அடைந்து,

எழுத்துவடிவம் பெறுமல், சிறந்த இலக்கியங்களும் இல்லாமல், பேச்சு வழக்கில் மட்டும் நடமாடிக்கொண்டிருக்கும் நலிந்த வாழ்வைப் பெற்றிருந்தன அம் மொழிகள். ஆசிரியர் மறைமலேயடிகள், அவர் இயற்றியுள்ள "ஹிந்தி பொது மொழியா?" என்னும் அரிய புத்தகத்தில் அழகுபட எடுத்துக் காட்டியுள்ளதைப் போல, டில்லி நகரத்தில் தங்கள் ஆட்சியை நிலைநாட்டிய வேற்றுநாட்டு இஸ்லாமிய அரசர்கள், தங்களுடன் கொண்டுவந்த அரபிமொழி—பாரசீக மொழிச் சொற்களை டில்லியில் அதுபோது வழங்கிவந்த மேற்குறிப்பிட்ட பல்வேறு பேச்சுமொழிகளோடு கலந்து வழங்கலாயினர். அந்தக் கலவையிலிருந்து பிறந்த மொழிதான் உருது என்னும் பெயர் பெற்று நடமாடலாயிற்று. உருது என்னும் சொல்லுக்குப் பொருள், மறைமலேயடிகளார் குறிப்பிடுவதைப்போல, பாசறை, பாடி அல்லது படைவீடு என்பதேயாகும். இஸ்லாமிய அரசர்கள் தங்கள் பாசறைகளிற் பேசிய கலவை மொழி தான் உருது என்பதை இந்தச் சொல்லும் இதன் பொருளுமே நன்கு விளக்குகின்றன.

இங்ஙனம் டில்லியில் வழங்கிவந்த வடமொழிச் சிதைவான ஒருவகை மொழிகளோடு அரபி—பாரசீகச் சொற்கள் கலந்து உருவாகிய உருதுமொழியில், நாளாக ஆக அரபிச் சொற்களும் பாரசிகச் சொற்களும் மேலும் மேலும் கலந்து, அந்த மொழியின் வடமொழி அடிப்படையே நாளடைவில் முற்றிலும் மறைந்துவிட்டது. இந்நிலையில், அம்மொழி, இந்துக்கள் இஸ்லாமியர் இரு சாராராலும் பேசப்பட்டு வந்தாலும், அதனை இஸ்லாமிய மொழி என்று கருதி வெறுக்கும் மனப்பான்மை இயல்பாகவே வடநாட்டு இந்துக்களுக்கு ஏற்பட்டுவிட்டது. ஏற்படவே, தங்களுக்கென்று தனியானதோர் மொழி தேவை என்ற எண்ணம் அவர்கள் உள்ளத்தில் வேரூன்றித் தழைக்கலாயிற்று. தழைக்கவே, லல்லுஜிலால், சடல் மிஸ்ரா போன்ற இந்துமதப் பெரும் புலவர்கள் ஒன்றுகூடி, உருதுமொழியிலிருந்த அரபி—பாரசீகச் சொற்களை யெல்

லாம் எடுத்துவிட்டு அந்தச் சொற்களுக்குப் பதிலாக வட சொற்களை ஏராளமாகக் கொண்டுவந்து நுழைத்துப் புதிய தோர் மொழியை உருவாக்கி அதற்குப் பெயர்தான் இந்தி என்றும் கூறிடலாயினர். உருது மொழி அரபி எழுத்தில் எழுதப்பட்டுவந்தது. இப்போது லல்லுஜிபோன்றவர்களால் உருவாக்கப்பட்ட இந்தி மொழி, வடமொழி எழுத்துக்களில் எழுதப்படலாயிற்று. இவ்வாறாக, உருதுமொழியிலிருந்த அரபி—பார்சி சொற்களை விலக்கி வடமொழிச் சொற்களைச் சேர்த்து, உருதுமொழியின அரபி எழுத்தை மாற்றி வடமொழி எழுத்தைக் கூட்டி, செயற்கைமுறையால் உருவாக்கப்பட்ட ஒருவகை விசித்திர மொழிக் கதம்பத்தின் பெயர்தான் "ஹிந்தி."

ஹிந்திமொழியை இவ்விதமாகப் பிறக்கச்செய்த பிரசவ டாக்டர் லல்லுஜிலால் வாழ்ந்த காலம் 19-வது நூற்றாண்டின் தொடக்கம். அதாவது இன்றைக்கு 150-ஆண்டுகளுக்குமுன். எனவே, இந்தி மொழியின் மொத்த வயதே 150-தான் ஆகிறது.

இந்தி மொழி உருவாக்கப்பட்ட முறை இயற்கையாகவே இஸ்லாமியரை மொழிப் போராட்டத்திற்கு அறைகூவி அழைக்கும் தன்மையதாக இருக்கிறதல்லவா, அந்த "அன்பழைப்"பை ஏற்கத் தவறவில்லை இஸ்லாமிய இனத்தவர்கள். என்றையதினம் மேலே குறிப்பிட்ட முறைப்படி இந்தி மொழி உருவாக்கப்பட்டதோ அன்றைய தினத்திலிருந்தே வடநாட்டு இந்துக்களுக்கும் இஸ்லாமியருக்குமிடையே மொழிப் போராட்டம் மும்முரமாக மூண்டுவிட்டது. வடநாட்டு இந்துக்கள், மேலும் மேலும் வடமொழிச் சொற்களைக் கலந்து, மிச்சம் மீதியிருக்கும் அரபிச் சொற்களை விலக்கி, தூய வடமொழிப் பாணியில் இந்தி மொழியை வளர்க்க முயன்றனர். இந்த முயற்சியைக் கண்ணுற்ற இஸ்லாமியர்கள், எட்டிக்குப் போட்டியாக, உருது மொழியிற் காணப்பட்ட வடசொற்களைக் கல்லியெறிந்துவிட்டு அவற்றிற்குப் பதிலாக ஏரான

மான அரபிச் சொற்களைக் கலந்து தூய அரபி முறையில் உருது மொழியைப் போற்றிப் பாதுகாக்கலாயினர். சமஸ்கிருதம் என்று அழைக்கப்படும் வடமொழி, இந்துமதத்தின் "புனிதமான" மொழி; "தெய்விக"மொழி; சமயச் சார்பான மொழி; புரோகிதமொழி. இந்துக்களின் மதச் சடங்குகள் யாவும் அந்த மொழியில்தான் நிகழ்த்தப்படுகின்றன. இந்துக்களின் திருமணத்தில் உயரிய இடம் பெற்றுத் திகழ்வது அந்த வட மொழிதான். இந்து மதக் கோயில்களில் பிரார்த்தனைக்குரிய மொழியாகவும் கடவுள்களிடம் தூது பேசுவதற்கு ஏற்ற கருவியாகவும் கருதப்படுவது அதே வடமொழிதான். இந்து மதத்தைச் சார்ந்த புரோகித வகுப்பாராகிய பிராமணர்கள் தங்கள் தாய்மொழியாகக் கருதிப் போற்றுவதும் அதே வடமொழியைத்தான். இந்துமதக் காவலர்கள் என்று தங்களைத் தாங்களே எண்ணிக்கொண்டிருக்கும் இந்து மதத் தலைவர்கள் யாவரும் இந்து மதத்தின் பொக்கிஷம் என்று எண்ணி மகிழ்வதும் அந்த வடமொழியையே தான். இந்து மதத்தின் ஆதி கிரந்தங்கள் — அடிப்படைத் தத்துவங்களின் பிறப்பிடங்கள்—வேதங்கள் புராணங்கள் இதிகாசங்கள்—உபநிடதம் முதலான மதநூல்கள் யாவும் இடம் பெற்றிருப்பதும் அந்த வடமொழியிலேயேதான். வடநாட்டு இந்துக்கள் தங்கள் சமய மொழியாகவும் புரோகித மொழியாகவும் உள்ள வட மொழியின் வழியிலே உருதுவைத் திருப்பி, வடமொழிச் சொற்களையே உருதுவில் நிரப்பி, வடமொழி எழுத்திலேயே உருதுவை எழுதவும் தொடங்கி, அப்படி எழுதப்பட்ட மொழிக்குப் பெயர் இந்தி என்று சொல்லவும் செய்வதைக் கண்ட இஸ்லாமியர்கள், இம் முயற்சிகளெல்லாம் இந்து மதப் பிரசாரப் பணியின் ஒரு பகுதியே என்று எண்ணிடலாயினர். இந்த எண்ணம் இஸ்லாமியர் வட்டாரத்தில் பவனிவரத் தொடங்கியதும், அந்த வட்டாரத்தைச் சேர்ந்த உருது பேராசிரியர்கள், தங்கள் மத மொழியாகவும் புரோகித மொழியாகவும் உள்ள

அரபிச் சொற்களை ஏராளமாகக் கலந்து உருதுமொழியை அரபி மொழியின் மறு பதிப்பாக மாற்றிவிட்ட முஸ்லீயலாயினர் இவ்வாறாக, வட இந்தியாவில், இந்தி மொழியின் பிறப்புக் காரணமாக ஏற்பட்ட மொழிப் போராட்டம், நாளாவட்டத்தில் மதப் போராட்டமாகவே மாறிவிட்டது.

1922-ம் ஆண்டில், அகில இந்திய காங்கிரஸ், இந்தி மொழியே இந்தியாவின் தேசீய மொழியாக இருக்கவேண்டுமென்று ஓர் தீர்மானத்தை நிறைவேற்றியது. காங்கிரஸ் இயக்கம் தன்னை எல்லா இந்தியர்களின் பொதுவான நிறுவனம் என்று சொல்லிக்கொண்டாலும் உண்மையில் அது பெரும்பாலும் இந்துக்களால் நிரப்பப்பட்ட ஓர் இந்து நிறுவனமாகவே இருந்துவந்தது—வருகிறது. அதன் தலைவர்களில் இரண்டொருவர் தவிர்த்த ஏனைய எல்லோரும் இந்துக்களே. அதன் மாபெருந் தலைவராகிய காந்தியாரும் இந்து மதக் கோலத்தில் காட்சிதந்த ஒரு முழு இந்துவேயாவார். பண்டித ஜவகலர்லால் நேரு, பாபு ராஜேந்திர பிரசாத் கோவிந்த வல்லபபந்த், சக்கரவர்த்தி இராசகோபாலாச்சாரியார் போன்ற ஏனைய முக்கிய தளபதிகளும் இந்துக்களே. மௌலானா ஆசாத் போன்ற இரண்டோர் இஸ்லாமியர் காங்கிரஸ் இயக்கத்தின் முதல் வரிசையில் காணப்பட்டனர் என்றாலும், இயக்கத்தை நடத்திச் செல்லும் நிர்வாக இயந்திரத்தில் முக்கிய பங்கு அவர்களுக்கு இல்லாமல் இருந்தது. எனவே இஸ்லாமியர் கண்களுக்கு, காங்கிரஸ், ஓர் இந்து மதக் கட்சியாகத் தென்பட்டதில் வியப்பு ஏதுமில்லை.

ஏற்கெனவே ஹிந்தி மொழிப் பிரசாரம் ஹிந்து மதப் பிரசாரத்தின் ஒரு பகுதியே என்று தீர்மானித்திருந்த இஸ்லாமியர்கள், இந்துக்கள் கட்சியாகிய காங்கிரஸ் கட்சியே அந்தப் பிரசாரத்தை முன்னின்று நடத்தும் காட்சியைக் கண்டதும், தங்கள் கருத்து உண்மைதான் என்பதை ஐயமற எடுத்துக் காட்டும் அரியதோர் ஆதாரம் இது இன்று எண்ணலாயினர். அந்த எண்ணம் ஆண்டுக்கு

ஆண்டு வளரத் தொடங்கிற்றே தவிர, 1922 முதல் இன்றைய வரை, துளியளவும் குறையவில்லை.

பாரத மாதா—வந்தே மாதரம்—உண்ணா விரதம்—சத்தியாக்கிரஹம்—ராம ராஜ்யம்—மஹாத்மா பட்டம்—இங்ஙனம் காங்கிரஸ் மேடைகளிலே கையாளப்பட்ட சொற்கள், சொற்றொடர்கள், கருத்துக்கள், கருத்துக்களின் வடிவங்கள், இலட்சிய முழக்கங்கள், அறப் போர் முறைகள், யாவும், தெரிந்தோ தெரியாமலோ, இந்து மதப் போக்கிலேயே அமைக்கப்பட்டுவரலாயின.

இத் தன்மைத்தாய சூழ்நிலையில், ஹிந்தி—உருது போராட்டம், ஹிந்து—முஸ்லிம் போராட்டமாக மாறி, பிறகு ஹிந்துஸ்தான்—பாகிஸ்தான் கிளர்ச்சியாக உருவெடுத்து, இறுதியில் இந்தியக் கண்டம் இரு வேறு நாடுகளாகப் பிரிக்கப்பட்டாகவேண்டிய அளவு வளர்ந்தோங்கி நின்றது இயற்கையே ஆகும்.

வடநாட்டிலே, அந்த நாட்டு ஹிந்தி மொழி வெறியர்கள், சண்டமாருத வேகத்தில் துவக்கிவைத்த ஹிந்திப் பிரசாரம், எப்படி, அங்கே ஒரு "பாகிஸ்தான்" தோன்றுவதற்கான மூல காரணமாய் அமைந்ததோ, அப்படித்தான், தென்னாட்டிலே, இந்த நாட்டு ஹிந்தி மொழிப் பக்தர்கள் 1938—39-ல் தொடங்கிவைத்த ஹிந்தித் திணிப்பு முயற்சி, இங்கே ஒரு "திராவிடத் தனியரசு" விரைவில் உருவாவதற்கான அடிப்படைக் காரணமாய் அமைந்திருக்கின்றது.

ஹிந்தி ஏகாதிபத்ய மனோபாவம், அதாவது, ஹிந்து மொழியைப் பேசாத மக்கள்மீதெல்லாம்கூட அந்த மொழியைத் திணிக்க எண்ணும் பேராசைப் பெருங் கொடுமை எண்ணம், இன்று உள்ளபடியே இனியும் இந்தியாவில் இடம் பெற்று இருக்குமானால், இந்தியா, பலப்பல பாகிஸ்தான்களாகிவிடும்! விரைவில்! ஆம்! நிச்சயம்!

ஹிந்தி, தமிழ்நாட்டு மக்களால் முழுமூச்சாக எதிர்க்கப்படும் மொழி.

ஹிந்தி, வங்காள இனத்தவரால் வெறுத்து ஒதுக்கப் படும் மொழி:

ஹிந்தி, அஸ்ஸாமிய மக்களால் வேண்டாம் என்று விலக்கப்படும் மொழி.

ஹிந்தி, பாஞ்சாலத்து வட்டாரத்தவரால் வேம்பென வெறுக்கப்படும் மொழி.

ஹிந்தி, சீக்கிய வர்க்கத்தவரால் கொடும்பாவி கட்டிக் கொளுத்தப்படும் மொழி.

ஹிந்தி, இஸ்லாமிய இனத்தவரை வலுச் சண்டைக்கு அழைத்து வீண் சண்டையை வளர்த்த மொழி.

ஹிந்தி, இந்தியாவிலேயே மிகப் பலரால் எதிர்க்கப் படும் ஒரே ஒரு மொழி.

ஹிந்தி, பாகிஸ்தான்—திராவிடத் தனியரசு முதலிய பிரிவினைக் கிளர்ச்சிகள் தோன்றி வளர மூல காரணமாக அமைந்த மொழி.

இத்தகைய ஒரு மொழியை எந்தக் காரணத்தை முன்னிட்டும் இந்தியாவின் அரசாங்க மொழியாக ஆக்கி யிருக்கக்கூடாது.

ஆனால் ஆக்கியிருக்கிறது இந்திய அரசியல் திட்டம்!

"தேவநாகரி லிபியில் (அதாவது வடமொழி எழுத்தில்) எழுதப்படுகின்ற இந்திமொழிதான் இந்திய மத்திய ஆட்சியின் அரசாங்க மொழியாக இருக்கும்" என்று, அரசியல் திட்டத் தின் 341-ம் விதியின் முதற் பிரிவு நமக்குத் தெரிவிக்கிறது.

ஹிந்தி மொழிதான் இந்தியாவின் அரசாங்க மொழி யாக இருக்குமாமே—ஏன்? என்ன காரணம்?

ஹிந்தி மொழிதான் இந்தியாவிலேயே மிகப் பழைய மொழி என்ற காரணத்தாலா? ஆம்—அந்தக் காரணத் தால்தான் என்று ஹிந்தி மொழியின் தாசானுதாசர்களும்

கூடக் கூற இயலாதே! ஹிந்தி மொழி நாட்டில் நடமாட ஆரம்பித்தே 150 ஆண்டுகள்தான் ஆகின்றன. ஆனால் தமிழ் மொழியோ இன்று தோன்றிற்று என்று அறுதியிட்டு உறுதிகூறமுடியாத அவ்வளவு பழமைப் பிறப்பு உடைய தாய் 5000 ஆண்டுகளுக்கு முன்னரே தொல்காப்பியம் என்னும் ஒல்காப் புகழ் படைத்த உயரிய இலக்கியத்தைத் தன்னகத்தேகொண்டிருக்கும் சீரும் சிறப்பும் மிக்கதாய், 2000 ஆண்டுகளுக்கு முன்னரே பத்துப்பாட்டு, எட்டுத் தொகை எனப் பெயர்படைத்த எழிலோவியங்கள் பதி னெட்டை உலகுக்கு அளித்த உயர்தனிப் பெருமை பிறங் கியதாய் ஒளி வீசித் திகழ்கின்றது. எனவே இந்தியாவில் உள்ள மொழிகளில் பழுத்து முதிர்ந்த வயது நிறைந்த மொழிதான் அரசாங்க மொழியாக வேண்டுமென்றால் அந்தச் சிறப்பு தமிழ்மொழிக்கல்லவா கிடைத்திருக்க வேண்டும்?

இந்தி மொழியை ஆட்சியாளர் மொழியாகத் தேர்ந் தெடுத்ததற்குக் காரணம் அதுதான் பழைய மொழி என் பது அன்று, அதுதான் இலக்கிய இலக்கண வளம் நிறைந்த மொழி என்பதே ஆகும் என்றாவது கூற முடி யுமா? அதுவும் முடியாதே! சிறப்புடையது என்று பெருமையுடன் எடுத்துக்காட்டக் கூடிய இலக்கியம் ஒன்று கூடக் கிடையாதே இந்தியில்! துளசிதாசர் இராமாயணத் தையும் கபீர்தாசர் கவிதைகளையும் தவிர இந்தி மொழியில் வேறு இலக்கியங்கள் இருக்கின்றன என்று ஒப்புக்குக்கூட கூற முடியாதே! திருக்குறளைப்போன்ற உலகப் பொது நூலோ, தொல்காப்பியத்தைப் போன்ற ஒப்பற்ற இலக் கண காவியமோ, சிலப்பதிகாரத்தைப் போன்ற நெஞ்சை அள்ளும் செஞ்சொல் ஓவியமோ, நற்றிணை குறுந்தொகை ஐங்குறுநூறு பதிற்றுப்பத்து பரிபாடல் முதலியவற்றைப் போன்ற முத்துக்களோ மாணிக்கங்களோ இந்தி மொழி யில் மருந்துக்கும் கிடையாவே! இந்தி மொழியின் பிறந்த நாள்தொட்டு இந்த நாள் வரை அந்த மொழியில் உருவாகி யிருக்கும் ஏடுகள் அத்தனையும் ஒன்றாகவைத்துப் பார்த்தா

லும் செந்தமிழில் உள்ள அகநானூறு என்னும் இலக்கியத்தின் ஒரே ஒரு பாடலுக்கு ஈடு நிற்க மாட்டாவே அவை அத்தனையும்? வங்காள மொழியில் உள்ள கீதாஞ்சலி என்னும் கவிதை நூலின் ஒரு சில அடிகளையும் நெருங்க முடியாதே அத்தனை ஏடுகளாலும்! இலக்கிய வளமும் தெளிவும் நிரம்ப அமைந்தது என்ற காரணத்திற்காக ஏதேனும் ஒரு மொழியை இந்தியாவின் அரசாங்க மொழியாக ஆக்குவது என்றிருந்தால் அந்த மொழி தமிழ் அல்லது வங்காளியாக அல்லவா இருத்தல் வேண்டும்?

"இந்தி மொழி, பழமைச் சிறப்பும் பண்பட்ட இலக்கியமும் உடையது அல்ல—ஆனல் அதுதான் இந்தியாவிலேயே மிகப் பலரால் பேசப்பட்டுவரும் மெஜாரிடி மொழி—அரசாங்க மொழியாக அது தேர்ந்தெடுக்கப்பட்டதற்கான காரணம் இதுதான்" என்று சிலர் கூறக் கூடும். இந்த வாதமும் பொய்யான வாதமே ஆகும்.

1939-ம் ஆண்டு ஜூன் மாதம் பம்பாயில் கூடிய அகில இந்திய காங்கிரஸ் பொதுக்குழுவின் தீர்மானப்படி இந்தியா மொழிவழிப்படி பிரிக்கப்பட வேண்டும் என்பதற்குக் குறிப்புத் தரப்பட்டுள்ளது. அதன்படி இந்தியா 19 மாகாணங்களாகப் பிரிக்கப்பட்டு அந்தந்த மாகாணத்தின் மொழி எது எது என்பதும் அந்தத் தீர்மானத்திலேயே குறிக்கப்பட்டுள்ளது :—

	மாகாணம்	மொழி
1.	ஆந்திரா	தெலுங்கு
2.	அசாம்	அசாமீஸ்
3.	பீகார்	இந்தி
4.	வங்காளம்	வங்காளி
5.	பம்பாய் (நகரம்)	மாராத்தி—குஜராத்தி
6.	டில்லி	இந்தி
7.	குஜராத்	குஜராத்தி

8.	கர்னுடக்	கன்னடம்
9.	கேரளம்	மலேயாளம்
10.	மகாகோசல்	இந்தி
11.	மராட்டியம்	மராத்தி
12.	நாகபுரி	மராத்தி
13.	எல்லேப்புறம்	புஷ்ட்டு
14.	பாஞ்சாலம்	பஞ்சாபி
15.	சிந்து	சிந்தி
16.	தமிழகம்	தமிழ்
17.	ஐக்கிய மாகாணம்	இந்தி
18.	உத்கல்	ஒரியா
19.	விதர்ப்பா	மராத்தி

அகில இந்திய காங்கிரஸ் பொதக்குழுவின் இத்தீர்மானப் படி இந்தியாவில் மொத்தம் உள்ள 19 மாகாணங்களில் பீகார், டில்லி, மகாகோசல், ஐக்கிய மாகாணம் ஆகிய நான்கு மாகாணங்கள் மட்டும்தான் இந்தி மொழியைத் தாய் மொழியாகக் கொண்டவை என்பதும், மற்ற 15 மாகாணங் களும் வேறு பல மொழிகளேயே தாய்மொழிகளாகக் கொண்டவை என்பதும் தெளிவாக விளங்குகின்றன.

"ஹிந்தி மொழிதான் இந்தியாவில் பெரும்பான்மை யோரால் பேசப்படும் மொழி! எனவேதான் அது இந்திய அரசாங்க மொழியாக ஆக்கப்பட்டிருக்கிறது" என்னும் வாதம் முற்றிலும் தவறானது என்பதை விளக்க இதைவிட இன்னும் என்ன ஆதாரம் தேவை?

மொத்த மாகாணங்கள் 19

அவற்றில் இந்தியைத் தாய் மொழியாகக் கொண்ட மாகாணங்கள் 4

இந் நிலையில் இந்திதான் பெரும்பான்மையோரால் பேசப்படும் மொழி என்று புகல்வது பொய்யுரை அன்றி வேறென்ன உரையாகும்?

பெரும்பான்மையோரால் பேசப்படும் மொழி என்ற காரணத்திற்காக அல்ல—அரசாங்க நிர்வாகத்தையும் நடைமுறையையும் திட்டங்கள் கொள்கைகள் மசோதாக்களையும் எடுத்து விளக்குவதற்கு ஏற்ற சொற்களும் பண்பாடும் நிறைந்த மொழி இந்தி—எனவேதான் அது அரசாங்க மொழியாக நிலைநாட்டப்பட்டிருக்கிறது என்றுவது கூறமுடியுமா? முடியாது—நிச்சயமாக முடியாது. அரசாங்க நிர்வாகம், அரசியல் கலை, சட்ட நுணுக்க விளக்கங்கள், பாராளுமன்றச் சொற்போர்கள்—இவற்றின் தொடர்பான சொற்களையும் சூழ்நிலையையும் இனித்தான் இந்தியில் உற்பத்தி செய்தாக வேண்டும்—இப்போது, இந்தி, இந்தத் துறைகளைப் பொறுத்தவரை, 'பவதீ பிக்ஷாந் தேஹீ'தான்; பிற மொழிகளிடம் கடன் வாங்கியாக வேண்டிய பரிதாப நிலையில் உள்ளதோர் வறுமை மொழிதான்.

நெடுங்காலமாக வாழ்ந்துவருவதால் இயற்கையாக ஏற்படக்கூடிய வளமும் தெளிவும் அற்ற மொழி, இந்தி.

நூற்றி ஐம்பது ஆண்டுகளுக்கு முன்தான் உருவாக்கப்பட்டு இப்போதுதான் தத்தித் தத்தி நடக்க முயலும் குழந்தை மொழி; இந்தி.

அனுபவத்தால் ஏற்படவேண்டிய கம்பீரம், பெருமை, கருத்து ஆழம், பல துறைவளர்ச்சி ஆகியவற்றில் ஒன்றைக் கூட இன்றளவும் அடையாத மொழி, இந்தி.

தமிழ் நாட்டுத் திருக்குறளைப் போலவோ ஆங்கில நாட்டு ஷெல்லியின் கீதங்களைப்போலவோ பெருமையுடன் எடுத்துக் காட்டக்கூடிய இலக்கியம் ஒன்று தானும் பெறாத மொழி, இந்தி.

உலகத்திலேயே மிகக் கேவலமான, தவறான, முறைகேடான இலக்கணத்தைப் பெற்றுள்ள மொழி, இந்தி.

காங்கிரஸ் கணக்குப்படியே கூட, இந்தியாவில் உள்ள 19 மாகாணங்களில் 4 மாகாணங்களில் மட்டுமே பேசப்படும் மொழி, இந்தி.

அரசியல் கலைச் சொற்களைப் பிற மொழிகளிடம் கடன் வாங்கினாலன்றித் தன்னிடம் அறவே இல்லாத முறையில் அமைந்திருக்கும் "அற்புதமான" மொழி, இந்தி.

சுருக்கமாகச் செல்வதானால், இந்தியாவின் அரசாங்க மொழியாக இருப்பதற்குத் துளியளவும் தகுதியற்ற மொழி—இந்தி!

இத்தகைய இந்தியை இந்திய மத்திய அரசாங்கத்தின் அதிகார பூர்வமான மொழியாக அமைத்திருக்கிறது இந்திய அரசியல் திட்டம்.

இந்தப் புதிய திட்டம் இந்தியத் துணைக் கண்டத்து மக்களுக்குச் செய்துள்ள மன்னிக்க முடியாத தவறுகள் சிலவற்றில் மிக முக்கியமானதோர் தவறு, இது!

அரசியல் திட்டம் தீட்டியவர்கள், நேர்மையான முறையிலும், பகுத்தறிவுக்கு ஒத்த வகையிலும், குள்ள மனோபாவம் அற்ற நிலையிலும் நடந்து கொண்டிருப்பார்களானால், ஒரு தகுதியும் அமையப் பெறாத இந்தியை அல்ல—எல்லாத் தகுதிகளும் அமையப் பெற்ற ஆங்கிலத்தையே இந்தியாவின் அரசாங்க மொழியாகத் தேர்ந்தெடுத்திருப்பார்கள்.

உலகத்திலேயே மிக அதிகமான வளர்ச்சியைப் பெற்றிருக்கும் உன்னதமான மொழி, ஆங்கிலம். உலகத்தில் உள்ள மற்ற எல்லா மொழிகளின் இலக்கியங்களும் ஆங்கிலத்திலே மொழி பெயர்த்து வைக்கப்பட்டிருக்கின்றன. ஆங்கிலம் என்கின்ற ஒரு மொழியைப் பயில்வதன் மூலம்

உலகத்தில் உள்ள ஏனைய எல்லா மொழிகளையும் பயில்வதால் பெறக்கூடிய அறிவு வளர்ச்சியை எளிதில் நாம் பெறமுடியும். மனநூல், மருத்துவநூல், பொறி இயல் நூல், வான ஆராய்ச்சி நூல், பூத நூல், வேதி நூல், மொழி நூல், வரலாற்று நூல், காவியம், ஓவியம், சிற்பம், நாடகம், நிழல் படம், பேசும் படம் எல்லாத் துறைகளிலும் முழுவளர்ச்சி பெற்றிருக்கும் மொழி ஆங்கிலம், ஆங்கிலத்தில் எல்லாத் துறைகளைப் பற்றியும் ஏராளமான புத்தகங்கள் இருக்கின்றன. ஆங்கிலத்தில் உள்ள அளவு புத்தகங்கள் உலகில் வேறு எந்த மொழியிலும் கிடையாது. ஆங்கிலம், அறிவுக் கடல்; உலக இலக்கியப் பொக்கிஷம். எனவே ஆங்கிலம் இந்திய அரசாங்க மொழியாகவும் பொதுமொழியாகவும் இருக்குமானல் இந்திய மாணவர்கள் உலக இலக்கியச் செல்வங்கள் அனைத்தையும் நேரில் கண்டு நுகர்ந்து மகிழ முடியும். அவர்களின் உள்ளமும் உணர்வும் சிறந்த வளர்ச்சியைப் பெற்று, அறிவுப் பாதையில் வீரநடை போட்டு நடக்க முடியும். ஆனல் இந்தி மொழி இந்தியாவின் பொதுமொழியாக இருக்குமானல் இந்திய மாணவர்கள் அந்த மொழியிலே உள்ள இலக்கிய வறுமையைத் தான் கண்டு கண்டு மனம் நொந்து வேதனைப்பட்டு வாழ வேண்டும்.

ஆங்கிலம் அற்புதமான அளவுக்கு அருமையாக வளர்ந்திருக்கும் அழகான மொழி என்பது மட்டுமல்ல உண்மை, ஆங்கில மொழிதான் இன்றைய தினம் உலகப் பொதுமொழியாக இருந்து வருகிறது. ஐக்கிய நாடுகள் கழகம் என்று சொல்லப்படும் உலக மன்றத்தின் நிகழ்ச்சிகள் யாவும் ஆங்கிலத்தில்தான் நடைபெறுகின்றன. உலகத்தில் உள்ள பல்வேறு நாடுகள் ஒன்றுடன் ஒன்று கொண்டுள்ள உறவு ஆங்கிலத்தின் வழியாகத்தான் அமைந்துள்ளது. உலக வாணிகமும் ஆங்கில மொழியில்தான் நிகழ்கிறது. ஆங்கிலம் என்கிற பலகணி வழியாகத்தான் இந்தியா உலகத்தைப் பார்க்கமுடியும்; உலகமும் இந்தியா

வைப் பார்க்கமுடியும். இந்தியாவையும் பிற நாடுகளையும் இணைத்திருக்கும் பாலமாக அமைந்திருக்கும் மொழி ஆங்கிலம்தான். எனவே இந்தக் காரணத்தை முன்னிட்டு, இந்தியா, எப்படியும் ஆங்கிலத்தைப் பயின்றாக வேண்டும். ஆனால் உலகப் பொதுமொழியாக இருக்கும் ஆங்கிலமே இந்தியாவின் பொதுமொழியாகவும் இருக்குமானால், இந்திய மாணவர்கள் அனைவரும், தத்தம் தாய்மொழி — ஆங்கிலம் — ஆகிய இரண்டே மொழிகளைப் பயின்றால் போதும். ஆனால் ஆங்கிலத்திற்கு மாறாக இந்திமொழி இந்தியாவின் பொதுமொழியாக ஆக்கப்படுமானால் இந்திய மாணவர்கள் யாவரும் மூன்று மொழிகளைக் கற்றாகவேண்டிய கட்டாயத்திற்கு உள்ளாகிறார்கள். மாணவர்களின்மீது ஏற்றப்படுகிற சுமை தாங்கமுடியாத பளு நிறைந்ததாக ஆகிவிடுகிறது. இது, தேவையற்ற வீண்செயல்; தவிர்க்கக்கூடிய தவறான காரியம். எனவே இந்தக் காரணத்தை முன்னிட்டும் ஆங்கிலம்தான் இந்தியாவின் பொதுமொழியாகவும் ஆட்சிமொழியாகவும் அமைதல் வேண்டும் என்பது தெளிவாகிறது.

மத மாயை, தலைவிதித் தத்துவம், மூடநம்பிக்கைச் சேறு, புராணப் பித்து ஆகிய பொய்ம்மைக் குட்டைகளில் உழன்றுகொண்டிருந்த உலகத்தைப் பகுத்தறிவுப் பாதைக்குக் கைபிடித்து இழுத்துச்சென்ற பெருமை விஞ்ஞானத்தின் தனி உடைமை. அந்த விஞ்ஞான ஒளி, பிற நாடுகளில் எல்லாம் புது வாழ்வை உருவாக்கியிருக்கிறது; அந்த நாடுகளின் சோர்வை — சோகத்தை—சோம்பலை அகற்றி, வீரத்தை விவேகத்தை விழிப்புணர்ச்சியை ஊட்டியிருக்கிறது. ஆனால் இந்தியாவோ இன்னமும் ஆத்மீக இருளில் உழன்று மதமாயையில் சிக்கிப் பழமைப் பித்தத்திற்குப் பராக்குக் கூறிக்கொண்டிருக்கிறது. இந்தியா முன்னேற வேண்டுமானால் இந்தப் பழமை இருள் இந்தியாவை விட்டு அகன்றாகவேண்டும். இந்த இருள் தொலைந்தாகவேண்டுமானால் விஞ்ஞானப் பாதையில் இந்தியா நடந்தாகவேண்டும். அந்த விஞ்ஞானப்பாதை

இந்தியாவில் நிர்மாணிக்கப்பட வேண்டுமானல், இந்தி அல்ல—ஆங்கிலம்தான் இந்தியாவின் அரசாங்க மொழியாகவும் பொதுமொழியாகவும் இருந்துதீரவேண்டும். இந்தியாவை மீண்டும் மீண்டும் புராணப் பாதையிலே அழைத்துச்சென்று பழமைப் படுகுழியிலே பிடித்துத் தள்ளும் பத்தாம் பசலி மனப்பான்மைதான் இந்தி மொழிக்கு உண்டு. விஞ்ஞான உள்ளம், இந்திமொழிக்குத் துளியளவும் கிடையாது. இந்திமொழிப் பாதை, பழமைப் பாதை; புராணப் பாதை; ஆத்மிகப் பாதை; இந்தியாவின் முன்னேற்றத்திற்கு மகத்தான முட்டுக்கட்டை இடக்கூடிய பாதை. ஆங்கிலப் பாதைதான் விஞ்ஞானப் பாதை; புதுவாழ்வுப் பாதை; புத்துலகத்திற்குச் செல்லும் புரட்சிப் பாதை. ஆங்கிலப் பாதையில் செல்லட்டும் இந்தியா —இந்திப் பாதையில் வேண்டாம்.

ஆங்கிலம்தான் இந்தியாவின் பொதுமொழியாகவும் அரசாங்க மொழியாகவும் இருக்கவேண்டும் என்று நாம் கூறுவதற்குரிய மற்றொரு காரணம் அந்த மொழி, ஏற்கெனவே அந்த நிலையில் இருந்துவருகிறது. சென்ற ஒரு நூற்றாண்டுக் காலமாக இந்தியாவின் அரசாங்கமும் அரசியலும் பொதுவாழ்வுங்கூட ஆங்கிலத்திலேதான் நடத்தப்பட்டு வந்திருக்கின்றன. இந்த ஒரு நூற்றாண்டு அனுபவத்தின் காரணமாக, இந்திய ஆட்சி மொழியாக இருப்பதற்குத் தேவையான பக்குவமும் பண்பாடும் அந்த மொழியில் அழகான முறையில் அமைந்துவிட்டன. ஆங்கில மொழியில் ஆட்சி நடத்துவதற்குத் தேவையான அறிவும் ஆற்றலும் படைத்தவர்கள் இந்தியாவில் ஏராளமாக இருக்கிறார்கள். ஆனால் இந்திமொழியைப் பொதுமொழியாகவும் ஆட்சிமொழியாகவும் ஆக்குவது என்றாலோ, ஏராளமான புதிய சிரமத்தை நாம் ஏற்றுக்கொண்டாக வேண்டும்; புதிய பழக்கத்தை நாம் உற்பத்தி செய்தாக வேண்டும்; புதிய நிர்வாக இயந்திரம் ஒன்றை நாம் கண்டுபிடித்தாகவேண்டும்; புதிய அலுவலாளர் பரம்பரை ஒன்றை நாம் உருவாக்கியாகவேண்டும். அவ்வளவுதானு

நம்முடைய சிரமம்? ஆட்சி மொழியாக அமைவதற்குரிய ஆற்றலும் தகுதியும் இப்போது இந்தி மொழிக்கு இல்லாத காரணத்தால் அந்தத் தகுதியையும் ஆற்றலையும் இந்திமொழிக்கு இனிமேல் நாம் தேடிக்கொடுத்தாக வேண்டும். ஏன் இவ்வளவு வேதனை? எதற்காக இத் துணைப் பெரு முயற்சி? உண்பதற்கு இனியதாய்ப் பழுத்து நிற்கும் பழம் இருக்க—செங்காயைத் தடியால் அடித்துக் கனியவைக்கும் முயற்சி எதுக்காக? எல்லாத் தகுதிகளும் அமையப்பெற்ற ஆங்கிலம் இருக்கும்போது அதை வேண்டாம் என்று ஒதுக்கிவிட்டு ஒரு தகுதியும் இல்லாத இந்தியைத் தூக்கி அரியணையில் அமர வைக்க வேண்டிய அவ்வளவு கட்டாயம் என்ன இருக்கிறது?

ஆயிரம் சிறப்பிருக்கட்டும் ஆங்கிலத்திற்கு—ஆனாலும் அது அந்நிய மொழி அந்நியமொழிதானே — அந்நிய மொழியையா நம் நாட்டின் பொதுமொழியாக ஆக்குவது என்று சில தேசபக்தர்கள் "தூய்மைத் தேசியம்" பேசிடக்கூடும். அப்படிப் பேசிடக்கூடிய பேரறிவாளர்கள் விடை கூறட்டும்—ஆங்கிலம் அந்நிய மொழி என்றால், இந்தியைத் தாய்மொழியாகக் கொள்ளாத ஏனைய இந்தியருக்கெல்லாம், இந்தி மட்டும் என்ன மொழி? தமிழ்மகன் ஒருவனுக்கு, ஆங்கிலத்தைவிட, இந்தி, எந்தவகையில் அதிக உறவு? ஒரு மலையாளிக்கோ தெலுங்கருக்கோ வங்காளிக்கோ கன்னடருக்கோ ஆங்கிலம் அந்நியமொழி என்றால், இந்தியும் அதே அளவுக்கு அந்நியமொழி தானே?

ஆகவே, இந்தி மொழியை எந்தவகையான துலாக் கோலில் ஏற்றி எடைபோட்டுப் பார்த்தாலும் சரி, இந்தியாவின் ஆட்சிமொழியாகவோ பொதுமொழியாகவோ அமைவதற்கேற்ற தகுதி அதற்குத் துளியளவும் இல்லை என்பதும், ஆங்கிலமொழிக்குத்தான் அந்தத் தகுதி உண்டு என்பதும் வெள்ளிடைமலை.

என்றாலும் இந்திமொழியைத்தானே இந்திய ஆட்சி மொழியாக உயர்த்தியிருக்கிறது அரசியல் திட்டம்— இது ஏன்?

இந்தக் கேள்வியை எவரும் கேட்பர். கேட்பது முறையுங்கூட.

ஒரே ஒரு விடைதான் உண்டு இந்தக் கேள்விக்கு.

அந்த விடை இதுதான் :—

இந்தி மொழியைத் தாய்மொழியாகக் கொண்டவர்களிலே ஒரு சாரார், அரசியல் துறை, பொருளாதாரத் துறை, மொழித் துறை ஆகிய எல்லாத் துறைகளிலும் இந்தியத் துணைக்கண்டத்தில் தங்களுடைய ஆதிபத்யமே மேலோங்கியிருக்கவேண்டும் என்னும் பேராசைப் பித்தம் படைத்தவர்களாக அமைந்திருக்கின்றனர். பல்வேறு காரணங்களால், அரசியல் பொருளாதாரத் துறைகளில், அவர்களுடைய கனவு ஏற்கெனவே நிறைவேறியிருக்கிறது. மொழித்துறையிலேயும் தங்கள் ஏக ஆதிபத்யத்தை நிலைநாட்ட அவர்கள் நெடுங்காலமாக முயற்சி செய்துவருகின்றனர். இந்தி, இந்தியாவின் ஆட்சிமொழியாக ஆகிவிட்டால், இயற்கையாகவே, அந்த மொழியைத் தாய்மொழியாகக் கொண்டவர்களுக்கு, இந்திய ஆட்சி நிர்வாகத்தில் தனிச் சலுகையும் ஆதிக்கமும் ஏற்பட்டு விடும். பிற மொழியாளர்கள் எவ்வளவுதான் முயன்றாலும் இந்தியைத் தாய்மொழியாகவே கொண்டிருப்பவர்களோடு அந்த மொழியில் போட்டியிட்டு அவர்களையும் மிஞ்சி முன்னுக்கு வருவது என்பது இயலாத காரியம்! எனவே இந்தி, இந்தியாவின் பொதுமொழியாக ஆக்கப்படுகிறது என்றால் இந்திமொழியாளர்களுக்கு இந்தியாவில் தனி ஆதிக்கம் ஏற்படுத்தப்படுகிறது என்றுதான் பொருள். ஆகவேதான் இந்தி மொழியை இந்திய ஆட்சி மொழி ஆக்குவதிலே அளவுக்கு மீறிய அக்கறை காட்டுகின்றனர் இந்திமொழியாளர்கள்!

இந்திமொழியாளர்களில் ஒரு சாரார் விரித்த இந்த "ஹிந்தி ஏகாதிபத்ய" வலையிலே, தெரிந்தோ தெரியாமலோ, விழுந்துவிட்டிருக்கின்றனர் இந்திய அரசியல் திட்டம் தீட்டியவர்கள்.

எனவேதான், அவர்கள், இந்தியாவிலேயே இந்தி மொழி வெறுக்கப்படுகிற அளவு வேறு எந்த மொழியும் வெறுக்கப்படவில்லை என்பதை அறிந்திருந்தும், இந்தியாவின் ஆட்சி மொழியாக அமர்வதற்கு ஏற்ற தகுதி சிறிதளவும் அமையப்பெறாத மொழி இந்தி என்பதைத் தெரிந்திருந்தும், ஆங்கில மொழியை இந்தியாவின் ஆட்சிமொழியாகத் தொடர்ந்து இருக்கவிடுவதன் மூலமாகத்தான் இந்தியாவை விஞ்ஞானப் பாதையில் செலுத்தமுடியும் என்பதை உணர்ந்திருந்தும் இந்திமொழியை ஆட்சிமொழியாக ஆக்கியிருக்கிறார்கள்.

இந்தியாவின் ஆட்சிமொழிப் பீடத்தில் இந்தி மொழி அமர்த்தப்பட்டிருப்பதற்கு இதைத்தவிர வேறு காரணம் எதுவும் இருப்பதாக நமக்குப் புலனாகவில்லை.

* * * *

இந்தி மொழியைப் பற்றி இந்திய அரசியல் திட்டத்தில் உள்ள முக்கியமான விதி:—

விதி 343. பிரிவு 1:—"தேவ நாகரி எழுத்தில் எழுதப்படுகின்ற இந்தி மொழிதான் இந்திய மத்திய ஆட்சியின் அரசாங்க மொழியாக இருக்கும்."

பிரிவு 2:—"ஆனால் இந்த அரசியல் திட்டம் தீட்டப்படுவதற்கு முன்வரை, மத்திய ஆட்சியின் எந்தெந்தக் காரியங்களுக்கு ஆங்கிலம் பயன்படுத்தப்பட்டு வந்ததோ அந்தக் காரியங்களுக்கு, 15 ஆண்டுகள் வரை, இனியும் ஆங்கிலமே தொடர்ந்து பயன்படுத்தப்பட்டுவரும்.

ஆனால் அந்தப் பதினைந்து ஆண்டுகள் முடிவதற்கு முன்னரே கூட, குடியரசுத் தலைவர், மத்திய ஆட்சியின் அதிகார பூர்வமான காரியங்கள் எவற்றிற்காவது, ஆங்கிலத்தோடு கூட இந்தி மொழியையும் பயன்படுத்தலாம் என்றும், சர்வதேச வடிவத்தில் எழுதப்படும் இந்திய எண்களோடு கூட தேவநாகரி எண்களையும் பயன்படுத்தலாம் என்றும் அறிவிக்கலாம்."

* * *

5—11—48 அன்று, அரசியல் அமைப்பு மன்றத்தில் அந்த மன்ற உறுப்பினர் டி. டி. கிருஷ்ணமாச்சாரியார் ஆற்றிய சொற்பொழிவின் ஒரு பகுதி:—

"இந்தியாவில் மொழி ஏகாதிபத்யம் ஒன்று வளர்ச்சி பெற்றுவருகிறது. ஐக்கிய மாகாணம், மத்திய மாகாணம், பீகார் முதலிய குறிப்பிட்ட வட்டாரங்களில் இந்தி பேசப்பட்டுவருகிறது என்பது உண்மை. ஆனால் ஏனைய வட்டாரங்கள் பற்றிய நிலைமை என்ன? அங்கெல்லாம் இந்தி கிடையாதே! அரசியல் அமைப்பு மன்றத்தில் என்னுடைய கருத்தைக் கூற இந்திமொழியைக் கற்றுக் கொள்ளவேண்டுமென்று என்னைக் கட்டாயப்படுத்தினால் அது என்னால் இயலாது. நாட்டிலிருந்து ஆங்கிலத்தை அகற்றவேண்டுமென்று நீங்கள் ஆசைகொள்ளும் அதே வேளையில், இந்தியா முழுமையிலும் இந்தி மொழியைப் புரிந்துகொள்ளமுடியாத மக்கள் பெரும்பான்மையாக இருக்கின்றனர் என்பதையும் உணர்ந்துகொள்ளவேண்டும். அனைவர்மீதும் இந்திமொழியைத் திணிக்க எண்ணுகின்ற (இந்தி மொழியாளர்களின்) சகிப்புத்தன்மையற்ற இந்தப் போக்கு, வலிவுள்ள ஒரு மத்திய ஆட்சி—ஓர் ஹிந்தி அரசாங்கம் ஏற்பட்டுவிடலாமென்ற அச்சத்தை உண்டாக்கியுள்ளது."

* * * *

"கல்கி" பத்திரிகையின் 7—5—50 இதழில் "ஹிந்தி ஏகாதிபத்யம்" என்னும் தலைப்பின் கீழ் வெளியான தலையங்கத்தின் சில பகுதிகள்:—

"அதிகார ஆசையும் ஏகாதிபத்திய வெறியும் ஒரு தேசத்தார்—ஒரு இனத்தாருக்குத்தான் உண்டு என்பது இல்லை. உலகமெங்கும் சர்வ வியாபகமாக நிறைந்திருக்கின்றன. அந்த ஆசையும் வெறியும் இப்போது வட நாட்டில் உள்ள ஹிந்தி பாஷைப் பண்டிதர்களையும் அரசியல் வாதிகளையும் பிடித்து ஆட்டுகின்றன.

"ஹிந்தி பாஷை இந்தியாவின் தேசிய பாஷையாவதோடு அவர்கள் திருப்தியடையத் தயாராயில்லை. இந்தியாவில் ஹிந்தி ஏகாதிபத்யத்தையே நிலைநாட்டிவிடப் பிரியப்படுகிறார்கள். மற்ற பாஷைகளையும் மற்ற பாஷைக்காரர்களையும் ஹிந்தி பாஷைக்கு அடிமையாக்கிவிடவே எண்ணுகிறார்கள்.

"இதை நாம் ஒப்புக்கொள்ள முடியாது. தாய் மொழிப் பற்றுள்ள யாருமே ஒப்புக்கொள்ள முடியாது தான்...............

"சில நாளைக்கு முன்பு தினப் பத்திரிகைகளில் திடுக்கிடும் செய்தி ஒன்று வெளியாயிற்று. அகில இந்தியக் கல்வி மாநாடு ஒன்று கூடியதாம். அதில் பற்பல அபூர்வ யோசனைகள் சொல்லப்பட்டனவாம்...................அந்த அபூர்வமான யோசனைகளில் ஒன்று, இந்தியாவில் உள்ள எல்லாக் காலேஜ் வகுப்புகளிலும் எல்லா விஷயங்களையும் ஹிந்தி பாஷையில் போதிக்க வேண்டும் என்பதுதான்.

"எப்படி இருக்கிறது கதை? அதாவது இத்தனை நாளும் நமது கல்வி முறையில் இங்கிலீஷ் வகித்து வந்த ஸ்தானத்தை இனிமேல் ஹிந்தி வகிக்கட்டும் என்கிறார்கள் ஹிந்தி ஏகாதிபத்திய வாதிகள்.

"மேற்கண்ட யோசனையானது ஒரு தனிப்பட்ட நிகழ்ச்சி அல்ல; ஒரு பெரிய ஹிந்தி ஏகாதிபத்தியப் பிரசாரத் திட்டத்தின் சிறிய அறிகுறியேயாகும்............

"ஏதோ ஆங்கிலேயர்களாவது—இண்டியன் இங்கிலீஸ் என்று தங்களுக்குள் சிரித்துவிட்டு, ஏதோ காரியம் நடந்தால் சரி என்று இருந்தார்கள். ஆனால் ஹிந்தி ஏகாதிபத்தியவாதிகளோ ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் மற்ற பாஷைக்காரர்களை மட்டந்தட்டவும், அதைக்காரணமாகக் கொண்டு கீழே அமுக்கிவைக்கவும் பார்க்கிறார்கள். இந்த நிலைமை கொஞ்சமும் நல்லதல்ல; நியாயமும் அல்ல........

"நம்முடைய காலேஜ்களில் ஆங்கிலத்தை அகற்றிவிட்டுத் தமிழைக் கொண்டு வருவதென்றால் தாய் மொழி அபிமானங் காரணமாக நாம் அதை ஒப்புக்கொள்ளலாம்............

"ஆனால் ஆங்கிலத்தை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக ஹிந்தியை உபயோகிப்பது என்பது முழு மடமையேயாகும்..........அறிவைத் தேடுவதற்கோ, இலக்கியச் சுவையை அனுபவிப்பதற்கோ, பண்பாட்டை வளர்ப்பதற்கோ ஹிந்தி பாஷையினால் பயன் ஒன்றும் இல்லை........

"ஹிந்திப் பாஷைக்காரர்கள் அந்தப் பாஷையின் ஏகாதிபத்யத்தை ஸ்தாபிக்க விரும்புகிறார்கள் என்று நாம் சொல்லுவது விளையாட்டல்ல; வெறும் பயமுறுத்தலும் அல்ல. வடநாட்டு அரசியல் வாதிகள்—ஹிந்தி பண்டிதர்களுக்கிடையே இத்தகைய ஏகாதிபத்திய வெறி வளர்ந்து வருகிறதென்பதற்குப் பல அறிகுறிகள் காணப்படுகின்றன. வடநாட்டுக்குச் சென்றுவரும் தமிழ்நாட்டுப் பிரதிநிதிகள் பலரும் ஏற்கெனவே இதைப் பற்றிப் புகார் செய்து வந்திருக்கிறார்கள்..........எனவே ஹிந்தி பாஷையின் ஏகாதிபத்தியத்தை ஸ்தாபிக்கும் முயற்சி நமக்கு ஏற்பட்டுள்ள உண்மையான அபாயம் என்றே முடிவுகட்ட வேண்டியிருக்கிறது."

9. "ஜனநாயகமே ! நீ வேண்டாம் !"

கட்டிக் கரும்பனைய கவிதைகள் பலவற்றைத் தந்துள்ள கவிஞர் இக்பால் புரட்சிப் புயல் அனைய தம் கவிதை ஒன்றிலே, "பாமர மக்கள் பாராளும் காலம் இது" என்று பூரிப்புடனும் பெருமையுடனும் குறிப்பிட்டுள்ளார். அந்தக் குறிப்பு முற்றிலும் உண்மையானது. உள்ளபடியே இந்தக் காலம், பாமர மக்கள் பாராளும் காலம்; மக்களுக்காக மக்களால் நடத்தப்படும் மக்கள் ஆட்சியே சிறந்த ஆட்சி என்னும் கருத்து எல்லோராலும் ஏகமனதாக ஒப்புக் கொள்ளப்படும் காலம்; தனி மனிதன் ஒருவனிடம் நாட்டாட்சிப் பீடம் சிக்கிக் கொண்டிருப்பதை இனி ஒரு கணமும் சகித்துக் கொண்டிருக்க மாட்டோம் என்ற வீர முழக்கம் மன்னர் ஆட்சி நிலவும் இடத்தில் எல்லாம் வீறிட்டெழுகின்ற காலம்; இந்தப் பரந்த உலகின் பற்பல பகுதிகளிலும் மன்னர் ஆட்சி மறைந்து, மணி மகுடங்கள் கீழே உருண்டு, தனி மனிதன் தர்பார் தொலைந்து, மக்கள் ஆட்சி மலர்ந்து மணம் வீசும் காலம். இந்தக் காலம் முடியாட்சிக் காலம் அல்ல; குடியாட்சிக் காலம்.

ஆனால் ஒரு காலம் இருந்தது, ஆட்சி என்றாலே அது முடியாட்சிதான் என்று அனைவராலும் எண்ணப்பட்டு வந்த காலம். அந்தக் காலத்திலே மணிமுடி தரித்த மன்னன் நவரத்தினங்கள் இழைக்கப்பட்ட சிங்காதனத்திலே சொகுசாக வீற்றிருப்பான். அவனுடைய மண்டலத்தைப் பொறுத்தவரையிலே, அவன் இட்டதே சட்டம்; நினைத்ததே கட்டளை. அவனே, ஆட்சித் தலைவன்; அவனே சேனையின் முதல்வன்; அவனே சட்டமன்றம்; அவனே வழக்குமன்றம். அவனுடைய சுட்டுவிரல் அசைந்தால் நாடே அசையும்; நாட்டில் உள்ள மக்கள் எல்லாம் அசைவர். அவன் ஏன் என்று கேட்குமுன்னே எண்ணெயாக வந்து நிற்பர் மக்கள். அவன் நெல் என்று சொல்லுமுன்னே அரிசியையே கொண்டுவந்து கொட்டிவிடுவர். மன்னன் வெறும் மனிதன் அல்லன்—மகேஸ்வரனின்

ஆதன்—ஆண்டவனின் அவதாரம் என்னும் எண்ணம் மக்கள் உள்ளத்திலே ஆழப் பதிந்திருந்த காலம் அந்தக் காலம். எனவேதான் அந்தக் காலத்திலே மன்னன் பேச்சுக்கு மறுபேச்சு இல்லாமல் இருந்து வந்தது.

காலம் சிறிது மாறிற்று; சில நூற்றாண்டுகள் கழிந்தன; மன்னவனின் சிங்காதனத்துக்கு இருந்த செல்வாக்கு சற்றே சுருங்கலாயிற்று. ஜமீன் ஜாம்பவான்கள், மிட்டா மிராசுதாரர்கள், நிரம்பப் பணம் படைத்தவர்கள், நீண்ட செல்வாக்கு உடையவர்கள், பிரபுக்கள் சீமான்கள் என்று அழைக்கப்பட்டவர்கள், பாதிரிகள்—புரோகிதர்கள் என்ற காரணத்தால் ஆதிக்கம் பெற்றவர்கள் ஆகிய இன்னோரன்ன ஆதிக்கவாதிகள் நாட்டை ஆளும் பொறுப்பிலே தங்களுக்கும் பங்கிருக்க வேண்டும் என்று மன்னனிடம் போராடத் தொடங்கினர்கள். செல்வாக்கும் செல்வமும் படைத்தவர்கள் அவர்கள்—அவர்கள் சொல்லைத் தட்டி நடந்தால் தனக்கு ஆபத்து நிச்சயம் என்று அஞ்சி ஒடுங்கினன் மன்னன். எனவே முதல் சட்டசபை பிறந்தது—சீமான்களுக்கும் பூமான்களுக்கும் நாட்டாட்சிப் பீடத்திலே பங்கு கிடைத்தது. சட்டசபை என்கிற அமைப்பு முறை உலகத்தில் முதன் முதலில் உருவாகிய விதம் இதுதான். ஆனல் அந்தக் காலத்தில், சட்ட சபைகள், பிரபுக்கள் வீட்டுப் பொன்னுபரணங்களாக இருந்தனவே தவிர பொது மக்கள் உள்ளத்தை எடுத்துக் காட்டும் எழில் மன்றங்களாக இருக்கவில்லை. மன்னனுக்கும் சரி, மன்னனுடன் போராடித் தங்கட்கோர் சட்டசபையைத் தேடிக்கொண்ட சீமான்களுக்கும் சரி, மக்கள் என்றோர் கூட்டம் இருக்கிறது என்ற எண்ணமே ஏற்படவில்லை அந்தக் காலத்தில். மக்களுக்கும் நாட்டாட்சிப் பீடத்திலே இடம் இருக்கவேண்டும் என்ற கருத்து, நினைப்பு, சந்தேகம் கூட ஏற்படவில்லை. அந்த இரு சாரராலும் சட்டசபைகள் சீமான்களின் பல சொத்துகளில் ஒன்றுகவே மதிப்பிடப்பட்டு வந்தன.

காலச்சக்கரம் மேலும் சுழலலாயிற்று. உலக வரலாறு என்னும் புத்தகத்திலே இன்னும் சில ஏடுகள் இணைக்கப்படலாயின. நூற்றாண்டுகள் சில ஓடி மறைந்தன. சட்டசபைகளில் சீமான்கள் மட்டும் கொலு வீற்றிருக்கிறார்களே அது ஏன் என்னும் கேள்வி மக்கள் மனத்தில் முதல் முறையாகத் தோன்றலாயிற்று. நாமும் அங்கே நுழைந்தாலென்ன—மக்களிலே துணிச்சல் உள்ளவர்கள் இதுபோலக் கேட்கத் தொடங்கினார்கள். "நுழைந்தால் என்ன என்று மெதுவாகக் கேட்காதே! நுழைந்தே தீரவேண்டும் என்று வீரமுழக்கம் இடு!"—அஞ்சா நெஞ்சம் படைத்தவர்கள் பலர் இதுபோல இடிமுழக்கம் எழுப்பலானார்கள். "வரி கொடுப்பது நாம்! உழைப்பை அளித்தருவது நாம்! சீமான்களும் பூமான்களும் சொகுசாக வாழ்வது நம் வியர்வையால்—நஷ்ட நஷ்டத்தால்! இப்படிப்பட்ட நமக்கா சட்டசபையில் இடம் இல்லை"—வேறு சிலர் இப்படிக் காரண காரிய விளக்கத்தோடு 'சட்டசபை—எங்கள் பிறப்புரிமை' என்னும் இலட்சியகீதத்தை எழுப்பலானார்கள். முதலிலே சீமான்கள், "சாதாரண மக்களைச் சட்டசபையிலே நுழைய விடுவதா—முடியாது—கூடாது" என்றுதான் அதிகாரவாதம் புரிந்தார்கள். ஆனால் இறுதியில், நிலைமை மிஞ்சிவிட்டது என்பது தெரிந்ததும், பொதுமக்களின் பிரதிநிதிகளுக்கு இடந்தரவேண்டியது நியாயம்தான் என்று ஒப்புக்கொண்டார்கள். ஆனால் சாதாரண மக்களின் பிரதிநிதிகளை, சீமான்களும் செல்வப் பூமான்களாகிய தங்களுடன், ஓரே சட்டசபையில், சரிநிகர் சமானமாக வீற்றிருக்க ஒப்புக்கொண்டால், தங்களுடைய தனி அந்தஸ்து கெட்டுவிடும், கவுரவம் குறைந்துவிடும், மதிப்பு மங்கிவிடும் என்று எண்ணமிடலானார்கள் சீமான்கள். அந்த எண்ணத்தின் விளைவாகச் சீமான்களாகிய தாங்கள் அமரத் தனியானதோர் இடமும் சபையும், பொதுமக்களின் பிரதிநிதிகளாக வரும் சாமான்யர்கள் உட்காரவேறுஓர் இடமும்சபையும் அமைப்பது என்ற முடிவுக்கு வந்தார்கள். தாங்கள் மேலான நிலை

யினர் என்பதைக் காட்ட தங்கள் சபைக்கு மேல்சபை என்ற பெயரையும், பொதுமக்கள் கீழான அந்தஸ்துடைய வர்கள் என்பதை விளக்க அவர்கள் மன்றத்திற்குக் கீழ் சபை என்ற பெயரையும் சூட்டினார்கள். சட்டசபை களிலே மேல்சபை—கீழ்சபை என்கிற இருசபைகள் ஏற் பட்ட முறை இதுதான்!

இந்த முறை முதன் முதலில்உருவாகிய காலத்தில், ஆட்சிப்பீடத்தின் முக்கிய அதிகாரங்கள் அத்தனையும் சீமான்களின் சபையாகிய மேல்சபையிடம்தான் விடப்பட் டன. அவ்வளவாக முக்கியம் இல்லாத சில சில்லறை அதிகாரங்கள் மட்டும்தான் பொதுமக்கள் சபையாகிய கீழ்சபையிடம் தரப்பட்டன. ஆனால் காலம் செல்லச் செல்ல, மக்கள் மன்றத்தின் குரல் வலுக்க வலுக்க, சீமான்களின் செல்வாக்கு சிதைந்து பாமரர்களின் ஆதிக் கம் வளர வளர, மேல் சபையின் அதிகாரங்கள் கொஞ்சம் கொஞ்சமாகக் குறைந்து, கீழ்சபையின் அதிகாரங்கள் சிறிது சிறிதாக வளர்ந்து, இறுதியில், மேல்சபைகள் வெறும் பெயரளவுக்கு உள்ள அதிகாரங்களை மட்டுமே உடையனவாகவும், கீழ்சபைகளே எல்லா அதிகாரங்களின் உறைவிடங்களாகவும் உருமாறிவிட்டன.

எனவே இன்றைய நிலையில், கீழ்சபைகள்தான் உண்மையான சட்டசபைகள், மேல்சபைகள் என்பன வெறும் அலங்காரப் பதுமைகள்தான். என்றாலும்கூட, மேல்சபை என்கிற ஓர் அமைப்பு இன்னமும் உயிருடன் இருப்பதும், அந்த அமைப்புக்கு மேல்சபை என்கிற பெய ரும் நிலையும் இருப்பதும், சீமான்களின் செல்வாக்கை மறைமுகமாக நிலைநாட்டும் தவறான செய்கைக்கே முற்றி லும் பயன்படுகின்றன.

மேல்சபைகள் என்பன, பழமையின் சின்னங்கள்; தேவையில்லாத உருவங்கள்; அழிக்கப்பட வேண்டிய அமைப்பு முறைகள்.

சமுதாயத்தில் பிராமணன் என்றொரு மேல்ஜாதி இருப்பதைப் போல, பொருள்துறையில் முதலாளி என்றொரு உயர் வகுப்பு இருப்பதைப்போல, அரசியலில் மன்னன் என்றொரு தனிப் பிறவி உள்ளதைப்போல, மதத்துறையில் புரோகிதன் என்றொரு பிரத்யேக ஜாதி இருப்பதைப்போல, ஆட்சித் துறையில் அமைந்துள்ள மேல் ஜாதிச் சின்னங்கள்தான் மேல் சபைகள் என்னும் பெயர் படைத்துள்ள அமைப்புகள்.

ஆகவேதான் இந்திய தேசிய காங்கிரசின் பிரதிநிதிகளால் உருவாக்கப்பட்ட இன்றைய அரசியல் திட்டத்தில் மேல்சபைகள் என்னும் அமைப்புமுறை இருக்காது என்று பலரும் எதிர்பார்த்தார்கள்.

அவர்கள் எதிர்பார்த்தபடியே, அஸ்ஸாம்—ஒரிசா—மத்திய பிரதேஷ் ஆகிய மூன்று மாகாணங்களில் ஒவ்வொரு மாகாணத்திற்கும் ஒவ்வொரு சபைதான் உண்டு—மேல்சபைகிடையாது. ஆனால், பீகார்—பம்பாய்-சென்னை—பஞ்சாப்—உத்திர பிரதேஷ்—மேற்கு வங்காளம் ஆகிய மற்ற எல்லா மாகாணங்களிலும் மாகாணத்திற்கு ஒவ்வொரு மேல் சபை உண்டு. டில்லி பாராளுமன்றத்திலும் மேல் சபை உண்டு.

இந்திய அரசியல் திட்டப்படி, மாகாணங்களில் இருக்க வேண்டிய மேல் சபைகளும், டில்லியில் உள்ள பாராளுமன்றத்தின் மேல் சபையும், தங்கள் உறுப்பினர்களை எவ்வண்ணம் தேர்ந்தெடுத்துக் கொள்கின்றன என்பதைப் பார்ப்போம்.

மாகாணங்களில் உள்ள மேல் சபைகளைப் பொறுத்தவரை. அவற்றின் மொத்த உறுப்பினர்களில் மூன்றில் ஒரு பகுதியினர், மாவட்ட ஆட்சி மன்றங்கள்—நகராட்சி மன்றங்கள் முதலிடவற்றால் தேர்ந்தெடுத்து அனுப்பப்படுவர். பன்னிரண்டில் ஒரு பகுதியினர், குறைந்தது மூன்று ஆண்டுகளுக்கு முன்னதாகப் பட்டம் வாங்கியுள்ள பட்டதாரிகளால் தேர்ந்தெடுத்து அனுப்பப்படுவர். பன்னிரண்டில்

ஒரு பகுதியினர், செகண்டரி பள்ளிகளிலும் அதற்கு மேற்பட்ட நிலையில் உள்ள கல்வி நிலையங்களிலும் குறைந்தது மூன்று ஆண்டுகளாக ஆசிரியர்களாக உள்ளவர்களால் தேர்ந்தெடுக்கப்படுவர். மூன்றில் ஒரு பகுதியினர் கீழ் சபையால் தேர்ந்தெடுத்து அனுப்பப்படுபவர்களாக-ஆனால் கீழ் சபையின் உறுப்பினர்களாக இல்லாதவர்களாக அமைந்திருப்பர். இப்படியெல்லாம் தேர்ந்தெடுக்கப்பட்ட ஸ்தானங்கள் போக மிச்சமுள்ள உறுப்பினர் ஸ்தானங்களுக்கு, கவர்னர், தகுந்த தோழர்களை நியமனம் செய்வார்.

இது, மாகாணங்களில் உள்ள மேல் சபைகள் உருவாகும் முறை

இனி, டில்லியில் உள்ள மேல்சபை எப்படி உருவாகிறது என்பதைப் பார்ப்போம்.

டில்லி மேல் சபையின் மொத்த உறுப்பினர்களில் பன்னிருவர், குடியரசுத் தலைவரால் நியமிக்கப் படுவர். ஏனைய எல்லோரும் மாகாணங்களில் உள்ள கீழ்சபைகளால் தேர்ந்தெடுக்கப்படுவர்.

இது, டில்லி மேல்சபை உருவாகும் விதம்.

டில்லி மேல்சபை, மாகாண மேல் சபைகள், இவை உருவாகும் முறையைச் சற்று கூர்ந்து கவனித்தாலே இந்த சபைகள் அரைக் கணமும் அமைந்திருக்கத் தேவையில்லை என்பது தெளிவாகிவிடும்.

டில்லி மேல் சபையின் பன்னிருவர் தவிர மற்ற எல்லா உறுப்பினர்களும்—கவனமாகப் படியுங்கள்—மாகாண **கீழ் சபைகளால்தான்** தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.

அதுபோலவே, **மாகாண மேல்சபை** உறுப்பினர்களில் மூன்றில் ஒரு பகுதியினரும், அந்தந்த மாகாண **கீழ்சபை**யாலேயே தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்,

ஆகவே, எல்லா மேல்சபைகளும் பொதுவாகக் கீழ் சபைகளால் தேர்ந்தெடுக்கப்படுகின்ற பிரதிநிதிகள் அடங்கியனவாகவே அமைந்துள்ளன. பொது மக்களால் தேர்ந்தெடுக்கப்படுகின்ற கீழ்சபைகள் இருக்கும்போது, அந்தக் கீழ் சபைகளால் தேர்ந்தெடுக்கப்படுகின்ற பிரதிநிதிகள் கொண்ட மேல்சபை ஒன்று தனியாக ஏன் இருத்தல் வேண்டும்? அப்படி இருப்பது வீண் செலவுக்கு வழிவகுக்கும் வேதனைத் திட்டம் அல்லாமல் வேறென்ன? ஆகவே தான் மேல்சபைகள் தேவையில்லை என்று நாம் கருதுகிறோம்.

மாகாண மேல்சபைகளைப் பொறுத்தவரை, அந்த மாகாண கீழ்சபைகளால் அனுப்பப்படும் மூன்றில் ஒரு பகுதி உறுப்பினர் போக, ஏனையோர், பட்டதாரிகள்—உயர்நிலைப்பள்ளி, கல்லூரி இவற்றின் ஆசிரியர்கள்—மாவட்ட ஆட்சி மன்றம், நகராட்சி மன்றங்களின் பிரதிநிதிகள் ஆகியோரால் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். எதற்காக இந்த மூன்று சாராருக்கு மட்டும் ஏனைய பொது மக்களுக்கெல்லாம் இல்லாத இந்தத் தனிச்சலுகை?

மேல் சபைகள் என்கிற அமைப்பு முறையே தேவையில்லை என்று நாம் அழுத்தந் திருத்தமாக எடுத்துக் கூறுவதற்குரிய மற்றொரு காரணம், இந்த சபைகளுக்கு முக்கியமான அதிகாரம் எதுவும் கொடுக்கப்படவில்லை என்பதே ஆகும். கீழ் சபைகளில் நிறைவேற்றப்படும் சட்டங்களை உடனடியாக அமுலுக்கு வருவதிலிருந்து சிறிது காலத்திற்குத் தாமதப்படுத்த முடியும் என்பதைத் தவிர மேல் சபைகளுக்கு வேறு எந்தவிதமான அதிகாரமும் கிடையாது.

இந்தச் சில்லறை அதிகாரம் ஒன்றிற்காகவா மேல் சபை என்கிற தனியானதோர் அமைப்பு உயிர் வாழ்ந்து கொண்டிருக்க வேண்டும்? வேண்டாம் வேண்டாம் என்றே எவரும் கூறுவர்.

மேல்சபைகள் அமைந்திருப்பதால் மத்திய ஆட்சியாளருக்கும் மாகாண ஆட்சியாளருக்கும் ஏற்படும் செலவும் ஏராளம். இந்த சபைகளுக்கான தேர்தல்கள் நடத்துவது—இவற்றின் தலைவர், துணைத்தலைவர், உறுப்பினர்கள் ஆகியோருக்கு மாத ஊதியம், பிரயாணப்படி முதலியன தருவது—இந்த சபைகள் அமைந்திருப்பதற்கேற்ற கட்டிடங்கள் அமைப்பது—இவற்றின் நடைமுறைக்கான செயல்மனை நிறுவி, அதிகாரிகள் வைப்பது ஆகிய பல காரணங்களால் ஏழை நாடுகளாகிய இந்திய நாடுகளுக்கு இப்போது கோடிக்கணக்கான ரூபாய் செலவு ஏற்படுகிறது. தேவையில்லாத இந்த மேல்சபைகளை உடனடியாக மூடுவதன் மூலம் அவசியமில்லாத இந்த வீண் செலவுகளை மிச்சமாக்கி, அந்தத் தொகையைப் பண்பும் பயனுமுள்ள வேறு துறைகள் எவற்றிற்கேனும் பயன்படுத்தலாம்.

சீமான்களின் செல்வாக்கை எடுத்துக்காட்டும் பழங்காலச் சின்னங்கள், மேல்சபைகள்.

மக்களாட்சிக் கோட்பாட்டிற்கு முற்றிலும் முரணான அடிப்படையில் எழுப்பப்பட்டிருக்கும் அமைப்பு முறைகள், மேல்சபைகள்.

தங்களுக்கென்று எந்தவித அதிகாரமும் அற்ற கோபுரத்துப் பொம்மைகள், மேல்சபைகள்.

ஏழை வட்டாரமாகிய இந்தியாவுக்கு வீணான செலவை அளிக்கும் வேண்டாத ஏற்பாடு, மேல்சபைகள்

இத்தன்மைத்தாகிய மேல்சபைகளுக்கு இந்திய அரசியல் திட்டம் இன்பமானதோர் இடம் வகுத்துத் தந்திருப்பது உண்மையில் வருந்தத் தக்கது; வருந்தத் தக்கது மட்டுமல்ல, நாட்டின் நலன் நாடும் நல்லறிவாளர்கள் உள்ளத்தைப் புண்படுத்தக்கூடியதும் ஆகும்.

* * *

இந்திய அரசியல் திட்டப்படி, ஒவ்வொரு மாகாணத்தின் தலைமை அதிகாரம் அந்தந்த மாகாணத்தின் கவர்னரிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது.

மாகாண ஆட்சி அவர் பெயரால்தான் நடத்தப்படும். மாகாண அதிகாரங்கள் அவர் பெயரால்தான் செலுத்தப்படும்.

மாகாண முதலமைச்சரை நியமிக்கும் அதிகாரம் அவரிடம்தான் இருக்கிறது. அம் முதலமைச்சரின் ஆலோசனையைப் பெற்று பிற அமைச்சர்களை நியமிக்கும் அதிகாரமும் அவரிடம்தான் இருக்கிறது.

மாகாண சட்டசபைகளைக் கூட்டும் அதிகாரமும், அவற்றைக் கலைக்கும் அதிகாரமும், மீண்டும் அவை கூட வேண்டிய தேதியைத் தெரிவிக்கும் அதிகாரமும், அப்படித் தெரிவிக்கப்பட்ட தேதியில் அவற்றை மீண்டும் கூட்டும் அதிகாரமும் கவர்னரிடம்தான் இருக்கின்றன.

மாகாண சட்டசபைகளில் நிறைவேறிவிட்ட மசோதாக்களை நிராகரிக்கும் அதிகாரம் கவர்னருக்குக் கிடையாது என்றாலும், அந்த மசோதாக்கள் உடனடியாக சட்டபுத்தகத்தில் நுழையமுடியா வண்ணம் அவற்றைச் சிறிது காலம் தாமதிக்கவைக்கும் அதிகாரம் அவருக்கு இருக்கிறது.

மாகாண சட்டசபைகளில் நிறைவேறிவிட்ட மசோதாக்களில், எதுஎது, டில்லியில் உள்ள அகில இந்திய குடியரசுத் தலைவரின் ஒப்புதல் பெற்றால்தான் சட்டமாக முடியும் என்று நிர்ணயிக்கும் உரிமையும், அப்படி அவரால் நிர்ணயிக்கப்பட்டவற்றைக் குடியரசுத் தலைவருக்கு அனுப்பும் உரிமையும் கவர்னருக்கு இருக்கின்றன.

சட்டசபைகள் ஒத்திவைக்கப்பட்டிருக்கிற காலத்தில், உடனடியாக ஏதேனும நடவடிக்கை எடுத்தாகவேண்டிய நெருக்கடி, தன் மாகாணத்தில் ஏற்பட்டிருக்கிறது

என்று கவர்னர் கருதுவாரானல், உடனே அந்த அவசர நிலைமையைச் சமாளிப்பதற்குத் தேவை என்று அவர் கருதுகிற சட்டங்களைப் பிறப்பிக்கும் உரிமை அவருக்கு இருக்கிறது.

சட்டசபைகளால் சாதாரண காலங்களில் நிறைவேற்றப்படுகின்ற சட்டங்களுக்கு எவ்வளவு அதிகாரமும் அந்தஸ்தும் உண்டோ, அதே அளவு அதிகாரமும் அந்தஸ்தும், கவர்னர் தானகவே பிறப்பிக்கிற அவசர சட்டங்களுக்கும் உண்டு

அப்படிப் பிறப்பிக்கப்படுகிற அவசர சட்டங்கள், சட்டசபைகள் ஒத்திவைக்கப்பட்டிருக்கிற காலம் முழுவதும் செல்லும்.

சட்டசபைகளையோ ஆறு மாத காலம் ஒத்திவைக்க முடியும், அப்படி அவற்றை ஒத்திவைக்கும் அதிகாரமும் கவர்னருக்குத்தான் இருக்கிறது.

ஆகவே சட்டசபைகள் ஒப்புக்கொள்ளமாட்டா என்று எதிர்பார்க்கப்படுகிற அளவு பேச்சுரிமை எழுத்துரிமைகளைத் தடைசெய்யும் சட்டம் ஒன்றை நிறைவேற்ற வேண்டும் என்று கவர்னர் கருதுவாரானல், அவர் உடனே சட்டசபைகளை ஒத்திவைத்துவிட்டு, அந்தச் சட்டத்தை அவசரச்சட்ட வடிவில் பிறப்பித்து அதனை ஆறு மாத காலம் அமுலில் வைத்திருக்கமுடியும்.

இப்படியெல்லாம் ஏராளமான அதிகாரங்கள் கவர்னரின் கைகளில் குவித்துவைக்கப்பட்டிருக்கின்றன.

இவ்வளவு அதிகாரங்களைத் தன்னகத்தே கொண்டுள்ள ஒருவர்—மாகாண அரசாங்கத்திற்கே தனிப்பெருந் தலைவராக வீற்றிருக்கும் சிறப்புடைய ஒருவர்—சட்டசபைகள் ஒத்திவைக்கப்பட்டிருக்கிற காலத்தில், தானே சட்டசபையாக இருந்து, சட்டசபைகள் செய்வதைப்போலத் தான் ஒருவராகவே சட்டங்களைப் பிறப்பிக்கும் உரிமை பெற்றிருக்கும் உயரிய நிலையில் உள்ள ஒருவர்,

மாகாண மக்களில் வயது வந்த எல்லோரும் கலந்துகொள்ளக்கூடிய பொதுத் தேர்தலில் தேர்ந்தெடுக்கப்பட்டவராக இருப்பதுதான் முறை. அமெரிக்க ஐக்கிய நாடுகளில், ஒவ்வொரு மாகாணத்தின் கவர்னரும் இப்படித்தான் பொதுமக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பொதுமக்களின் பிரதிநிதியாக இருக்கிறார். அப்படி இருந்தால்தான், கவர்னரைக் காணும்போது மக்களுக்கும், மக்களைப் பார்க்கும்போது கவர்னருக்கும் ஒருவகை பாசம்—தோழமை—சொந்தம் இருக்கமுடியும். அப்படி இருப்பதுதான் ஜனநாயகத் திட்டமும்கூட.

ஆனால் இந்திய அரசியல் திட்டம் தீட்டியவர்கள் தான் மக்கள் மன்றத்திற்கு எத்தகைய உரிமையையும் தர அஞ்சும் அற்புதசித்தர்களாக இருக்கிறார்களே! அவர்களா கவர்னரைத் தேர்ந்தெடுக்கும் உரிமையை மக்களுக்குத் தருவார்கள்! இல்லை! அந்த உரிமையை அவர்கள் மக்களுக்குத் தரவில்லை!

இந்த அரசியல் திட்டப்படி, கவர்னர்கள், பொதுமக்களால் தேர்ந்தெடுக்கப்பட மாட்டார்கள். குடியரசுத் தலைவரால் நியமிக்கப்படுவார்கள்.

தேர்தல் அல்ல அவர்கள் ஆட்சிப் பீடம் ஏறும் முறை! நியமனம்!

இந்த முறை, ஜனநாயகப் பண்பாட்டிற்கு நேர் முரணானது. ஆனால் இந்த முரணான முறையைத்தான் கையாண்டிருக்கிறது இந்திய அரசியல் திட்டம்!

* * *

ஆஜ்மீர்—போபால்—பிலாஸ்பூர்—கூச்பீகார்—கூர்க்—டில்லி — ஹிமாசல பிரதேஷ் — குட்ச்—மணிபுரி — திரிபுரா—ஆகிய இந்தப் பத்து வட்டாரங்களின் ஆட்சி முறை, எப்படி, யாரால் நடத்தப்படவேண்டும் என்பதைப் பற்றி இந்திய அரசியல் திட்டம் வகுத்துள்ள வழி இருக்கிறதே, அது, மக்கள் ஆட்சிக் கோட்பாட்டிற்கு இந்தத்

திட்டம் இழைத்துள்ள மற்ருெரு பெரிய துரோகச் செயல் ஆகும்.

இந்தப் பத்து வட்டாரங்களையும், இந்தியக் குடியாசுத் தலைவர், தன்னுடைய நேரடி ஆதிக்கத்தின் கீழே வைத்துக்கொள்வாராம்.

பழைய காலத்தில் மன்னர்கள் தங்கள் மண்டலங்களை ஆட்சி புரிந்ததைப்போல, குடியரசுத் தலைவர், இந்த வட்டாரங்களைத் தானுகவே ஆட்சி புரிவாராம்.

இந்த வட்டாரங்களில் சட்டசபைகள், இருக்க மாட்டா; அமைச்சர் அவைகள் ஏற்படமாட்டா; மக்கள் ஆட்சி அமைந்திருக்காது.

பாராளுமன்றம் மனம் வைத்தால் இந்த வட்டாரங்களில் வாழும் மக்களுக்கும் ஒரு சட்டசபையை—ஒரு அமைச்சர் அவையை ஏற்படுத்தமுடியும். ஆனல் ஏற்படுத்தித்தான் ஆகவேண்டும் என்ற கட்டாய விதியைத் தாங்கியில்லை அரசியல் திட்டம்.

எனவே பாராளுமன்றம், எந்தக் காலத்தில் "பெரிய மனது" வைத்து, இந்த வட்டாரங்களுக்கும் ஜனநாயக வெளிச்சத்தைத் தர ஒப்புக்கொள்கிறதோ அந்தக் காலம் வரை, இந்த வட்டாரங்கள், தனி மனிதர் ஆட்சி என்கிற இருட்டறையில் கிடந்து வருந்தி வதைய வேண்டியது தான்.

சென்னை மாகாணத்தில் உள்ள சட்டசபைகள் கலைக்கப்பட்டு, அமைச்சர் அவையும் அழிக்கப்பட்டு, சட்டசபைத் தேர்தல்கள் என்கிற முறையேகூட இல்லாமல் செய்யப்பட்டு, இந்த மாகாணம் முழுவதையும் கவர்னர், தன்னல் நியமிக்கப்படுகிற அதிகாரிகளைக் கொண்டே ஆளத்தொடங்குகிருர் என்று வைத்துக்கொள்ளுங்கள். அப்போது இந்த மாகாணத்தின் நிலை எவ்வளவு மோசமானதாயிருக்கும்—எண்ணிப் பாருங்கள்—அதே அளவு

மோசமான நிலையில்தான் இப்போதே நிறுத்தப்பட்டிருக்கின்றன மேலே குறிப்பிடப்பட்ட பத்து வட்டாரங்களும்.

பத்து வட்டாரங்கள் என்றால் ஏதோ சந்துபொந்துகள்—சில்லறை இடங்கள் என்று கூறி அவற்றை ஒதுக்கிவிட முடியாது. பத்து வட்டாரங்களும் முக்கியமான பகுதிகள், மக்கள் நிரம்பியுள்ள மண்டலங்கள். அந்த வட்டாரங்களின் மக்கள் தொகையும் அற்பசொற்பமானதன்று. ஏறத்தாழ ஒரு கோடி, அவற்றின் மொத்த மக்கள் தொகை.

ஒரு கோடி மக்கள் தொகை என்றால் அது என்ன சமான்யமான அளவா! உலகத்தில் உள்ள எத்தனையோ நாடுகள் இதைவிடக் குறைவான அளவு மக்கள் தொகை உடையவைதான்.

அண்டையிலே உள்ளது இலங்கை—அதன் மக்கள் தொகை 67 லட்சம்தான் 1941-ம் ஆண்டுக் கணக்குப்படி.

நாம் குறிப்பிடும் பத்து வட்டாரங்களின் மக்கள் தொகை அதைவிட அதிகம்!

ஆஸ்திரேலியாவின் மக்கள் தொகை 76 லட்சம். அல்பேனியா—10 லட்சம். அர்ஜன்டைனா—79 லட்சம் பெல்ஜியம் — 85 லட்சம். பல்கேரியா — 70 லட்சம். டென்மார்க் — 40 லட்சம். பின்லாந்து — 37 லட்சம். கிரீஸ் — 73 லட்சம். ஹங்கேரி—92 லட்சம். ஈராக்—48 லட்சம். அயர்லாந்து—30 லட்சம். இவை ஒவ்வொன்றும் ஒரு தனி நாடு!

இந்தத் தனி நாடுகள் ஒவ்வொன்றையும்விடக் கூடுதலான அளவு மக்கள் தொகை படைத்தது நாம் குறிப்பிடும் நிலப்பகுதி—அதன் மக்கள் தொகை, ஒரு கோடி!

இவ்வளவு பரந்த வட்டாரம்தான் இந்தியத் தலைவர் என்னும் ஒரு தனி மனிதரின் தனி ஆட்சியின் கீழ் விடப்படுகிறது இந்திய அரசியல் திட்டத்தால்!

இந்த அரசியல் திட்டத்தின் எல்லாப் பகுதிகளையும் படித்துத்தான் ஆகவேண்டும் என்பதில்லை—இந்த ஒரு பகுதியைப் படித்தாலே போதும்—இந்தத் திட்டம் ஜனநாயகத் திட்டம் அல்ல என்பதை எந்த ஜனநாயக வாதியும் அழுத்தந் திருத்தமாக எடுத்துக் கூறிவிடுவான்.

* * *

"ஜனநாயகமே! போ! போ! போ!" என்று கூறுமற் கூறி, மக்கள் ஆட்சிக் கோட்பாட்டை விரட்டியடிக்கும் பகுதிகள் இந்த அரசியல் திட்டத்தில் ஏராளமாக இருக்கின்றன.

அவை அத்தனையும் அல்ல—அவற்றிலே மூன்று பகுதிகள் மட்டும் இந்த அத்தியாயத்திலும், வேறு சில பகுதிகள்மட்டும் வேறு சில அத்தியாயங்களிலும் எடுத்துக் காட்டப்பட்டிருக்கின்றன.

அப்படியின்றி, இந்த அரசியல் திட்டத்தில் ஜனநாயகக் கோட்பாட்டிற்குத் துரோகம் செய்யப்பட்டுள்ள எல்லாப் பகுதிகளையும் எடுத்துக் காட்டி விளக்குவது என்றால், இந்தப் புத்தகத்திற்குத்தான் ஒரு முடிவிருக்குமா? அல்லது அது நடமால்தான் ஆகக்கூடிய செயலா? இரண்டும் இல்லை!

ஒன்று இரண்டா துரோகங்கள் — அத்தனையையும் எடுத்துக் காட்டிவிட!! அவை, ஏராளம்!

---

10. புதிய பாதை வகுப்போம்! பூரிப்புடன் அதில் நடப்போம்!

"அன்றோர் நாள்! அந்தி மயங்கும் வேளை! சுந்தரமான எண்ணங்கள் உள்ளத்தில் குதித்துக் கூத்தாடும் நேரம்! எங்கள் ஊருக்கு ஓரத்தே இருந்த ஒய்யாரமான பூஞ்சோலைக்குச் சென்றேன்! குளிர்ந்த தென்றல் வீசிற்று! சிற்றாறு சிரித்தபடி சிந்து பாடிற்று! எதிரே இருந்த முல்லை இன்பப் புன்னகையைச் சிந்திற்று. என் சித்தத்தில் தேன் கசிந்தது. கீழே பார்த்தேன். இயற்கை அன்னை எழில்பட அமைத்திருந்த மென்மலர்ப் படுக்கை! உட்கார்ந்தேன்! அடுத்த கணம், சலசல வென்று சப்தம் ஒன்று கேட்டது. நிமிர்ந்து பார்த்தேன். அன்றலர்ந்த ரோஜாவைப் போன்ற இளமங்கை ஒருத்தி என்னை நோக்கி வந்து கொண்டிருந்தாள்! வந்தாள்! என் பக்கத்தே அமர்ந்தாள்! கண எனும் தூதவனை அனுப்பிக் காதல் எனும் சேதியினைச் சொன்னாள்! உள்ளத்தோடு உள்ளம் இணைந்தது! அதுமட்டும் போதுமா? உடலோடு உடலைச் சேர்த்து, இன்ப முத்தமொன்றை அவள்பால் சேர்க்க எண்ணிக் கைகளை ஆவலுடன் அவள் இருந்த பக்கம் பாய்ச்சினேன்! சிக்கினாளா அச் சேல்விழியாள்? இல்லை! சட்டென்று ஒதுங்கி விட்டாள்! திடுக்கிட்டு விழித்தேன்! இவ்வளவு நேரம் கண்டது அவ்வளவும் வெறும் கனவென்பதை அறிந்தேன்! சுந்தரமான பூஞ்சோலையுமில்லை! மந்தமாருதத் தென்றலுமில்லை! பசும் பொன் மேனிப் பாவையுமில்லை! அவள் பக்கத்தே நான் வீற்றிருக்கும் காட்சியுமில்லை! எல்லாம் பொய்! எல்லாம் கனவு! கேவலம் என் கல்லூரி விடுதியிலே, என் அறையிலே, வெறும் பாயிலே, தன்னந்தனியாகத்தான் நான் கிடந்தேன்!"

எத்தனையோ நாவல்களிலே, கதையின் ஓட்டத்தைக் கெடுப்பதற்கென்றோ என்னவோ, இப்படிப்பட்ட தேய்ந்த

கனவுகள் வருவதுண்டு. காங்கிரஸ் கட்சியினரால் தீட்டப்பட்ட புதிய அரசியல் திட்டமும், கடைசியில், இப்படிப்பட்டதோர் தேய்ந்த கனவாக முடிந்துவிட்டது என்பதைத்தான் இந்தத் திட்டத்தைப் பற்றி நாம் இதுவரை செய்த ஆராய்ச்சி நமக்குத் தெள்ளத் தெளிய விளக்குகிறது.

இந்தப் புதிய திட்டம் தீட்டப்படுவதற்கு முன்னரெல்லாம், மக்கள் புதிய திட்டம் வருகிறது—எனவே நமக்குப் புதுவாழ்வு வருவதும் நிச்சயம் என்றே பூரிப்புடனும் புன்னகையுடனும் பேசிக் கொண்டிருக்கலாயினர். ஆனால் திட்டம் தீட்டப்பட்டு, விதிமுறைகள் வகுக்கப்பட்டு, பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டு, நாட்டு மக்கள் முன்னால் அது நீட்டப்பட்டபோதோ, மக்களின் முகத்திலே இருந்த புன்னகை மறைந்தது; உள்ளத்திலே இருந்த உவகை ஒழிந்தது; உரையாடலிலே ததும்பிய உற்சாகமும் தொலைந்தது.

அவர்கள் எதிர்பார்த்தது பூந்தோட்டம்! ஆனால் கிடைத்தது பாலைவனம்!

அவர்கள் விரும்பியது, தென்றல்! ஆனால் வீசியது, வாடை!

அவர்கள் கேட்டது ரொட்டி! ஆனால் தரப்பட்டது, செங்கல்!

அவர்கள் வருமென்றெண்ணியது, ஜனநாயகத் திட்டம்! ஆனால் உண்மையில் வந்தது ஒரு சர்வாதிகார சாசனம்!

ஆம்! 1950 ஜனவரி 26 ஆம் நாள் முதல் நடைமுறைக்கு வந்துள்ளதும், தேசியக் கட்சியினரால் தீட்டப்பட்டதும், நம்மால் இதுவரை பகுதி பகுதியாக அலசி ஆராயப்பட்டதுமாகிய இந்திய அரசியல் திட்டம், இந்தியத் துணைக் கண்டத்துப் பொதுமக்களுடைய வாழ்க்கை

யில் இன்பத் தேன் பாய்ச்சவில்லை— புதிய வேதனைகளையும் துயரங்களையும்தான் அவர்களுக்கு அன்பளிப்பாக ஈந்திருக்கிறது.

அவர்களுடைய வாழ்க்கையை, வறுமை வதைக்கிறது; வேதனை வாட்டுகிறது; சஞ்சலம் சித்திரவதை செய்கிறது. இந்த வறுமையையும் வேதனையையும் சஞ்சலத்தையும் சங்கடத்தையும் முற்றிலும் ஒழித்துக்கட்டிவிட்டு, மகத்தானதோர் புதிய சகாப்தத்தை உருவாக்கித் தரும் இந்திய அரசியல் திட்டம் என்று அவர்கள் எதிர்பார்த்தார்கள். ஆனால் இந்திய அரசியல் திட்டமோ இருக்கும் வேதனைகளைத் தீர்க்காததுமட்டுமல்ல — இல்லாத பல வேதனைகளையும் உண்டாக்கிவிட்டிருக்கிறது.

இந்த அரசியல் திட்டத்தால் தொழிலாளியின் துயரம் தீரவில்லை; விவசாயியின் வேதனை விலகவில்லை; நடுத்தர வகுப்பினரின் நலிவு மாறவில்லை. இவர்கள் அனைவரின் துயரங்களும் முன்னர் இருந்ததைவிட ஒன்று பத்து நூறாக ஓங்கி வளர்ந்திருக்கின்றன.

இந்தத் திட்டத்தில், சமதர்ம மணம் கமழவில்லை; முதலாளித்துவ வாடைதான் வீசுகிறது. மக்களாட்சிக் கோட்பாடு உலவவில்லை; பெர்லின் கீதம்தான் பவனி வருகிறது. ஒவ்வோர் இனத்திற்கும் ஒவ்வொரு வட்டாரம் என்னும் உன்னததத்துவம் உயரிய இடம் பெறவில்லை; எல்லா அதிகாரங்களும் டில்லி தர்பாருக்கே என்னும் ஏகாதிபத்ய எண்ணம்தான் ஒப்பற்ற இடம் பெற்றிருக்கிறது.

இந்தத் திட்டம் நமக்கென்று வகுத்துத் தந்துள்ள பாதை, பழைய பாதை; பத்தாம் பசலிப் பாதை; ஏகாதிபத்ய முதலாளித்வப் பாதை; நம்முடைய வாழ்க்கையை வசீகரமுள்ளதாக மாற்றி அமைத்து மறு கோலம் செய்யத்தக்க ஆற்றலோ ஆர்வமோ அற்ற பாதை. நம்முடைய இலட்சிய பூமியாகிய சமதர்ம மண்டலத்திற்கு நம்மை

அழைத்துச் செல்ல முடியாதபடி மிகத் தந்திரமாக அமைக்கப்பட்டுள்ள பாதை.

இந்தப் பாதை நமக்கு வேண்டாம்! இத்தன்மைத் தாயதோர் பாதையை வகுத்துத் தந்துள்ள இந்த அரசியல் திட்டமும் நமக்குத் தேவையில்லை!

நமக்கு ஒரு புதிய அரசியல் திட்டம் வேண்டும்—அந்தத் திட்டத்திலே புதியதோர் பாதை அமைந்திருக்க வேண்டும்.

அந்தப் பாதை, ஆண்டவன் அன்று எழுதியதை அழித்து எழுத யாரால் ஆகும் என்று சோம்பேறி வேதாந்தம் பேசும் சுறுசுறுப்பற்ற பாதையாக இருக்கக்கூடாது. மானிட சக்தியின் மகத்தான ஆற்றலை மாநிலத்திற் கெல்லாம் முரசறைந்து தெரிவிக்கும் மாண்புள்ள பாதையாக இருக்கவேண்டும்.

அந்தப் பாதை, சடங்கு—சம்பிரதாயம்—இதிகாசம்—புராணம்—வேதம்—கீதை என்று உள்ள செல்லரித்துப் போன சுவடிகளுக்கும் எண்ணங்களுக்கும் புத்துயிர் ஊட்டிடும் சத்தற்ற காரியத்தைச் செய்திடும் பாதையாக இருக்கக்கூடாது. புதியதோர் உலகு செய்வோம்—கெட்ட—போரிடும் உலகத்தை வேரோடு சாய்ப்போம் என்னும் புரட்சிக் கீதத்தைப் புதுமுறுக்குடன் பாடிடும் பாதையாக இருக்கவேண்டும்.

அந்தப் பாதை, ஆயிரம் உண்டிங்கு சாதி என்று அழுகுரல் எழுப்பிடும் அர்த்தமற்ற பாதையாக இருக்கக்கூடாது. எல்லோரும் ஓர் குலம், எல்லோரும் ஓர் நிறை, எல்லோரும் இந் நாட்டு மன்னர் என்னும் சமதர்ம நாதத்தைத் திக்கெட்டும் எழுப்பிடும் தீவிரமான பாதையாக இருக்கவேண்டும்.

அந்தப் பாதையிலே, நீரைப் பொழியும் கண்களும், வாடி வதங்கிய உதடுகளும், ஒட்டிப்போன வயிறுகளும், எலும்புக்கூடான உருவங்களும் இருக்கக்கூடாது. ஒளி

பொருந்திய கண்களும் வயிரம் பாய்ந்த தோள்களும் உறுதி நிறைந்த உடல்களும் உண்மை நிறைந்த உள்ளங்களும்தான் காட்சிதர வேண்டும்.

அந்தப் பாதையிலே பிச்சைக் கிண்ணங்களும் பொத்தல் குடிசைகளும் இருக்கக்கூடாது. கன்னக்கோல்களும் கள்ளச் சந்தைகளும் இருக்கக்கூடாது சக்திக்கேற்ற உழைப்பு தேவைக்கேற்ற வசதி என்கிற இலட்சிய கீதமே நடைமுறை நாதமாக இருக்கவேண்டும்.

அந்தப் பாதையிலே, ஒரு புறத்தில் மாட மாளிகைகளும் மற்றோர் புறத்தில் மண் பொம்மை போன்ற "வீடு"களும், ஒரு புறத்தில் பட்டு பீதாம்பரங்களும் மற்றோர் புறத்தில் கிழிந்த பழங் கந்தைகளும், ஒரு புறத்தில் அறுசுவை உண்டிகளும் மற்றோர் புறம் ஆறு வேளை பட்டினிகளும் இருக்கக்கூடாது.

அந்தப் பாதையிலே சர்வாதிகார சிந்துகளோ பெர்லின் பதிகங்களோ ஹிட்லர் தத்துவங்களோ முசோலினி மறு பதிப்புகளோ கட்டாயம் இருக்கக்கூடாது.

அந்தப் பாதையிலே, வடநாடு வளர்வதற்காகத் தென்னாடு தேய்வது என்கிற நிலை—ஹிந்தி ஏகாதிபத்தியம் நிலைப்பதற்காகத் தமிழ் முதலிய மொழிகள் தாழ்வது என்கிற வேதனை—மார்வாரி குஜராத்தி இனங்கள் ஓங்குவதற்காகத் தமிழர் தெலுங்கர் முதலியோர் இன்ப வாழ்வை இழப்பது என்கிற நிகழ்ச்சி இவைகளெல்லாம் ஒருபோதும் இருக்கக் கூடாது.

ஆம் அந்தப் பாதை பகுத்தறிவுப் பாதையாக, புத்துலகப் பாதையாக, விஞ்ஞானப் பாதையாக, சமதர்மப் பாதையாக இருக்கவேண்டும்.

அப்படிப்பட்ட ஒரு புதிய பாதையை, ஒரு புதிய அரசியல் திட்டத்தை உருவாக்குவதுதான் இந்தியாவில் உள்ள எல்லா முற்போக்கு சக்திகளும் இந்நாளில் மேற்கொண்டாக வேண்டிய முதற்பெருங் கடமையாகும்.

மா. இளஞ்செழியன், (B. A. Hons.)
தீட்டியவை

தமிழன் தொடுத்த போர் ரூ 1 12

ஹிந்தி மொழி ஏகாதிபத்தியத்தின் கொடுமைகளை எதிர்த்துச் சீறிடும் சிங்கமெனப் போராடியிருக்கிறது தமிழ்நாடு. அந்த வீர வரலாற்றின் அழகிய படப்பிடிப்பு, இந்தப் புத்தகம். உயிரோட்டமுள்ள நடை—விறுவிறுப்பான தமிழ்—வீரச் சுவையும் தமிழ்ச்சுவையும் பின்னிக் கிடக்கும் சுவடி—240 பக்கங்கள்.

"இந்நூலின்மூலம், தமிழ் மொழிக்கும் தமிழருக்கும் நண்பர் இளஞ்செழியன் நற்றொண்டு ஆற்றியுள்ளார். என் பாராட்டுதல். தமிழகம் தழைக்க இந்த ஏடு பெரிதும் பயன்படும்"—அண்ணா]

சரிந்த சாம்ராஜ்யம் ரூ 0 10

ஆரியம் ஒரு பயங்கர பலிபீடம் என்பதை மாவீரன் சிவாஜியின் வரலாற்றைக் கொண்டு தெளிவாக்கும் சுவடி. அண்ணா அவர்கள் இயற்றியுள்ள "சந்திரமோகன்" நாடகம் வெறும் கற்பனையல்ல உண்மை வரலாறு என்பதை, பல வரலாற்றாசிரியர்களின் கருத்துரைகளைக் கொண்டு நிரூபிக்கும் எழில் மிகு புத்தகம்.

திராவிடஸ்தான் வேண்டாமா? ரூ. 0 8

வேண்டாம் என்று கூறுவோரின் போலிவாதங்களைத் தவிடுபொடியாக்கும் சம்மட்டி போன்ற நூல்.

★

பகுத்தறிவுப் பாசறை
பவழக்காரத் தெரு, சென்னை-1.